# மொழியியல்

தொகுதி 3 செப்டம்பர் - ஜனவரி எண் 2 & 3

பேராசிரியர் சண்முகம்பிள்ளை அவர்களின்

# மணிவிழா மலர்

பதிப்பாசிரியர்கள்
ச. அகத்தியலிங்கம்
செ. வை. சண்முகம்
வ. ஞானசுந்தரம்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்
1979 - 80

# அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

அண்ணாமலைநகர்

## செயற்குழு

| | |
|---|---|
| தலைவர் | டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் (மதுரை) |
| துணைத் தலைவர் | டாக்டர் முத்துச்சண்முகன் (மதுரை) |
| செயலாளர் | டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலைநகர்) |
| பொருளாளர் | டாக்டர் ந. குமாரசாமி ராஜா (அண்ணாமலைநகர்) |
| உறுப்பினர்கள் | டாக்டர் மா. சு. திருமலை (மைசூர்) |
| | டாக்டர் பொன். கோதண்டராமன் (சென்னை) |
| | டாக்டர் சி. சுப்பிரமணியம் (நாகர்கோயில்) |
| | டாக்டர் மோ. இசரயேல் (மதுரை) |
| | டாக்டர் கி. கருணாகரன் (அண்ணாமலைநகர்) |

## மொழியியல்

### அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் காலாண்டு இதழ்

#### கட்டணம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆயுள் கட்டணம் | ரூ 200.00 | US $ 50.00 |
| ஆயுள் கட்டணம் (நிறுவனங்கட்கு) | ரூ 300.00 | US $ 75.00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ 20.00 | US $ 5.00 |
| ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்கட்கு) | ரூ 30.00 | US $ 7.50 |
| ஆண்டுக் கட்டணம் (மாணவர்க்கு) | ரூ 10.00 | |

பேராசிரியர் சண்முகம்பிள்ளை அவர்களின்

# மணிவிழா மலர்



பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை

பேராசிரியர்

# டாக்டர் சண்முகப்பிள்ளை அவர்கள்

## வாழ்க்கைக் குறிப்பு

**பெயர்:** டாக்டர் முத்து சண்முகம் பிள்ளை

**பிறந்த நாள்:** 4—1—1920

**பிறந்த இடம்:** புரவசேரி, கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு.

**கல்விச் சான்றிதழ்கள்:**

பி.எஸ்.சி. 1943 : கேரளப் பல்கலைக்கழகம்

எம்.ஏ. 1945 : தமிழ் மொழியும் இலக்கியமும். முதல் வகுப்பு, முதல்தரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

எம்.லிட்.(தமிழ்)—(ஆய்வு) : அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
டிப்ளமா (கன்னடம்)
பி.எச்.டி. (மொழியியல்) : அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

**சிறப்புக் கல்வி: (அமெரிக்கா)**

ராக்ஃபெல்லர் ஃபௌண்டேஷன் ஆய்வாளர் — மொழியியல் கல்வி

கார்நெல் பல்கலைக்கழகம், இதாசா, நியூயார்க் : 1956-57

கலிஃபோர்னியா பல்கலைக்கழகம், பெர்க்லி : 1957-58.

**பதவிகள்:**

தமிழ் விரிவுரையாளர் : 1945_56, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

ஆய்வாளர் : 1956-58, ராக்ஃபெல்லர் ஃபௌண்டேஷன், USA

மொழியியல் உதவிப் பேராசிரியர் : 1958-67, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மொழியியல் துறைத் தலைவர் : 1966-67, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தமிழ் உதவிப் பேராசிரியர் : 1967-1971, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மொழியியல் சிறப்புப் பேராசிரியர்: 1969, வோஸ்டர் கல்லூரி ஒஹியோ, USA.

திராவிட மொழிச் சிறப்புப் பேராசிரியர் : 1971-73, ஸௌத் ஏஷியன் ரீஜினல் ஸ்டடீஸ், பென்ஸில்வேனியா பல்கலைக் கழகம், ஃபிலடெல்ஃபியா U S.A.

பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர் : 1973, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,

தேசீய விரிவுரையாளர் : 1978-79, U.G.C.

இணைப்பாளர்: தமிழ்-இந்திய மொழிகள் கல்வி நிலையம், 1978 — மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

## பேராசிரியர்

# டாக்டர் சண்முகம்பிள்ளை அவர்கள்

## வாழ்க்கை வரலாறு

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கல்வியுலகுக்கு வழங்கிய நன்முத்துக்கள் பலவற்றுள் முத்துச்சண்முகம் என அன்போடு அழைக்கப்படும் பேராசிரியர் டாக்டர் மு. சண்முகம்பிள்ளை அவர்களும் ஒருவர் ஆவார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சிறப்பாகப் பணியாற்றி வரும் மொழியியல் துறையின் வளர்ச்சிக்கு அடிகோலிய முன்னோடிகளில் பேராசிரியர் சண்முகம்பிள்ளை அவர்களும் குறிப்பிடத்தக்கவர் ஆவார். டாக்டர் பிள்ளை அவர்கள் 1973ஆம் ஆண்டு, ஜுலைத் திங்கள், 21ஆம் நாள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும் தலைவராகவும் பதவிப் பொறுப்பினை ஏற்றார்கள். இப்பொறுப் பினின்றும் 1980ஆம் ஆண்டு, ஜுன் திங்கள் 30ஆம் நாள் அன்று விலகி அவர்கள் ஓய்வு பெறுகிறார்கள். இந்த ஏழாண்டுகால இடை வெளியில் தமிழ்த்துறையை, சிறந்த ஒரு தமிழியல் துறையாக மாற்றி வளர்த்த பெருமை பேராசிரியர் டாக்டர் சண்முகம்பிள்ளை அவர் களுக்கு உண்டு. நல்ல சிந்தனை ஓட்டமும், புதிதாகச் சாதனைகள் பல காணவேண்டும் என்ற துடிப்பும் வேகமும் கொண்ட பிள்ளை அவர்கள், தம் துறையில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கும் மாணவர் களுக்கும் நல்ல ஒரு தலைமையினைக் கொடுத்து அவர்தம் திறமைகளை ஒருமுகப்படுத்தி அவர்களைத் தட்டிக்கொடுத்து அத் துறையைக் கட்டிக்காத்து வளர்த்தவர் ஆவார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் புரவசேரி என்னும் சிற்றூரில் எளிய குடும்பத்தில் திருவாளர் முத்துப்பெருமாள் பிள்ளை அவர் களுக்கும் திருவாட்டி சிதம்பரவடிவு அம்மையார் அவர்களுக்கும் 1920ஆம் ஆண்டு, ஜனவரித் திங்கள், 4ஆம் நாள் மகனாகப் பிறந்தார்கள் சண்முகம்பிள்ளை அவர்கள். இளமைக் கல்வியை திருப்பதிசாரம், வடசேரி ஆகிய இடங்களில் முடித்த பின்னர் கேரளப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக 1943-ஆம் ஆண்டு

பி.எஸ்சி. பட்டப்படிப்பை முடித்தார்கள். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1945இல் தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பில் முதல் மாணவராக வெற்றி பெற்றார்கள். தமிழ் முதுகலை மாணவராக இருந்தபோதே தாழைக்குடியைச் சேர்ந்த முத்தம்மாள் என்னும் பெண்மணியைத் தம் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்கள். தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயே ஆசிரியராகச் சேர்ந்து தமிழில் எம்.லிட். ஆராய்ச்சிப் பட்டத்தையும், மொழியியலில் டாக்டர் பட்டத்தையும் பெற்றார்கள். ராக்ஃபெல்லர் நிறுவனம் வழங்கிய உதவிச் சம்பளத்தின் மூலம் சண்முகம்பிள்ளை அவர்கள் மொழியியல் துறைக்கு அறிமுகமானார்கள். பூனாவில் 1956 இல் ராக்ஃபெல்லர் அறக்கட்டளையின் உதவியால் நடைபெற்ற கோடைகால மொழியியல் வகுப்புகளில் கலந்துகொண்டு முதல் மாணவராகத் தேறினார்கள். இவர்தம் கல்வி வாழ்க்கையில் இதனை ஓர் திருப்புமுனையாகக் குறிப்பிடலாம். தமிழிலக்கியம், மொழியியல் இரண்டிலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட பிள்ளை அவர்கள் 1956–57 இல் நியூயார்க்கில் இத்தாச்சாவில் உள்ள கார்நெல் பல்கலைக் கழகத்திலும், 1957_58 இல் பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக் கழகத்திலும் தமது மொழியியல் புலமையை வளர்த்துக்கொண்டார்கள். ராக்ஃபெல்லர் அறக்கட்டளை வழங்கிய பொருளுதவி இப்பல்கலைக் கழகங்களுக்குச் செல்வதற்கான வாய்ப்பினை பிள்ளை அவர்களுக்கு நல்கியது. இப்பல்கலைக் கழகங்களில் பிள்ளை அவர்கள் பெற்ற பயிற்சி, பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தோன்றிய திராவிட மொழியியல் துறைக்கு உறுதுணையாக அமைந்தது. மொழியியல் முதுகலைப் பட்டக்கல்வியில் மாணவர்கள் ஓர் திராவிட மொழியைக் கூடுதலாகப் பயில வேண்டும் என்று வற்புறுத்தினார்கள் பேராசிரியர் பிள்ளை அவர்கள். இதன் விளைவாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பெற்ற மொழியியல் முதுகலைப் பட்டப்படிப்பில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளைப் பயில்வதற்கு வழியேற்பட்டது.

சண்முகம்பிள்ளை அவர்கள் 1945 முதல் 1956 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்கள். பின்னர் இரண்டு ஆண்டுகள் மொழி

யியல் கல்விக்காக அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் கழிந்தன. அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் 1958 இல் பிள்ளை அவர்கள் மொழியியல் துறையில் இடைநிலைப் பேராசிரியராக – ரீடராகப் பதவி ஏற்றார்கள். இப் பதவியில் 1967 வரை தொடர்ந்து அவர்கள் அரும்பணியாற்றினார்கள். 1966இல் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறையின் தலைவராகப் பெறுப் பேற்ற பிள்ளை அவர்கள், அப் பொறுப்பினின்றும் விலகி, 1967 இல் மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் இடைநிலைப் பேராசிரியராகப் பதவி ஏற்றார்கள். 1969இல் ஒகியோ மாநிலத்தில் உள்ள ஊஸ்டர் கல்லூரியல் மொழியியல் ஆசிரியராக அமர்ந்தார்கள். நான்காண்டு காலம் – 1971 வரை – இடைநிலைப் பேராசிரியர் பதவியை வகித்த அவர்கள் அடுத்த இரண்டாண்டு காலம் மீண்டும் அமெரிக்காவில் ஃபிலடெல்ஃபியாவில் உள்ள பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தில் South Asian Regional Studies என்ற பகுதியில் 1973 வரை ஆசிரியராகப் பணியாற்றும் பொறுப்பினை மேற் கொண்டார்கள். பின்னர் மதுரை காமராசர் பல்கலைக்கழகமாக மாறிய மதுரைப் பல்கலைக்கழகத்தில் 1973ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தமிழ்த்துறையின் பேராசிரியராகவும் தலைவராகவும் பொறுப்பினை ஏற்றார்கள். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழியல்துறை வரலாற்றில் பேராசிரியர் சண்முகம்பிள்ளை அவர் களின் பதவிக்காலம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஓர் பொற்காலமாகும். இக்காலக்கட்டத்தில் அவர்கள் ஆற்றிய அரும்பணி தமிழியல்துறையின் முனைப்பான வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் நல்ல ஒரு அடிப்படையை அமைத்துத் தந்துள்ளது.

மதுரைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் சண்முகம் பிள்ளை அவர்கள் தமிழ்த்துறைத் தலைவராகப் பதவி ஏற்றபிறகு அத் துறையின் சிறப்பு பல முனைகளில் வளர்ந்து வளம்பெறத் தொடங்கியது. அயல்நாட்டவர்க்குத் தமிழ் கற்பிக்கும் பணியும், மொழியியற் கல்வியும் இவர் காலத்தில் சீரமைக்கப்பட்டவையாகும். தமிழ் முதுகலைப் பட்டப்படிப்பில் தொடரனியல் பகுதியை இணைத்துப் பரந்துபட்ட மொழியியல் கல்வியைத் தமிழ் முதுகலைப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு வழங்கியதுடன் மேற்படி பட்டப்படிப்பில் நாட்டுப் புறவியல், இதழியல், நாடகவியல் ஆகியவற்றைப் பாடப்பகுதியில் இணைத்து முதுகலைப் பட்டப்படிப்புக்கு ஒரு பெருமையைத்

தேடிக்கொடுத்த பெருமை பேராசிரியர் அவர்களையே சாரும். இவர்தம் பதவிக்காலத்தில்தான் தற்காலத் தமிழ் இலக்கியங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் டாக்டர் பட்ட அளவில் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் மேற்கொள்ளப்பட்டன. புதுமையில் பெரிதும் நாட்டம் கொண்ட பிள்ளை அவர்கள் தமிழிலக்கிய ஆராய்ச்சியில் புதிய உத்திகள் பலவற்றைப் பின்பற்றியதுடன், ஆய்வாளர்களையும் இந்த வகையில் பெரிதும் ஊக்குவித்து ஆய்வுக்கலையை வளர்த்துத் தமிழியலுக்கு அருந்தொண்டாற்றினார்கள். இவர் பதவிக்காலத்தில் இவர் ஆற்றிய சிறப்பான தொண்டுகளின் சிகரமாக விளங்குவது 1978 ஆம் ஆண்டு தமிழியல்துறையின் ஓர் அங்கமாக மொழியியல் முதுகலைப் பட்டப்படிப்பைக் கொண்டுவந்ததேயாகும். தமிழிலக்கிய ஆய்வுப் போக்கில் புதிய கோட்பாட்டு உத்திகள் மலர இப் புதிய முதுகலைப் பட்டப்படிப்பு ஓர் ஆற்றல் மிக்க கருவியாகச் செயல்பட வேண்டும் என்பது பேராசிரியர் சண்முகம்பிள்ளை அவர்களின் கனவாகும். 1979 இல் தமிழியல்துறையின் சார்பில் சான்றிதழ் மட்டத்தில் இதழியல், நாடகவியல், மொழிபெயர்ப்பியல் ஆகிய பகுதிநேரப் படிப்புக்களைத் தொடங்கிய பெருமையும் பேராசிரியர் டாக்டர் சண்முகம்பிள்ளை அவர்களையே சாரும். பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்குமுன் இவர் எடுத்துக்கொண்ட முயற்சி மொழியியல் படிப்பை பி.ஏ. அளவில் பயில்வதற்கான பாடத்திட்டத்தை வகுத்துத் தந்ததாகும். கல்லூரிகளில் மொழியியல் பி.ஏ. பட்டப் படிப்பைத் தொடங்குவதற்கு இது வகைசெய்யும். இதே போல் முத்தமிழ் பி.ஏ.வுக்குரிய பாடத்திட்டத்தை வகுத்துத் தந்த பெருமையும் இவரையே சாரும். இவை தவிர **இதழியல் முதுகலை, நாடகவியல் முதுகலை,** அயல் மொழியாளர்களுக்குத் **தமிழியல் முதுகலை** ஆகிய முதுகலைப் பட்டக்கல்விக்கான பாடத்திட்டங்களையும் வகுத்துக் கொடுத்துள்ளார்கள். இப்பட்டப்படிப்புக்கள் விரைவில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழியல் துறையில் தொடங்கப்பெறும்.

பேராசிரியர் சண்முகம்பிள்ளை அவர்களின் அரும்பணிக்குச் சிகரம் வைத்ததுபோல் 1978 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியக்குழு அன்னாரைத் தேசியப் பேராசிரியராக ஓராண்டுக்கு நியமித்தது. இந்தியாவில் இந்தியமொழிப் பேராசிரியர் ஒருவருக்கு முதல் முறையாக பல்கலைக்கழக மானியக்குழு அளித்த சிறப்பாகும்

இது. பேராசிரியர் சண்முகம்பிள்ளை அவர்கள் தேசியப் பேராசிரியர் பதவியினை மிகச் சிறப்பாக நிறைவேற்றி மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல்துறைக்குப் பெருமை தேடித் தந்தார்கள்.

பேராசிரியர் டாக்டர் சண்முகம்பிள்ளை அவர்கள் தமிழ் இலக்கியம், மொழியியல், ஆகிய துறைகளில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார்கள். அயல் மொழி யாளர்களுக்கு மொழியியல் பின்னணியில் தமிழ் கற்பிக்கும் வகையில் பாடநூல்களை எழுதித் தந்த பெருமையும் பிள்ளையவர் களைச் சாரும். தமிழுக்கும், மொழியியலுக்கும் அரும் பணியாற்றி ஓய்வு பெறும் பேராசிரியர் டாக்டர் சண்முகம்பிள்ளை அவர்களின் ஓய்வுக்காலம் அமைதியாகவும், சிறப்பாகவும் அமைய மொழியியல் தனது இதயம் நிறைந்த வாழ்த்துக்களை அன்னாருக்கு வழங்கு வதில் பெருமையும், பெருமகிழ்ச்சியும் கொள்கிறது.

## டாக்டர் சண்முகம்பிள்ளை அவர்களின் புத்தகங்களும் கட்டுரைகளும்

### 1949

1 **முடிமன்னர் மூவர்**, நேஷனல் பப்ளிஷிங் கோ., சென்னை.

### 1952

2 **சிலப்பதிகாரக் கட்டுரைகள்,** நேஷனல் பப்ளிஷிங் கோ., சென்னை.

3 "அரசன் கடவுளான வரலாறு" **கலைக்கதிர்**, மார்ச் இதழ், கோயம்புத்தூர்.

4 "குற்றியலுகரமும் அற்றென மொழிப" Annamalai University Journal, அண்ணாமலைநகர்.

### 1953

5 "எது மொழி?" **கலைக்கதிர்**, டிசம்பர் இதழ், கோயம்புத்தூர்,

6 இளங்கோவடிகளின் சமயம்" **கலைக்கதிர்**, செப்டம்பர் இதழ், கோயம்புத்தூர்.

7 "மூவகை மொழிகள்" **கலைக்கதிர்**, பிப்ரவரி இதழ், கோயம்புத்தூர்.

8 "மொழியின் தத்துவம்" **கலைக்கதிர்**, ஏப்ரல் இதழ், கோயம்புத்தூர்.

9 "கவுந்தியடிகள்" *Annamalai University Journal*, அண்ணாமலை நகர்.

10 *Studies in Cilappatikaaram*, Annamalai University, Annamalainagar.

### 1955

11 "கானல்வரி" **தமிழ்நாடு**, 19-12-1955, மதுரை.

12 "ஒலி இலக்கணப் பயிற்சி" **கலைக்கதிர்**, நவம்பர் இதழ், கோயம்புத்தூர்.

13 "ஒலித்தத்துவம், ஃபோனீம்" **கலைக்கதிர்**, செப்டம்பர் இதழ் கோயம்புத்தூர்.

14 "துறவு தந்த காப்பியம்" **கலைக்கதிர்**, ஆகஸ்ட் இதழ், கோயம்புத்தூர்.

15 "தேவந்தியும் கண்ணகியும்" **தமிழ்நாடு**, 26—1—1955, மதுரை.

16 "கோவலன் காதல் திராக் காதலா?" **தமிழ்நாடு**, 26-1-1955, மதுரை.

17 "கல்கியும் தமிழ்நாட்டு வரலாறும்" **பிரசண்ட விகடன்**, 1—4—1955, சென்னை.

18 "கோவலன் கனவு" **கலைக்கதிர்**, மார்ச், ஏப்ரல் இதழ்கள், கோயம்புத்தூர்.

## 1956

19 "உலகப் பொதுமொழி" **கலைக்கதிர்**, ஏப்ரல், மே இதழ்கள், கோயம்புத்தூர்.

20 "Phonemic variations of kurriyalukaram in Tamil" *Indian Linguistics*, Vol. XV, Deccan College, Poona.

21 "பர்ஜி மொழி" **கலைக்கதிர்**, பிப்ரவரி இதழ், கோயம்புத்தூர்.

22 "English in High Schools - A lesson from U. S. A." *The Hindu*, March 31st 1957, Madras.

23 Language problems in our Universities - Plea for a new Approach" *The Hindu*, June 16th 1957, Madras.

## 1960

24 "இந்தியாவில் தற்கால மொழியியல்" **கலைக்கதிர்**, பிப்ரவரி இதழ், கோயம்புத்தூர்.

25 "A common script for Indian Languages" *Illustrated Weekly of India*, 13—3—1960. Bombay.

26 ''ஒலியுறுப்புகளும் அவற்றின் தொழிலும்'' **கலைக்கதிர்**, ஏப்ரல் இதழ், கோயம்புத்தூர்.

27 ''மெய்யெழுத்துக்கள்'' **கலைக்கதிர்**, ஜூன் இதழ், கோயம் புத்தூர்.

28 ''உயிரெழுத்துக்கள்'' **கலைக்கதிர்**, நவம்பர் இதழ், கோயம் புத்தூர்.

29 ''வற்றென் சாரியை'' **கலைக்கதிர்**. டிசம்பர் இதழ், கோயம் புத்தூர்.

30 "Administration and policies as Revealed in Cilappatikaaram" *Annamalai University Journal*, Vol. XXI, XXII, Annamalainagar.

31 "Tamil – Literary and colloquial", *International Journal of American Linguistics*, Vol.26, No 3, Indiana University, Bloomington.

## 1961

32 ''தெ. பொ. மீ. யும் மொழியியலும்'' **தெ. பொ. மீ. மணி விழா மலர்**, கோயம்புத்தூர்.

33 ''இக்காலத் தமிழ் – பெயர்'', **தெ. பொ. மீ. மணிவிழா மலர்**, கோயம்புத்தூர்.

34 ''உருபனியல்'' **கலைக்கதிர்**, பிப்ரவரி இதழ், கோயம்புத்தூர்.

35 ''உருபொலியனியல்'' **கலைக்கதிர்**, ஏப்ரல் இதழ், கோயம் புத்தூர்

36 ''ஒலியனியல் – சில சிக்கல்கள்'' **கலைக்கதிர்**, ஜூலை இதழ், கோயம்புத்தூர்.

37 ''ஒலியன்களின் மயக்கமும் [illegible]கையும்'' **கலைக்கதிர்**, ஆகஸ்ட் இதழ், கோயம்புத்தூர்.

38 ''ஙனமா அனமா?'' **கலைக்கதிர்**, ஆகஸ்டு இதழ் கோயம் புத்தூர்.

39 "Derivative Nouns in Modern Tamil" *Indian Linguistics* Vol. **22**, Deccan College, Poona.

## 1962

40 "உருபுகளை வகை செய்தல்" **கலைக்கதிர்**, ஜூன் இதழ், கோயம்புத்தூர்.

41 "தற்காலத் தமிழ் — ஆக்கப்பெயர்கள்" **சதாவதானி செய்குத் தம்பி பாவலர் நினைவு மலர்**, நாகர்கோவில்.

42 "A Tamil Dialect in Ceylon" *Indian Linguistics*, Vol. **23** Deccan College, poona.

## 1963

43 "யாழ்ப்பாணத் தமிழ்" **குறிஞ்சி**, 1—2—1963, 15—2—1963, 1—3—1963, மதுரை.

44 "English Language Teaching" *Deccan Chronicle*, March, Hyderabad

45 "இக்காலத் தமிழ்" **கலைக்கதிர்**, மே இதழ், கோயம்புத்தூர்.

46 "Problems of the Language Teacher — South India" Conference on Applied Linguistics, December, Kanpur.

47 "மொழியும் மொழியியலும்" **அணுக்கதிர்**, சென்னை.

## 1964

48 "Caariyai varru in Tolkaappiyam" *Indian Linguistics*, Vol. **25**, Deccan College, Poona.

49 "Reconstruction of aankaṇam in Early Tamil Texts" *Indian Linguistics* Vol. **25**. Deccan College, Poona.

## 1965

50 A Seminar School in English" ***The Hindu***, January 24th 1965, Madras.

51 "Caste Isoglosses in Kinship Terms" *Anthropolog cal Linguistics*, March, Indiana University, Bloomington.

52 "இக்காலத் தமிழ் - வினை" **கலைக்கதிர்**, ஏப்ரல் இதழ், கோயம்புத்தூர்.

53 "Merger of Literary and colloquial Tamil" *Anthropological Linguistics* April, Indiana University, Bloomington.

54 "Review - (1) Linguistics and style; (2) The Teaching of English; (3) The Practical study of Languages; (4) Modern English; (5) English Sounds and Spelling', *The Hindu*, May 17th 1965, Madras.

55 "இக்காலத் தமிழ் — மக்கள் தமிழும் இலக்கியத் தமிழும்' **கலைக்கதிர்**, ஜூன் இதழ், கோயம்புத்தூர்.

56 "Review - Language Teaching" *The Hindu*, September 5th 1965, Madras.

57 *Spoken Tamil - Part I*, Annamalai University, Annamalai nagar.

58 "Interrogatives in Modern Tamil" *Indian Linguistics* Vol. 26, Deccan College, Poona.

59 "A Review of "A Grammar of the Tamil" by Rhenius', Seminar on Grammatical Theories in Tamil' Annamalai University, Annamalainagar.

60 *A Tamil Reader for Beginners - Part I*, Annamalainagar.

61 "Fishermen Tamil of Kanyakumari" International conference Seminar of Tamil Studies, University of Malaya, Kuala Lumpur, *Anthropological Linguistics* (1968) April, Indiana University, Bloomington.

62 "problems in Teaching Tamil to Foreign Students' International Conference Seminar of Tamil Studeis University of Malaya, Kuala Lumpur, *International Review of Applied Linguistics* (1968), Heidelberg.

## 1967

63 "Rule of contrastive Linguistics in Teaching a Second Language" Seminar on Linguistics and Language Teaching, M. S. University of Baroda, Baroda, *Indi n Linguistics*, Vol. 27, Deccan College, Poona.

64 இக்காலத் தமிழ் சீயோன் பதிப்பகம், மதுரை.

65 *A Tamil Reader for Beginners - Part II* N. Muthamal Madurai.

66 "Vowel Splits in Tamil Dialects" International conference Seminar of Tamil Studies, Madras.

67 "Raappaaṭi-The Night Singer" International Conference Seminar of Tamil Studies, Madras, *Madurai University Journal* (1969), Madurai.

68 *Spoken Tamil — Part II*, Annamalai University, Annamalainagar.

69 "English Loans in Educated Tamils" *Studies in Indian Linguistics M.B. Emeneau ṣaṣṭipurti Volume*, Deccan College, Poona.

70 "இக்காலத் தமிழ்—வினை" கலைக்கதிர், நவம்பர், டிசம்பர் இதழ்கள், கோயம்புத்தூர்.

## 1969

71 "Tamil To day" South Asian Seminar, May, South Asian Centre, University of Chicago, Chicago, *Madurai University Journal* (1971) Madurai.

72 "Cases in Tamil — Primary and Secondary" *First All India Conference of Linguistics*, Poona.

73 "வினையாலணையும் பெயர்" பரிதிமாற் கலைஞர் நூற்றாண்டு மலர், வி. எஸ். சுவாமிநாதன், மதுரை–1

## 1971

74 "Address Terms and the Social stratification of the Tamils" *First All India Conference of Dravidian Linguistics*, Trivandrum.

75 "*Spoken Tamil (in its culture and grammar) Part I*, N. Muthamal. Madurai.

76 **இக்கால மொழியியல்** (முதல் பதிப்பு), என். முத்தம்மாள், மதுரை.

## 1972

77 "*திருவாசகத் தமிழ்*" **நான்காவது இத்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் மன்றக் கருத்தரங்கு**, திருவனந்தபுரம்.

78 "முதல் மூன்று நாவல்கள் – கோணக் கோட்பாடு" **ஐந்தாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் மன்றக் கருத்தரங்கு**, சென்னை.

79 "Code – Switching in a Tamil Novel" *Keynote Address* Sociolinguistics Section, Society for South Indian Studies conference, Chambersburg, U.S.A.

80 "Tamil Literary and colloquial" *Linguistics* Vol. 81, 83–91.

81 **இக்காலத் தமிழ்** என். முத்தம்மாள், மதுரை.

## 1974

82 "Pronominal Usage in Kuruntokai" International Conference Seminar of Tamil Studies, Jaffna, Ceylon.

83 "நந்தனார் சரித்திரக் கீர்த்தனை – போராட்டம்" **ஆறாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் மன்றக் கருத்தரங்கு**, பாண்டிச்சேரி.

84 "மூவிடப்பெயர்களும் அகத்திணைத்துறைகளும்" **வையை வியாழவட்டக் கருத்தரங்கு மலர்–1**, மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை.

85 **துறவு தந்த காப்பியம்** என். முத்தம்மாள், மதுரை.

86 **வையை தொகுதி-1** (பதிப்பர்கள் _ டாக்டர் முத்துச்சண்முகம் பிள்ளை, டாக்டர் இராம. பெரியகருப்பன்). மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.

87 **தமிழ் இலக்கியக் கோட்பாடுகள்**, முத்துப் பதிப்பகம், மதுரை.

## 1975

88 "அகிலன் சிறுகதைகளில் குழந்தைக் காதல்" **இருபதாம் நூற்றாண்டு தமிழ் எழுத்தாளர்கள் கருத்தரங்கு-அகிலன்** மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை

89 "தொல்காப்பியர் கூறும் பிறப்பியல் கோட்பாடுகள்" ஏழாவது **அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் மன்றக் கருத்தரங்கு ஆய்வுக்கோவை**, நாகர்கோவில்

90 "Need for a New Approach to Tamil Studies in our Colleges and Universities" *The Hindu*, July 9th 1975, Madras.

91 "Tolkaappiyar's Theory of Articulatory phonetics" *Annual Conference-Seminar, Dravidian Linguistics Association, Ernakulam.*

92 **தொல்காப்பியம் பொருளதிகாரம் - அகத்திணை உரைவளம்** எம். அருணாசலம் பிள்ளை (பதிப்பர்கள் டாக்டர் எம். சண்முகம் பிள்ளை, டாக்டர் டி. வி. வீராசாமி) மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.

93 **வையை, தொகுதி-2** (பதிப்பர்கள்: டாக்டர் முத்துச்சண்முகம் பிள்ளை, டாக்டர் இராம. பெரியகருப்பன்), மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.

94 **நாடகக்கலையின் வரலாறு** எஸ். வி. சஹஸ்ரநாமம் (பதிப்பர்கள் டாக்டர் மு. சண்முகம்பிள்ளை, டாக்டர் இராம. பெரியகருப்பன்), மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.

## 1976

95 **அகிலன் கருத்தரங்கு - ஆய்வுரைகள்** (பதிப்பர்கள் டாக்டர் எம். சண்முகம்பிள்ளை, டாக்டர் இராம. பெரியகருப்பன்) மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.

96 **மு. வ. நினைவு மலர்** (பதிப்பர்கள் டாக்டர் எம். சண்முகம் பிள்ளை, எஸ். வெங்கட்ராமன்), மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை.

97 "சபாபதி நாடகத்தில் நகைச்சுவை" **வியாழவட்டம்**, மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.

98 "neñcil oru muḷ" *20th century Tamil Writers' Conference Seminar-Mu.Va*, Madurai University Madurai

99 "தொல்காப்பியர் கூறும் குற்றியல் உயிர்கள்" **எட்டாவது அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர்கள் மன்றக் கருத்தரங்கு - ஆய்வுக்கோவை**, மைசூர்.

100 **தமிழ் இலக்கியக் கோட்பாடுகள்** (இரண்டாம் பதிப்பு) முத்துப் பதிப்பகம், மதுரை.

101 *Kuruntokai* (Translated into English in colloboration with David E. Ludden), Koodai Publishers Mudurai.

102 **ஆய்வுக்கட்டுரை எழுதும் முறை**. (மு. சண்முகம்பிள்ளை டாக்டர் எஸ். வெங்கட்ராமன்) முத்துப் பதிப்பகம், மதுரை.

## 1977

103 **வையை, தொகுதி-3,** (பதிப்பர்கள் - டாக்டர் முத்துச் சண்முகம் பிள்ளை, டாக்டர் ஆண்டியப்பன்) மதுரைப் பல்கலைக்கழகம் மதுரை.

104 **இக்கால மொழியியல்** (இரண்டாம் பதிப்பு) மதுரை பப்ளிஷிங் ஹெளஸ், மதுரை.

105 **இக்காலத் தமிழ்** (மூன்றாம் பதிப்பு) முத்துப் பதிப்பகம், மதுரை.

106 **வையை தொகுதி-4** (பதிப்பர்கள் டாக்டர் முத்துச்சண்முகம் பிள்ளை, டாக்டர் எஸ். வெங்கட்ராமன்) மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை.

107 **குறவஞ்சி** (எம். சண்முகம் பிள்ளை & நிர்மலா மோகன். முத்துப் பதிப்பகம், மதுரை.

## 1978

108 *Collected Papers - Part I*, Muttu Patippakam, Madurai.

109 *Tamil Studies - Future and Prospects*. (M. Shanmugam Pillai, R. Kothandaraman), Muttu Patippakam, Madurai.

110 "Children's Language in Tamil" DLA Conference, Madurai University, Madurai.

111 "Cilappatikaaram is a Proto-form of Modern Teruk kuuttu" IIIR Conference on Tamil Literature, Madras.

## 1969

112 **தமிழ்வழிக் கல்லூரிக் கல்வி** (முத்துச்சண்முகம் பிள்ளை, வி. சிவணுப்பாண்டியன்) முத்துப் பதிப்பகம், மதுரை.

113 *Collected Papers - Part III*, Muttu Patippakam, Madurai.

மொழியியல் 3,2 (1979)

# புணர்ச்சியில் எண்ணுப் பெயர்கள்

ந. குமாரசாமி ராஜா
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்

நிலைமொழியிலோ, வருமொழியிலோ அல்லது இவை இரண்டிலுமோ எண்ணுப்பெயர் அமையுங்கால் ஏற்படும் புணர்ச்சி மாற்றங்களைப் பற்றித் தொல்காப்பிய நூற்பாக்கள் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

முழு எண்ணுக்குப் பின்னர் பின்ன எண்ணுப்பெயர்[1] வருமாயின் 'ஏ' என்னும் சாரியை தோன்றும் (நூற்பா 164). குறித்துவரு கிளவி 'அரை'யாயின் இச்சாரியைக்கு இடமில்லை (நூ.165). எண்ணுப்பெயர்க்குப் பின்னர் 'குறை' என்னும் கிளவி வரின் 'இன்' சாரியை இடம் பெறும். (167).[2] வேற்றுமை உருபோ, (வேற்றுமைப் புணர்ச்சியில்) பெயரோ வருமிடத்து 'அன்' சாரியை வந்துறும் (194, 198, 388, 419). இவை அனைத்தையும் ஒரே விதியில் அடக்கிக் காட்டலாம்.

1. φ → [ஏ / ...... / இன் / ⋮ / அன்] / எண் — [ { 'அரை' ஒழிந்த பின்ன எண் } / 'குறை' / { வேற்றுமை உருபு பெயர் (வே. புண.) } ]

குற்றியலுகர இறுதியுடைய 'ஒன்று' முதல் 'ஒன்பது' வரையுள்ள எண்களில் 'ஆறு' ஒழிந்த எஞ்சியவற்றின் முன் 'பத்து', 'நூறு', 'ஆயிரம்', 'நூறாயிரம்', அளவு, நிறைப் பெயர்கள், அல்லது வழங்கியல் 'மா' வரின் மொழியிறுதிக் குற்றியலுகரம் மெய்யொடும் கெடும் (437, 446, 460, 464, 471, 480).

2. X P'உ'$^{s}$ → X / — { 'பத்து' / 'நூறு' / 'ஆயிரம்' / 'நூறாயிரம்' / அளவு / நிறை / வழங்கியல் 'மா' }
('ஆறு' ஒழிந்த ஒன்று ஸ்தான எண்கள்)

இவ்வெண்களுக்குப் பின் பெயர் வரின் மொழியிறுதிக் குற்றியலுகரம், மெய் ஆகியவற்றின் கேடு நிகழவேண்டும் என்ற விதியில்லை. முதல் எண்ணாகிய 'ஒன்று' என்பதன் பின்னர்ப் பெயர் வரின் இக்கேடு நிகழ்தல் விதி (478).

3. [ ஒன்று / { X P 'உ' ('ஆறு' ஒழிந்த ஒன்று ஸ்தான எண்கள்) } ] → [ ஒன் / X(P'உ') ] / — பெயர்

குற்றியலுகரமும் மெய்யும் கெட்ட 'ஒன்', 'இரண்' என்ற இரு கிளவிகளின் இறுதி மெய் ரகரமாகும். அதன் பின்னர் உகரம் வரும் (438, 446, 460, 471, 478, 480).

4. [ ஒன் / இரண் ] [ ஒ / இர ] ர் — உ

'இரரு' என்பதன் இடையிலுள்ள 'ர' என்ற உயிர்மெய்யெழுத்துக் கெட்டு 'இரு' என்றாகும் (439, 446, 460, 471, 478, 480).

5. இரரு → இரு

'ஒரு', 'இரு' என்ற கிளவிகளுக்குப் பின் 'ஆயிரம்' வருங்கால் இவற்றின் உகரம் கெடும் (464), அப்போது இக்கிளவிகளின் மொழி முதல் உயிர் நீடலும் உண்டு (465). இவற்றின் பின் உயிர் முதலாகிய அளவு நிறைப் பெயர்கள் வரின் உகரம் கெட்டு மொழி முதல் உயிர் நீளும் (455). 'ஒரு'வின் பின் உயிர் முதன் மொழியும், 'யா' முதன் மொழியும் வருமிடத்து ஒகரம் ஓகாரமாகும். அப்போது ரகரத்தை அடுத்த உகரம் முழுதும் கெடும். (479).

6. [ஒ / இ] ர் — உ →

[ [ {ஒ / ஓ} {இ / ஈ} ] {ஓ / ஈ} ] ர் / — [ 'ஆயிரம்' [ {உயிர் / 'யா'} உயிர் {அளவு / நிறை} ] ]

'மூன்', 'ஆறு' ஆகிய கிளவிகள் நெடுமுதல் குறுகும் (440, 446, 460, 471, 478, 480).

7. {மூன் / ஆறு} → [முன் / அறு]

'முன்' என்பதன் இறுதி மெய் 'பத்து' என்னும் எண்ணின் முன் வரின் பகரமாகும் (441). 'ஆயிரம்' ஊர்ந்தோ, தனித்தோ வரும் 'நூறு' என்பதன் முன் நகரமாகும் (461, 471). மெய்ம்முதல் அளவு, நிறைப் பெயர்களின் முன் வந்ததொக்கும்[4] (447, 451, 452), உயிர் முதல் அளவு, நிறைப் பெயர்களின் முன்னும், 'ஆயிரம்' என்ற எண்ணின் முன்னும் வகரம் ஆகும் (456, 466).

8. முன் → மு [ ப் / ந் / வ்[5] / $C_i$ ] / — [ 'பத்து' / 'நூறு (ஆயிரம்)' / உயிர் { அளவு / நிறை / எண் } / $C_i$ { அளவு / நிறை } ]

'உழக்கு' என்னும் கிளவி தொடரும் போது 'முவ்' என்பதன் உயிர் நீடலுமாம் (457).

9. முவ் → மூவ் / — 'உழக்கு'

'நான்' என்னும் எண் 'பத்து' என்ற எண்ணின் முன் வருங்கால், அதன் இறுதி மெய் றகரமாகும் (442). 'ஆயிரம்' ஊர்ந்த அல்லது தனித்த 'நூறு'க்கு முன் வருங்கால் மெய் திரியாது (462, 471). உயிர் மற்றும் வகர முதலாகிய அளவு, நிறைப் பெயர்களுக்கும், 'ஆயிரம்' என்ற எண்ணுக்கும் முன் லகரமாய்த்திரியும் (453, 456, 457).

10. நான் → நா [ ற் / ல் ] / — [ 'பத்து' / { { உயிர் / 'வ' } { அளவு / நிறை } / 'ஆயிரம்' } ]

'ஐந்' என்பதன் இறுதி மெய் 'பத்து' என்னும் எண் தொடருங்கால் மகரமாய்த் திரியும் (443). 'ஆயிரம்' ஊர்ந்த அல்லது தனித்த 'நூறு' வருங்கால் மெய் திரியாது இயல்பாய் நிற்கும் (462, 471). 'ஆயிரம்' வருங்கால் யகரமாய்த் திரியும்[6] (468). உயிர் அல்லது வகரத்தில் தொடங்கும் அளவு, நிறைப் பெயர்கள் வரின் இறுதி மெய் முற்றக்கெடும் (454, 456). வல்லெழுத்திலோ, மெல்லெழுத்திலோ தொடங்கும் அளவு, நிறைப்பெயர்கள் வரின் அவ்வெழுத்து உடனிலை மெல்லெழுத்தாகும்[7] (448, 449, 451).

$$11.\quad \text{ஐந்} \rightarrow \text{ஐ}\begin{bmatrix}\text{ம்}\\ \text{ய்}\\ \phi\\ N_i{}^{8}\end{bmatrix} / - \begin{bmatrix}\text{‘பத்து’} & \\ \text{‘ஆயிரம்’} & \\ \left\{\begin{matrix}\left\{\begin{matrix}\text{உயிர்}\\ \text{‘வ’}\end{matrix}\right\}\\ \left\{\begin{matrix}P\\ N\end{matrix}\right\}i\end{matrix}\right\} & \left\{\begin{matrix}\text{அளவு}\\ \text{நிறை}\end{matrix}\right\}\end{bmatrix}$$

‘அறு’ என்பதன் இறுதி உகரம் ‘ஆயிரம்’ வருங்கால் கெடும் (469). உயிரெழுத்தில் தொடங்கும் அளவு, நிறைப் பெயர்கள் வரின் மொழி முதல் வகரம் நீடும் (458).

$$12.\quad \text{அறு} \rightarrow \begin{bmatrix}\text{அற்}\\ \text{ஆறு}\end{bmatrix} / - \begin{bmatrix}\text{‘ஆயிரம்’}\\ \text{உயிர்}\left\{\begin{matrix}\text{அளவு}\\ \text{நிறை}\end{matrix}\right\}\end{bmatrix}$$

‘ஏழ்’ என்பதன் பின் அளவும், நிறையும், எண்ணும் வரும் போது அதன் மொழி முதல் நெடில் குறிலாதலோடு இறுதியில் உகரமும் வந்துறும் (389). வருமொழி ‘நூறாயிரம்’ ஆகும் போது, ‘ஐ’, ‘அம்’, ‘பல்’ என்று இறும் பேரெண்கள் ஆகும் போதும், உயிரில் தொடங்கும் அளவு, நிறைப் பெயர் ஆகும் போதும் இம்மாற்றம் நிகழாது (392, 393, 394).

$$13.\quad \text{ஏழ்} \rightarrow \text{எழ்} - \text{உ} \;/\; - \text{உயிர் அல்}\left\{\begin{matrix}\text{அளவு}\\ \text{நிறை}\\ \text{எண்}\end{matrix}\right\}$$

‘எழ்-உ’ என்பதிலுள்ள உகரம் ‘ஆயிரம்’ வரும்போது கெடும் (391).

14. எழ் - உ → எழ் / — ‘ஆயிரம்’

‘எட்’ என்பதன் இறுதி மெய் ணகரமாக மாறும் (444, 446, 450, 460, 471, 478, 480).

15. எட் → எண்

‘ஒன்ப’ என்பது ‘பத்து’, ‘நூறு’ ஆகியவை தொடருங்கால் ‘தொன்ப’ எனத் தகரம் பெற்று வரும் (445, 463).

16. ஒன்ப → தொன்ப / — {'பத்து', 'நூறு'}

அளவு, நிறைப் பெயரும், 'ஆயிரம்' என்ற எண்ணுப் பெயரும் தொடருங்கால் 'தின்' சாரியை[9] பெறும் (459, 470).

17. $\phi$ → தின் / 'ஒன்ப' — {அளவு, நிறை, 'ஆயிரம்'}

'தொன்ப' என்பதன் பின் 'பஃது' வருங்கால் அதன் னகரம் இரட்டித்த ணகரமாய்த் திரியும். 'பஃது' என்பதன் பகரமும் ஆய்தமும் கெட அவற்றினிடத்தில் ஊகாரம் வரும். பின்னர்த் தகர மெய் றகரமாய்த் திரியும் (445).

18. தொன்ப + பஃது → தொண்ண் – பஃது
→ தொண்ண் – ஊ – து
→ தொண்ண் – ஊ – று

'தொன்ப' என்பதன் பின் 'நூறு' வருமாயின் னகரம் இரட்டித்த ளகரமாய்த் திரியும். 'நூறு' என்பதன் நகரம் கெட்டு ஊகாரம் ஆகாரம் ஆகும். ஈற்றுக் குற்றியலுகரமும் மெய்யும் கெட்டு மகரம் வந்துறும். ஆகாரத்துக்கும் மகரத்துக்கும் இடையில் 'இர'[10] வரும் (463).

19. தொன்ப + நூறு → தொள்ள் – நூறு
→ தொள்ள் – ஊறு
→ தொள்ள் – ஆ – று
→ தொள்ள் – ஆ – ம்
→ தொள்ள் – ஆ – இர – ம்

'ஒன்று' முதல் 'ஒன்பது' நிலை மொழியாக இருக்கும் பொழுது 'பத்து' வருமொழியாயின் அதன் ஒற்றுக் கெட்டு ஆய்தமாகும் (390, 437). 'ஒன்று' முதல் 'எட்டு', அல்லது 'ஆயிரம்' அல்லது அளவு, நிறைப் பெயர்கள் வருமொழியாயின் நிலைமொழியாகிய 'பத்து' குற்றியலுகரமும் மெய்யும் கெட்டு நிற்கும் (433, 435, 436, 437).

20. பத்து → [ பஃது / பத் ] / [ 'ஒன்று' முதல் 'ஒன்பது' — ; — { 'ஒன்று' முதல் 'எட்டு' / 'ஆயிரம்' / அளவு / நிறை } ]

'பத்' என்பது 'இரண்டு' என்ற எண்ணின் முன்வரின் அதன் ஒற்றுக் கெட னகரம் இரட்டிக்கும் (434). மற்ற எண்களின் முன் வரின் 'இன்' சாரியை ஏற்கும் (433, 435, 436).

21. பத் → [ பன்ன் / பத் - இன் ] / — [ 'இரண்டு' ; { 'ஒன்று' முதல் 'எட்டு' / 'ஆயிரம்' / அளவு / நிறை } ]

'ஒன்று' முதலிய எண்களைத் தொடர்ந்த 'பஃது' என்னும் கிளவிக்குப் பின் 'ஒன்று' முதல் 'ஒன்பது' வருமாயின் ஆய்தம் கெட்டு ஒற்று இடை மிகும் (475). அதன்பின் 'ஆயிரம்' என்னும் கிளவியோ, அளவு, நிறைப் பெயர்களோ வரின் ஆய்தம் கெட்ட நிலையில் 'இன்' சாரியை வரும். ஈண்டு ஒற்று இடை மிகாது (466, 467). வேற்றுமை உருபு வரின் 'அஃது' என்னும் கிளவி கெட்டு எஞ்சிய பகர மெய்யுடன் 'ஆன்' வந்துறும் (199).

22. பஃது → { பத்து / பத் - இன் / ப் - ஆன் } / { 'ஒன்று' முதல் 'எட்டு' } — [ { 'ஒன்று' முதல் 'ஒன்பது' } ; { 'ஆயிரம்' / அளவு / நிறை } ; வே. உருபு ]

'நூறு' என்னும் கிளவியின் பின் 'ஒன்று' முதல் 'ஒன்பது' தனித்தோ 'பத்து' அடுத்தோ வரினும், அளவு, நிறைப் பெயர்கள் வரினும் றகரம் இரட்டிக்கும் (472, 473, 474).

23. $$\text{நூறு} \rightarrow \text{நூற்று} \ / \ — \left\{ \begin{array}{c} \left\{ \begin{array}{c} \text{‘ஒன்று’} \\ \text{முதல்} \\ \text{‘ஒன்பது’} \end{array} \right\} \text{‘பத்து’} \\ \text{அளவு} \\ \text{நிறை} \end{array} \right\}$$

‘ஆயிரம்’ என்னும் கிளவிக்குப் பின் ஒத்த எண் வருமாயின் அவ் ‘ஆயிரம்’ தனியே நிற்பினும், அடையொடு தோன்றினும் ‘அத்து’ச் சாரியை வந்தடையும் (317, 318). அளவு, நிறைப் பெயர்கள் வருமாயின் மகரம் கெட்டு வல்லெழுத்து மிகும் (319).

24. $$(\mathbf{A})^{11} \ \text{ஆயிரம்} \rightarrow (\mathbf{A}) \ \text{ஆயிர} \begin{bmatrix} \text{த்து} \\ P_i \end{bmatrix} / \ — \begin{bmatrix} \text{ஒத்த எண்} \\ P_i \left\{ \begin{array}{c} \text{அளவு} \\ \text{நிறை} \end{array} \right\} \end{bmatrix}$$

## பின்னிணைப்பு

## தொல்காப்பிய நூற்பாக்கள்

### (தொகை மரபு)

164. உயிரும் புள்ளியும் இறுதி யாகி
அளவும் நிறையும் எண்ணுஞ் சுட்டி
உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்
தத்தங் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வருஉங் காலந் தோன்றின்
ஒத்த தென்ப ஏயென் சாரியை.

165. அரையென வருஉம் பால்வரை கிளவிக்குப்
புரைவ தன்றாற் சாரியை யியற்கை.

167. குற்றிய லுகரக் கின்னே சாரியை.

### (உருபியல்)

194. அன்னென் சாரியை ஏழ னிறுதி
முன்னர்த் தோன்றும் இயற்கைத் தென்ப.

198. எண்ணின் இறுதி அன்னொடு சிவணும்.

199. ஒன்றுமுத லாகப் பத்தூர்ந்து வரூஉம்
எல்லா எண்ணுஞ் சொல்லுங் காலை
ஆனிடை வரினும் மான மில்லை
அஃதென் கிளவி ஆவயிற் கெடுமே
உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே.

(புள்ளி மயங்கியல்)

317. அத்தொடு சிவணும் ஆயிரத் திறுதி
ஒத்த எண்ணு முன்வரு காலை.

318. அடையொடு தோன்றினும் அதனோ ரற்றே.

319. அளவும் நிறையும் வேற்றுமை யியல.

388. ஏழென் கிளவி உருபியல் நிலையும்.

389. அளவும் நிறையும் எண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்
கடிநிலை யின்றே ஆசிரி யர்க்க.

390. பத்தென் கிளவி ஒற்றிடை கெடுவழி
நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி.

391. ஆயிரம் வருவழி உகரம் கெடுமே.

392. நூறூர்ந்து வரூஉம் ஆயிரக் கிளவிக்குக்
கூறிய நெடுமுதல் குறுக்க மின்றே.

393. ஐஅம் பல்லென வரூஉ மிறுதி
அல்பெய ரெண்ணினும் ஆவியல் நிலையும்.

394. உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது.

(குற்றியலுகரப் புணரியல்)

419. எண்ணுப் பெயர்க் கிளவி உருபியல் நிலையும்.

433. ஒன்றுமுத லாக எட்ட னிறுதி
எல்லா வெண்ணும் பத்தன் முன்வரிற்

குற்றிய லுகரம் மெய்யொடுங் கெடுமே
முற்றஇன் வரூஉம் இரண்டலங் கடையே.

434. பத்தனொற் றுக்கெட னகாரம் இரட்டல்
ஒத்த தென்ப இரண்டுவரு காலை.

435. ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது.

436. நிறையு மளவும் வரூஉங் காலையுங்
குறையா தாகும் இன்னென் சாரியை.

437. ஒன்றுமுத லொன்பான் இறுதி முன்னர்
நின்ற பத்த னொற்றுக்கெட ஆய்தம்
வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப
கூறிய இயற்கை குற்றிய லுகரம்
ஆற னிறுதி அல்வழி யான.

438. முதலீ ரெண்ணினொற்று ரகர மாகும்
உகரம் வருத லாவயி னான.

439. இடைநிலை ரகரம் இரண்டென் எண்ணிற்கு
நடைமருங் கின்றே பொருள்வயினான.

440. மூன்று மாறும் நெடுமுதல் குறுகும்.

441. மூன்ற னொற்றே பகார மாகும்.

442. நான்க னொற்றே றகார மாகும்.

443. ஐந்த னொற்றே மகார மாகும்.

444. எட்ட னொற்றே ணகார மாகும்.

445. ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை யொற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி ஆய்தபக ரங்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகர மாகும்.

446. அளந்தறி கிளவியும் நிறையின் கிளவியுங்
கிளந்த இயல தோன்றுங் காலை.

447. மூன்ற னொற்றே வந்த தொக்கும்.

448. ஐந்த னொற்றே மெல்லெழுத் தாகும்.

449. கசதப முதன்மொழி வருஉங் காலை.

450. நமவ என்றும் மூன்றொடு சிவணி
யகரம் வரினும் எட்டன் முனியல்பே.

451. ஐந்தும் மூன்றும் நமவரு காலை
வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே.

452. மூன்ற னொற்றே வகரம் வருவழித்
தோன்றிய வகரத் துருவா கும்மே.

453. நான்க னொற்றே லகார மாகும்.

454. ஐந்த னொற்றே முந்தையது கெடுமே.

455. முதலீ ரெண்ணின் முன் உயிர்வரு காலைத்
தவலென மொழிப உகரக் கிளவி
முதனிலை நீட லாவயி னான.

456. மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியும்
தோன்றிய வகரத் தியற்கை யாகும்.

457. மூன்றன் முதனிலை நீடலு முரித்தே
உழக்கென் கிளவி வழக்கத் தான.

458. ஆறென் கிளவி முதல்நீ டும்மே.

459. ஒன்பா னிறுதி உருபுநிலை திரியா
தின்பெறல் வேண்டுஞ் சாரியை மொழியே.

460. நூறுமுன் வரினுங் கூறிய இயல்பே.

461. மூன்ற னொற்றே நகார மாகும்.

462. நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா.

463. ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட

ஊ ஆ வாகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகர மொற்றும்.

464. ஆயிரக் கிளவி வருஉங் காலை
முதலீ ரெண்ணின் உகரங் கெடுமே.

465. முதனிலை நீடினும் மான மில்லை.

466. மூன்ற னொற்றே வகார மாகும்.

467. நான்க னொற்றே லகார மாகும்.

468. ஐந்த னொற்றே யகார மாகும்.

469. ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்
ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்.

470. ஒன்பா னிறுதி உருபுநிலை திரியா
தின்பெறல் வேண்டுஞ் சாரியை மரபே.

471. நூறா யிரமுன் வருஉங் காலை
நூற னியற்கை முதனிலைக் கிளவி.

472. நூறென் கிளவி ஒன்றுமுத லொன்பாற்கு
ஈறுசினை யொழிய இனவொற்று மிகுமே.

473. அவையூர் பத்தினும் அத்தொழிற் றாகும்.

474. அளவும் நிறையும் ஆயியல் திரியாது
குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர்.

475. ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுத லொன்பாற் கொற்றிடை மிகுமே
நின்ற ஆய்தங் கெடுதல் வேண்டும்.

476. ஆயிரம் வரினே இன்னென் சாரியை
ஆவயி னொற்றிடை மிகுத லில்லை.

477. அளவும் நிறையும் ஆயியல் திரியா.

478. முதனிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்
ஞநமத் தோன்றினும் யவவந் தியையினும்
முதனிலை யியற்கை என்மனார் புலவர்.

479. அதனிலை உயிர்க்கும் யாவரு காலை
முதனிலை ஒகரம் ஓவா கும்மே
ரகரத் துகரந் துவரக் கெடுமே.

480. இரண்டுமுத லொன்பான் இறுதி முன்னர்
வழங்கியன் மாவென் கிளவி தோன்றின்
மகர அளவொடு நிகரலு முரித்தே.

## அடிக்குறிப்புக்கள்

1 'பின்ன எண்' என்பது தொல்காப்பியர் சொல்லாட்சியன்று. "தம்மகப்பட்ட தத்தம் கிளவி" என்ற அவர் கூற்று இவ்வாறு பொருள் கொள்ளப்பட்டுள்ளது.

2 167-ஆம் நூற்பாவின்படி குற்றியலுகர இறுதி எண்ணுப் பெயர்க்குப் பின்னரே 'இன்' சாரியை வரும். 'ஏழ்' என்பது இதனுள் அடங்காதாயினும் அதன் பின்னர் 'குறை' வரின் யாது நிகழும் எனத் தொல்காப்பியர் கூறவில்லை யஃதலின் பொதுமை நோக்கி எண்ணுப்பெயர்க்குப்பின் 'இன்' சாரியை வரும் எனக் கொள்ளலாம்.

3 ஆங்கில எழுத்தாகிய 'P' என்பது வல்லின மெய்யைக் குறிக்கும். அதன் பின்னர் உள்ளது தமிழ் உகரம். 'X' என்பது வல்லின மெய்க்கு முன்னர் அமைந்த பகுதியைக் குறிக்கும்.

4 'மூன்று' என்பதன் திரிந்த வடிவமாகிய 'முன்' னின் இறுதி மெய் 'பத்து' என்பதன் முன் பகர மாதலும், 'நூறு' என்பதன் முன் நகரமாதலும் "மூன்ற னொற்றே வந்த தொக்கும்" (447) என்ற நூற்பாவினாலேயே பெறலாம். எனவே "மூன்ற னொற்றே பகாரமாகும்" (441), "மூன்ற னொற்றே நகார மாகும்" (461) என்ற நூற்பாக்கள் மிகையாய்ப் படுகின்றன.

5 'C' என்ற ஆங்கில எழுத்து மெய்யெழுத்தைக் குறித்து நின்றது. அதன் அடியில் உள்ள 'i' என்ற எழுத்து அதே மெய்யெழுத்து என்பதைக் குறிக்கும்.

6 உயிர் அல்லது வகரத்தில் தொடங்கும் அளவு, நிறைப் பெயர்கள் வரின் இறுதி மெய் முற்றக் கெடும் என 454, 456 ஆம் நூற்பாக்களில் தொல்காப்பியர் கூறினார். 'ஆயிரம்' வரும் போதும் இதே விதி ஏற்கும் அன்றோ? 'ஆயிரம்' வருங்கால் ஐந்தன் ஒற்று யகரமாய்த் திரியும் என 468 ஆம் நூற்பாவில் கூறியது மிகையாகத் தோன்றுகிறது.

7 தொல்காப்பியர் நூற்பா 449 இல் வல்லெழுத்தில் தொடங்கும் பெயர்கள் என்று கூறாமல் "கசதப முதன் மொழி" என்று கூறுவது பொதுமை கருதாக் குறை அமைந்தது. நூற்பா 451 இல் மெல்லெழுத்து வருங்கால் என்று கூறாமல் "நமவரு காலை" என்றலும் இக்குற்றத்தின் பாற்படும்.

8 'N' என்ற ஆங்கில எழுத்து மெல்லெழுத்தைக் குறிக்கும்.

9 இங்கு வரும் சாரியை 'இன்' என்று உரையாசிரியர்கள் கருதுவர். அவ்வாறாயின் இடையில் வரும் தகரத்திற்கு விளக்கம் தருதல் எளிதன்று.

10 ஆகாரத்திற்குப் பின் 'இர' வரும்போது 'ஆஇர' என்று அமையும். 'ஆயிரம்' என்ற கிளவியில் யகரம் வருமன்றோ? தொல்காப்பியர் அதற்கு விளக்கம் தரவில்லை.

11 'A' என்பது ஏதேனும் ஒரு அடையைக் குறித்து நின்றது.

மொழியியல் 3.2 (1979)

# அறிந்த முகங்களில் அறியாத முகங்கள்

இரா. கோதண்டராமன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

பழந்தமிழில் செயல் வாய்பாட்டு வினைகளும் (சுருக்கம்: செயல் வினைகள்), செய்தல் வாய்பாட்டு வினைகளும் (சுருக்கம்: செய்தல் வினைகள்) தொழிற் பெயர்களாக அமைவதுடன் பயனிலைகளாகவும், செய்யும் வாய்பாட்டு வினைகளுக்கு நிகரான பெயரெச்சங்களாகவும், செய்து வாய்பாட்டு வினைகளுக்கு நிகரான வினையெச்சங்களாகவும் நிகழும் நிலை காணப்படுகின்றது. இவ்விரு வகை வினைகளுள் செய்தல் வினைகள் எச்ச வினைகளாக நிகழ்தல் மிக அருகியே காணப்படுகின்றது.

பயனிலைகளாகச் செயல்படுகையில் செயல் மற்றும் செய்தல் வினைகள் இருவகைப் பொருண்மைகளை உணர்த்துகின்றன. ஒன்று, விழைவு, பிறிதொன்று, இயல்பு. முதல் வகைப் பொருண்மை வியங் கோட் பொருண்மைக்கு நிகராக இருக்கலாம். இலக்கணப் புலவர்களும், உரையாசிரியர்களும் நாம் விழைவுப் பொருண்மை

யாகக் கொள்வலுத வியங் கோட் பொருண்மையாகவே கொள்வர். விழைவும், வியங்கோளும் ஒன்றா, வேறு வேறா என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும். இரண்டாம் வகைப் பொருண்மையை **சூரியன் கிழக்கில் உதிக்கும், சான்றோர் உண்மையே பேசுவர்** முதலியவற்றில் அமைந்த பயனிலைகளில் காணலாம். இவ்விரண்டனுள் விழைவுப் பொருண்மையை உணர்த்தும் செயல் வினைகளையும், செய்தல் வினைகளையும் பின்வரும் எடுத்துக் காட்டுகளில் காணலாம்.

1) அறவை யாயின் நினதெனத் **திறத்தல்**
மறவை யாயின் போரொடு **திறத்தல்**
(புறம் 44. 11 & 12)

2) ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் **செயல்** (குறள் 33)

3) செப்பும் வினாவும் வழாஅல் **ஓம்பல்**
(தொல். சொல். சேனா 13)

4 இயற்கைப் பொருளை இற்றெனக் **கிளத்தல்**
(தொல். சொல். சேனா. 19)

5) செயற்கைப் பொருளை ஆக்கமொடு **கூறல்**
(தொல். சொல். சேனா. 20)

6) இன்ன பெயரே இவையெனல் வேண்டின்
முன்னம் சேர்த்தி முறையின் **உணர்தல்**
(தொல். சொல். சேனா. 193)

7) ஆவோ வாகும் பெயருமா **ருளவே**
ஆயிடன் **அறிதல்** செய்யு ளுள்ளே
(தொல். சொல். சேனா. 195)

இவ்வேழு எடுத்துக்காட்டுகளிலும் பயனிலையாக அமையும் செயல் மற்றும் செய்தல் வினைகள் **செய்தல் வேண்டும்** என்ற வாய்பாட்டுத் தொடரின் பொருண்மையைக் குறிப்பனவாகும். இவ்வினைகள் வியங்கோட் பொருண்மையினவாயின் **செய்க** வாய்பாட்டு வியங் கோள் வினைகளின் பொருண்மையைக் குறிப்பனவாய் அமையும். மேல் எடுத்துக் காட்டுகளில் செயல் மற்றும் செய்தல் வினைகள்

உணர்த்தும் பொருண்மையை விட அவை பயனிலையாகச் செயல்படும் செய்தியையே நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். உணர்த்தும் பொருண்மை விழைவா வியங்கோளா என்ற குழப்பம் தீரும்வரை × என்று கூட வைத்துக் கொண்டு நாம் ஆய்வைத் தொடரலாம். ஆகவே அந்த வலையில் இப்போதைக்கு நாம் சிக்காமல் போவதே நல்லது.

செயல் வினைகள் பயனிலைகளாக நிகழ்கையில் பலர்பால் முற்றெச்சங்கள் அவற்றை அவாவி நிற்றலைப் பின்வரும் எடுத்துக் காட்டுக்களில் காணலாம்.

8) உணரக் கூறிய புணரியல் மருங்கில்
கண்டுசெயற் குரியவை **கண்ணினர் கொளலே**
(தொல். எழுத்து. இளம். 406)

9) அவையல் கிளவி **மறைத்தனர் கிளத்தல்**
(தொல். சொல். சேனா. 442)

10) எஞ்சுபொருட் கிளவி செஞ்சொல் ஆயின்
பிற்படக் **கிளவார்** முற்படக் **கிளத்தல்**
(தொல். சொல். சேனா. 284)

இம்மூன்று எடுத்துக்காட்டுக்களில் நிகழும் முற்றெச்சங்களைக் கருத்தில் கொள்கையில் **கொளல், கிளத்தல்** ஆகிய பயனிலைகளின் எழுவாய் பலர்பாற் பெயராய் அமையும் என்பது பெறப்படும். இவ்வெழுவாய் **புலவர்** (தொல். சொல். சேனா. 148, 156, 164, 204, 224, 231, 238, 241, 275, 358, 396, 403, 421 முதலிய நூற்பாக்களில் **புலவர்** எழுவாயாகச் செயல்படுகிறது) அல்லது **மக்கள்** என்பது போல் இருக்குமாயின் **கொளல், கிளத்தல்** ஆகியவற்றை வியங்கோள் அல்லது விழைவு வினைகளாகக் கொள்வதைவிட **கொள்வர், கிளப்பர்** என்பவற்றுக்கு ஈடானவை எனக் கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது. எடுத்துக் காட்டு (10)–இல் நிகழும் நூற்பாவினை இரண்டு பயனிலைகள் உள்ள வாக்கியங்களாகக் கொள்ளவும் வாய்ப்பு உண்டு. **எஞ்சு பொருட் கிளவி செஞ்சொல் ஆயின் பிற்படக் கிளவார்** எனவும் **முற்படக் கிளத்தல்** எனவும் கொண்டு **கிளவார், கிளத்தல்** என்று

இரண்டு பயனிலைகளைச் சுட்ட முடியும். முதல் பயனிலையாகிய **கிளவார்** என்பதைக் **கருத்தில்** கொண்டால் பயனிலையாகிய **கிளத்தல்** என்பதை விழைவுப் பொருண்மையதாகவோ, வியங்கோட் பொருண்மையதாகவோ கொள்ள முடியாது. அது கிளப்பர் என்ற வினைக்கு நிகராயமைந்து இயல்புப் பொருண்மையைக் குறிப்ப தாகவே கருதப்படும்.

செய்தல் வினைகளைப் பொருத்தவரையில் பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் சிந்தனைக்குரியனவாகின்றன.

11) ஞகாரை ஒற்றிய தொழிற் பெயர் முன்னர்
அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து **மிகுமே**
உகரம் **வருதல்** ஆவயின் ஆன
(தொல். எழுத்து, இளம்.297)

12) யாதென் இறுதியும் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் அன்னொடு **சிவணும்**
ஆய்தம் **கெடுதல்** ஆவயின் ஆன
(தொல். எழுத்து. இளம். 201)

13) அகமென் கிளவிக் கைமுன் வரினே
முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை யின்றே ஆசிரி யர்க்க
மெல்லெழுத்து **மிகுதல்** ஆவயின் ஆன
(தொல். எழுத்து. இளம். 316)

இம்மூன்று எடுத்துக்காட்டுக்களிலும் பயனிலைகளாக **வருதல், கெடுதல், மிகுதல்** ஆகிய மூன்று செய்தல் வினைகளும் வியங் கோட் பொருண்மையை உணர்த்துவனவாகக் கொள்ள முடியாது. காரணம் இப்பயனிலைகள் அமைந்த நூற்பாக்கள் இலக்கணச் செய்தியை நேர்முக வர்ணனைப் பாங்கில் வெளிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன. முதல் இரண்டு எடுத்துக்காட்டுக்களில் **மிகும், சிவணும்** என்ற செய்யும் வாய்பாட்டுப் பயனிலைகளில் ஒரு வாக்கியம் முடிகிறது அடுத்த வாக்கியத்தில் **வருதல் (11), கெடுதல் (12)** ஆகிய பயனிலைகள் நிகழ்கின்றன. இத்தகைய

சூழலில் இவ்விரு செய்தல் வினைகளும் எங்ஙனம் வியங்கோட் பொருண்மையை உணர்த்தமுடியும்? விழைவிற்கு ஓரளவு வாய்ப் பிருக்கலாம். வியங்கோளாக வருதலும், கெடுதலும் அமைய வாய்ப்பில்லை. மிகுதியான வாய்ப்பு இவ்விரு செய்தல் வினைகளை யும் செய்யும் வாய்ப்பாட்டுப் பயனிலைகளுடன் சமன்படுத்துவதற்கு இருப்பதாகக் கொள்ளலாம். இறுதி எடுத்துக்காட்டில் நிகழும் **மிகுதல்** என்னும் செய்தல் வினைப்பயனிலைக்கும் இது பொருந்தும். இவ்வெடுத்துக்காட்டிலும் **வரைநிலையின்று** என்ற பயனிலையை அடுத்து **மிகுதல்** என்னும் பயனிலை இரண்டாம் வாக்கியத்தில் நிகழ்வதால் இதனை வியங்கோட் பயனிலையாகக் கொள்வதற்கு வாய்ப்பு உண்டா என்பது சிந்தனைக்குரியது. விழைவுக்கு வாய்ப் பிருக்கலாம். ஆயினும் இம்மூன்று எடுத்துக்காட்டுக்களிலும் நூற் பாக்கள் செய்தியை வெளிப்படுத்தும் போக்கினைக் கருத்தில் கொண்டு **வருதல், கெடுதல், மிகுதல்** ஆகிய மூன்றும் முறையே **வரும், கெடும், மிகும்** ஆகியவற்றுக்கு நிகரானவை எனக் கொள்ளு தல் பொருத்தமாகத் தோன்றுகின்றது. இச்சமன்பாடு பின்வரும் எடுத்துக்காட்டுகளில் அமைந்த செய்தல் பயனிலைகளுக்குப் பொருந்துவதாகத் தோன்றவில்லை.

14) வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை
ஒல்வழி **அறிதல்** வழக்கத் தான
(தொல். எழுத்து. இளம். 247)

15) மெல்லெழுத் துறழும் மொழியுமா ருளவே
செல்வழி **அறிதல்** வழக்கத் தான
(தொல். எழுத்து. இளம். 313)

இவ்விரு எடுத்துக்காட்டுக்களிலும் நூற்பா வெளிப்படுத்தும் செய்தியைப் பின்புலமாகக் கொண்டு நோக்குகையில் **அறிதல்** என்னும் செய்தல் வினை **அறிக** என்னும் வியங்கோள் வினைக்கு நிகராகி வியங்கோட் பொருண்மையை உணர்த்துவதாகக் கருத முடிகின்றது. தன் பார்வையில் தென்படாத ஆனால் எங்கோ வழக்கில் உள்ளதாகத் தனக்குப் படுகின்ற ஓர் இலக்கணச் செய்தியை இந்நூற்பாக்களில் தொல்காப்பியர் உணர்த்துவதால் இவற்றில் நிகழும் **அறிதல்** என்னும் பயனிலை **அறிக** என்னும்

வியங்கோள் வினையின் பொருண்மையுடன் பொருந்துவதாகக் கொள்ள வாய்ப்பிருக்கின்றது. இந்த இரு எடுத்துக்காட்டுக்களும் விழைவுப் பொருண்மையையும் வியங்கோட் பொருண்மையையும் வேறுபடுத்திக் காட்டுவது போல் தோன்றுகின்றது. இரண்டுக்கும் வேறுபாடு இல்லையென்றாலும் நமது ஆய்வு இதனால் பாதிக்கப் படப் போவதில்லை.

இயல்புப் பொருண்மையை உணர்த்த வல்லனவாக முன்னர்க் குறிக்கப் பெற்ற செயல்வினைகளும் செய்தல் வினைகளும் பயனிலை களாய் அமைந்து மேற்படிப் பொருண்மையைப் புலப்படுத்துவதைக் காணலாம்.

16) மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்
(தொல். எழுத்து. இளம். 15)

17) மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்
(தொல். எழுத்து. இளம். 105)

18) முதலீ ரெண்ணின்முன் உயிர்வரு காலைத்
தவல்என மொழிப உகரக் கிளவி
முதனிலை நீடல் ஆவயின் ஆன
(தொல். எழுத்து. இளம். 455)

19) புள்ளியும் உயிரும் இறுதி யாகிய
அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்
விளிநிலை பெறூஉம் காலம் தோன்றின்
தெளிநிலை யுடைய ஏகாரம் வரலே
(தொல். சொல். சேனா. 151)

20) சுண்ணந்தானே,
பட்டாங்கு அமைந்த ஈரடி எண்சீர்
ஒட்டுவழி யறிந்து துணித்தனர் இயற்றல்
(தொல். சொல். சேனா. 406)

21) மொழிமாற் றியற்கை
சொல்நிலை மாற்றிப் பொருளெதிர் இயைய
முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்
(தொல், சொல், சேனா, 409)

இந்த ஆறு எடுத்துக்காட்டுக்களில் (20)-இல் **துணித்தனர்** என்னும் பலர்பால் முற்றெச்சத்தை அடுத்து நிகழும் **இயற்றல்** என்னும் செயல்வினை **இயற்றுவர்** என்பதற்கு ஈடானதாகும். ஏனைய எடுத்துக்காட்டுக்களில் நிகழும் **நிலையல், தவல், வரல், கொளாஅல்** ஆகிய செயல் வினைகளும், (18)-இல் நிகழும் **நீடல்** (>நீள்-தல்) என்னும் செய்தல் வினையும் செய்யும் வாய்பாட்டு வினைகளுக்கு நிகராகிப் பயனிலையாகச் செயல்படுகின்றனவாகக் கருதத்தகும். இவ்வாறு நாம் கருதுவதற்குக் காரணம் இயல்புப் பொருண்மையை உணர்த்தும் செய்யும் வாய்பாட்டுப் பயனிலைகள் தொல்காப்பிய நூற்பாக்களில் மிகுதியாகக் காணப்படுவதேயாகும். பின்வரும் நூற்பாக்களில் நிகழும் பயனிலைகளைக் கருத்தில் கொள்க.

21) ஞநமவ இயையினும் உகரம் **நிலையும்**
(தொல். எழுத்து. இளம். 298)

23) மெய்யின் இயக்கம் அகரமொடு **சிவணும்**
(தொல். எழுத்து. இளம். 46)

24) னகாரை முன்னர் மகாரம் **குறுகும்**
(தொல். எழுத்து. இளம். 52)

இப்படிப் பல நூற்பாக்களில் செய்யும் வாய்பாட்டுப் பயனிலைகளைத் தொல்காப்பியர் இயல்புப் பொருண்மையை உணர்த்தும் வகையில் ஆண்டுள்ளார். உரையாசிரியரோ பதிப்பாசிரியரோ செயல் மற்றும் செய்தல் வினைப்பயனிலைகளைச் செய்யும் வாய்பாட்டுப் பயனிலைகளாகவோ செய்யும் வாய்பாட்டுப் பயனிலைகளைச் செயல் மற்றும் செய்தல் வினைப் பயனிலைகளாகவோ மாற்றத் துணிந்தால் உண்மையான பாடத்தைக் கண்டறிய தொல்காப்பியரே வந்தாலும் முடியாது. இப்படியொரு நிலை தொல்காப்பிய உரியியல் நூற்பாவுக்கு நேர்ந்திருக்கிறது. **கயவென் கிளவி மென்மையும் ஆகும்** என்று சேனாவரையர் பாடம் கொள்ளும் உரியியல் நூற்பா **கயவென் கிளவி மென்மையும் செய்யும்** எனத் தெய்வச்சிலையாரால் பாடம் கொள்ளப்பட்டிருக்கிறது இவ்வாறே, **நலத்தின்கண் நாறின்மை தோன்றின் அவனைக் குலத்தின்கண் ஐயப்படும்** என்று நமக்கு அறிமுகமான குறள்

சுப்பிரமணிய திட்சிதர் தனது பிரயோக விவேகத்துக்கு வகுத்த உரையில் ..... ஐயப்படல் எனப் பாடம் பெற்று முடிகின்றது. எது உண்மை? எது போலி? யாருக்குத் தெரியும்? பிந்தியதில் நேர்ந்த மயக்கத்துக்குக் காரணம் செயல் வினைகளும் செய்யும் வினைகளும் ஒரே செயற்பாட்டில் நிகழவல்லன என்ற உள்ளுணர்வாக இருக்கவேண்டும்.

செயல் மற்றும் செய்தல் வினைகள் தொல்காப்பியர் காலத்து மொழியிலாகட்டும், சங்கப் பாடல்கள் தோன்றிய காலத்தில் நடைமுறையில் இருந்த மொழியிலாகட்டும், பயனிலைகளாகவும், செய்து மற்றும் செய்யும் வாய்பாட்டு எச்சங்களுக்கு நிகராகவும் பயின்று வழங்கியிருக்கும் என்று கொள்வதற்குத் தயக்கமாகவே உள்ளது. தொல்காப்பியம் மற்றும் சங்கப் பாடல்கள் தோன்றிய காலத்துக்கு முன்பிருந்த மிகப் பழந்தமிழில் செயல் வினைகளும் செய்தல் வினைகளும் பயனிலைகளாகவும் எச்சங்களாகவும் பயின்று வழங்கியிருக்க வேண்டும். தொல்காப்பியமும் சங்கப்பாடல்களும் தோன்றிய காலத்தில் இவ்வினைகளில் மேற்படி செயல்பாடுகள் அருங்கலைப் பொருள் போல் இப்படைப்புக்களில் போற்றப்பட்டிருக்கலாம். இவ்வாறு நாம் கருதக் காரணம் தொல்காப்பியத்திலும், சங்கப் பாடல்களிலும் இவ்வினைகளின் பயனிலை மற்றும் எச்சச் செயற்பாடுகள் எண்ணிக்கையில் மிக அருகியே காணப்படுகின்றன. இன்னொரு காரணம், பால் வினைகள் (Personal verbs), பொது வினைகளை (Impersonal verbs) நோக்க காலத்தால் பிந்தியவை செயல் வினைகள் பொது வினைகளாயமைந்து பயனிலைகளாகவும், எச்சங்களாகவும் செயல்பட்ட நிலை காலத்தால் முந்தியது. பால் வினைகள் பயின்று வழங்கத் தொடங்கிய பிந்திய நிலையில் தோன்றியவையே நமக்குக் கிடைத்திருக்கும் பழந் தமிழ் நூல்கள். மொழி நடையின் சிறப்பைப் பேண இக்காலத்தில் பழந்தமிழ் சொற்களையும், வினையமைப்புக்களையும், தொடர்களையும் பயன் படுத்துவது போலவே தொல்காப்பியத்திலும், சங்கப் பாடல்களிலும் செயல் மற்றும் செய்தல் வினைகளின் செயற்பாடுகள் கவிஞர்களின் புலமை வளத்தைக் காட்டவும், மொழி நடையின் சிறப்பை மிகுதிப் படுத்தவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். தொல்காப்பியர் காலத்தில் செயல் மற்றும் செய்தல் வினைகளில் பயனிலைச் செயற்பாடு

பயின்று வழங்கியிருந்திருக்குமானால், இச்செயற் ாட்டில் அவற்றின் பொருண்மையைக் கண்டறிய நாம் இத்துணை இடர்பட்டுக் கொண்டிருக்க வேண்டிய நிலை நேர்ந்திருக்காது. இவ்வினைகள் பயனிலையாகச் செயற்பாடு பெறுகையில் அவற்றின் பொருண்மை ஒன்றுக்கு மேற்பட்டதாய் அமைவதை மட்டும் கருத்தில் கொண்டு அடுத்த கட்டத்துக்குச் செல்லலாம்.

தொல்காப்பியத் ல் நிகழும் செயல் மற்றும் செய்தல் வினைகளின் பயனிலைச் செயற்பாட்டில் அமையும் பொருண்மையை இனம் கண்டு கொள்வதற்குள்ள ஒரே வழி தொல்காப்பியர் தமது இலக்கணத்தை எந்த கோட்பாட்டின் அடிப்படையில் அமைத்தார் என்பதைப் பொருத்ததாகும். பனம்பாரனார் கூற்றுப்படி தொல்காப்பியர் **தமிழ்கூறு நல்லுலகத்து, வழக்கும் செய்யுளும் பொருளும் நாடிச், செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு, முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி** (தொல். எழுத்து. இளம். சிறப்புப் பாயிரம்) இலக்கணம் செய்தார் என்று அறிகிறோம்.

**மொழியின் நிகழ்ச்சி இப்படி அமையவேண்டும்** என்ற கோட்பாட்டில் தொல்காப்பிய எழுத்தும், சொல்லும் அமைந்திருந்தால் செயல் மற்றும் செய்தல் பயனிலைகள் வியங்கோள் அல்லது விழைவு அல்லது இரண்டுமாகிய பொருண்மையை உணர்த்துவதாகக் கருதலாம். மாறாக, எழுத்தும் சொல்லும் **மொழியின் நிகழ்ச்சி இப்படி அமைந்துள்ளது** என்ற கோட்பாட்டில் அமைந்திருந்தால் செயல் மற்றும் செய்தல் பயனிலைகள் இயல்புப் பொருண்மையை உணர்த்துவதாகக் கொள்ளலாம். தொல்காப்பியர் கோட்பாடு இந்த இரண்டையும் தழுவியது என்பது பனம்பாரனாரின் சிறப்புப் பாயிரத்தின் மூலம் அறியப்படுவதால் தொல்காப்பியத்தில் மேற்படி வினைகள் எங்கெங்கே வியங்கோள், விழைவு, இயல்பு ஆகிய பொருண்மைகளை உணர்த்துகின்றன என்பதை இனம் காண முடியாமல் இடர்பட வேண்டியுள்ளது. இரண்டு நிலைகளில் இவ்வினைகளின் பொருண்மையைக் கண்டறிய முற்படலாம். ஒன்று, நூற்பாக்கள் செய்தியை வெளிப்படுத்தும் போக்கும், அந்நூற்பாக்களுடன் தொடர்புள்ள முந்திய, பிந்திய நூற்பாக்களில் பயனிலைகள்

அமைந்துள்ள போக்கும். இரண்டு, தொல்காப்பிய எழுத்து, சொல், நூற்பாக்களில் அமைந்துள்ள பயனிலைகள் பொருளுணர்த்தும் போக்கு. இவ்விரண்டு நிலைகளில் பொருண்மை விளக்கம் புலப் படவில்லையாயின் தொல்காப்பியர்தான் வந்து சிக்கலை அவிழ்க்க வேண்டும். தொல்காப்பியத்தில் மிகப் பெரும்பாலான நூற்பாக்களின் வினைப் பயனிலைகள் வியங்கோள் தன்மையனவாக அமையாமல், செய்தி விளக்கப்பாங்கில் அமைந்தனவாகவே உள்ளதை நாம் புறக்கணித்து விடமுடியாது.

பயனிலைகளாகச் செயல்படும் செயல் மற்றும் செய்தல் வினை களின் பொருண்மை விழைவு, வியங்கோள், இயல்பு ஆகிய மூன்றி னோடும் மயங்கி நிற்பதால் இவ்வாய்வில் அமைந்த எடுத்துக்காட்டுக் களில் நிகழும் செயல் வினைகளும் செய்தல் வினைகளும் கோட் பாட்டு விளக்கத்தைப் பொருத்து வியங்கோளாகவும், விழைவாகவும் இயல்பாகவும் நாம் கருதுவன மாறியும் அமையலாம். இந்த மாற் றம் இந்த ஆய்வின் தன்மையைச் சிதைக்கப் போவதில்லை. செயல் மற்றும் செய்தல் வினைகளின் பயனிலைச் செயற்பாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட பொருண்மைகள் புலப்படுகின்றன என்ற நமது கருத் தினை இன்னொரு செய்தியின் மூலமும் வலுப்படுத்திக் கொள்ள லாம். வியங்கோளாய் அமையும் செயல் மற்றும் செய்தல் வினை கள் அமைந்த வாக்கியங்களைப் பெயரெச்சத் தொடர்களாக மாற்ற முடியாது. செயல் மற்றும் செய்தல் வினைகள் பெயரெச்சமாயும் செயற்படுவதால் இப்பெயரெச்சத்துக்கு நிகராய் அமையும் செயல் மற்றும் செய்தல் பயனிலைகளில் வியங்கோட் பொருண்மையைச் சுட்ட முடியாது ஆகவே இவ்வினைகள் பயனிலைகளாகச் செயல் படுகையில் அவை குறைந்தது இரண்டு பொருண்மைகளையாவது உணர்த்தியே தீர வேண்டும். ஒன்று, வியங்கோள், பிறிதொன்று விழைவு அல்லது இயல்பு.

செயல் மற்றும் செய்தல் வினைகள் பெயரெச்சமாகச் செயல் படும் நிலையை இனி காண்போம். செய்தல் வினைகள் பெயரெச்ச மாகச் செயல்படும் நிலை பழந்தமிழில் மிக அருகியே காணப்படு கின்றது. தொழிற்பெயர்களின் அறுவகை இயல்புகளைத் தொகுத் துரைக்கையில் எச்சமாகவும் முற்றாகவும் அவை செயல்படும் எனக்

குறிப்பிடுவார் சுவாமிநாத தேசிகர். (இலக்கணக் கொத்து. நூற்பா 82) **பொருள் செயல் வகை, வினை செயல் வகை, தோன்றலாறே, உயிர்த்தலாறே** ஆகிய தொடர்களின் மூலம் செயல் வினைகள் பெயரெச்சமாகச் செயல்படும் பாங்கினையும், **ஆய்தம் கெடுதல் ஆவயின் ஆன, மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்** ஆகிய எடுத்துக்காட்டுக்களின் மூலம் செய்தல் வினையும், செயல் வினையும் வினைமுற்றாகச் செயல்படும் பாங்கினையும் சுவாமிநாத தேசிகர் தெளிவுபடுத்துகிறார். (இலக்கணக் கொத்து. நூற்பா 82, உரை) செயல் வினைகளும் செய்தல் வினைகளும் – மிகுதியாக, முந்தியவை – பெயரெச்சமாகச் செயல்படும் நிலையைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களில் காணலாம்.

25) தண்**வரல்** வாடையும் பிரிந்திசினோர்க் கழலே
(குறுந்தொகை, 35.5)

26) எழுத்தெனப்படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்து **வரல்** மரபின் மூன்றலங் கடையே
(தொல். எழுத்து இளம் 1)

27) காய்ந்து **செலற்** கனலி கல்பகத் தெறுதலின்
(அகம் 55.1)

28) விண் **செலல்** மரபின் ஐயர்க் கேந்தியது
ஒருகை ... (பத்துப்பாட்டு 1. 107 & 108)

29) மா **புகல்** கானம் (பத்துப்பாட்டு. 10.69)

30) ஊசல் **மேவல்** சேயிழை மகளிர்
(பதிற்றுப்பத்து 43.2)

31) புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல **உயிர்த்தல்** ஆறே.
(தொல். எழுத்து. இளம் 17)

32) பெயரெனப் படுபவை தெரியும் காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோ ரன்ன உரிமையும்
அம்மூ வுருபின **தோன்றல்** ஆறே
(சொல். சொல். சேனா. 160)

33) **நகுதற்** பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று **இடித்தற்** பொருட்டு (குறள் 784)

34) வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்று **உணரற்** பாற்று (குறள் 11)

35) பொருள் **தரல்** விருப்பொடு (அகம். 32. 20)

36) கேட்டற் கினிதுநின் செல்வம் கேட்டொறும்
**காண்டல்** விருப்பொடு (பதிற்றுப்பத்து 12.9 & 10)

இப்பன்னிரண்டு எடுத்துக்காட்டுக்களில் (33)-இல் நிகழும் **நகுதல்** ஈற்றில் **காண்டல்** ஆகிய இரண்டும் செய்தல் வினைகளாயும், ஏனையவற்றுள் நிகழும் **வரல், செலல், புகல், மேவல், உயிர்த்தல், தோன்றல், இடித்தல், உணரல், தரல்** ஆகிய ஒன்பதும் செயல் வினைகளாயும் அமைந்து **செய்யும்** அல்லது **செய்கின்ற** வாய்பாட்டுப் பெயரெச்சங்களுக்குரிய செயற்பாட்டினை மேற்கொண்டுள்ளன. செயல் மற்றும் செய்தல் வினைகளின் இப் பெயரெச்சச் செயல்பாட்டினை நோக்கும்போது செய்யும் வாய்பாட்டு வினைகளைப் போல் இவ்வினைகளும் பயனிலையாகவும் பெயரெச்சமாகவும் செயல்படும் தன்மையின என்பது புலனாகிறது. இவ்வகையில் செயல் மற்றும் செய்தல் வினைகளை எச்சவினைகள் எனக் குறிப்பதற்கு மாறாக, முற்றெச்ச வினைகள் எனக் குறிப்பதே பொருத்தயாகும். இம்முற்றெச்ச வினைகள் பயனிலையாகச் செயல் படுகையில் முன்னர்க் குறிப்பிட்டது போல அவை வியங்கோட் பொருண்மையை உணர்த்த முடியாது. ஏனெனில் வியங்கோட் பயனிலைகள் அமைந்த வாக்கியங்களைப் பெயரெச்சத் தொடர் களாக மாற்ற முடியாது. செயல் வினைகளும், செய்தல் வினை களும் தொல்காப்பியர் காலத் தமிழிலும், சங்கப் பாடல்கள் தோன்றிய காலத் தமிழிலும் எவ்வாறு பயனிலைச் செயற்பாட்டினை

இழந்தனவோ அவ்வாறே எச்சச் செயற்பாட்டினையும் இழந்து பழமையைப் போற்றும் மரபாகத் தொல்காப்பியம், சங்கப் பாடல்கள், குறள் முதலியவற்றில் இச் செயற்பாடுகள் இடம் பெற்றனவாகக் கருத வேண்டும். ஏனெனில் இவ் விலக்கியங்களில் இச் செயற்பாடுகளை வேறுவகை வினைகள் ஆற்றலுடன் பற்றிக் கொண்டு விட்டன.

செயல் வினைகள் ஒரோவழி வினையெஞ்சுகிளவியாக நிகழும் நிலையும் பழந்தமிழில் காணப்படுவதைப் பின்வரும் எடுத்துக் காட்டுக்கள் உணர்த்தும்.

37) ஆவுதி நறும்புகை முனைஇக் குயில்தம்
மாயிரும் பெடையொடு **இரியல்** போகி
(பத்துப்பாட்டு 9.55 & 56)

38) தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை
அரிபுகு பொழுதின் **இரியல்** போகி.
(பத்துப்பாட்டு 4 201 & 202)

இவ்விரு எடுத்துக்காட்டுக்களிலும் நிகழும் **இரியல்** என்னும் செயல் வினை **இரிந்து** என்னும் செய்து வாய்பாட்டு வினையெச்சத்துக்கு நிகராய் அமைந்த ஒன்றாகும்.

செயல் மற்றும் செய்தல் வினைகளின் பிறிதொரு வகைச் செயற்பாடு அவை தொழிற் பெயர்களாய் அமைதலாகும். பார்க்கப் போனால், தொழிற்பெயர் என்பது ஒரு செயற்பாடாகக் கொள்ளத் தக்கதா என்பதே ஐயத்திற்குரிய ஒன்றாகும். ஏனெனில் வினைப் பகுதிகள் எனக் கொள்ளத்தக்கவை என்பது நமது கோட்பாடு (கோதண்டராமன். இரா. 1978, 47-53) இதன்படி ஓர் வினையை நிலைக்களனாகக் கொண்டு அமையும் எல்லா வினையமைப்புகளுமே வினைப் பெயர்கள்தாம். வினையடியாகத் தோன்றிய ஓர் குறிப்பிட்ட விகுதியின் சேர்க்கையால் தொழிற்பெயராய் அமைகின்றது என்ற கருத்தினை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஓர் வினையமைப்பு தொழிற்பெயர் எனக் கொள்ளப்படுவதற்குக் காரணம் அதன் வினைப்பகுதியே பெயர் என்பதால்தான். இந்த வகையில் வினையடியாகத் தோன்றியமையும் எல்லா வகையான

முற்றுக்களும் எச்சங்களும் தொழிற் பெயர்களே. எச்சமாகவும் பயனிலையாகவும் நிகழும் செயல் வினைகளும் செய்தல் வினைகளும் ஒரு நிலையில் மரபிலக்கணங்களால் தொழிற் பெயர்களாகக் கருதப்படுவதற்குக் காரணம் அவை நிகழும் வாக்கியச் சூழல் வித்தியாசமாக அமைவதுதான். இவ்வினைகள் செய்வது வாய் பாட்டு வினைகளுடன் தொடர்புடையன என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டு உணர்த்தும்.

39) தேன் { பருகல் / பருகுதல் / பருகுவது } உடம்புக்கு நல்லது.

செய்வது வாய்பாட்டு வினைகள் பால் வினைகளுடன் தொடர் யுடையவை என்பதனைப் பின்வரும் ஒரே பொருண்மையினவாகிய எடுத்துக் காட்டுக்கள் உணர்த்தும்.

40) முருகன் காலையில் தேன் பருகுவான்
(நேர் வாக்கியம்)

41) முருகன் காலையில் பருகுவது தேன்
(சுவை வாக்கியம்)

இந்த இரண்டு எடுத்துக்காட்டுகளுடன் (39)-இல் உள்ளவற்றைப் பொருத்திப் பார்த்தால் தொழிற் பெயர்களாகக் கருதப்படும் செயல் வினைகளும் செய்தல் வினைகளும் ஒரு நிலையில் பயனிலைச் செயற்பாட்டினை மேற்கொண்ட வினைகளுடன் ஒன்றுவதைக் காணலாம். இந்த கண்ணோட்டத்தில் இனி பின்வரும் எடுத்துக் காட்டுக்களை அணுகுவோம்.

42) வளியென வரூஉம் பூதக் கிளவியும்
அவ்வியல் **நிலையல்** செவ்வி தென்ப
(தொல். எழுத்து. இளம். 243)

43) உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிர்
வ என் எழுத்தொடு **வருதல்** இல்லை
(தொல். எழுத்து. இளம். 63)

இவ்விரு எடுத்துக் காட்டுகளிலும் நிகழும் **நிலையல்** (=நிற்றல்) என்னும் செயல் வினையும், **வருதல்** என்னும் செய்தல் வினையும்

முறையே **நிற்பது, வருவது** என்ற வினைகளின் பொருண்மையோடு பொருந்துவனவாகும். இவற்றுள் (43)-இல் நிகழும் **வருதல் இல்லை** என்ற தொடர் **வராது** அல்லது **வாரா** என்ற முற்று வினையுடன் பொருண்மை நிலையில் பொருந்தி நிற்பதால் **வருதல்** என்பதும் **வராது** அல்லது **வாரா** என்பதில் உள்ள வினைப்பகுதியும் மாற்றுருபு உறவில் அமைதலையும் காணலாம். (வினைப் பகுதிகளைப் பெயராய்க் கொள்வதற்கு இது ஓர் அகச் சான்றாகவும் விளங்குவதை அறியலாம்) எச்சமாகவும் பயனிலையாகவும் அமைவதற்கான வாக்கியச் சூழலில் ஓர் வினையமைப்பு நிகழாமல் வித்தியாசமான வாக்கியச் சூழலில் அது நிகழுமாயின் மரபிலக்கணிகளின் பார்வையில் அவ்வினையமைப்பு தொழிற் பெயர் நிலைக்கு உயர்ந்து மிகுகின்றது. செயல் மற்றும் செய்தல் வினைகளின் மூவகைச் செயற்பாடுகளை நோக்குகையில் மரபிலக்கணிகளால் தொழிற்பெயர்கள் எனக் கருதப்பெறும் வினையமைப்புக்களும் வரலாற்று நிலையில் பயனிலைகளாகவும் எச்சங்களாகவும் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று கருதத் தோன்றுகின்றது.

செயல் வினைகளும், செய்தல் வினைகளும் பயனிலைகளாகவும் எச்சங்களாகவும், தொழிற் பெயர்களாகவும் நிகழும் போக்கு பல்வேறு எடுத்துக்காட்டுக்கள் மூலம் மேலே அறியப்பட்டது. இனி இவ்வினைகளில் நிகழும் **அல்** மற்றும் **தல்**லென் கிளவிகளின் பொருண்மையமைப்பினைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கலாம். இச் சிந்தனைக்குப் பெயரெச்சச் செயற்பாட்டில் அமைந்த செயல் வினைகளையும் செய்தல் வினைகளையும் முதலில் கருத்தில் கொள்ளலாம். இதற்கு முன்பாக மேற்படி வினைகள் அமைந்த பெயரெச்சத் தொடர்களைப் பற்றிய ஒரு செய்தியை நினைவூட்டிக் கொள்ளலாம்.

இரண்டு வகையான தலைமைப் பெயர்கள் அமைந்த பெயரெச்சத் தொடர்களில் செயல் வினைகளும் செய்தல் வினைகளும் பெயரெச்சச் செயற்பாட்டினவாய் நிகழ்கின்றன. முதல் வகையில் தலைமைப் பெயர், வாக்கியத்தின் அக உறுப்பாக அமைகின்றது. **முருகனை மணந்த வள்ளி** என்ற பெயரெச்சத் தொடரில் தலைமைப் பெயராக நிகழும் **வள்ளி** என்னும் பெயர், **வள்ளி முருகனை மணந்தாள்** என்ற வாக்கியத்தில் நிகழ்வது இந்த வகையில் அடங்கும்.

இவ்வாறு அமையும் பெயரெச்சத் தொடர்களை **அகநிலைப் பெயரெச்சத் தொடர்கள்** எனக் குறிப்பிடலாம். இரண்டாம் வகையில், தலைமைப் பெயர் வாக்கியத்தின் புறஉறுப்பாக அமையும். **முருகன் வந்த செய்தி** என்ற பெயரெச்சத் தொடரில் தலைமைப் பெயராக நிகழும் **செய்தி** என்னும் பெயர் **முருகன் வந்தான்** என்ற வாக்கியத்தில் நிகழாமல் அதன் புறத்தே நிகழ்வது இந்த வகையில் அடங்கும். இவ்வாறு அமையும் பெயரெச்சத் தொடர்களைப் **புறநிலைப் பெயரெச்சத் தொடர்கள்** என வழங்கலாம். இப்பெயரெச்சத் தொடர்களில் தலைமைப் பெயர் வாக்கியம் முழுவதையும் தழுவி அதன் பிரதிபலிப்பாக அமையும். **முருகன் வந்த செய்தி** என்ற பெயரெச்சத் தொடரில் **செய்தி** என்னும் தலைமைப் பெயர், **முருகன் வந்தான்** என்ற வாக்கியம் முழுவதையும் பிரதிபலிப்பதாக அமைதலைக் காணலாம். செயல் வினைகள் அமைந்த பெயரெச்சத் தொடரில் அகநிலைத் தலைமைப் பெயரும், புறநிலைத் தலைமைப் பெயரும், செய்தல் வினையமைந்த பெயரெச்சத் தொடரில் புறநிலைத் தலைமைப் பெயரும் அமைந்த எடுத்துக் காட்டுக்களைக் கீழே காணலாம்.

| | | |
|---|---|---|
| 44) | தண் வரல் வாடை<br>(குறுந்தொகை 35.5) | அகநிலைப் பெயரெச்சத் தொடர் |
| 45) | சார்ந்து வரல் மரபு<br>(தொல். எழுத்து. இளம்.1 | புற நிலைப் பெயரெச்சத் தொடர் |
| 46) | பொருள் தரல் விருப்பு<br>(அகம் 29.20) | புற நிலைப் பெயரெச்சத் தொடர் |
| 47) | காண்டல் விருப்பு<br>(பதிற்றுப்பத்து 12.10) | புற நிலைப் பெயரெச்சத் தொடர் |

செயல்வினைகளில் நிகழும் **அல்லென்** கிளவியின் பொருண்மையமைப்பினைக் கண்டறிய **தண் வரல் வாடை** என்ற அகநிலைப் பெயரெச்சத் தொடரை முதலில் கருத்தில் கொள்ளலாம். இத்தொடரின் பொருண்மையமைப்புடன் ஒன்றுபடும் பல்வேறு தொடர்கள் கீழே குறிக்கப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 48 அ) | தண்ணென வருதல் ஆகிய வாடை | தண் வரல் வாடை |
| ஆ) | தண்ணென வரும் வாடை | |
| இ) | தண்ணென வருகின்ற வாடை | |
| ஈ) | தண்ணென வருகின்றதாகிய வாடை | |
| உ) | தண்ணென வருவதாகிய வாடை | |

மேலே அகரப் பிரிவில் நிகழும் **வருதல் ஆகிய** என்னும் பெயரடை கருத்தூன்றிச் சிந்திக்கற்பாலதாகும். **வரல்** என்பதும் **வருதல் ஆகிய** என்பதும் ஒரே பொருண்மையனவாதலால் பின்னதில் நிகழும் **வருதல்** என்பதும் **ஆகிய** என்பதும் முறையே முன்னதில் நிகழும் **வர், அல்** ஆகியவற்றின் மாற்றுருபுகளாக அமைகின்றன. இதனின்றும் **வருதல்** என்பதன் மாற்றுருபாய் அமைந்த **வர்** என்னும் வினைப் பகுதியை வினைப்பெயர் எனக்கொள்வதற்கான தடயம் ஒன்று கிடைப்பதுடன், அதனை அடுத்து நிகழும் அல்லென் கிளவி, **ஆகிய** என்பதன் பொருண்மையமைப்புக்கு உரியதாகும் நிலையும் பெறப்படுகின்றது. **ஆகிய** என்னும் வினையமைப்பு [இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப்புக்கு உரியதாகும். இப்பொருண்மையமைப்பில் நிகழும் [இருப்பு] என்னும் பொருளுறுப்பும், [காலம்] என்னும் பொருளுறுப்பும் **ஆகிய** என்பதில் உள்ள **ஆகு, இய** என்ற வரிவடிவங்களால் முறையே உணர்த்தப் படுகின்றன. இவ்விரு பொருளுறுப்புக்களையும் **ஆகிய** என்பதன் மாற்றுருபாகிய அல்லென் கிளவி ஒருசேர உணர்த்துகின்றது. **தேனென்கிளவி** (=தேன் என்னும்/என்ற கிளவி) என்ற தொடரில் **என்** என்னும் கிளவி [இருப்பு], [காலம்] ஆகிய பொருண்மைகளை ஒருங்கே உணர்த்துவது போல் அல்லென் கிளவியும் இவ்விரு பொருண்மைகளையும் ஒருங்கே உணர்த்துகின்றது. அல்லென் கிளவியுடன் (48)-இல் (ஆ) பிரிவில் நிகழும் **வரும்** என்ற அமைப் பில் உள்ள உம்மைக் கிளவியும் பொருந்துவதால் இதுவும் அல்லென் கிளவியின் பொருண்மையமைப்புக்கு உரியதாகின்றது. (48)-இல் ஏனைய பிரிவுகளில் நிகழும் தொடர்கள் இவ்வாய்வுக்கு அத்துணை இன்றியமையாதனவல்லவாதலால் அவை பற்றி நாம் ஏதும் சொல்லப் போவதில்லை. அல்லென் கிளவிக்கு அமைந்த பொருண்மையமைப்பு செய்தல் வினைகளில் அமைந்த தல்லென் கிளவிக்கும் பொருந்தும். தல்லென் கிளவியை **த் + அல்** என்ற அமைப்பினதாகக் கொண்டால் **த்** என்னும் உறுப்பு இருப்புப்

பொருண்மையையும், **அல்** என்னும் உறுப்பு காலப் பொருண்மையை யும் குறிப்பதாகக் கொள்ளலாம். இப்படிப் பிரிக்க வேண்டாம் என்பதற்குரிய சான்றுகள் இருந்தால் செயல் வினைகளில் உள்ள அல்லென் கிளவியைப் போன்றே செய்தல் வினைகளில் உள்ள தல்லென் கிளவியும் [இருப்பு], [காலம்] ஆகிய பொருண்மைகளை ஒருங்கே உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டுக்கள் (45), (46)-இல் நிகழும் அல்லென் கிளவியின் பொருண்மையமைப்பு இரண்டிலும் ஒரே மாதிரியானது என்று கொள்வதற்கில்லை. **சார்ந்து வரல் மரபு** 5 என்ற தொடரைப் பொருத்தவரை அதில் நிகழும் அல்லென் கிளவியின் பொருண்மையமைப்பு, **தண்வரல் வாடை** என்பதில் நிகழும் அல்லென் கிளவியின் பொருண்மையமைப்புடன் பொருந்துவதாகின்றது. ஆனால் **பொருள் தரல் விருப்பு** (46) என்பதில் நிகழும் அல்லென் கிளவியின் பொருண்மையமைப்பு வித்தியாசமானது. **சார்ந்து வரல் மரபு** என்ற தொடரின், பொருண்மையமைப்பினை **சார்ந்து வருதல் வேண்டும் என்ற மரபு** என்னும் தொடரின் பொருண்மையமைப்புடன் பொருத்தமுடியாது என்பதும், **பொருள் தரல் விருப்பு** என்ற தொடரின் பொருண்மையமைப்பினை, **பொருள் தருதல் வேண்டும் என்ற விருப்பு** என்னும் தொடரின் பொருண்மை யமைப்புடன் பொருத்த முடியும் என்பதுமே யாகும். **பொருள் தரல் விருப்பு** என்னும் தொடர் **பொருள் தருதலாகிய விருப்பு, பொருள் தருதல் வேண்டும் என்ற விருப்பு** ஆகிய தொடர்களின் பொருண்மையமைப்புடன் ஒன்றுபடுவதால் மேற்படி தொடரில் நிகழும் அல்லென் கிளவி யின் பொருண்மை அமைப்பு [இருப்பு + விழைவு + காலம்] என அமைகின்றது. இந்தப் பொருண்மையமைப்பு **பொருள் தரல் விருப்பு** என்ற தொடருடன் பொருண்மை நிலையில் பொருந்தும் **பொருள் தரும் விருப்பு** என்பதில் அமைந்த உம்மைக் கிளவிக்கும் பொருந்தியதாகும். **பொருள் தரல் வேண்டும்** என்ற தொடரில் அமைந்த அல்லென் கிளவியின் பொருண்மையமைப்பு **காண்டல் விருப்பு** (47) என்பதில் அமைந்த தல்லென் கிளவிக்கும் ஏற்புடைய தாகும். செயல் வினைகளும், செய்தல் வினைகளும் பெயரெச்சச் செயற்பாட்டினை மேற்கொள்கையில் அவற்றில் நிகழும் **அல்லென்**

கிளவியும் **தல்**லென் கிளவியும் [இருப்பு+காலம்], [இருப்பு+விழைவு +காலம்] ஆகிய பொருண்மையமைப்புகளை **உணர்த்தும் எனக் கண்டோம்.** எச்சச் செயற்பாட்டில் செயல் வினைகளும் செய்தல் வினைகளும் முற்றெச்சங்களாகக் கருதத்தக்கவை என்று முன்பு கண்டோம். இதனைக் கருத்தில் கொண்டு எச்சச் செயற்பாட்டில் இவற்றுக்கு அமைந்த பொருண்மையமைப்புக்கள் இவை பயனிலை யாய் நிகழும் போதும் பொருந்தி நிற்கும். முற்றெச்சங்களாக இவ் வினைகளைக் கொள்ளாவிட்டாலும் கூட – கொள்ளலாம் என்பதே நமது கொள்கை – பெயரெச்சத்தின் பொருண்மையமைப்பு பயனிலை யுடன் சென்று பொருந்தும்.

செயல் வினை செய்து வாய்பாட்டு வினையெச்சச் செயற்பாட்டினையும் மேற்கொள்ள வல்லது என்பதை எடுத்துக்காட்டுக்கள் (37), (38 -இல் அமைந்த **இரியல் போகி** என்ற தொடரில் கண்டோம். இத் தொடரில் அமைந்த **இரியல்** என்னும் செயல் வினை **இரிந்து** என்னும் செய்து வாய்பாட்டு வினைக்கு நிகரான தாகும். இவ்வினையில் அமைந்த அல்லென் கிளவியும் [இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப்பினையே குறிக்கும். இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கலாம்.

49) 1. கருந் தொழிற் கொல்லன் **காட்டினன்** உரைப்போன்
(சிலம்பு 16. 165)

2. மூவருள் ஒருவன் துப்பா கியரென
**ஏத்தினர்** தரூஉம் கூழே நும்குடி
**வாழ்த்தினர்** வரூஉம் இரவல ரதுவே (புறம் 122.5-7)

50) 1 நாணும் உட்கும் நண்ணுவழி அடைதர
ஒய்யெனப் பிரியவும் **விடாஅன்** சுவைஇ
(பத்துப்பாட்டு 8.184 & 185)

2. நெய்விலைச் கட்டிப் பசும்பொன் **கொள்ளாள்**
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
(பத்துப்பாட்டு 4. 64 & 65)

51) 1. கருந்தொழிற் கொல்லனும் ... ...
கோவலன் தன்னைக் **குறுகினன் ஆகி**
(சிலம்பு 16.154 & 157)

2. கைக்கோற் கொல்லனைக் **கண்டனன் ஆகி**
(சிலம்பு. 16 108)

52) 1. வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினையலர் வேம்பன் **தேரான் ஆகி**
(சிலம்பு 16. 148 & 149)

2. மையல் வேழம் மடங்கலின் எதிர்தர
உய்விடம் **அறியேம் ஆகி** (பத்துப்பாட்டு 8.165 & 166)

மேலே (49) முதல் (52) வரை கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக் காட்டுக்களில் முதல் இரண்டு எடுத்துக்காட்டுக்களில் நிகழும் **காட்டினன், ஏத்தினர், வாழ்த்தினர், விடாஅன், கொள்ளாள்** ஆகிய முற்று வினைகள் முறையே **காட்டி, ஏத்தி, வாழ்த்தி, விடாது/ விடாமல், கொள்ளாது/கொள்ளாமல்** ஆகிய பொது எச்சங்களுக்கு நிகரான முற்றெச்சங்களாய் செயல்படுகின்றன. இவ்வாறே பிந்திய இரண்டு எடுத்துக் காட்டுக்களில் நிகழும் **குறுகினன் ஆகி, கண்டனன் ஆகி, தேரான் ஆகி, அறியேம் ஆகி** என்ற தொடர்கள் முறையே **குறுகி, கண்டு, தேராது/தேராமல், அறியாது/அறியாமல்** ஆகிய பொது எச்சங்களுக்கு நிகரானவையாய் செயல்படுகின்றன. பிந்திய இரண்டு எடுத்துக்காட்டுக்களில் நிகழும் **வினைமுற்று + ஆகி** என்ற அமைப்பினதாகிய எச்சத் தொடர்களை நோக்கும் போது; முந்திய இரண்டு எடுத்துக்காட்டுக்களில் அமைந்த முற்றெச்சங்கள் பிந்திய பாணியில் அமைந்த எச்சத் தொடர்களாய் அதாவது, ***காட்டினன் ஆகி, *ஏத்தினர் ஆகி, *வாழ்த்தினர் ஆகி, *விடாஅன் ஆகி, *கொள்ளாள் ஆகி** என விரிக்கத் தக்கவை என்பதும், பிந்திய பாணியில் அமைந்த **வினைமுற்று+ஆகி** என்ற எச்சத் தொடர்கள் முந்திய பாணியில் அமைந்த முற்றெச்சங்களாய் அதாவது, **குறுகினன், கண்டனன், தேரான், அறியேம்** எனக் குறுகி அமையும் என்பதும் பெறப்படுகின்றது. இதனின்றும் முந்தியபாணி எடுத்துக்காட்டுக்களில் நிகழும் முற்றெச்சங்களாகிய **காட்டினர், ஏத்தினா** முதலியன **ஆகி** என்ற எச்சச் செயற்பாட்டில் அமைந்த வினையின் பொருண்மையை உள்ளீடாகக் கொண்டுள்ளன என்ற அரிய உண்மை புலப்படுகிறது. முற்றெச்சங்களுக்குப் பொருந்தும் இந்த உண்மை, பொது எச்சங்களாகிய செய்து, மற்றும் செய்யாது/ செய்யாமல் ஆகிய வாய்பாட்டு வினைகளுக்கும் பொருந்தும்.

முற்றெச்சங்கள், பயனிலைகளாகச் செயற்படுகையில் முற்றெச்சங்களில் உள்ளீடாக அமையும் **ஆகி** என்பதன் பொருண்மையமைப்பு பயனிலை வினைகளிலும் உள்ளீடாக அமைதல் தவிர்க்க முடியாத ஒன்றாகும். **ஆகி** என்னும் வினையமைப்பு, [இருப்பு+காலம்] என்ற பொருண்மையமைப்பினதாகும். இதனைக் கருத்தில் கொண்டு **இரியல் போகி** என்ற தொடரில் முற்றெச்சமாய் அமைந்த **இரியல்** என்னும் செயல் வினையில் நிழும் **அல்**லென் கிளவியும் [இருப்பு+காலம்] என்ற பொருண்மையமைப்பை எச்சம் மற்றும் பயனிலைச் செயற்பாடுகளில் உணர்த்தி நிற்கின்றது எனத் துணியலாம். **இரியல்** என்பதனை முற்றெச்சமாகக் கொள்ளாமல் **இரிந்து** என்பதற்கு ஈடாகக் கொண்டாலும் இந்தத் துணிவு செல்லுபடியாகும்.

முற்று வினைகளிலும் எச்ச வினைகளிலும் இருப்புப் பொருண்மை உள்ளீடாகச் செறிந்து நிற்கும் நிலையினை மேலே அறிய முடிந்தது. இந்த நிலை தொழிற்பெயர்களிலும் அமைவதைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களின் வாயிலாக அறியலாம்.

53) விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்
**பழகுவர் ஆதலோ** அரிதே (அகம், 61, 13 & 14)

54) தோடும் தொடலையும் கைக்கொண்டு அல்கலின்
**ஆடினர் ஆதல்** நன்றோ (அகம், 138.12&13)

55) இன்னே வருகுவன் என்று தலைவியை **ஆற்றுவித்தாள்**
**ஆதல்** அறிக. (அகம், 4 உரை, கழகப்பதிப்பு)

56) தலைவனுக்குப் பேதைமை **ஊட்டினாள் ஆதல்**
நுண்ணிதின் உணர்க (அகம், 2 உரை. கழகப்பதிப்பு)

57) என்னைப் பெண் பிசாசு என்று கருதி **அஞ்சினான்**
**ஆதலை** யான் அறிந்து .. (கலித்தொகை, 65
நச்சினார்க்கினியர் உரை, கழகப்பதிப்பு)

58) செலீஇய சேறி யாயின் இவளே
வருவை யாகிய சின்னாள்
**வாழாள் ஆதல்**நற் கறிந்தனை சென்மே
(நற்றிணை, 19.7-9)

இந்த ஆறு எடுத்துக்காட்டுக்களிலும் நிகழும் **பழகுவர் ஆதல், ஆடினர் ஆதல், ஆற்றுவித்தாள் ஆதல், ஊட்டினாள் ஆதல், வாழாள் ஆதல்** ஆகிய தொடர்களில் இருப்புப் பொருண்மை உணர்த்தும் **ஆதல்** என்னும் வினையின் நிகழ்ச்சியைக் காணலாம். இந்த ஆறு தொடர்களும் முறையே **பழகுதல், ஆடியது/ஆடியமை, ஆற்றுவித்தது/ஆற்றுவித்தமை, ஊட்டியது/ஊட்டியமை, அஞ்சியது/அஞ்சியமை, வாழாதது/வாழாமை** ஆகிய வினைப் பெயர்களின் விரிவுகளாகும். இதன்பொருள், (53) முதல் (58) வரை அமைந்த எடுத்துக் காட்டுக்களில் நிகழும் விரிந்து அமைந்த **பழகுவர் ஆதல்** முதலிய வினைப்பெயர்களும், குறுக்கங்களாக நாம் சுட்டிய **பழகுதல்** முதலிய வினை பெயர்களும் ஒரே பொருண்மையினைக் கொண்டவை என்பதாகும். இதன் அடிப்படையில், வினைப்பெயர்களும இருப்புப் பொருண்மையை உள்ளீடாகக் கொண்டுள்ளன என்பது பெறப்படுகின்றது. செயல் மற்றும் செய்தல் வினைப் பெயர்களுக்கும் இந்த முடிவு ஒத்ததாகும்.

மேலே குறிக்கப்பெற்ற பல திறத்தனவாகிய எடுத்துக்காட்டுக்கள் மூலம் பல்வேறுவகையான வினையமைப்புக்கள் இருப்புப் பொருண்மை உள்ளீடாகக் கொண்டவை என ஒரு கருதுகோளை உருவாக்கிக்கொள்ளலாம். இந்தக் கருதுகோளுக்கு செயல் வினைகளாகட்டும், செய்தல் வினைகளாகட்டும் விதிவிலக்காய் அமைவன அல்ல. இந்தக் கருதுகோள் மூலம் ஒரு பொதுச் சிந்தனையைக் கோட்பாட்டு ரீதியில் அமைத்துக் கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட வினயமைப்பின் ண் இருப்புப் பொருண்மை உள்ளீடாக இடம் பெற்றுள்ளமை தெளிவுபடுத்தப்படுமாயின் அனைத்து வகையான வினையமைப்புக்களிலும் இந்த இருப்புப் பொருண்மையின் நிகழ்ச்சி உள்ளீடாக இடம் பெறுவதற்கான ஒரு கோட்பாட்டுத் தன்மையிலான வாய்ப்பு இருப்பதாகவே கருதத் தோன்றுகிறது. இந்தச் சிந்தனை, இருப்புப் பொருண்மையை உணர்த்தும் **ஆகு, என், இரு** முதலிய வினைகளின் சிறப்பியல்புகளின் அடிப்படையில் மேலும் செம்மைப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். இது ஒரு தனி ஆய்வுக்குரிய செய்தியாதலின் இங்கே இதுபற்றி விரிவாகப் பேசுவதற்கில்லை. இருப்பு வினைக்குரிய நான்கு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுவதுடன் நாம் இங்கு அமையலாம். இந்த நான்கு சிறப்பியல்புகள் விளக்கம் ஏதுமின்றி கீழே குறிக்கப்பெறுகின்றன.

59) அ) இருப்பு வினையின் நிகழ்ச்சி சில நிலைகளில் தவிர்ப்புக்கு இலக்காகும் தன்மையது.

ஆ) இருப்பு வினை தனக்குரிய இருப்புப் பொருண்மையை இழக்காமல் வேறு பொருண்மைகளையும் சேர்த்து உணர்த்தும் தன்மையது.

இ) இருப்பு வினை தனக்குரிய இருப்புப் பொருண்மையை இழந்து வேறு பொருண்மைகளை உணர்த்தும் தன்மையது.

ஈ இருப்பு வினை தனக்குரிய இருப்புப் பொருண்மையையும் இழந்து வேறு பொருண்மையையும் உணர்த்தாமல் சாரியை போல் வெற்றுருப்பாக நிகழும் தன்மையது.

வினையமைப்புக்களில் உள்ளீடாக இருப்புப்பொருண்மை செறிந்து நிற்கும் என்ற நமது பொதுச் சிந்தனை, (59)-இல் குறிக்கப் பெற்றுள்ள, இருப்பு வினைச் சிறப்பியல்புகளின் அடிப்படையில் விளக்கத்துக்கு உரியதொன்றாகும். எடுத்துக்காட்டாக, **தண்வரல் வாடை**, **இரியல் போகி** என்ற தொடர்களில் அமைந்த அல்லென் கிளவியின் பொருண்மையமைப்பு 59 (ஆ) பிரிவில் குறிக்கப் பெற்றுள்ள இருப்பு வினையின் சிறப்பியல்புடன் வைத்து விளக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வாறே **நன்னுதல்** என்பதில் இருப்பு வினையின் நிகழ்ச்சி 59 (அ) பிரிவில் அமைந்த இருப்பு வினையின் சிறப்பியல்பையும், **நன்று ஆகிய நுதல்** (கலித்தொகை 143. நச்சினார்க்கினியர் உரை, கழகப் பதிப்பு) என்பதில் **நன்று** என்பதன்கண் நிகழும் துகரக் கிளவியின் பொருண்மையமைப்பு 59 (இ) பிரிவில் குறிக்கப்பெற்றுள்ள இருப்பு வினையின் சிறப்பியல்பையும் கருத்தில் கொண்டு விளக்கப்படும். **பழகுவர் ஆதல்** (அகம், 61.14) **வாழாள் ஆதல்** நற்றிணை, 19. 9) ஆகிய தொடர்களில் அமைந்த **ஆதல்** என்பதில் நிகழும் **தல்**லென் கிளவியின் பொருண்மையமைப்பு 59 (ஈ) பிரிவில் குறிக்கப் பெற்றுள்ள இருப்பு வினைச் சிறப்பியல்பின் அடிப்படையில் விளக்கம் பெறும் இந்தச் செய்திகளை இத்துடன் நிறுத்திக் கொண்டு இனி நமது தலைமை ஆய்வுக்கு வருவோம்.

வினைமுற்றுக்கள் பயனிலையாகவும் எச்சமாகவும் செயல்படும் நிலை பழந்தமிழில் இயல்பாகக் காணப்படுவதால், பழந்தமிழுக்கு முந்திய தமிழில் அல்லது தமிழ் கிளைப்பதற்கு அடிநாதமாக இருந்த ஒரு மூலமொழியின் இளம் பருவ நிலையில் ஒரு வினையமைப்பு வாக்கியச் சூழலுக்கு ஏற்ப, பல்வேறு செயற்பாடுகளை உணர்த்தினவாதல் வேண்டும். இந்தச் செயற்பாடுகளின் சுவடுகள் மலையாளத்தில் செய்து வினைகளிலும், தமிழில் செயல் வினைகள், செய்தல் வினைகள், செய்யும் வினைகள் ஆகியவற்றிலும் பிரதிபலிப்பதைக் காண முடிகின்றது.

செயல் மற்றும் செய்தல் வினைகள் எச்சச் செயற்பாட்டினவாய் அமைகையில் உணர்த்தும் பொருண்மை அவை பயனிலைச் செயற்பாட்டினவாய் அமையும் போதும் பாதுகாப்பாகவே இருக்கும். ஆனால் மேற்படிவினைகள் வியங்கோட் பயனிலையாய் நிற்கையில் அவற்றில் அமைந்த **அல்**லென் கிளவியும் **தல்**லென் கிளவியும் உணர்த்தும் பொருண்மை வித்தியாசமான ஒன்றாக அமையும். வியங்கோள் வினைகள் [இருப்பு + வியங்கோள்] என்ற பொருண்மையமைப்பினவாகும். இப் பொருண்மையமைப்பில் இருப்புப் பொருண்மையின் நிகழ்ச்சியைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களின் அடியாக அமையும் விளக்கத்தின் மூலம் நியாய படுத்தலாம்.

60) அரசன் (நீடூழி) வாழ்க.
61) அரசன் (நீடூழி) வாழ்வான் ஆக.

இவ்விரு எடுத்துக்காட்டுக்களும் ஒரே பொருண்மையினவாகும். பிந்திய எடுத்துக்காட்டில் நிகழும் **ஆக** என்னும் வினையமைப்பில் **ஆகு** என்பது இருப்புப் பொருண்மையையும், அதனையடுத்து அகரக் கிளவி வியங்கோட் பொருண்மையையும் உணர்த்துவனவாகும். இதனைக் கருத்தில் கொண்டு முந்திய எடுத்துக்காட்டில் உள்ள **வாழ்க** என்னும் வியங்கோள் வினையில் **வாழ்** என்பதனை அடுத்து நிகழும் ககரக் கிளவி [இருப்பு+வியங்கோள்] என்ற பொருண்மையமைப்பு எனத் தெளியலாம். ககரக் கிளவியின் இந்தப் பொருண்மையமைப்பு, 59 (ஆ) பிரிவில் குறிக்கப் பெற்றுள்ள இருப்பு வினைச் சிறப்பியல்பினைப் பிரதிபலிப்பதாகும். மேற்படி ககரக்கிளவியை, **க் + அ** என்ற அமைப்பினதாகக் கொண்டால் **க்** என்பது இருப்புப்பொருண்மையையும், அகரக்கிளவி வியங்கோட்

பொருண்மையினையும் குறிப்பனவாகக் கொள்ள எந்தத்தடையும் இல்லை. இந்த வகையில் க் எஃபது இருப்புப்பொருண்மையை மட்டுமே உணர்த்துவதால் இருப்பு வினையின் சிறப்பியல்புகளில் ஒன்றாகப் பின் வருவதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

62) இருப்புப் பொருண்மையை மட்டுமே உணர்த்தும் தன்மையது.

இச்சிறப்பியல்பு **வாழ்க** என்பதில் அமைந்த ககர ஒற்றுக்குப் பொருந்தும். இந்தக் ககர ஒற்றினை அடுத்து நிகழும் வியங்கோட் பொருண்மையதாகிய அகரக் கிளவி 59 (இ) பிரிவில் குறிக்கப் பெற்றுள்ள இருப்பு வினையின் சிறப்பியல்போடு பொருந்துவதாகும். இந்தச் செய்திகளை அடிப்படையாகக்கொண்டு, வியங்கோட் பயனிலையாக நிகழும் செயல் வினைகளில் அமைந்த **அல்**லென் கிளவி [இருப்பு + வியங்கோள்] என்ற பொருண்மையமைப்புக்கு உரியதாகி 59 (ஆ) பிரிவில் குறிக்கப்பெற்றுள்ள இருப்பு வினைப் பண்புடன் பொருந்துவதாக வரையறை செய்யலாம். செய்தல் வினைகள் வியங்கோட் பயனிலையாகச் செயற்படுகையில் அவற்றில் நிகழும் **தல்**லென் கிளவியின் பொருண்மையமைப்பினை **வாழ்க** என்பதில் அமைந்த ககரக் கிளவியின் பொருண்மையமைப்பினை ஆராய்ந்த போக்கில் ஆராயலாம்.

செயல் மற்றும் செய்தல் வினைகளின் மீது அமைந்த இவ்வாய் வின் அடி நீரோட்டமாக, கோட்பாட்டுத் தன்மையிலான இரண்டு செய்திகளைக் குறிப்பிட்டாக வேண்டும். ஒன்று, இவ்வினைகளில் அமைந்த **அல்**லென் கிளவியும், **தல்**லென் கிளவியும் பொருண்மைக் குறிப்பு ஏதுமின்றி சாரியைபோல் வெற்றுறுப்புக்களாய் அமைதல். இரண்டு, இவ்வினைகளில் நிகழும் மேற்படி கிளவிகள் உணர்த்தும் பொருண்மைகள் தனிமைப்படுத்தப்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட வரிவடிவங்களால் உணர்த்தப்படுதல். முதல் செய்தி, வரலாற்றுச் சார்புடையது. இதனைப் பின்வரும் இரு எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கலாம்.

63) 1) **பேரின்பம் அவட்கு இல்லையாய்க் கழிக**
(அகம், 13. உரை. கழகப்பதிப்பு)

2) **பேரின்பம் அவட்கு இல்லாமல் கழிக**

64) 1) விரை செலல் திகிரி (அகம் 53.2)

2) விரைந்து செல்லும் திகிரி

இவ்விரண்டு எடுத்துக்காட்டில், முதலில் **உள்ளதில்** அமைந்த **இல்லையாய்** என்பதும் **இல்லாமல்** என்பதும் ஒரே பொருண்மையின வாகும். இவ்விரண்டு அமைப்புக்களில், நிகழும் **இல்லை, இல்** ஆகிய இரண்டும் மாற்றுருபுகளாய் அமைந்தனவாகும். இவற்றுள் **இல்லை** என்பதில் நிகழும் ஐயென்கிளவி பொருண்மைக்குறிப்பினை இழந்து வெற்றுறுப்பாய்ச் செயல்படுவதைக் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டு (64)-இல் **விரை** என்பதும் **விரைந்து** என்பதும் மாற்றுருபுகளாய்ச் செயல் படுகின்றன. **விரைந்து** என்பதில் அமைந்த **-ந்து** என்னும் உருபுக்கு நிகராக **விரை செலல் திகிரி** என்ற தொழில் ஒன்றும் காணப்படவில்லை. இந்த நிலை 59 (அ) பிரிவில் குறிக் ப் பெற்றுள்ள இருப்பு வினையின் சிறப்பியல் புக்குப் பொருந்தியதாகும். ஆயினும், **விரை செலல் திகிரி** என்ற தொடரில் நிகழும் **விரை** என்னும் வடிவம் **விர்-ஐ** என்ற வரலாற்று அமைப்பினதாகும். **விர்** என்னும் வடிவம் **விர் என்று நடந்தான்** என்பன போன்ற வாக்கியங்களில் நிகழ்வதை இன்றும் காண முடிகின்றது. ஆகவே **விரை** என்பதில் அமைந்த ஐயென்கிளவி **விரைந்து** என்பதில் அமைந்த **-ந்து** என்பதன் பொருண்மையை **உணர்த்தி**, பின்னர் அதனை இழந்து வெற்றுறுப்பாகியதாகத் துணியலாம். இந்த நிலை 59 (ஈ) பிரிவில் குறிக்கப் பெற்றுள்ள இருப்பு வினை சிறப்பியல்பினைப் பிரதிபலிப்பதாகும். இம் மாற்றத் தினை **வெற்றுருபாக்கம்** எனக் குறிப்பிடலாம்.

செயல் மற்றும் செய்தல் வினைகளிலும் இத்தகைய பொருண்மையிழப்பு நிலையினை **அல்** மற்றும் **தல்**லென் கிளவி களில் காணலாம். **வரலாம்** என்ற அமைப்பில் **வரல்** என்பதில் நிகழும் **அல்**லென்கிளவியும், **தண்ணென வருதல் ஆகிய வாடை** என்ற தொடரில் **வருதல்** என்பதில் நிகழும் **தல்**லென் கிளவியும் வெற்றுருபாக்க நிலைக்கு இலக்காகித் தம் பொருண்மையினை இழந்து நிற்பதைக் காணலாம். பொருண்மையிழப்புக்கு இலக் காகும் விகுதிகள் வரலாற்று நிலையில் இருதிணை ஐம்பால் மூவிடத்துக்கும் உரிய பொது வினைகளில் முற்று விகுதிகளாக நிகழ்ந்திருக்கலாம் என்று கருதத்தோன்றுகின்றது. முற்று விகுதி

கள் பால் மற்றும் இடப்பொருண்மைகளை உணர்த்தத் தொடங்கிய நிலையில் பொது வினைகளில் அமைந்த முற்று விகுதிகள் ஒரு சங்கடமான நிலைக்கு உள்ளாகித் தம் பொருண்மையினை இழந்து பகுதிகளின் ஒருங்கிணைந்த உறுப்புக்களாய் அமையத் தொடங்கின என்று கருதத் தோன்றுகின்றது. **இல்லை, விரை** ஆகியவற்றில் அமைந்த ஐயென் கிளவியின் நிகழ்ச்சியை விளக்க இந்தக் கருதுகோள் துணைபுரிவதாயுள்ளது. இந்தக் கருதுகோளினை (59), (62) ஆகியவற்றில் குறிக்கப்பெற்றுள்ள இருப்பு வினைப் பண்புகளின் பின்னணியில் வைத்து நோக்க வேண்டும்.

இனி, இரண்டாம் செய்திக்கு வருவோம். ஓர் வரிவடிவம் உணர்த்தும் ஒன்றுக்கு மேற்பட்ட பொருண்மைகள் தனிமைப் படுத்தப்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட வரிவடிவங்களாக வெளிப்பாடு பெறுதல் இரண்டாம் செய்தியாகும். இந்தச் செய்தியில் குறிக்கப் பெற்றுள்ள நிலையினைப் **பல்லுருபாக்கம்** என்று குறிப்பிடலாம். ஓர் எடுத்துக்காட்டின் மூலம் இதனை விளக்கலாம். **தண் வரல் வாடை** என்ற தொடர் **தண்ணென வருதல் ஆகிய வாடை** என்ற தொடரின் பொருண்மையமைப்புடன் பொருந்திய தென்றும் **வரல்** என்பதில் உள்ள **வர், ஆல்** ஆகிய இரண்டு உருபுக்களும் முறையே **வருதல், ஆகிய** என்ற உறுப்புக்களுடன் மாற்றுருபு உறவு நிலையில் அமைந்துள்ளன என்றும் ஏற்கெனவே குறிக்கப்பெற்றது. இந்த உறவு நிலை, **வருதல் ஆகிய** என்பதில் உள்ள **வருதல்** என்பதை **வரு+தல்** என்று பகுப்பதைத் தடுத்து விடுகின்றது. விளைவு, இவ்வமைப்பில் நிகழும் **தல்**லென் கிளவி வெற்றுறுப்பாகி **வரு** என்னும் வரிவடிவத்துடன் பிரிக்க முடியாதவாறு ஒன்றுபட்டு விடுகின்றது. இது வெற்றுருபாக்க நிலை. **வரல்** என்பதில் உள்ள **அல்**லென் கிளவி ஓர் உறுப்பாய் நின்று [இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப்பை உணர்த்துவதாகின்றது. இவ்வமைப்பில் நிகழும் இரண்டு பொருண்மைக் கூறுகளும் **வருதல் ஆகிய** என்ற தொடரில் உள்ள **ஆகிய** என்ற வினையமைப்பில் நிகழும் **ஆகு இய** என்ற வரிவடிவங்கள் மூலம் வெளிப்பாடு பெறுகின்றன. இந்த வெளிப்பாடே பல்லுருபாக்கம்.

பல்லுருபாக்கம் தமிழில் பரந்துபட்ட நிலையில் செயல்படுகின்றது. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கலாம்

65) கருந்தொழிற் கொல்லன் **காட்டினன்** உரைப்போன்
(சிலம்பு, 16. 165)

66) கைக்கோற் கொல்லனைக் **கண்டனன் ஆகி**
(சிலம்பு, 16. 108)

67) இருளிடை என்னாய்நீ இரவு **அஞ்சாய்** வந்தக்கால்
(கலித்தொகை, 38.14)

67) பகலும் நம்வயின் **அகலான் ஆகி**. (அகம் 50.5)

எடுத்துக்காட்டு (65)-இல் அமைந்த **காட்டினன்** என்னும் முற்றெச்சம் **காட்டி** என்னும் எச்ச வினைக்கு நிகராகின்றது. இம்முற்றெச்சம் (66)-இல் அமைந்த **கண்டனன் ஆகி** என்ற எச்சத் தொடரின் பாங்கில் ***காட்டினன் ஆகி** எனவும் விரிந்து அமையற்பாலதாகும். **காட்டி, காட்டினன், காட்டினன் ஆகி** ஆகிய மூன்றும் ஒரே செயற்பாட்டினவாதலால் இவை ஒரே மூல அமைப்பிலிருந்து வருவித்தற்கு உரியனவாகின்றன. ***காட்டினன் ஆகி** என்பதில் **ஆகி** என்னும் வினையமைப்பு உணர்த்தும் [இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப்பை **காட்டி, காட்டினன்** ஆகிய இரண்டிலும் சுட்டியாக வேண்டும். **காட்டி** என்பதில் இகரக் கிளவியும், **காட்டினன்** என்னும் முற்றெச்சத்தில் **அன்**னென் கிளவியும் இப்பொருண்மையமைப்பை உணர்த்துவதாகக் கருதலாம். பிந்தியதில் கூடுதலாக உள்ள இயைபுப் பொருண்மையைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. **காட்டி** என்பதில் இகரக் கிளவி உணர்த்தும் [இருப்பு], [காலம்] ஆகிய இரண்டு பொருண்மைகளுள் பிந்தியது, **காட்டினன்** என்னும் முற்றெச்சத்தில் இன்னென் கிளவியாலும் உணர்த்தப்படுகின்றது. ஆயினும் இகரக்கிளவி உணர்த்தும் பொருண்மைத் தொகுப்பு மேற்படி முற்றெச்சத்தில் பாதுகாக்கப் பட்டு [+ஆண்பால்] என்ற ஒரு பொருண்மைக்கூறு அதனுடன் சேர்கின்றது **காட்டி, காட்டினன்** ஆகிய இரண்டு எச்சங்களைப் பொருத்த வரையில் முந்தியதில் பல்லுருபாக்கத்துக்கு இடமில்லை பிந்தியதில், [இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப்பில் உள்ள காலப் பொருண்மை பிரதிசெய்யப்பட்டு **இன்**னென் கிளவி-யால் உணர்த்தப்படுகின்றது இங்கே [இருப்பு+காலம்] என்ற பொருண்மையமைப்பு சிதையாமல் பல்லுருபாக்கம் செயல்படுகின்றது.

**காட்டினன்** என்ற முற்றெச்சத்தில் நிகழும் **அன்**னென்கிளவிக்கு உரியதாயுள்ள [இருப்பு], [காலம்], [+ஆண்பால்] ஆகிய மூன்று பொருண்மைக்கூறுகளும் பல்லுருபாக்கம் செய்யப்படும் நிலையில் ***காட்டினன் ஆகி** என்ற தொடர் தோற்றம் கொள்ளும். இத் தொடரில் **அன்**னென்கிளவி ஆண்பாற் பொருண்மையைமட்டும் உணர்த்துகின்றது. இருப்புப் பொருண்மை, **ஆகி** என்பதில் உள்ள **ஆகு** என்னும் வடிவத்தால் உணர்த்தப்படுகின்றது காலம் பிரதி செய்யப்பட்டு **இன்**னென் கிளவியாலும், **ஆகு** என்பதனை அடுத்து நிகழும் இகரக்கிளவியாலும் உணர்த்தப்படுகின்றது.

**காட்டினன் ஆகி** எப்படிப் பல்லுருபாக்கத்தின் மூலம் வருவிக்கப்படுகிறதோ அப்படியே (66)-இல் நிகழும் **கண்டனன் ஆகி** என்ற தொடரும் வருவிக்கப்படும். இத்தொடரில் **அனன்** என்னும் உறுப்பு ஆண்பாற் பொருண்மையை உணர்த்துவதாகக் கொள்ளப்படும். **கண்டனன்**என்னும் முற்று வினை முற்றெச்சமாகச் செயல்படும் நிலையில் **-அனன்** என்பது **அன்+அன்** எனப் பகுக்கப் பெற்று முதல் உறுப்பு இருப்புப் பொருண்மையையும் காலப்பொருண் மையையும் ஒருங்கே உணர்த்த, இரண்டாம் உறுப்பு ஆண்பாற் பொருண்மையை மட்டும் உணர்த்துவதாகக் கொள்வதற்கும் வாய்ப் புண்டு. **கண்டனன்** முற்றெச்சமாய் அமைகையில் அதில் நிகழும் **-அனன்** என்னும் பகுதியை **அன்+அன்** எனக்கொள்ள வேண்டாம் என்றால் **அனன்** என்ற உறுப்பு ஓர் உறுப்பாகக் கொள்ளப்பெற்று, அது [இருப்பு + காலம் + [+ஆண்பால்] ] என்ற பொருண்மையமைப் பைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். **-அனன்** என்பதை **அன்+அன்** எனப் பிரித்து ஆராய்வதே நமக்குப் பொருத்தமாகத் தோன்றுகிறது.

இனி (67), (68)-இல் நிகழும் **அஞ்சாய்**. **அகலான் ஆகி** ஆகிய எச்சங்களைக் காண்போம். **அகலான் ஆகி** என்ற எச்சத் தொடரை ஆதாரமாகக்கொண்டு **அஞ்சாய்** என்னும் முற்றெச்சம் ***அஞ்சாய் ஆகி** என்ற தொடரின் பொருண்மையமைப்புடன் ஒன்றுபடுவதாகக் கொள்ளலாம். ***அஞ்சாய் ஆகி** என்பதில் **ஆய்** என்னும் விகுதி[எதிர் மறை], [முன்னிலை] [+ஒருமை] ஆகிய பொருண்மைகளை உணர்த்த **ஆகி** என்ற அமைப்பில் உள்ள **ஆகு, இ** ஆகிய வரி வடிவங்கள் முறையே [இருப்பு], [காலம்] ஆகிய பொருண்மைகளை குறிப்பனவாகின்றன. **அஞ்சாய்** என்னும் முற்றெச்சத்தில் **ஆய்**

என்னும் விகுதி [எதிர்மறை], [முன்னிலை], [+ஒருமை], [இருப்பு] [காலம்] ஆகிய ஐந்து பொருண்மைகளையும் ஒருங்கே குறிப்பதாகின்றது. இவ்வைந்தும் பல்லுருபாக்கம் செய்யப்படுகையில் ***அஞ்சாய் ஆகி** என்னும் எச்சம் தோற்றம் கொள்கிறது. **அஞ்சாய்** என்னும் முற்றெச்சத்துடன் **அஞ்சாது, அஞ்சாமல், அஞ்சாமை** ஆகிய பொது வினையெச்சங்களும் பொருண்மை நிலையில் பொருந்துவனவாகையால் முந்தியதில் உள்ள பொருண்மைக் கூறுகளுள் [முன்னிலை], [+ஒருமை] என்பனவற்றைத் தவிர ஏனையவற்றைப் பல்லுருபாக்கம் செய்வதன் மூலம் பிந்தியவற்றை வருவிக்கலாம். [எதிர்மறை] என்ற பொருண்மைக் கூறு **அஞ்சாது** என்பதில் **ஆ** என்னும் கிளவியாலும் **அஞ்சாமல், அஞ்சாமை** என்பவற்றில் **ஆம்** என்னும் கிளவியாலும் உணர்த்தப்படும். [இருப்பு+காலம்] என்ற பொருண்மையமைப்பினை **அஞ்சாது** என்பதில் உள்ள துகரக் கிளவியும், **அஞ்சாமல்** என்பதில் **அல்**லென் கிளவியும் **அஞ்சாமை** என்பதில் ஐயென் கிளவியும் உணர்த்தும். [முன்னிலை] [+ஒருமை] ஆகிய பொருண்மைக் கூறுகளுக்கு **அஞ்சாது, அஞ்சாமல், அஞ்சாமை** ஆகிய பொது வினையெச்சங்களில் இடமில்லையாதலால் அவை எழுவாயாக அமையும் பெயருடன் பொருத்தப்படும். எழுவாய் இல்லையெனில் தவிர்க்கப்படும்.

பல்லுருபாக்கம், விகாரங்களின் துணையுடன் நிகழ்வனவாதலால் இந்நிகழ்ச்சி மாற்றிலக்கணக் கோட்பாட்டு வரம்புக்கு உட்பட்டதாகின்றது. பல்லுருபாக்க ஆய்வு முழுக்க முழுக்கப் பொருண்மைக் கூறுகளைப் பின்புலமாகக் கொண்டு அமைவதாகையால், இவ்வாய்வு நெறி மொழியின் தனித்தன்மையைக் கண்டறிய பெரிதும் துணைபுரிகின்றது. இந்த ஆய்வு இருப்புப் பொருண்மையைக் குறிக்கும் வினைகளின் இயல்புகளைப் புரிந்து கொள்ளவும் வகை செய்கின்றது. வினையமைப்புக்களில் நிகழும் பல்வேறு விகுதிகள் இருப்புப் பொருண்மையுடன் தொடர்புபடும் பாங்கினைப் பல்லுருபாக்க ஆய்வு தெளிவுபடுத்துவதுடன், இவ்விகுதிகள் அனைத்தையும் இருப்பு வினைகளாகக் கருதவும் துணை செய்கின்றது. இருப்பு வினைகளெனக் கருதத்தக்க வினை விகுதிகள் இருப்புப் பொருண்மையை உணர்த்துவதுடன் வேறுபல பொருண்மைகளையும் உணர்த்தவல்லன என்பது மேலே நிகழ்த்தப்

பெற்ற ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டது. பல்லுருபாக்கம் நிகழ்கையில் இந்த இருப்பு வினைகள் பொருண்மைத் தொகுதியின் குறியீடாகச் செயல்படும் நிலையை இழந்து தனித்தனிப் பொருண்மையை உணர்த்துவனவாய் அமைகின்றன. இருப்பு வினைபற்றிய கோட்பாட்டின்படி ஒரு விகுதி இருப்புப் பொருண்மையைக் குறிக்கா விட்டாலும் அது இருப்பு வினையாகவே கருதப்படும். இதனை (59), (62) ஆகியவற்றில் குறிக்கப் பெற்றுள்ள இருப்பு வினைச் சிறப்பியல்புகள் தெளிவுபடுத்தும்.

வினைவிகுதிகள் இருப்பு வினைகளாகக் கருதத்தக்கவையாதலால் இவ்விகுதிகள் இருப்புப் பொருண்மையுடன் தொடர்புபடும் நிலையினை இலக்கண ஆய்வு புலப்படுத்த வேண்டும். இருப்புப் பொருண்மையுடன் 'வினை விகுதிகள் தொடர்புள்ளவை என்பதை வலியுறுத்தும் வகையில் **ஆகு** என்னும் ஒரு கற்பிதக் குறியீட்டினைப் பொருண்மையமைப்பு பற்றிய ஆய்வில் நாம் அமைத்துக் கொள்ளலாம். இந்தக் குறியீட்டின் பணி, பொருண்மைக் கூறு அல்லது கூறுகளைக் கவர்ந்து சூழலுக்கேற்ற வரி வடிவமாக மாறியமைவதாகும். இதனைக் கருத்தில் கொண்டு இக்கற்பிதக் குறியீட்டினைப் **பொருள்கோட் கிளவி** என்னும் கலைச் சொல்லாற் குறிப்பிடலாம். பொருள்கோட் கிளவியாகிய **ஆகு** என்னும் வரிவடிவம் சாரியை போன்று பொருளேதுமற்ற ஓர் வெற்றுருப்பாகும். இந்தக் குறியீட்டினைப் பொருள்கோட் கிளவியாக நாம்கொண்டதற்குக் காரணம் இருப்புப் பொருண்மையைக் குறிக்கும் **ஆகு** என்னும் வரி வடிவத்துடன் வினை விகுதிகளைத் தொடர்புபடுத்த வேண்டும் என்பதேயாகும். இன்னொரு காரணம் **ஆகு** என்பதன் அடியாகத் தோன்றிய **ஆம், ஆனால், ஆவது, ஆயிற்று** முதலிய அமைப்புக்கள் பல்வேறு பொருண்மைகளை உணர்த்தும் தன்மையனவாய் அமைவதாகும். எடுத்துக்காட்டாக **முருகன் வந்தானாம், முருகன் வரலாம், முருகன் தேன் தமிழாம் தென் தமிழில் பாடினான், நீ அப்பாவாம் நான் அம்மாவாம்** (சிறுவர் விளையாட்டில்), **முருகன் இரண்டாம் வகுப்பில் படிக்கிறான்** முதலியவற்றில் நிகழும் **ஆம்** என்னும் வினை இருப்புப் பொருண்மையை உணர்த்தும் **ஆகு** என்னும் வினையடியாகத் தோன்றிய போதிலும் அது உணர்த்தும் பொருண்மைகள் பல்வேறு

திறந்தன. **மாதவன் பாடுவானானால் மாதவி ஆடுவாள், மாதவன் பாடுவான். ஆனால் மாதவி ஆடமாட்டாள்** இவ்விரு வாக்கியங்களிலும் நிகழும் **ஆனால்** ஒரே பொருண்மைக்குரியதன்று. **முருகனாவது வருவானா, முருகனாவது வருவதாவது முருகனாவது, வள்ளியாவது வரலாம், இரண்டாவது வரிசையில் இருக்கிறான்** முதலிய வாக்கியங்களில் நிகழும் **ஆவது** பல்வேறு பொருண்மைகளை உணர்த்துவதை அறியலாம். **முருகன் வந்தாயிற்று, முருகனைக் காப்பாற்ற நானாயிற்று** ஆகிய வாக்கியங்களில் நிகழும் **ஆயிற்று** ஒரே பொருண்மையமைப்புக்கு உரியதன்று. **முருகன் நடிகன் ஆனான், முருகன் நடிக்கலானான்,** இவற்றில் நிகழும் **ஆனான்** இருவேறு பொருண்மையமைப்புக்கு உரியதாகும். **இந்த வேலை முருகனால் ஆகாது, முருகன் இந்த வேலையைச் செய்யலாகாது** ஆகியவற்றில் நிகழும் **ஆகாது** வெவ்வேறு பொருண்மையமைப்பினவாகும். **ஆகு** என்னும் வினையடியாகத் தோன்றிய இவ்வினையமைப்புக்கள் அனைத்தும் இவ்வாறு பல்வேறு பொருண்மையமைப்புகளுக்கு உரியனவாய் அமைவதால் நமது இலக்கண ஆய்வு இந்த நிலையை இரண்டு நிலைகளில் தெளிவுபடுத்த வேண்டும். ஒன்று, இந்த வினையமைப்புக்கள் எல்லாம் **ஆகு** என்னும் வினையுடன் தொடர்புடையன. இரண்டு, **ஆகு** என்னும் இருப்பு வினை பல்வேறு பொருண்மைக் கோலங்களை மேற்கொள்ளவல்லது. இந்த இரண்டு நிலைகளைத் தெளிவுபடுத்தும் வகையில் **ஆகு** என்னும் பொருளற்ற ஓர் கற்பிதக் குறியீட்டினை நாம் நமது ஆய்வில் படைத்துக் கொள்கிறோம். இக்கற்பிதக் குறியீடு, பல்வேறு பொருண்மைகளைக் கவர்ந்து **ஆம், ஆனால், ஆவது** முதலிய வரிவடிவங்களாக வெளிப்பாடு பெறுகின்றன. **ஆகு** என்னும் கற்பிதக்குறியீடு, வெளிப்பாடு பெற்ற வரிவடிவங்கள் **ஆகு** என்னும் இருப்பு வினையுடன் தொடர்பு கொண்டவை என்பதை உள்ளீடாக நின்று உணர்த்துகின்றது. வினை விகுதிகளின் பண்புகள், **ஆகு** என்னும் இருப்பு வினையின் பண்புகளுடன் ஒத்துச் செல்லும் பாங்கினைக் கருத்தில் கொண்டு இவ்விரண்டுக்கும் இடையில் அமைந்த உறவைப் புலப்படுத்தும் வகையில், பொருண்மையமைப்புப் பற்றிய ஆய்வில் **ஆகு** என்பதனையே ஓர் கற்பிதக் குறியீடாகக் கொள்ளப்படுகிறது கற்பிதக் குறியீடாகிய **ஆகு** என்னும் இந்தப் பொருள்கோட் கிளவிய இருப்புப்

பொருண்மையை உணர்த்தும் **ஆகு** என்னும் வடிவத்துடன் குழப்பிக் கொள்ளக் கூடாது.

பொருள்கோட் கிளவி பொருண்மைக் கூறுகளைக் கவர்ந்து பொருத்தமான வரிவடிவங்களாய் அமையும் நிகழ்ச்சி கிளவியாக்க விதிகள் மூலம் நடைபெறுகின்றது. விகாரங்களைச் செயல்படுத்திய நிலையில் அமையும் இந்தக் கிளவியாக்க விதிகள் (வரிவடிவங்களுக் கிடையே காணப்படும் விட்டிசையைத் தவிர்க்கும்) சேர்க்கை விகாரம் செயல்படுவதற்கு முன்னதாகவே செயல்பட்டுவிடும். தேவையெனில், சேர்க்கை விகாரம் செயல்பட்ட பிறகு சந்தி விதிகள் செயல்படும்.

பொருள்கோட் கிளவியாகிய **ஆகு** என்னும் வெற்றுருப்பு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொருண்மைகளைக் கவரவல்லது. ஒரு குறிப்பிட்ட ஆய்வில் நிகழும் ஒன்றுக்கு மேற்பட்ட பொருண்மை உறுப்புக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வரிவடிவங்களைப் பெறுமாயின் கிளவியாக்க விதிகளும் ஒன்றுக்கு மேற்பட்டனவாய் இருக்கும். புதையமைப்பில் இருக்கும் ஒற்றைப் பொருள்கோட் கிளவி இதை அனுசரித்து பொருண்மையுறுப்புக்கள் பெறும் வரிவடிவங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பலவாகப் பிரதியாக்கம் செய்யப்படும். எடுத்துக்காட்டாக, **தண் வரல் வாடை, தண்ணென வரும் வாடை** ஆகிய தொடர்களில் அமைந்த **வரல் வரும்** என்பவற்றில் [இருப்பு] [காலம்] ஆகிய பொருண்மைகளை உணர்த்தி நிற்கும் **அல்லென்** கிளவியும் **உம்மைக்** கிளவியும் பின்வரும் கிளவியாக்க விதிகள் மூலம் பெறப்படும்.

69) ஆகு + [இருப்பு + காலம்] > { அல் / உம் }

**தண்வரல் வாடை** என்னும் தொடரில் அமைந்த **அல்**லென் கிளவி யின் பொருண்மையுறுப்புக்கள் **தண்ணென வருதல் ஆகிய வாடை** என்ற தொடரில் **ஆகு, இய** என்ற இரு வரிவடிவங்களாக வெளிப் பாடு பெறுகின்றன. இதனையொட்டி புதையமைப்பில் அமைந்துள்ள பொருள்கோட்கிளவி பிரதியாக்க விகாரத்தின் மூலம் இரட்டிக்கப் பெற்று பின்வரும் கிளவியாக்க விதிகள் செயல்படுவதற்கு வகை செய்யப்படுகின்றது.

70) 1) ஆகு + [இருப்பு] > ஆக
2) ஆகு + [காலம்] > அய/ஆக ... பெயர்

இருப்புப் பொருண்மையின் நிகழ்ச்சி (59), (62)-இல் குறிக்கப் பெற்றுள்ள இருப்பு வினைப்பண்புகளின் அடிப்படையில் எல்லா வினையமைப்புக்களிலும் உள்ளீடாக அமையற்பாலது என்ற ஒரு பொதுக் கோட்பாடு வினைகள்பற்றிய ஆய்வினை மறுபரிசீலனைக்கு உட்படுத்தும் அளவுக்கு ஆற்றல் வாய்ந்த ஒன்றாக அமைகின்றது. இந்த வகையில் செயல் வினைகளைப் போல் செய்கை வாய்பாட்டு வினைகவளயும் ஒரு புதிய கோணத்தில் பார்க்கலாம். செய்கை வாய்பாட்டு வினைகள் மரபிலக்கணவாதிகளாலும், அமைப்பிலக்கண வாதிகளாலும் தொழிற் பெயர்களாகவே கருதப்பட்டு வருகின்றன. தொழிற்பெயர்கள் என இப்பிரிவினரால் கருதப்படும் வினையமைப் புக்கள் மொழி வரலாற்றின் ஒரு கட்டத்தில் எச்சம் மற்றும் பயனிலைச் செயற்பாடுகளுக்கு உரியனவாய் இருந்திருக்கவேண்டும் என்பது செயல் வினைகளுக்கு அமைந்த செயற்பாடுகள் மூலம் ஏற்கனவே பேசப்பட்டுள்ளது. செய்கை வாய்பாட்டு வினைகள் இந்த நியதிக்கு விலக்காக இருக்கமுடியாது. பின்வரும் எடுத்துக் காட்டு இதனைத் தெளிவுபடுத்தும் வகையில் அமைவதைக் காணலாம்.

71) கொம்மையும் பசுங்காய் குடுமி விளைந்த
பாகல் ஆர்கை செய்கை பறைக்கண் பீலித்
தோகை ... ... .. ... (அகம், 15.3-5)

இவ்வெடுத்துக்காட்டில் நிகழும் **ஆர்கை** என்னும் செய்கை வாய்பாட்டு வினை **ஆரும்** என்னும் செய்யும் வாய்பாட்டு வினையின் செயற்பாட்டுக்கு நிகராகிப் பெயரெச்சமாய்ச் செயல்படுகின்றது. **தண்வரல் வாடை** என்ற தொடரில் அமைந்த **வரல்** என்ற வினை எங்ஙனம், **வரும்** மற்றும் **வருதல்** **ஆகிய** என்பனவற்றின் பொருண்மையுடன் பொருந்துகின்றதோ, அங்ஙனமே, (71)-இல் நிகழும் **ஆர்கை** என்னும் வினை **ஆரும்** மற்றும் **ஆர்தல் ஆகிய** என்பனவற்றின் பொருண்மையுடன் பொருந்துகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, **ஆர்கை** என்பதில் உள்ள **கை** என்னும் விகுதியின் பொருண்மையமைப்பை [அருப்பு+காலம்] என அமைக்கலாம்.

இந்த வரிவடிவத்தின் அமைப்பை நாம் எப்படி எடுத்துக்கொள்ளப் போகிறோம் என்பதைப் பொருத்து கிளவியாக்க விதிகள் அமையும். **கை** என்ற விகுதி ஓர் உறுப்பாகவே கருதும் பட்சத்தில் (72)-இல் உள்ள கிளவியாக்க விதியும், **க்+ஐ** எனக் கொள்ளும் பட்சத்தில் (73)-இல் உள்ள கிளவியாக்க விதிகளும் செயல்படும்.

72) ஆகு + [இருப்பு + காலம்] > கை/ஆர்...பெயர்

73) (1) ஆகு + [இருப்பு] > க்/ஆர்
(2) ஆகு + [காலம்] > ஐ/ .... பெயர்

ஆர்கை என்ற பெயரெச்ச வினையின் மீது அமைந்த ஆய்வை அடிப்படையாகக் கொண்டு செயல் மற்றும் செய்தல் வினைகளைப் போலவே செய்கை வாய்பாட்டு வினைகளும் பயனிலையாகச் செயற்படுவதற்கான தகுதியை உடையன என்பது பெறப்படும். வியங்கோட் பொருண்மையினை உணர்த்தும் செய்க வாய்பாட்டு வினைகளைச் *செய்கை (< * செய்கய் > செய்க) வாய்பாட்டு வினைகளின் திரிபுகளாகத் துணியலாம்.

செயல்வினைகளுடன் தொடர்புள்ள இன்னொரு செய்தியையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். செயல் வினைகள் பெயரெஞ்சு கிளவிகளாக அமைகையில் அவற்றில் நிகழும் **அல்** லென் கிளவி, **ஆகிய** என்ற வினைக்கு நிகராகி [இருப்பு+காலம்] என்ற பொருண்மையதாகின்றது என்று முன்னர் அறியப்பட்டது. இந்தப் பொருண்மையமைப்பு வினைத் தொகைகளையும், பண்புத் தொகைகளையும் விரிக்கையில் வெளிப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, **வருவிருந்து, பாய்புனல்** ஆகிய வினைத் தொகைகளையும் **நல் விருந்து, உயர்திணை** ஆகிய பண்புத் தொகைகளையும் முறையே **வருதலாகிய விருந்து, பாய்தலாகிய புனல், நன்றாகிய விருந்து, உயர்வாகிய திணை** என விரிக்கையில் **வருதல், பாய்தல், நன்று, உயர்வு** ஆகியவற்றினையடுத்து [இருப்பு + காலம்] என்ற பொருண்மையமைப்பினைக் குறிக்கும், **ஆகிய** என்னும் வினையமைப்பு அவற்றின் மாற்றுருபுகளாகிய **வரு, பாய், நல், உயர்** ஆகியவற்றினையடுத்து இப்பொருண்மையமைப்பினைக் குறிக்கும். வரிவடிவம் நீக்கல் விகாரத்துக்கு இலக்காகி நிகழாமலும் போவதைக் காணலாம். வினைத் தொகை, பண்புத்தொகை ஆகிய

வற்றிலும் **அறிவு மணம், கவிஞர் தாகூர்** முதலிய பெயர்த் தொடர்களிலும் காணாமல் போகும் இருப்பு வினை (59) (அ) பிரிவில் குறிக்கப் பெற்றுள்ள இருப்பு வினைச் சிறப்பியல்பினைப் பிரதிபலிப்பதாகும்.

இந்த ஆய்வுரையை முடிப்பதற்கு முன் இரண்டு செய்திகளைக் குறிப்பிட்டாக வேண்டும். ஒன்று, பொருண்மையமைப்பில் குறிக்கப் பெறும் காலப் பொருண்மையைப் பற்றியதாகும். இரண்டு, செயல் வினைகள் பெயரெச்சச் செயற்பாட்டினை மேற்கொள்கையில் அவற்றில் நிகழும் **அல்**லென் கிளவியின் பொருண்மையமைப்பு விளக்கம் பற்றியதாகும். காலப் பொருண்மையைப் பொருத்த வரையில், இந்த ஆய்வில் நாம் திட்டவட்டமாக எதையும் சொல்லவில்லை. அது தேவையுமில்லை. [காலம்] என்ற பொருண்மை குறிக்கப் பெற்ற இடங்களில் எல்லாம் **அல்**லென் கிளவி காலப் பொருண்மையைக் குறிக்கும் என்ற செய்தி பெறப்பட்டாலும், இது ஒரு மேற் போக்கான குறிப்பேயாகும். காலப் பொருண்மையைக் குறிப்பதாக நாம் கருதும் செயல் வினை, அதனைக் குறிக்காமல் [இயல்பு] என்ற பொருண்மையைக் குறிப்பதாகத் தோன்றினால் காலப் பொருண்மையைப் பொருண்மையமைப்பிலிருந்து தவிர்த்து விட்டு, இயல்புப் பொருண்மையை அங்கே பொருத்திக் கொள்வதில் ஒரு தடையும் இருக்க முடியாது. ஆகவே [இருப்பு+காலம்] என நாம் குறிப்பிட்டுள்ள பொருண்மையமைப்பில் நிகழும் [காலம்] என்ற பொருண்மைக்கூற்றினைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அல்லல்பட வேண்டியதில்லை.

செயல் வினைகள் பெயரெச்சச் செயற்பாட்டினை மேற்கொள்கையில் உரையாசிரியர்கள் பெரும்பாலும் அவ்வினைகளைச் **செய்தலையுடைய** என்றே விரித்துப் பொருள்கூறுகின்றனர். இது மேற்போக்காக நோக்குகையில் பொருத்தமாகத் தோன்றினாலும் மொழியியல் உண்மைகளை இத்தகைய விளக்கம் மூடி மறைத்து விடுகின்றது. எடுத்துக்காட்டாக, **தண்வரல் வாடை** என்னும் தொடர் **தண்ணென வருதலையுடைய வாடை** என்று விரிக்கப் படுகையில் நேரும் விளைவுகளைக் காண்போம். இந்த விரிவு **வரல்** என்பதற்கும் **வாடை** என்பதற்கும் இடையில் அமைந்த **எழுவாய்-பயனிலை** என்ற இலக்கண உறவைப் புலப்படுத்தத் தவறி விடு

கின்றது. வினைமுற்றுக்களையும் இதே பாங்கில் விரிக்க ஒரு தவறான பாதையை இவ்விரிவு அமைத்து விடுகின்றது. செயல் வினை பயனிலையாக நிகழ்கையில், இதனடிப்படையில் **செய்தலை உடைத்து** என்ற விரிவுக்கு இலக்காகும். இதனால் தெரிநிலை வினைமுற்றுக்களில் [உடமை] என்ற ஒரு பொருண்மையைக் குறிப்பிட்டாக வேண்டும். அடுத்து, **தண்வரல் வாடை** என்னும் தொடர் **தண்ணென வரும் வாடை** என்ற தொடருடன் பொருண்மைநிலையில் பொருந்துமாதலால், **வரல்** என்பதனை விரித்தது போலவே பிந்தியதில் நிகழும் **வரும்** என்பதையும் **வருதலையுடைய** என்று விரிக்க வேண்டும். **கிழக்கே போகும் ரயில்** என்பது இதனால் **கிழக்கே போதலையுடைய ரயில்** என்று விரியும் நிலை நேர்ந்து செய்யும் வாய்பாட்டு வினைகள் **செய்தலை உடைய** என்ற பொருண்மைக்கு உரியதாகும் என்ற நிலையை மேற்கொள்ள வேண்டிவரும். செயல் மற்றும் செய்யும் வாய்பாட்டு வினைகளுக்கு இத்தகையதொரு பொருண்மை விளக்கம் தேவையில்லை. தெரிநிலை வினைமுற்றுக்கள் உடமைப் பொருண்மையை உள்ளீடாகக் கொண்டவை என்ற கருதுகோள் தோன்றுமாயின், அப்போது இத்தகைய விரிவுகளைப் பற்றிச் சிந்திப்பதில் தடையொன்றும் இருக்க முடியாது. மூன்றாவதாக, வினைத்தொகைகளும் இதே பாங்கில் ஆய்வுக்கு உட்படும். எடுத்துக்காட்டாக, **பாய்புலி**, **கொல்யானை** ஆகிய வினைத் தொகைகள் **பாயும்புலி**, **கொல்லும் யானை** என விளக்கப்படாமல் **பாய்தலை உடைய புலி**, **கொல்லுதலையுடைய யானை** என்று விரிக்கப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடும். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கையில் பெயரெச்சச் செயற் பாட்டினவாய் நிகழும் செயல் வினைகளை உரையாசிரியர்கள் விரிப்பது போல் **செய்தலையுடைய** என விரிக்காமல், **செய்யும்** அல்லது **செய்கின்ற** என விரிப்பதே பொருத்தமாகும். இதனால் மொழியியல் உண்மைகள் பாதுகாக்கப்படுகின்றன.

## துணைநூல்கள்

Kothandaraman. R., (1978). Verbal Bases in Tamil: A New Look (Journal of Madurai Kamaraj University, Vol. VII No. 2)

# ஸ்ரீலங்கா முஸ்லீம்களின் தமிழ்

கொழும்பு, அம்பாரை மற்றும் கேகாலை மாவட்டங்களில் வாழும் முஸ்லீம்களின் பேச்சுத் தமிழில் வழங்கும் சொற்கள்.

| | |
|---|---|
| ஆரெச்சி | 'கிராமத் தலைவர்' |
| ஒய்த்தா | 'நாவிதர்' |
| ஒள்ளுப்பம் | 'கொஞ்சம்' |
| ஓடாவி | 'தச்சர்' |
| நாணா | 'அண்ணன்' |
| புக்கெ | 'சோறு' |
| பாலாணம் | 'பால்சோறு' |
| புளியாணம் | 'ரசம்' |
| பஹ்ரு | 'வயிறு' |
| பல்சக்கெ | 'பல்லீறு' |
| பாயசவு | 'பாய் வைக்கும் சட்டம்' |
| போடியார் | 'வயலின் உரிமையாளர்' |
| பறுசாரி | 'நாட்டு வைத்தியர்' |
| துப்ணி | 'உமிழ்நீர்' |
| கட்டாடி | 'சலவையாளர்' |
| விதானா | 'கிராமசேவகர்' |
| வட்டானா | 'வயல் ஆள்' |
| கறத்தை | 'ஒற்றைமாட்டு வண்டி' |
| கைலாஞ்சு | 'கைக்குட்டைத்துணி' |
| கெடெலெ | 'இளம் பயிர்' |
| கந்தோர் | 'காரியாலயம்' |
| முட்டி | 'சிறுகுடம்' |
| வெறசு | 'துறத்து' |
| நவிசி | 'பேராசை' |
| அரும்பு | 'கருமித்தனம்' |

— கோ. சீனிவாசவர்மா,
'கிளை மொழியியல்' பக்கம் 161-164
அண்ணாமலைநகர், 1977.

# பொதுப் பேச்சுத் தமிழ்: அதில் இருநிலையின் பங்கு*

வ. ஞானசுந்தரம்
இந்திய மொழிகளின் மைய நிறுவனம், மைசூர்.

0. தமிழ் இருநிலை மொழி (Diglossic language) என்பதைப் பலர் (Pillai, 1960; Annamalai, Thirumalai, Gnanasundaram, 1975; Desilva, 1976; Ramaswamy, 1979) தங்கள் ஆய்வுக் கட்டுரைகளில் நிரூபித்துள்ளனர். தமிழ் மொழியின் இருநிலைகளில் ஒன்றான பேச்சு மொழியில் 'வட்டாரம்' 'சாதி' என்ற இரண்டின் அடிப்படையில் கிளைமொழி வகைகள் இருப்பதாகப் பலர் (Bloch, 1910; Bright, 1960; Pillai, 1960; Zvelebil, 1960; Bright and Ramanujam, 1954) கருதுகின்றனர்.

* உஸ்மானியப் பல்கலைக்கழக மொழியியல் துறைச் சார்பில் ஜனவரி 9, 10, 11, ஆகிய தினங்களில் ஹைதராபாத்தில் நடந்த இரண்டாவது உலகத் தெற்கு ஆசிய மொழிகள் மொழியியல் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற "The role of Diglossia in the emergence of Standard spoken Tamil" என்ற கட்டுரையின் தமிழ் வடிவமாகும் இது.

மதுரை ராமநாதபுரம் மாவட்டங்களின் வழக்கான **அங்கிட்டு** 'அந்தப்பக்கம்', சென்னை, செங்கல்பட்டு, வடஆற்காடு முதலிய பகுதிகளின் வழக்கமான **யாருக்கோசரம்** 'யாருக்காக' (Purposive) சிதம்பரம் மற்றும் தஞ்சாவூர்ப் பகுதிளில் காணப்படும் வழக்கான **எம்பளது** 'எண்பது' போன்றவைகளை வட்டாரக் கிளைமொழி வகைக்கும், பிராமணரது பேச்சில் உள்ள **ஆத்துக்கு** 'வீட்டுக்கு' **வந்துடுத்து** 'வந்துவிட்டது' போன்றவைகளைச் சாதிக் கிளை மொழி வகைக்கும் எடுத்துக்காட்டுக்களாகக் கூறலாம்.

தமிழிலே வட்டாரக் கிளைமொழி, சாதிக் கிளைமொழி என்ற வகைகள் இருப்பது போலவே 'பொதுப் பேச்சுத்தமிழ்' என்று ஒரு வகை இயற்கை வழியிலே[1] தோன்றி உருவாகிக்கொண்டிருக்கிறது என்று பல அறிஞர்கள் கருதுகிறார்கள்.

1.1. கமில் ஸ்வலபில் (Zvelebil, 1964) பொதுப் பேச்சுத் தமிழின் உள்ளீடு (Core) தஞ்சாவூர், திருச்சி, கரூர் மற்றும் தென் ஆற்காடு மாவட்டத்தின் சில பகுதிகள் உள்ளிட்ட கிழக்குப்பகுதித் தமிழகத்தில் உள்ள பிராமணரல்லாதாரது வட்டாரக் கிளை மொழியிலும், இப்பகுதியின் நகரங்களில் வாழும் படித்த மத்தியதர மக்களது பேச்சிலும், சென்னை நகரத்தில் வாழும் படித்த மத்தியதர மக்களது பேச்சிலும் இருப்பதாகக் கூறுகிறார். வேறுவிதமாகக் கூறப்போனால் தமிழகத்தின் கிழக்குப்பகுதி மற்றும் சென்னை நகரப் பகுதியைச் சார்ந்த வட்டாரக் கிளைமொழியை (பிராமணரல்லாதாருடைய பேச்சு, படித்த மத்தியதர மக்களது பேச்சு இரண்டும் இதில் இடம்பெறுகின்றன) அடிப்படையாகக் கொண்டு பொதுப் பேச்சுத் தமிழ் வளர்ந்து வருவதாகக் கமில் ஸ்வலபில் குறிப்பிடுகிறார். எழுத்து நிலைமொழி (Standard written Tamil) சங்கம் வளர்த்த மதுரை என்ற முறையில் பெற்ற கவுரவத்தால் (prestige) மதுரை வட்டாரத் தமிழை அடிப்படையாகக்கொண்டு தோன்றியது என்றும், இக்கவுரவத்தைத் தாங்கும் மையம் (Centre of prestige) கால ஓட்டத்தில் மதுரை நகரிலிருந்து சோழ நாட்டுக்கும் பின்னர் சென்னைக்கும் மாறியது என்றும், அதனாலேயே பொதுப் பேச்சுத் தமிழ் தற்போது கிழக்குத் தமிழ்நாடு மற்றும் சென்னை நகரப் பகுதி என்ற இவ்வட்டாரங்களுக்கு (Centres of prestige) மாறியது என்றும், இம்மாற்றம் அரசியல், பொருளாதார,

சமூகக் காரணங்களால் நிகழ்ந்தது என்றும் கமில் ஸ்வலபில் கூறு கிறார். கமில் ஸ்வலபில் வளர்ந்து வருவதாகக் குறிப்பிடும் பொதுப் பேச்சுத்தமிழ் குறிப்பிட்ட ஒரு வட்டாரப் பேச்சை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் இதிலே வட்டாரக் கூறுகளும் (Regional features) சாதிக் கூறுகளும் (Caste features) இடம்பெற்றிருக்கும் என்பது பின்வரும் காரணங்களால் புலனாகிறது.

சமூகப் பாகுபாட்டு நிலையில் (Social stratification) பேச்சுத் தமிழ் (a) பிராமணர் தமிழ் (b) பிராமணரல்லாதார் தமிழ் (c) ஹரிஜனர் தமிழ் என்ற மூன்று நிலைகளிலும் மாறுபடுவதாக மொழியியல் அறிஞர்கள் (Bright William and Ramanujam, 1964) குறிப்பிடுகின்றனர். பொதுவாக மேலே குறிப்பிட்ட இம்மூன்று பிரிவுகளிலும் உட்பிரிவுகள் உண்டு. பிராமணர் பேசும் தமிழ், ஹரிஜனர் பேசும் தமிழ் இரண்டையும் பிராமணரல்லாதார் பேசும் தமிழோடு ஒப்பிட்டுப் பார்த்தால் பிராமணரல்லாதார் பேசும் தமிழிலேதான் நிறைய உட்பிரிவுகள், அதன் விளைவாக நிறையக் கிளை மொழிகள் இருப்பதைக் காணமுடிகின்றது. இதன் காரண மாக மற்ற இரண்டு பிரிவுகளையும் இதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பிராமணரல்லாதாரது பேச்சு மொழியிலே 'மொழிப் பொதுமை' அதிகமாய்க் காணப்படவில்லை. அதே சமயத்தில் பிராமணர் பேச்சிலும் ஹரிஜனரது பேச்சிலும் (வட்டாரங்கள் பிரித்தபோதும்) மொழிப் பொதுமை அதிகமாய்க் காணப்படுகிறது. இதனாலேயே சில காலத்திற்கு முன் (ஜஸ்டிஸ் கட்சி, சுய மரியாதை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், திராவிட, திராவிட முன்னேற்றக் கழகங்களின் தோற்றத்திற்கு முன்) வரை பிராமணர் பேசும் தமிழில் பேசுவது எழுதுவது பெருமைக்குரிய ஒரு செயலாக இருந்து வந்திருக்கிறது.[9]

பிராமணரல்லாதார் தமிழில் நிறையக் கிளைமொழி வேற்றுமை கள் இருப்பதால் குறிப்பிட்ட எந்த ஒரு பிரிவுக் கிளைமொழியுமே பொதுப் பேச்சுத் தமிழ் என்ற நிலையைப் பெறுவதற்குத் தடையாக இருக்கிறது என்று தோன்றுகிறது. மொழிப் பொதுமை அதிகமாய் இருப்பதாக நம்பப்படும் பிராமணரது பேச்சும், ஹரிஜனரது பேச்சும் ஒவ்வொன்றுக்கும் உரிய தனித்தனிக் காரணங்களால் நிலைமொழி அந்தஸ்தைப் பெறாது இருப்பதாகத் தோன்றுகிறது.

இக்கருத்தின்படி (Karunakaran, 1974) கமில் ஸ்வலபில் கிழக்குத் தமிழ்நாட்டுப் பகுதியில் (சென்னையையும் சேர்த்துக்கொண்டு) பேசப்படும் மத்தியதர பிராமணரல்லாதார் (பிராமணரல்லாதார் என்பதே ஒரு சாதியல்ல, பல சாதிகளின் தொகுப்பு என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும் (Pattanayak) ) பேச்சின் அடிப்படையில் பொதுப் பேச்சுத் தமிழ், உருவாவுதாகக் கூறப்படுவது எந்த அளவிற்குச் சரியானது என்பது ஆய்விற்குரிய பொருளாக நிற்கிறது.

1 2. ஷண்முகம்பிள்ளை (Pillai, 1968, 190-211) குறிப்பிட்ட ஒரு சாதியைச் சேர்ந்த ஒருவர் - ஹரிஜன் என்று கொள்ளுங்கள், தனது சாதியினருடன் அதாவது ஹரிஜனங்களுடன் பேசும்போது ஹரிஜனக் கிளைமொழியிலே பேசுவதாகவும், வேறு சாதியினரோடு பேச நேரும்போது அதே ஹரிஜன் தனது ஹரிஜனப் பேச்சு மொழியில் பேசாமல் **வேறு ஒரு பேச்சு வகையில்** பேசுவதாகக் குறிப்பிடுகிறார். அதாவது தனது குழுவோடு பேசும்போது குழுவுக்குரிய அந்தப் பேச்சு வகையில் பேசுவதாகவும் வேறு ஒரு குழுவைச் சேர்ந்த ஒருவரோடு பேசும்போது தனது குழு பேச்சு வகையை அப்படியே விட்டுவிட்டு வேறு ஒரு வகையில் பேசுவதாகவும் குறிப்பிடுகிறார். (நிச்சயமாக அக்குழுவினர் பேசும் வகையில் முன்னவர் பேசவில்லை. ஏனெனில் அவ்வகையில் அவருக்குப் பேசத் தெரியாது.) வேறுவிதமாகச் சொல்லப்போனால் இரண்டு குழுவினர்க்கே சொந்தமல்லாத ஒரு பொதுவகையில் பேசுவதாக ஷண்முகம்பிள்ளை குறிப்பிடுகிறார். தொடர்ந்து அவர் 'பொதுப் பேச்சுத் தமிழ் கிழக்குத் தமிழ்நாட்டுப் பேச்சு வகையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது' என்ற கமில்ஸ்வலபிலின் கருத்தை மறுப்பதோடு பொதுப் பேச்சுத் தமிழை அடையாளங் கண்டு கொள்ளப் பின்வரும் வழியையுங் கூறுகிறார்.

தமிழ்ச் சமூகப் படங்களில், நகைச்சுவைக்காகப் படைக்கப் பட்ட நகைச்சுவைப் பாத்திரங்கள், மற்றும் யதார்த்த ரீதியில் படமாக்கப்பட்டுள்ள படிக்காத மக்கள் பாத்திரங்கள் நீங்கலாக உள்ள முக்கியப் பாத்திரங்கள் (Main characters) பயன்படுத்துவது பொதுப் பேச்சுத்தமிழ் என்கிறார். நகைச்சுவைப் பாத்திரங்கள் குறிப்பிட்ட ஒரு வட்டார அல்லது சாதிக் கிளைமொழியில் பெரும்

பாலும் நகைச்சுவையை உண்டாக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காகப் பேசுகின்றனர். மாறாகக் கதையின் முக்கியப் பாத்திரங்கள் வட்டார அல்லது சாதிக் கிளைமொழியில் பேசுவது மதிப்புக் குறைந்த செயல் என்பது போல அவைகளல்லாத ஒரு வகையில் பேசுகின்றனர் என்றும் அது இலக்கியத் தமிழும் (எழுத்துத் தமிழ்) அல்ல என்றும் நிச்சயமாக அது பிராமணப் பேச்சு நடையில் இல்லை என்றும் குறிப்பிடுகிறார்.

படித்த தமிழர்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் பொதுப் பேச்சுத் தமிழையே பேசுகிறார்கள்; வட்டார சாதிக் கிளைமொழிகளைக் கற்பதில்லை. அப்படியே ஒருவேளை வட்டார சாதிக் கிளைமொழிகளைக் கற்றுக்கொண்டாலும் அவர்கள் எந்தச் சூழலுக்கு எந்த வகையைப் பயன்படுத்த வேண்டும் என்பதை அறிந்துகொண்டு அதன்படி பயன்படுத்துகின்றனர் என்று ஷண்முகம் பிள்ளை குறிப்பிடுகிறார்.

1.2.1. படித்த இளைய தலைமுறையினர் பொதுப் பேச்சுத் தமிழ் என்று சொல்லப்படும் ஒரு வகையைப் பேசுவதற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றை ஷண்முகம் பிள்ளை குறிப்பிடுகிறார்.

அ) இளைய தலைமுறையினர் அதிகம் தமிழ்ச் சினிமா பார்ப்பதால் சமூகப் படங்களில் உள்ள முக்கியப் பாத்திரங்களின் (இவர்கள் படித்தவர்கள்) பொதுப் பேச்சுத் தமிழ் வகையை நிரம்பக் கேட்கும் சந்தர்ப்பங்கள் உண்டாகின்றன.

ஆ) கல்வி எல்லார்க்கும் கிடைக்கும் காலகட்டம் இது. அதனால் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த இளைய தலைமுறையினர் பல்வேறு வட்டாரங்களிலிருந்து வந்து ஒன்றாகத் தங்கிப் படிப்பதால் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகும் வாய்ப்புகள் நிறையக் கிடைக்கின்றன.

இ) மக்கள் கல்வி, அலுவல் மற்றும் பல காரணங்களுக்காகப் பிறந்த இடம் விட்டு வேறு இடங்களில் வாழ்கின்றனர்.

ஈ) தாங்கள் இன்ன சாதியினைச் சேர்ந்தவர் என்பதை அவர்களது வட்டாரச் சாதிக் கிளைமொழிக் கூறுகளைக் கொண்ட பேச்சுத்தமிழ் வெளிப்படுத்தி விடுவதால், தங்களை இன்ன சாதியினர் என்று மற்றவர் அடையாளங் கண்டுகொள்ளாமல் இருக்கும் பொருட்டுப் பொதுப் பேச்சுத் தமிழைப் பயன்படுத்துகின்றனர்.

1.2.2. பொதுப் பேச்சுத்தமிழ் என்பது வட்டாரப் பேச்சுத் தமிழுக்கும் இலக்கியத் தமிழுக்கும் மத்தியில் உள்ளது "என்பது இவரது வாதம். பின்வரும் வரைபடம் அவரது நிலையைத் தெளிவாக்கும்.

இலக்கியத் தமிழ்

|

பொதுப் பேச்சுத் தமிழ்

|

| | | |
|---|---|---|
| வட்டாரப் பொதுப் பேச்சுத் தமிழ் 1 | வட்டாரப் பொதுப் பேச்சுத் தமிழ் 2 | வட்டாரப் பொதுப் பேச்சுத் தமிழ் 3 |
| \| | \| | \| |
| வட்டாரக் கிளை மொழிகள் | வட்டாரக் கிளை மொழிகள் | வட்டாரக் கிளை மொழிகள் |

ஒவ்வொரு வட்டாரத்திலும், வட்டாரக் கிளைமொழிகளைக்கொண்டு வட்டாரப் பொதுப் பேச்சுத்தமிழ் நிச்சயிக்கப்படும். பல வட்டாரங்களில், வட்டாரப் பொதுப் பேச்சுத்தமிழ் (Regional standard spoken) ஆட்சி செலுத்துகிறது. பல வட்டாரப் பொதுப் பேச்சுத் தமிழிலிருந்தும் பொதுப் பேச்சுத் தமிழ் உருவாகிறது. முடிவாக இவர் பொதுப் பேச்சுத்தமிழ் (a) படித்த பிராமணரல்லாதாரது பேச்சில் உள்ளது என்றும் (b) வட்டாரப் பொதுப்பேச்சுத்தமிழுக்கும் இலக்கியத்தமிழுக்கும் இடையில் உள்ளது என்றும் கூறுகிறார். இவரது இக் கூற்றுக்கள் பொதுப்பேச்சுத் தமிழை அடையாளங் கண்டு கொள்வதற்கான வழிகளைக் குறிப்பிடுகின்றன. ஆனால் எது பொதுப் பேச்சுத்தமிழ், அதன்மொழிக் கூறுகள் என்ன என்பது குறித்து ஒன்றும் சொல்லவில்லை.

1.3. எம். எஸ். ஆன்டிரனோவ் பொதுப் பேச்சுத் தமிழ், ஒரு அமைப்பாக உருவாகி விட்டது. இதற்கென்று தனியாக ஒரு இலக்கணம் இருக்கிறது என்கிறார்.

1.4. வி. ஐ. சுப்பிரமணியம் திருநெல்வேலிப் பொதுப்பேச்சுத் தமிழ், சேலம் பொதுப் பேச்சுத் தமிழ், சென்னைப் பொதுப் பேச்சுத்தமிழ் என்று வட்டாரப் பொதுப் பேச்சுத் தமிழில் பல வகைகள் உண்டு, அவை தம்மில் வேறுபடுபவைகள் என்கிறார்.

1.5. வசந்த குமாரி (Vasantha kumari, 1976:110-118)யின் கூற்றுப்படி பொதுப்பேச்சுத் தமிழ் எந்த ஒரு வட்டாரத்தையும் சாதியையும் மதத்தையும் சார்ந்து நிற்கவில்லை. அதாவது வட்டார சாதிமதக் கூறுகள் எதுவும் பொதுப் பேச்சுத்தமிழில் இருக்காது. அது சமுதாயத்தில் படித்த உயர்மதிப்புப்பெற்ற (Prestige Class) வகுப்பினரின் பேச்சு மொழி

1.6. நாம் தினந்தோறும் நம் குடும்பத்தாரோடு இயல்பாகப் பேசும்போது பயன்படுத்துகிறோமே ஒரு பேச்சுவகை அதை மனை மொழி (Home Dialect) என்றும் அதில் காணப்படும் வட்டார, சாதிக் கிளைமொழிக் கூறுகளை வடுப்பட்ட கூறுகள்[3] (Stigmatized or stereo typed or marked features) என்றும் குறிப்பிடும் இ. அண்ணாமலை (Annamalai, 1976 ; 266_268) அம் மனை மொழியில் காணப்படும் வடுப்பட்ட கூறுகளை விலக்கிப் பேசும் பேச்சுத்தான் பொதுப்பேச்சுத் தமிழ் என்கிறார். வடுப்பட்ட கூறு கள் விலக்கப்படுவதால் சார்பற்ற பேச்சுருவத்தொகுதிகள் (Neutral forms) அதாவது வட்டார மற்றும் சாதியைச் சேராத பேச்சுத் தொகுதிகள்) பொதுப் பேச்சுத் தமிழில் இடம் பெறுகின்றன. எடுத்துக்காட்டிற்கு " எம்மாந்தூரம்" என்ற வழக்கு வடுப்பட்ட பேச்சுருவமாகக் கருதப்பட்டால், இப்படி வடுப்படுவதற்குக் காரண மாய் இருந்த (இருப்பதாக இருந்தால்) எம்மா என்ற சொல் நீக்கப் பட்டு அதற்கு இணையான சார்பற்ற பேச்சுருவமான எவ்வளவு என்ற சொல் பயன்படுத்தப்படும். அதாவது 'எம்மாம்' என்பது போன்ற குறிப்பிட்ட மனைமொழி பேசுபவர் 'எம்மாம்' என்ற சொல்லை விடுத்து 'எவ்வளவு' என்பது போன்ற சொற்களைப் பயன்படுத்துவார். ஒருவேளை வழக்கில் உள்ள தமிழ்ச் சொற்கள்

எல்லாமே ஒரு வட்டாரத்தையோ அல்லது குறிப்பிட்ட ஒரு சாதியையோ குறிப்பிடும் வகையில் வடுப்பட்ட சொற்களாகி விடும் போது சில சமயம் ஆங்கிலச் சொற்கள் கூட சார்பற்ற பேச்சுருவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, படித்த மக்களால் பயன்படுத்தப் படுகிறது என்கிறார். அண்ணாமலை மச்சான்/மச்சினன்/அத்தான்/அத்திம்பேர் என்ற சொற்களைப் பயன்படுத்த விரும்பாதபோது, (இலக்கியத் தமிழில் உள்ள **மைத்துனன்** என்ற சொல் 'பேச்சுத் தமிழ்ச்சூழலில் பயன்படுத்தப் படுவதில்லை) படித்தவர்கள் 'பிரதர் இன்லா' (brother in law) என்ற சொல்லைப் பயன்படுத்துவதை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

1.6.1 பொதுப் பேச்சுத் தமிழ் சமுதாயத்தில் உயர்மதிப்புப் பெற்ற (preveleged class) படித்தவர்களது பேச்சாகவேதான் இருக்க வேண்டும் என்பதில்லை என்கிறார் அண்ணாமலை. உயர் மதிப்புப் பெறாத படிக்காத ஒரு தமிழன்கூட தனது பேச்சில் உள்ள வடுப்பட்ட சொற்களை விலக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாக சார்பற்ற பேச்சுருவங்களைக் கொண்டால் பின் பொதுப் பேச்சுத் தமிழைக் கொண்டவனாவான் என்பது அவரது வாதம்.

தமிழகத்தின் தொண்டை மண்டலப் பகுதியில் வாழும் படையாட்சி மக்களுடைய பேச்சுமொழியில் காணப்படும் ஒலியன் நிலையில் உள்ள டேக்ஸானமிக் கொள்கையின் இரண்டாட்ட நிலை (Phonemic free variation) (Gnanasundaram; 1963) சூழல் மாற்றத்தால் ஏற்படும் நடைமாற்றத்தைக் (Slyle shift) கோடிட்டுக் காட்டுகிறதோ என்றும், பொதுப் பேச்சுத் தமிழை நிச்சயிப்பதற்கான இந்த நடைமாற்றத்திற்குப் படிக்காத மக்களும் ஆளாகிறார்களோ என்றும் ஐயுற வேண்டியுள்ளது. இந்த ஐயம் அண்ணாமலையின் கருத்துக்குத் துணைசெய்யும் வகையில் உள்ளது.[4]

1.6.2. தமிழில் பொதுப் பேச்சுத் தமிழ் என்ற ஒன்று நிலை பெற்றிருக்கிறது என்பதை நிரூபிக்க வேண்டுமானால், பின்வரும் வழிமுறைகளுக்கான சான்றுகளை நிறுவவேண்டும் என்ற கருத்தை அண்ணாமலை (1976) தெரிவிக்கிறார்.

a. தன் இனக்குழு (குடும்பத்தினர்) அல்லாத கலவைக் குழுக்களில் (Mixed groups) பேச்சு மொழி மனைமொழியிலிருந்து

மாற்றமடைகிறது. அதாவது வடுப்பட்ட சொல்லுருவங்கள் (Strginatised or sleven or marked forms) சார்பற்ற சொல்லுருவங்களாக (Neutral forms) மாற்றமடைகின்றன என்பதற்கான சான்றுகள்.

b) மேற்குறிப்பிட்ட சூழலில் நிகழும் நடைமாற்றத்திற்கும் (அதாவது வடுப்பட்ட சொல்லுருவங்கள் சார்பற்ற சொல்லுருவங்களாக மாறுவது) அதனால் விளையும் மொழிவகை மாற்றத்திற்கும் சான்றுகள்.

c) சினிமா போன்ற பரவல் செய்தித் தொடர்புச் சாதனங்களில் பயன்படுத்தப்படும் ஒரே தன்மையதான மொழிக்கான சான்றுகள்.

d) பொதுப் பேச்சுத் தமிழ் அல்லாத அதாவது வட்டார, சாதிக் கிளை மொழிகளைப் பேசுபவர்களிடையே மிகை உணர்வுத் தூண்டலால் நிகழும் பிழைத்திருத்தங் (Hyper correction) (Labov 1971) களுக்கான சான்றுகள்

2. பொதுப் பேச்சுத்தமிழ் உருவாகிக் கொண்டிருக்கும் கட்டத்தில் இருக்கிறது என்பதை நிறுவுவதற்காக அண்ணாமலை அறிவித்துள்ள நான்கு நெறி முறைகளில் முதல் இரண்டு நெறி முறைகளை மாத்திரம் ஒரு முன்னோடிப் பொது ஆய்விற்காக (Pilot Survey) இங்கே எடுத்துக் கொள்கிறோம். அவ்விரண்டு நெறிமுறைகளின் அடிப்படையில் பின்வரும் புனைவு கோள்கள் (Hypothesis) உருவாக்கப்படுகின்றன.

2.1. படித்தவர்கள் கலவைக் குழுக்களில் (Mixed groups) மனைமொழியிலிருந்து வேறு ஒரு பேச்சுநடைக்கு மாறுபடுகிறார்கள். வேறுவிதமாகக் கூறப்போனால் படித்தவர்கள் இரண்டுவிதமான பேச்சு நடைகளைக் கொண்டிருக்கிறார்கள்; குடும்பத்தினருடன் பேசிக்கொள்ள ஒரு நடையும், வெளியாருடன் பேசிக்கொள்ள இன்னொரு நடையும்.

2.2. மனை மொழியில் உள்ள சில பேச்சுருவங்கள் (Speech forms) வடுப்பட்ட சொற்களாகக் கருதப்படுகின்றன.

2.3. கலவைக் குழுச் சூழல்களில் வடுப்பட்ட பேச்சுருவங்கள் மாற்றமடையும் வடுப்படாத பேச்சுருவங்கள் மாற்றமடையாமல் நிற்கும்.

2.4. பேசுபவர் மனைமொழியில் உள்ள பேச்சுருவங்களை எவ்வளவுக்கெவ்வளவு வடுபட்ட பேச்சுருவங்களாகக் கருதுகிறாரோ அவ்வளவுக்கவ்வளவு பொதுப் பேச்சுத் தமிழுக்கான நிலைபேறாக்கம் நிகழும்.

அதாவது மனை மொழியில் வட்டார, சாதிக் கிளைமொழிக் கூறுகளைத் தாங்கிய பேச்சுருவங்கள் காணப்படலாம். குறிப்பிட்ட ஒருவரது மனைமொழியில் உள்ள பேச்சுருவங்களில் 10 பேச்சுருவங்கள் வடுப்பட்ட பேச்சுருவங்கள் என்று முடிவாகி விட்டது என்று கொள்வோம். குறிப்பிட்ட இம்மனை மொழியைப் பேசுபவர் (Individual) அவற்றில் 70 பேச்சுருவங்களை மாத்திரம் வடுப்பட்ட பேச்சுருவங்களாகக் கருதினால் பின் 70 விழுக்காட்டு அளவிற்குத்தான் அவரது பேச்சில் நிலைபேறாக்கம் நிகழ்வதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன என்று பொருள். அதே மனைமொழி பேசும் வேறொருவரது 100 வடுப்பட்ட பேச்சுருவங்களில், குறிப்பிட்ட இவர் (another individual) 40 பேச்சுருவங்களை மாத்திரம் வடுப்பட்ட பேச்சுருவங்களாகக் கருதினால் பின் அவரது பேச்சில் 40 விழுக்காட்டு அளவிற்குத்தான் நிலைபேறாக்கம் நிகழ்வதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன.

2.5. (எனவே) பொதுப் பேச்சுத் தமிழுக்கான நிலை பேறாக்கத்தின் அளவு ஆளுக்கு ஆள் வேறுபடும்.

2.6. பொதுப்பேச்சுத்தமிழ் வட்டார மற்றும் சாதிக் கிளைமொழிகளின் கூறுகள் எவற்றையும் கொண்டிருக்காது.

2.7. பொதுப்பேச்சுத் தமிழுக்கும், எழுத்துத் தமிழுக்கும் (written Tamil) ஊடே உள்ள இடைவெளி குறைந்த அளவினதே.

3. ஆய்வு முறை (Methodology):

### 3.1. வினாத்தாள்முறை: சூழல் 1. (Questionaire method: Context 1)

படித்தவர்கள் மனைமொழியிலிருந்து விலகிச் செல்கிறார்களா என்பதைச் சோதிக்கும் பொருட்டுக் கலவைக் குழுச் சூழல்களை உருவாக்கித் தமிழர்களை அச்சூழல்களில் ஒருவரோடொருவர் பேச வைக்க முடிவு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் பங்கேற்ற மக்கள் (Subjects) மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் மைய நிறுவனத்தில் பணிபுரியும் அலுவலர்களின் துணைவியர்களும், வட்டாரக் கல்லூரிக் கல்வியகத்தில் (Regional college of Education) பணி புரியும் அலுவலர்களின் துணைவியர்களும் ஆவர். இந்த ஆய்வுக்கு ஆண்களுடைய பேச்சுக்களை எடுத்துக்கொள்ளவில்லை. ஏனெனில் இந்த ஆய்வில் உட்படச் சம்மதித்த ஆண்களில் பலர் மொழியியல் அறிஞர்களாக இருப்பதால் அவர்களது மொழியியல் ஆய்வு மனப்பான்மை, மேற்கொண்டிருக்கிற இந்த ஆய்வையே குலைப்பதாக அமையலாம் என்ற காரணத்தால் அவர்களை இந்த ஆய்வில் உட்படுத்தவில்லை. ஆறு பெண்கள் இந்த ஆய்வில் பங்கேற்றிருக்கிறார்கள். அவர்கள் படித்த பெண்கள்; தமிழ்நாட்டின் பல பகுதிகளில் உள்ள ஊர்களைச் சொந்த ஊராகக் கொண்டவர்கள்; பல சாதி அமைப்பைச் சேர்ந்தவர்கள் (காண்க. பிற்சேர்க்கை எண் 1.) வினா ஏடு (Questionair) ஒன்று தயாரிக்கப்பட்டது. அவ்வினா ஏட்டில் (a) சென்னை (b) மதுரை/ராமநாதபுரம் (c) நாகர்கோயில் முதலான பகுதிகளில் உள்ள வட்டாரக் கூறுகளைப் பிரதிபலிக்கும் காரணிகளும் (Variables) பிராமணசாதிக்கூறுகளைப் பிரதிபலிக்கும் காரணிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வில் பங்கேற்ற பெண்களது சொந்த ஊர்கள், ஒரே ஒரு பெண்ணுடைய சாதி இவைகளுக்குத் தகுந்தாற்போல அவற்றையே அடிப்படையாகக் கொண்டு காரணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

(a) ஒலியனியல் (b) உருபனியல் (c) சொல்லியல் ஆகிய மொழியியல் கூறுகளுக்கான தனித்தனிக்காரணிகள் இவ்வாய்வில் இடம் பெறும் ஒவ்வொரு வட்டாரத்திற்காகவும், சாதிக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. எடுத்துக்காட்டுகள் வருமாறு:

a) ஒலியனியல் : இன்னா 'என்ன' (சென்னை)

b) உருபனியல் : **யாருக்கோசரம்** 'யாருக்காக' (சென்னை)
**வேகமாட்டு** வேகமாக (நாகர்கோயில்)

c) சொல்லியல் : **பைய** 'மெதுவாக'/மதுரை (ராமநாதபுரம்)
**சித்தெ** 'சிறிது நேரம்' பிராமணசாதி வழக்கு)

காரணிகள் பேச்சுத் தமிழ் வாக்கியங்களில் கொடுக்கப்பட்டன. ஒரு வாக்கியத்தில் ஒரு காரணிதான் பயன்படுத்தப்பட்டது. அதாவது **மூடே** 'மூட்டை' (மதுரை, இராமநாதபுரம்) என்பதை ஒரு காரணியாகக் கொண்டால், இக்காரணி நன்கு புலப்படும் வகையில் **எத்தனெ மூடெ நெல்லு வந்திருக்குது** (எத்தனை மூட்டை நெல் வந்திருக்கிறது) என்று ஒருவாக்கியம் உண்டாக்கப் பட்டு வினா ஏட்டில் சேர்க்கப்பட்டது. இவ்வாக்கியத்தில் **மூடெ** என்ற ஒரே ஒரு சொல் வட்டார வழக்குச் சொல்லாக நிற்க, ஏனைய சொற்கள் குறிப்பிட்ட ஒரே ஒரு வட்டாரத்துக்கோ அல்லது சாதிக்கோ மாத்திரம் உரியதாக அல்லாத சொற்களாக, எச்சரிக்கை யோடு சேர்க்கப்பட்டுள்ளன. இப்போது வாக்கியத்தை முழுமை யாகப் படிக்கும்போது **மூடெ** என்ற சொல்லைத் துணையாகக் கொண்டு இவ்வாக்கியம் குறிப்பிட்ட எப்பகுதியில் அல்லது எச் சாதியினரால் பேசப்படும் வாக்கியம் என்பதைத் தீர்மானிக்கலாம். ஒரு வாக்கியத்தில் இரண்டு காரணிகள் சேர்க்கப்பட்டால், ஆய்வில் பங்கேற்ற பெண்கள் குழம்ப நேரிடலாம் என்பதால் ஒரு வாக்கியத் தில் ஒரு காரணிதான் பயன்படுத்தப்பட்டது.

A முதல் F வரையுள்ள பெண்களிடம் வினா ஏட்டுப் பிரதிகள் ஆளுக்கொன்றாகக் கொடுக்கப்பட்டன. வினா ஏட்டைப் பொறுத்த வரையில் பெண்கள் ஆற்றவேண்டிய கடமைகள் வருமாறு:

ஒன்று, வாக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ள காரணிகளைத் துணையாகக்கொண்டு தங்கள் வட்டார அல்லது சாதி வழக்கை இனங்கண்டுகொள்ள வேண்டும். உதாரணமாகக் **நல்லாத் துண்ணு** என்ற வாக்கியத்தைப் படித்தவுடன் சென்னையைச் சேர்ந்த பெண், அவ்வழக்கு தனது மனைமொழியில் இருப்பதாக நம்பினால், அது தனது சொந்த ஊரான சென்னையில் பேசப்படுகிறது என்று குறிப்பிடுவார். குறிப்பிட்ட அவ்வழக்கு தனது சாதியினரால் பேசப் படுவதாக நம்பினால் அச்சாதியையும் குறிப்பிடுவார்.

இரண்டு: இனங்கண்டுகொண்ட அத்தகைய பேச்சு வழக்கு களை அவர்கள் தங்கள் சொந்தப் பேச்சில் பயன்படுத்தலாமா அல்லது பயன்படுத்தக் கூடாதா என்னும் அபிப்ராயத்தைத் தெரிவிக்கவேண்டும். (மாதிரி வினா ஏட்டிற்குப் பிற்சேர்க்கை எண் 2 ஐக் காணவும்) இத்திட்டத்தின் இக்கட்டம் ஆய்வில் பங்கேற்ற பெண்கள் வடுப்பட்ட பேச்சுருவங்களை இனங்கண்டு கொள்வ உதவும் என்ற நம்பிக்கையின் பேரில் அமைக்கப்பட்டது.

வடுப்பட்ட பேச்சுருவங்கள் என்று இந்த ஆய்வாளர் எப்படித் தீர்மானித்தார் என்பதை இனிக் காண்போம். ஆய்வின் வினா ஏட்டுச் சூழலை முதலில் எடுத்துக்கொள்வோம். ஆய்வில் பங்கேற்ற பெண்கள் தங்கள் ஊர்களில் பேசப்படும் பேச்சு வழக்குகளை முதலில் இனங்கண்டுகொண்டார்கள். பின் தங்கள் சாதியினர் பேசும் பேச்சு வழக்குகளை இனங்கண்டுகொண்டார்கள். [A, B முதலியார். D.. இழவா. F பிராமணர். C .. தேவர். E .. பேச்சு வழக்குகளைத் தன்னுடைய நிலப் பகுதியில் பேசப்படுவதாக இனங்கண்டு கொணடாரேயல்லாமல் தன்னுடைய சாதியினர் பேசுவதாகக் குறிப்பிடவில்லை] இனங்கண்டுகொள்ளப்பட்ட அப்பேச்சு வழக்கு கள் இனங்கண்டுகொள்ளுதலின் இவ்வடிப்படையின் பேரில் முறையே அவரவர் மனைமொழி (Home Dialect) என்று இவ்வாய் வாளர் தீர்மானித்தார்.[6] அது மாத்திரமல்ல. தமிழ்க் கிளைமொழிகள் பற்றிய இவ்வாய்வாளருடைய முன்னறிவும், ஆய்வில் பங்கேற்ற ஒவ்வொரு பெண்ணுடைய மனைமொழியையும் கண்டுபிடிக்க உதவியது.

இத்திட்டத்தின் அடுத்த கட்டம் இதுதான். ஒவ்வொரு பெண் ணும் தன்னுடைய மனைமொழி குறித்து என்ன கருத்துக் கொண்டிருக்கிறார்? தனது மனைமொழியின் குறிப்பிட்ட ஒரு வழக்கைத் தான் பயன்படுத்தக்கூடாது என்ற கருத்தைத் தெரிவித் திருந்தால் அவர் குறிப்பிட்ட அவ்வழக்கை வடுப்பட்ட பேச்சுருவ மாகக் (Stereo form) கருதுகிறார் என்று பொருள் மாறாக அவ் வழக்கைப் பயன்படுத்தவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருந் தால் அவர் அவ்வழக்கை வடுப்படாத பேச்சுருவமாகக் (Non-stereo form) கருதுகிறார் என்று பொருள்[7] (காண்க: பிற்சேர்க்கை எண் 3 அட்டவணை: 1).

மனை மொழியில் உள்ள எந்த ஒரு பேச்சுருவம் பயன்படுத்தக் கூடாது என்ற கருத்துத் தெரிவிக்கப் படுகிறதோ அது வடுப்பட்ட பேச்சுருவமாகும். எடுத்துக்காட்டிற்கு. நல்லாத்துண்ணு என்ற வாக்கியம் தனது மனைமொழியில் இருப்பதாகக் கருத்துத் தெரிவித்த சென்னையைச் சேர்ந்த ஒரு பெண் (ஆய்வாளர் இவ் வழக்கு அப்பெண்ணின் மனைமொழிதான் என்று தீர்மானிக்கிறார்) அவ்வழக்கை, வினா எட்டில் கொடுத்துள்ள (காண்க; பிற்சேர்க்கை எண். 2) கேள்வியான 'இவ்வாக்கியத்தை உங்களுடைய பேச்சில் பயன்படுத்தவேண்டும் என்று நினைக்கிறீர்களா? என்ற கேள்விக்கு விடையாக இல்லை என்ற பதிலைத் தந்தால் குறிப்பிட்ட அப்பெண் தன் மனைமொழி வழக்கான துண்ணு என்பதை வடுப்பட்ட சொல் லாகக் கருதுகிறார் என்று பொருள்.

## 3.2. கலவைக் குழுச் சூழல் (சூழல் 2)

இனி அடுத்தகட்டமாக இனங்கண்டு கொண்ட மனைமொழி வழக்குகளிலிருந்து வடுப்பட்ட பேச்சுருவங்கள், வடுப்படாத பேச் சுருவங்கள் இரண்டும் வேறு பிரிக்கப்பட்டன. கலவைக் குழுச் சூழலில் வடுப்பட்ட பேச்சுருவங்கள் மாற்றமடையும் என்பதே நமது ஊகம், புனைவுகோள். இந்தப் புனைவுக்கோளைச் சோதித் துப் பார்க்க ஆய்வாளர் ஒரு மொழிச் சூழலை உண்டாக்கினார். ஆய்வில் பங்கேற்ற பெண்களுடைய குடும்பத்தினரை ஒரு மாலை தேநீர் விருந்துக்கு அழைத்த வகையில் தேவைப்பட்ட அச்சூழலை ஆய்வாளர் உருவாக்கினார். அச் சூழலைக் கலகலப்படையச் செய்ய அப்பெண்களேயல்லாமல் இன்னும் சில தமிழ்க் குடும்பத் தினரும் வரவழைக்கப்பட்டனர். எச்சரிக்கையான ஒரு உரை யாடல் சூழல் (Careful speech situation) உருவானது.[8] உரை யாடல்கள் நிகழ்ந்தன. உரையாடல்களில் பங்குபெறுவோர் அறி யாமல் அவர்களது பேச்சு 'டேப்பில்' பதிவு செய்யப்பட்டது.

கலவைக்குழுச் சூழலில் (a) வடுப்பட்ட பேச்சுருவங்கள் மாற்ற மடைகிறதா என்பதற்காகவும் b) வடுப்பட்ட சொற்கள் மாற்றமடை யாமல் இருக்கிறதா என்பதற்காகவும், ஆய்வாளரும் ஆய்வாளரு டைய மொழியியல் நண்பர்களில் சிலரும் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த உரையாடல்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டி ருந்தார்கள்.

அத்தோடு நேர்முக வினாவிடைச் சூழல் (Interview situation) ஒன்று, கலவைக் குழுச் சூழலில் பங்கு பெறுவோர் அனைவரும் கலந்து கொள்ளும் விதத்தில் உருவாக்கப்பட்டது. வினாவிடைச் சூழலில் உண்டான உரையாடல்கள் முழுவதும் 'டேப்பில்' பதிவு செய்யப்பட்டன. இம் முறை தங்கள் பேச்சு 'டேப்பில்' பதிவாகிறது என்ற உணர்வோடு பெண்கள் பேசினார்கள். இவ்வாய்வில் பங்கேற்ற, பெண்கள் பேச்சுத் தமிழில் (a) அவர்களுக்குத் திருமணம் நடந்த அந்நாளில் நிகழ்ந்த திருமணச் சடங்குகளை விவரிக்க வேண்டும் என்றும் (b) அவர்கள் தாங்கள் மிக விரும்பும் கதை ஒன்றைச் சொல்லவேண்டும் என்றும் (c) அவர்கள் தங்கள் சொந்த ஊரில் நடந்த ஒரு முக்கியமான சுவையான நிகழ்ச்சியை விவரிக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொள்ளப் பட்டார்கள். இச்சூழலும் எச்சரிக்கை உரையாடல் சூழல்தான். இவ்வாய்வில் காணக்கிடைத்த செய்திகள் பிற்சேர்க்கை 3 இல் (அட்டவணை 1 முதல் 7 வரை) கொடுக்கப்பட்டுள்ளன.

## 3.3 ஆய்வில் நேரிட்ட தொல்லைகள்

ஆய்வாளரால் உருவாக்கப்பட்ட கலவைக்குழுச்சூழல், எல்லாக் காரணிகளையும் பெறுவதற்குப் போதுமானதாக இல்லை. அதாவது பெண்களுடைய பேச்சில் எல்லாக் காரணிகளும் அச்சூழலில் இடம் பெறவில்லை. இக்கலவைக்குழுச் சூழல் ஏறக்குறைய மூன்று மணி நேரம் நிலவியது. ஆறு பெண்களுடைய பேச்சுக்களையும், தொடர்ந்து வேறுசில கலவைக்குழுச் சூழல்களிலும் (ஆய்வாளரால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட சூழல் அல்ல இவை. இது மொத்தம் 2மணி நேரம் இருக்கும்) இவ்வாய்வாளர் கேட்டிருக்கிறார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள எல்லாக் கலவைக்குழுச் சூழல்களையும் ஒன்றாகச் சேர்த்துப்பார்த்த போதும் காரணிகள் எல்லாமே அச்சூழல்களில் இடம்பெறவில்லை. அத்தகைய காரணிகளைக் கேட்பதற்கான சந்தர்ப்பம் ஆய்வாளருக்குக் கிடைக்கவில்லை என்ற காரணத்தினாலேயே இப்பெண்கள் அத்தகைய காரணிக்குரிய பேச்சுருவங்களைப் பேசுவதேயில்லை என்று பொருளல்ல. ஒருவேளை இன்னும் பல எச்சரிக்கை உரையாடல் சூழல்களில் (கலவைக் குழுச் சூழல்களில்) அப்பெண்களுடைய உரையாடல்களைக் கேட்கும் சந்தர்ப்பம் இந்த ஆய்வாளருக்குக் கிடைக்குமே

யானால், அப்பெண்கள் அக்காரணிகளுக்குரிய பேச்சுருவங்களைப் பேசும்பல சந்தர்ப்பங்கள் உண்டாகலாம். அவைகளை ஆய்வாளரும் கேட்கலாம். அதற்பிறகு வடுப்பட்ட சொற்கள் எல்லாமே கலவைக் குழுச் சூழலில் மாற்றமடைகிறதா இல்லையா என்பது போன்ற வினாக்களுக்கு விடைபெறலாம். இப்படிப்பட்ட குறைகளுக்கிடையேயும் இவ்வாய்வின் அடிப்படையில் கொள்ள முடிந்த தற்காலிக முடிவுகள் இனிக்காணலாம்.

## 4. கொண்ட புனைவு கோள்களும், முடிவுகளும்

இனி ஆய்வுக்காக மேற்கொண்ட புனைவு கோள்களையும் நிகழ்த்திக் காட்டிய இந்த ஆய்வில் (Demonstrations) கிடைத்த முடிவுகளையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

4.1. புனைவுகோள் 1: படித்தவர்கள், கலவைக் குழுக்களில் மனைமொழியிலிருந்து வேறு ஒரு பேச்சு நடைக்கு மாறுபடுகிறார்கள்.

ஆய்வில் பங்கேற்ற பெண்கள் எல்லாம் கலவைக் குழுக்களில் (a) சில வடுப்பட்ட சொற்களை மாற்றினார்கள். (b) சில வடுப்படாத சொற்களையும் மாற்றினார்கள் (புனைவுகோளுக்கு மாறுபாடான முடிவு இது) காண்க: பிற்சேர்க்கை 3, அட்டவணை 1) என்பதும், மிகச் சில பெண்கள் (A யும் C யும்) வடுப்பட்ட சொற்களையே கலவைக் குழுச் சூழல்களில் பயன்படுத்தினார்கள் என்பதும் கவனிக்கப்பட்டது. (இந்தக் கவனிப்பு (observation) முற்றுபெறாத ஒன்று என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

4.2. புனைவுகோள் 2: மனைமொழியில் உள்ள சில பேச்சுருவங்கள் வடுப்பட்ட பேச்சுருவங்களாளாகக் கருதப்படுகின்றன இது இந்த ஆய்வில் மெய்ப்பிக்கப்படுகிறது. (காண்க. பிற்சேர்க்கை 3, அட்டவணை எண்கள் 1 முதல் 7 வரை)

4.3. புனைவுகோள் 3: கலவைக் குழுச் சூழல்களில் வடுப்பட்ட பேச்சுருவங்கள் மாற்றப்படாமல் நிற்கும். இவ்வாய்வு முடிவுகளின் அடிப்படையில் இப்புனைவுகோளைச் சோதிப்போம்.

A முதல் F வரையுள்ள பெண்கள் (அ) வடுப்பட்ட சொற்களாகக் கொண்டவைகளை ஒருசேரக் கணக்கிட்டால் 37 சொற்கள் கிடைக்கின்றன. (ஆ) வடுப்படாத சொற்களாகக் கொண்டவைகளை

ஒரு சேரக் கணக்கிட்டால் 38 சொற்கள் கிடைக்கின்றன. இந்த 37 வடுப்பட்ட சொற்களில் 16 நடைமாற்றத்திற்கு (Style shift) உள்ளாகியுள்ளன. 38 வடுப்படாத சொற்களில் 10 சொற்கள் மாத்திரமே 66 நடை மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளன. (இந்தக் கவனிப்பும் முற்றுப் பெறாத ஒன்று)

கலவைக் குழுச்சூழலில் நடை மாற்றத்தினை எதிர்த்த வடுப்பட்ட சொற்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நடைமாற்றத்தினை எதிர்த்த வடுப்படாத சொற்களின் எண்ணிக்கைதான் அதிகம் (காண்க பிற்சேர்கை 3, அட்டவணை 1). நடை மாறாக்கட்டத்தில் (no style shift column) உள்ள எண்கள் (வடுப்படாத சொற்கள் 7) வடுப்பட்ட சொற்கள் நமக்கு அறிவுறுத்த விரும்புவது: நடை மாற்றத்தினை வடுப்பட்ட சொற்களை விட வடுப்படாத சொற்களே அதிகம் எதிர்க்கின்றன. நடைமாற்றத்தினை பெரும்பாலும் வடுப்பட்ட சொற்கள் ஏற்கின்றன; வடுப்படாத சொற்கள் ஏற்கவில்லை என்பதை இதன் மறுதலையாகக் (corollory) கொள்ளலாம்.

இந்தப்புனைவுகோள் (அ) நடைமாற்றக் கட்டத்தில் உள்ள எண்களின் அடிப்படையி 10 வடுப்படாத சொற்கள் நடைமாற்றத்தினை மேற்கொண்ட விதத்தில் தவறு என்றாகிறது. (ஆ) நடைமாறாக் கட்டத்தில் உள்ள எண்களின் அடிப்படையில் 7 வடுப்படாத சொற்கள் நடைமாற்றத்தினை மேற்கொள்ளாத விதத்தில் பெரும்பாலும் சரி என்றாகிறது. இந்தத் தடுமாற்றத்திற்குக் காரணம் என்னவாக இருக்கும்?

ஆய்வில் பங்கேற்ற பெண்கள் வடுப்பட்ட சொற்களை இனங்கண்டு கொள்வதில் தடுமாறி, அவைகளை வடுப்படாத சொற்கள் என்று நிச்சயித்து வினா ஏட்டில் குறித்திருக்கலாம். பின் கலவைக் குழுச் சூழலில் அவை ஒருவேளை உள்ளபடியே வடுப்பட்ட சொற்களாக அவர்கள் நோக்கிலேயே இருந்து அக்காரணத்தினாலேயே நடைமாற்றத்திற்கு உட்பட்டிருக்கலாம். ஏனெனில் மனைமொழியில் உள்ள குறிப்பட்ட ஒரு பேச்சுருவம் வடுப்பட்டதா அல்லது வடுப்படாததா என்பதைத் தீர்மானிக்க அம்மனை மொழிக்குச் சொந்தமான நிறையப்பேர் (Subjects) இவ்

வாய்வுக்குக் கிடைக்கவில்லை. (இவ்வாய்வு மைசூரில் நடைபெற்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்) சென்னை தவிர ஏனைய பிரிவு ஒவ்வொன்றுக்கும் ஒருவர்தான் கிடைத்தார். ஒவ்வொரு வட்டாரத்திற்கும், சாதிக்கும் உரிய நிறைய மக்கள் கிடைத்திருந்தால் ஆய்விலே உட்படுத்தப் பட்டிருந்தால், ஒரு வட்டாரத்திற்குச் சொந்தமான ஒரு பேச்சுருவம் (காரணி) வடுப்பட்டதா அல்லது வடுப்படாததா என்பதை அபிப்ராயங்களின் அதிக எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானித்திருக்கலாம். எடுத்துக் காட்டிற்கு **வேக மாட்டு** என்ற பேச்சுருவத்தை நாகர் கோயிலைச் சேர்ந்த 10 பேர்களில் 7 பேர் வடுப்பட்ட பேச்சுருவ மாகவும் 3 பேர் வடுப்படாத பேச்சுருவமாகவும் கருதுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். பத்துப்பேர்களில் ஏழு பேருக்கு வடுப்பட்ட உருவமாகக் காணப்படுவதால் இந்த எண்ணிக்கையின் அடிப்படையில் இது அவர்களுக்கு வடுப்பட்ட உருவம்தான் என்று தீர்மானித்திருக்கலாம். இப்படி எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானமாகியிருக்கும் ஒவ்வொருகாரணியும் அறிவு பூர்வமானதாக அமைந்திருக்கும். எனவே இவ்வாய்வில் உள்ள வடுப்பட்டது, வடுப்படாதது என்ற நிச்சயிப்பு குறையுடையதாகிறது. ஒவ்வொரு பிரிவுக்கும் அதாவது எழவர்தமிழ், பிராமணர் தமிழ், மதுரைத்தமிழ், சென்னைத் தமிழ் என்ற ஒவ்வொரு பிரிவுக்கும் நிறையப் பேர்களை உட்படுத்தியிருந்தால் ஒருவேளை அப்போது கிடைத்திருக்கும் ஆய்வு முடிவுகள் (அ)வடுப்பட்ட சொற்கள் நடை மாற்றத்தினை மேற்கொள்வதிலும் (ஆ)வடுப்படாத சொற்கள் நடை மாற்றத்தினை மேற் கொள்ளாமல் இருப்பதிலும் ஒரு நிலைத்த தன்மையோடு இருப்பது புலனாகியிருக்கலாம். எனவே இந்தப் புனைவுகோள் சரியா அல்லது தவறா என்பதைச் சோதித்துப் பார்க்க வேண்டுமானால், தொடர்ந்து ஒரு விரிவான ஆய்வு நடத்தியாக வேண்டும்.

4.4. புனைவு கோள் 4: பேசுபவர் மனைமொழியில் **உள்ள பேச்சுருவங்களை எந்த அளவுக்கு வடுப்பட்ட பேச்சுருவங்களாகக் கருதுகிறாரோ அந்த அளவுக்குப் பொதுப்பேச்சுத் தமிழுக்கான நிலைபேறாக்கம் நிகழும்.**

இந்த ஆய்வில் பங்கேற்ற C, E மற்றும் F முதலானோர் தங்களது மனைமொழியில் பெரும்பாலானவற்றை வடுப்பட்ட பேச்சுருவங்களாகக் கருதுகிறார்கள். கீழே கொடுத்துள்ள அட்டவணையைப் பாருங்கள்.

| ஆய்வில் பங்கேற்ற பெண்கள் | மனைமொழி வழக்குகள் | வடுப் பட்டவை | கவனிக்கப்பட்ட நடைமாற்றம். |
|---|---|---|---|
| C | 10 | 11 | 5 |
| E | 8 | 5 | 5 |
| F | 16 | 9 | 2 |

C தம்முடைய 10 மனைமொழி வழக்குகளையும் வடுப்பட்டவைகளாகக் கருதுகிறார்.

E தம்முடைய 8 மனைமொழி வழக்குகளில் 5ஐ ,வடுப் பட்டவைகளாகக் கருதுகிறார்.

F தம்முடைய 16 மனைமொழி வழக்குகளில் 9 ஐ வடுப் பட்டவைகளாகக் கருதுகிறார். (மற்ற விவரங்களுக்குப் பிற் சேர்க்கை 3, அட்டவணை 1 ஐக் காணவும்)

C ஐப்பொறுத்தவரையில் 5 வடுப்பட்ட சொற்கள் நடை மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது கவனிக்கப் பட்டுள்ளது. E ஐப் பொறுத்த வரையில் 5 வடுப்பட்ட சொற்கள் நடை மாற்றத் திற்கு உட்பட்டுள்ளது கவனிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய் வாளர் ஒருவேளை இன்னும் சில கலவைக் குழுச் சூழல்களில் நிகழும் பேச்சுக்களைக் கேட்க முடிந்திருந்தால், இவ்வாய்வில் பங்கேற்ற பெண்கள் மற்றக் காரணிகளையும் தங்கள் பேச்சில் பயன்படுத்தியிருப்பதை ஒருவேளை கேட்டிருக்கலாம். இங்கே ஒன்றைச் சுட்டிக்காட்டலாம். நடைமாற்றச் சூழலான சூழல் எண் 2-இல், 5 காரணிகளைத்தான் C பயன்படுத்தியுள்ளார். மற்ற 5 காரணிகளும் (இனங் கண்டுகொண்ட 10 வடுப்பட்ட சொற்களும் 10 காரணிகளாகும்) அவர் பேச்சில் இடம்பெற வேண்டிய சந்தர்ப் பம் உண்டாகவில்லை. எனவே இந்த வகையான முற்றுப்பெறாத

கவனிப்பைக்கொண்டு இந்தப் புனைவுகோள் சரியென்றோ தவறு என்றோ கூறுவதற்கில்லை. என்றாலும் E யின் நடைமாற்றம் இந்தப் புனைவுகோள் சரியானதுதான் என்று ஒரு எல்லைக்குட் பட்டு (marginal) நிரூபிக்கிறது.

4.5. புனைவுகோள் 5: பொதுப் பேச்சுத் தமிழுக்கான நிலை பேறாக்கத்தின் அளவு ஆளுக்கு ஆள் வேறுபடும்.

இந்தப் புனைவுகோள் இந்த ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது எளிதில் புலப்படும்.

4.6. புனைவுகோள் 6: பொதுப்பேச்சுத் தமிழ் வட்டார மற்றும் சாதிக் கிளைமொழிகளின் கூறுகள் எதையும் கொண் டிருக்காது.

நடைமாற்றத்தால் விளைந்த பேச்சுருவங்களான (2 முதல் 7 வரையிலுள்ள ஒவ்வொரு அட்டவணையிலுமுள்ள 7 ஆவது கட்டத்தைக் காண்க) **சாப்புடு, வேகமா, அங்கெ, எனக்கு** முதலானவை மனைமொழிக்குப் புறம்பான அப்பாற்பட்ட பேச்சுருவங்களாகக் கருதப்படுகின்றன; ஏனென்றால் ஆய்வில் பங்கேற்ற இப்பெண்கள் தங்கள் மனைமொழியில் உள்ள பேச் சுருவங்களான **துன்னு, வேகமாட்டு, அங்கிட்டு, நேக்கு** போன்றவற்றைத் தெரிந்தே இந்தக் கலவைக்குழுச் சூழலில் நடைமாற்றச் சூழலில் விலக்கியிருக்கிறார்கள். (அடிக்கோடிட்டுள்ள முதல் வகையான பேச்சுருவங்கள், அடிக்கோடிட்டுள்ள இரண்டா வது வகையான பேச்சுருவங்கள்–இரண்டும் பொருள் உணர்த்துவது ஒன்றுதான் (Synonymous) என்பது எல்லோரும் அறிந்த ஒன்று தான்). அடிக்கோடிட்டுள்ள இரண்டாவது வகையான பேச்சுருவங் கள் வட்டாரக் கூறுகள் அல்லது சாதிக் கூறுகளைத் தாங்கியவை களாக உள்ளன. அதே சமயத்தில் முதல் வகைப் பேச்சுருவங்கள் அதாவது நடைமாற்றத்தால் விளைந்த அப்பேச்சுருவங்கள் (பொதுப் பேச்சுத் தமிழில் உள்ள பேச்சுருவங்கள் இவை) குறைந்தபட்சம் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இம்மக்களது வட்டார மற்றும் சாதி வழக்குகளிலிருந்து நிச்சயம் வேறுபட்டிருக்கின்றன. அந்த அள விற்கு அச்சொற்களை வட்டார, சாதிக் கூறுகள் அற்ற சார்பற்ற பேச்சுருவங்கள் (Neutral forms) எனலாம். ஆனால் இவ்வாய்வில் பங்கேற்ற பெண்களது வட்டார மற்றும் சாதி வழக்குகளேயல்லாது

வேறு எந்த நிலப்பகுதிக் கூறுகளையாவது அல்லது சாதிக் கூறு களையாவது அவை கொண்டிருக்கிறதா இல்லையா என்பதை இவ்வாய்வில் சோதித்துப் பார்க்கவில்லை.

பொதுப் பேச்சுத் தமிழுக்கும் கிழக்குப் பகுதி மற்றும் சென்னை நகரப் படித்த பிராமணரல்லாதார் பேச்சுத் தமிழுக்கு மிடையே உள்ள இடைவெளி மிகக் குறைந்த ஒன்று என்பது கமில்ஸ்வலபிலவர்களுடைய கூற்று. கமில்ஸ்வலபில் அவர்களது மேலே குறிப்பிட்ட கூற்று சென்னை நகரில் வழங்கும் '**பேஜாரு**' '**துண்ணு**' சொற்களைக் கொண்ட மனைமொழியைக் குறிப்பிடு வதாக இருந்தால் இந்தச் சிறு ஆய்வின் மூலம் சென்னை நகரத்துப் பேச்சைப் பொறுத்த அளவிலேனும் சரியல்ல என்றாகிறது. அவர் குறிப்பிடுவது நடைமாற்றத்திற்குப்பின் உள்ள படித்த மக்களது பேச்சு என்று விவாதத்திற்காக வலிந்துகொண்டாலும் (அவர் கூற்றில் இந்த நடைமாற்றம் என்ற கருத்தே கிடையாது). குறிப் பிட்ட ஒரு நிலப்பகுதியைச் சார்ந்து தமிழில் பொதுப் பேச்சுத்தமிழ் வளர்ந்திருக்கிறது என்பது பின்னும் தவறு என்றாகிறது. ஏனெனில் படித்த தமிழர்கள் **எந்த நிலப்பகுதியைச் சார்ந்தவர்களாக இருந் தாலும் எந்தச் சாதி அமைப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலும்** தங்கள் வட்டார சாதிக்கூறுகள் உள்ள மனைமொழிச் சொற்களை விட்டுவிட்டு பொருளில் அதற்கிணையான வட்டார, சாதிக் கூறுகளற்ற சார்பற்ற பேச்சுருவங்களைப் (Neutral forms) பெறும் போதுதான் அவர் பேச்சு வகையில் நிலைபேறாக்கம் நிகழ்கிறது. அதன் மூலம்தான் அவர் பொதுப் பேச்சுத்தமிழ் வகையைப் பெறு கிறார் என்பதுதான் இந்த ஆய்வில் நிறுவ முயலும் கருத்தாகும்.

4.7. புனைவுகோள் 7: பொதுப் பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் ஊடே உள்ள இடைவெளி மிகக்குறைந்ததே.

பின்வரும் அட்டவணையைக் காணவும்:

| எண் | வடுப்பட்டவை | பொதுப் பேச்சுத் தமிழ் | எழுத்துத் தமிழ் |
|---|---|---|---|
| 1. | இன்னா | என்ன | என்ன |
| 2. | கீது | இருக்குது | இருக்கிறது |

| | | | |
|---|---|---|---|
| 3 | வாளப்பளம் | வாழப்பழம் | வாழைப்பழம் |
| 4. | வேகமாட்டு | வேகமா | வேகமாக |
| 5. | எத்தாந்தண்டி | எவ்வளவு பெருசு | எவ்வளவு பெரியது |
| 6. | எம்ட்டு | எ(ன்) | என் |

புனைவுகோள் எண் 7-ஐ நிரூபிப்பதற்காகப் பின்வரும் முறை இவ்வாய்வில் பின்பற்றப்படுகிறது. எழுத்துத் தமிழ் வழக்குகள் அடிப்படைச் சொற்களாக Basic forms) எடுத்துக் கொள்ளப்படுகின்றன. எழுத்துத் தமிழ்ச் சொற்களிலிருந்து (அ) அதற்கு இணையான பொதுப் பேச்சுத் தமிழ்ச் சொற்களைப் பெறுவதற்குத் தேவையான ஒலியன் விதிகளும் (Phcnological rules) (ஆ) அதற்கு இணையான வடுப்பட்ட சொற்களைப் பெறுவதற்குத் தேவையான ஒலியன் விதிகளும் பின்வரும் முறையில் ஒப்பிடப்படுகின்றன.

மேலே உள்ள அட்டவணையின் எண் 1 இல் உள்ள எழுத்துத் தமிழ் வழக்குக்கும், பொதுப் பேச்சுத் தமிழ் 'வழக்குக்கும் இடையே வடிவ வேற்றுமை சிறிதும் இல்லை. அதாவது எழுத்துத் தமிழ் அடிப்படைச் சொல்லிலிருந்து பொதுப் பேச்சுத்தமிழைப் பெறுவதற்கு ஒலியன் விதிகள் எதுவும் தேவைப்படவில்லை; வேறுவிதமாகக் கூறப்போனால் இதற்கு $\phi$ ஒலியன் விதி தேவைப்படுகிறது.

இவைகளுக்கு இணையான வடுப்பட்ட பேச்சுருவத்தை எழுத்துத் தமிழ் வழக்கிலிருந்து பெறுவதற்கு 'இரண்டு' ஒலியன் விதிகள் தேவைப்படுகின்றன. அவை:

i) # எ — > # இ-
ii) —அ # > — ஆ #

எழுத்துத் தமிழ் அடிப்படைச் சொல்லிலிருந்து அதே பொருள் உணர்த்தும் இரண்டு சொற்களில் அதாவது பொதுப் பேச்சுத் தமிழ் மற்றும் வடுப்பட்டசொல் ஆகிய இரண்டு சொற்களில் **எந்த ஒன்று** குறைந்த எண்ணிக்கை அளவிலுள்ள விதிகளை (ஒலியன் விதிகள் மற்றும் சில சமயங்களில் வேறு விதிகளும்) பயன்படுத்திக் குறிப்பிட்ட அச்சொல்லைப் (பொதுப் பேச்சுத் தமிழ்ச்சொல் அல்லது வடுப்பட்ட சொல்) பெறுகின்றதோ அந்த ஒன்றுதான் எழுத்துத் தமிழுக்கு அருகில் உள்ளதாகக் கருதப்படுகிறது. இந்த முறையில்

பொதுப் பேச்சுத் தமிழ்க் கட்டத்தில் உள்ள சொல்லுருவம்(அதாவது என்ன) அதற்கு இணையான வடுப்பட்ட சொல்லுருவத்தை விட (அதாவது இன்னா) எழுத்துத் தமிழுக்கு (அதாவது என்ன) அருகாமையில் உள்ளது.

அதே கட்டத்தின் எண் 4 இல் எழுத்துத் தமிழ் அடிப்படைச் சொல்லுருவத்திலிருந்து பொதுப் பேச்சுத்தமிழ்ச் சொல்லுருவத்தைப் பெறுவதற்கு ஒரு விதி தேவைப்படுகிறது.

அது: (i) ஈற்றசை – க கெடுதல்

அதே சமயம் அது எழுத்துத் தமிழ்ச்சொல்லுருவத்திலிருந்து அதற்கு இணையான வடுப்பட்ட சொல்லுருவத்தைப் பெறுவதற்கு இரண்டு விதிகள் தேவைப்படுகின்றன.

அவை: (i) ஈற்றசை –க கெடுதல்

ii) பின், சொல்லிறுதியில் –ட்டு தோன்றல் அதாவது பொதுப் பேச்சுத்தமிழ்க் கட்டத்தில் உள்ள **வேகமா** என்ற சொல்லுருவம், வடுப்பட்ட சொற்கட்டத்தில் உள்ள **வேகமாட்டு** என்ற சொல்லுருவத்தைவிட எழுத்துத் தமிழான **வேகமாக** என்ற சொல்லுக்கு அருகில் உள்ளது. இதே முறையில் வடுப்பட்ட சொல் மற்றும் பொதுப் பேச்சுத் தமிழ்க் கட்டங்களில் உள்ள சொற்களோடு ஒப்பிடப் படுகின்றன ஒப்பிடப்பட்டுப் பொதுப்பேச்சுத் தமிழ்ச் சொற்கள் எழுத்துத் தமிழ்ச் சொற்களுக்கு அருகாமையில் உள்ளன என்பது இவ்வாய்வில் நிரூபிக்கப்படுகிறது.

புனைவுகோள் 3 உக்குப் புறம்பாக கல்வைக் கூட்டச் சூழலில் நடைமாற்றத்திற்கு உள்ளான வடுப்படாத சொற்களும் எழுத்துத் தமிழுக்கு அருகாமையில் உள்ளன. பின்வரும் அட்டவணையைக் காணுங்கள்.

| எண் | வடுப்படாதவை | பொதுப் பேச்சுத் தமிழ் | எழுத்துத் தமிழ் |
|---|---|---|---|
| 1 | வாரென் | வரேன் | வருகிறேன் |
| 2 | நிக்கி | நிக்குது | நிற்கிறது |
| 3 | அப்பம் | அப்ப/அப்பொ | அப்பொழுது |
| 4 | இருக்கா | இருக்காங்க | இருக்கிறார்கள் |

எழுத்துத் தமிழுக்கு அருகாமையில் உள்ள பேச்சுத் தமிழ்ச் சொற்களைப் பொதுப்பேச்சுத் தமிழ்ச் சொற்கள் என்றால், பின் கலவைக்குழுச் சூழலில் நடைமாற்றத்திற்கு உள்ளான மேலே உள்ள வடுப்படாத சொற்களையும் பொதுப் பேச்சுத் தமிழ்ச் சொற்கள் என்றுதான் குறிப்பிடவேண்டும். இச்சொல்லுருவங்கள் பொதுப் பேச்சுத் தமிழுக்குரியவை என்று தீர்மானமாகிவிட்டால் பின் 3 ஆவது புனைவுகோளின் நேர்மை கேள்விக்குரியதாகிவிடும். ஆனால் கலவைக்குழுச் சூழலில் வடுப்பட்ட சொற்கள் நடைமாற்றத்திற்குள்ளாவதிலும், வடுப்படாச் சொற்கள் நடைமாற்றத்திற்குள்ளாகாமல் இருப்பதிலும் நேரிடும் தடுமாற்றங்களைக் குறித்து இந்த ஆய்வாளர் ஏற்கனவே பிரிவு 4.3 இல் விவாதித்துள்ளதை இங்கே நினைவுகூரலாம்.

இந்த ஆய்வைச் சரியான முறையில் நடத்துவதற்குத் தேவைப் படுபவைகள் வருமாறு.

a) ஒவ்வொரு வட்டாரத்திற்கும், சாதிக்குமேற்ற வகையில் ஆய்வில் உட்பட நிறையத் தமிழர்கள்.

b) ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சாதிக்குமுரிய மொழிக் காரணிகள்

c) அடையாளம் கண்டுகொண்ட காரணிகள் அனைத்தையும் ஆய்வில் உட்படுபவர் எல்லோரும் இயல்பாகப் பயன் படுத்துவதற்கேற்ற முறையில் தூண்டுகோளாக ஒரு சக்தி வாய்ந்த முறை அமையவேண்டும்.

இவைகள் நன்கு அமையப்பெற்றால் பின் பொதுப் பேச்சுத் தமிழ் நிலைபெற்றிருக்கும் விதத்தைத் தெளிவாகப் புலப்படுத்தலாம்.

5. பொதுப் பேச்சுத் தமிழ்ச் சொல்லுருவங்கள் செந்தமிழ் நடையான எழுத்துத் தமிழுக்கு (Formal Written Tamil அருகில் உள்ளன என்பது நிரூபணமாகிவிட்டதாகக் கொண்டால், பொதுப் பேச்சுத் தமிழ் இந்த விதமாக உருவாவதற்குத் தமிழின் இருநிலை எந்த அளவிற்குப் பொறுப்பு என்பதை இப்பகுதியில் இனி ஆராயலாம்.

குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதி அல்லது நிலப்பகுதிகள் அல்லது குறிப்பிட்ட ஒரு நகரத்தில்வாழும் படித்த மத்தியதர வகுப்பு அல்லது உயர்வகுப்பு மக்களது பேச்சு மொழியைச் சார்ந்ததாகவே ஆங்கிலம், பிரஞ்சு, மராத்தி, (Krishnamurti, 1976; Rajashree) தெலுங்கு Krishnamurti, 1976) கன்னடம் போன்ற மொழிகளில் அதனதன் நிலைமொழி அமைந்து கிடக்கிறது. வேறுவிதமாகக் கூறுவதானால் மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு மொழிக்குமே வேரூன்றிய ஒரு குறிப்பிட்ட வட்டார அல்லது நகரப்பேச்சு மொழி முன்மாதிரியாக அமைந்து கிடக்கின்றது. ஆனால் தமிழைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட ஒரு பகுதிப்பேச்சுத் தமிழ் (கமில் ஸ்வலபில், மத்திய தமிழ்நாடு மற்றும் சென்னை நகரின் படித்த மத்தியதர மக்களது பேச்சு மொழி என்று குறிப்பிடுவது போல) தான் பொதுப் பேச்சுத் தமிழ் என்ற கூற்று பொருந்தாத கூற்றாகும்.

பெரும்பாலும் கலவைக் குழுச் சூழலில் பயன்படுத்தப்படும் சில ஆங்கிலச் சொற்கள் உள்ளிட்ட சார்பற்ற பேச்சுருவங்கள் பொதுப்பேச்சுத்தமிழ் என்று கருதப்படுவது உண்மையானால், அவை தமிழின் இரு நிலையில் ஒன்றான எழுத்துத் தமிழுக்கு அருகாமையில் உள்ளது என்பது இவ்வாய்வில் நிரூபிக்கப் பட்டுள்ளது. தமிழின் இச்சார்பற்ற பேச்சுருவங்கள் ஆங்கிலம் பிரஞ்சு, மராத்தி போன்ற மொழிச் சூழல்களில் உள்ளதைப்போல எந்த ஒரு குறிப்பிட்ட வட்டாரம் அல்லது நகரப் பேச்சுமொழியையும், முன்மாதிரியாகக் கொண்டிருக்கவில்லை. சார்பற்ற பேச்சுருவங்கள் வட்டாரம், சாதி முதலானவற்றை அடிப்படையாகக் கொள்ளாமல் வேறு முறையில் தோன்றுவதற்குத் தமிழின் இருநிலை பின் வரும் முறையில் காரணமாகின்றது.

தமிழின் இருநிலைகளில் ஒன்றான அந்நியோன்னியச் சூழலில் இயல்பாகப் பயன் படுத்தும் பேச்சுமொழியில் (Informal Tamil) வட்டாரம், சாதி என்ற அடிப்படையில் பல்வேறு பேச்சுவகைகள்' அதுபோலவே இருநிலையின் மற்றொன்றான எழுத்துமொழியை அடிப்படையாகக் கொண்ட செந்தமிழ் வகையிலும் (Formal Tamil) பழந்தமிழ்ச் சொற்கள் நிரம்பப் பெற்ற பண்டிதர்நடை, சிறுகதை புதினம் முதலியன எழுதப் பயன்படும் தமிழ்நடை...... என்று இப்படிப் பலநடைகள் உண்டு. நாளிதழ், வாரமாத இதழ்களில்

பயன்படுத்தப்படும் தமிழ் நடையே இன்றைய எழுத்து நிலைமொழி (Modern Standard Written Tamil) என்ற கருத்துப் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

நமது தமிழ் மொழிச் சூழலில் படித்தவர்களாக இருந்தாலும் சரி, படிக்காதவர்களாக இருந்தாலும் சரி எழுத்து மொழி வகையைச் சார்ந்த செந்தமிழ் நடையைத்தான்" நாம் அங்கீகரிக்கிறோம். (மொழியியலார் மட்டும் இதற்கு விதி விலக்காக இருக்கலாம்!) முடியாது போனாலும் எல்லாச் சமுதாய மொழிச் சூழல்களிலும் செந்தமிழ் நடையையே பயன்படுத்த விழைகிறோம். இக்கருத்தை விளக்கப் பின்வரும் உதாரணத்தைச் சுட்டிக் காட்டலாம்.

தமிழ் தெரியாத யாராவது ஒருவர் நம்மிடம் வந்து குறிப்பிட்ட ஒரு பொருளுக்கு (வஸ்துவுக்கு) உரிய தமிழ்ச் சொல் என்ன என்று கேட்கும்போது அல்லது பிற மொழியில் உள்ள ஒரு வாக்கியத்திற்கு நேரான தமிழ் வாக்கியம் என்ன என்று கேட்கும்போது நாம் எப்படிப் பதிலிறுக்கிறோம்? **அது நாய்; இது முதலை; நாங்கள் வீட்டிற்குப் போகிறோம்** என்று இப்படியாகச் செந்தமிழ் நடையில் உள்ள சொற்கள், வாக்கியங்களைத்தான் உடனடியாகக் கூறுவோமே தவிர, **அது நாயி** என்றோ **இது மொதலெ** என்றோ அல்லது **நாங்க வீட்டுக்கு போர்றோ(ம்)** என்றோ பேச்சுத் தமிழ் நடையில் ஒரு நாளும் கூறுவதில்லை. காரணம் என்ன? தமிழ் என்று சொன்னால் உடனே நமக்கு உயர் தனிச் செந்தமிழ் நடைதான் (Superimposed H variety) நினைவுக்கு வருகிறது; அந்த அளவிற்குத் தமிழர்களாகிய நம்மிடையே இது சக்தி வாய்ந்த ஒரு பண்பாக (Strong positive attitude) நிலைபெற்றிருக்கிறது – மொழியியலுக்குப் புறம்பான பல காரணங்களால் தமிழகத்தின் சமுதாய வரலாற்றில் அண்மைக் காலத்தில் நிகழ்ந்த தனித்தமிழ் இயக்கம் (Kailasapathy 1974) திராவிடர் இயக்கம், திராவிட முன்னேற்றக்கழகப் பேச்சாளர்களது செந்தமிழ் நடையில் அமையப்பெற்ற! அரசியல் மற்றும் இலக்கியச் சொற்பொழிவுகளின் தாக்கம் முதலானவை அந்நியோன்னியச் சூழலில் இயல்பாகப் பயன்படும் பேச்சுத் தமிழ்நடை (Informal Tamil) மற்றும் செந்தமிழ் நடை (Formal Tamil) ஆகிய இருநிலைகளின் வேற்றுமைகளைத் தொடர்ந்து நீடிக்க வைத்துள்ளன. ஒருங்கிணைத்தல் (Unifying function) (Garvin 1964) நிலைமொழி

ஆற்றும் பணிகளில் ஒன்று என்பது எல்லோரும் அறிந்த ஒன்றே. இருநிலையில் ஒன்றான செந்தமிழ் நடை (Formal Tamil) யில் அதாவது எழுத்து நிலைத்தமிழில் ஒருங்கிணைத்தல் பணி உள்ளது. ஆனால் எழுத்து நிலைத்தமிழ் (Standard Written Tamil) எல்லாச் சமுதாயச் சூழல்களிலும் பயன்படுத்த முடியாத சூழல் கட்டுத் திட்டத்தைக் (Domain restriction) கொண்டுள்ளது. எனவே இயல்பான அந்நியோன்னியச் சூழலுக்கு (Informal situation ஏற்ற வகையில் ஒரு பேச்சு (நிலைத்) தமிழ் – ஒருங்கிணைக்கும் ஆற்றலோடு கூடிய ஒரு பொதுப் பேச்சுத் தமிழ் தேவைப்படுகிறது. எந்த ஒரு வட்டார (அல்லது சாதிக்)க்கிளை மொழியும் பொதுப் பேச்சுத் தமிழாக உருப்பெறவில்லை என்பது இக்கட்டுரையின் பிரிவு 4-இல் ஓரளவிற்கு (ஆய்வுக் குறைகளோடுதான்) நிரூபிக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் குறிப்பாக மற்றக் குழுவினரோடு பேசும்போது வட்டார சாதிக்கூறுகளைப் புலப்படுத்தும் வண்ணம் உள்ள பேச்சுருவங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கின்றனர். வட்டார, சாதிக் கூறுகளற்ற பேச்சுருவங்களைப் பேச முயலும்போது அதற்கென்று ஒரு மொழி மாதிரியைத் தேடுகின்றனர். இது ஒரு வகையான உந்துதல். மேலும் வேறு ஒரு வகையான உந்துதல் சக்தியும் இங்கே செயல்படுகிறது. தமிழ் என்றால் அது உயர் தனிச் செம்மொழிதான் என்ற அளவில் நம்மிடையே காணப்படுகிறதே சக்தி வாய்ந்த ஒரு மனப்போக்கு, அது பொதுப்பேச்சுத் தமிழுக்கான ஒரு மாதிரிக்காக (model) தமிழர்களைச் (படித்த தமிழர்களை மாத்திரமோ?) செந்தமிழின் பால் கொண்டு செல்கிறது. ஆனால் தமிழின் இருநிலைத் தன்மையானது சூழல் கட்டுப்பாட்டை உண்டாக்க அதனால் ஒரு வகையான அரை குறை எழுத்துத் தமிழ் நடை (Approximation of the Formal Written Tamil) ஒன்று இயல்பான அந்நியோன்னியச் சூழலில் (Informal domain) உண்டாகி விடுகிறது (புனைவுகோள் 7 ஐக் காண்க). இந்த அளவிற்குத் தமிழின் இருநிலை, பொதுப்பேச்சுத்தமிழ் உருவாவதில் ஒரு பங்குவகிக்கிறது எனலாம்.

| ஆய்வில் உட்பட்ட பெண்களுக் குத் தரப் பட்டுள்ள குறியீடு | சாதி | சொந்த ஊர்/ எத்தனை பரம் பரைகளுக்கு | கல்வித் தகுதி | தமிழ் பேசத் துவங்கிய நாளிலிருந்து தமிழ்நாட்டில் வாழ்ந்த இடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| A | முதலியார் | சென்னை 3பரம்பரைகள் | பி.எஸ்.சி. பி.டி. | சென்னை |
| B | முதலியார் | சென்னை 3பரம்பரைகள் | எஸ் எஸ். எல்.சி. | சென்னை தூத்துக்குடி |
| C | தேவர் | சென்னை 2பரம்பரைகள் | எம்.ஏ. | சென்னை, கோயம் புத்தூர் |
| D | இழவா | நாகர்கோயில் (தெரியவில்லை) | எஸ்.எஸ். எல்.சி. | நாகர்கோயில் |

| செல்லும் ஊர்கள்: தமிழ் நாட்டில் (இரண்டு வாரங்களுக்கு மேல் தங்குவதாக இருந்தால் மட்டும்) | தமிழ் பேசும் நண்பர்கள் அதே ஊர்/ சாதியைச் சார்ந்தவர்களா? அல்லது வேறு......? | தமிழில் படிக்கும் செய்தித் தாள்கள்/ வார, மாத இதழ்கள் | பார்க்கும் தமிழ்ப் படங்களின் எண்ணிக்கை | கேட்கும் வானொலித் தமிழ் நிகழ்ச்சிகள் |
|---|---|---|---|---|
| 6 | 7 | 8 | 9 | 10 |
| சென்னை | வேறுஊர்கள் வேறு சாதிகள் | குமுதம், விகடன்(வார மாத இதழ்கள் மாத்திரம்) | மாதத்திற்கு ஒன்று | ஒன்றுமில்லை |
| அரக்கோணம், திருவள்ளூர் கடலூர் | வேறு ஊர்கள, வேறு சாதிகள் | குமுதம், மஞ்சரி, தினமணி கதிர் (வார மாத இதழ்கள் மாத்திரம்) | மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு | நாடகங்கள் வாரத்திற்கு ஒருமுறை செய்தி: தினந், தோறும் |
| மதுரை, திருநெல்வேலி, தென்காசி | வேறு ஊர்கள், வேறு சாதிகள் | குமுதம் ராணிமுத்து, விகடன் (வார மாத இதழ்கள் மாத்திரம்) | வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று | செய்திகள், நாடகங்கள் எப்போதாவது |
| ஒன்றுமில்லை | சிலர் அதே ஊரிலிருந்து வந்தவர்கள மற்றவர்கள் வேறுஊர்கள் வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள் | விகடன், குமுதம், கல்கண்டு, (வார, மாத இதழ்கள் மாத்திரம்) | மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு | சினிமா ஒலிச் சித்திரம், நாடகம், செய்திகள் தவறாமல் எப்போதும் |

| 1 | 2 | 3 | 4 | 5 |
| --- | --- | --- | --- | --- |
| E | அகமுடையர் | மதுரை 2பரம்பரைகள் | எம்.ஏ. | 1 பெரியகுளம் (மதுரை) 2. திருச்சுழி (இராமநாதபுரம்) 3. சாத்தூர் (இராமநாதபுரம்) 4 மதுரை 5. திருவோணம் (தஞ்சாவூர்) 6. காரைக் குடி (இராமநாதபுரம்) |
| F | பிராமணர் | கரிமங்கலம் (தர்மபுரி) சொல்ல முடியவில்லை | பி.ஏ. | சென்னை |

| 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|
| ஐந்தாவது கட்டத்தில் உள்ளது போல | வேறு ஊர் கள், வேறு சாதிகள் | தினமணி: செய்திப் பத்திரிகை மஞ்சரி, விகடன், குமுதம், பொம்மை, கதிர், தீபம் (வார மாத இதழ்கள்) | மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு | ஒன்றுமில்லை |
| மதுரை தர்மபுரி | வேறு ஊர் கள், வேறு சாதிகள் | தினத்தாள் தினமணி வார-மாத இதழ்கள்; விகடன், துக்ளக் | மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு | நாடகங்கள் |

## பிற்சேர்க்கை 2 வினா ஏடு (மாதிரிக்குச் சில வாக்கியங்கள்)

கீழே சில வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாக்கியமும் தமிழ் நாட்டில் எந்த வட்டாரத்தில் பேசப்படுகிறது என்பதை இனங்கண்டுகொள்ள கண்டு பிடிக்க முயற்சி செய்யுங்கள். வாக்கியத்திற்குப் பக்கத்தில் உள்ள கட்டத்தில் அந்த வட்டாரத்தைக் குறிப்பிடுங்கள். குறிப்பிட்ட ஒரு சாதியைச் சேர்ந்தவர்களால் அந்த வாக்கியம் பேசப்படுகிறது என்று தீர்மானித்தால் அடுத்த கட்டத்தில் அச்சாதியைக் குறிப்பிடுங்கள். ஒருவேளை வட்டாரம், சாதி இரண்டையுமே உங்களால் தீர்மானிக்க முடியாவிட்டால், தீர்மானிக்க முடியவில்லை என்பதை அதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் குறிப்பிடுங்கள். கடைசிக்கட்டத்தில் ஒரு கேள்வி கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு விடை எழுதுங்கள்.

| எண் | வாக்கியம் | வட்டாரம் | சாதி | தீர்மானிக்க முடியவில்லை | இவ்வாக்கியத்தை உங்களுடைய பேச்சில் பயன்படுத்த வேண்டும் என்று நினைக்கிறீர்களா? ஆமாம்/இல்லை. |
|---|---|---|---|---|---|
| 1. | இப்பொ ஞாபகம் வந்துடுத்து | | | | |
| 2. | எத்தனெ மூடெ நெல்லுவந்திருக்குது | | | | |
| 3. | நல்லா துண்ணு | | | | |
| 4. | நீ அந்தண்டெ போகாதெ | | | | |
| 5. | எங்கெ வேகமாட்டு போறீங்க | | | | |
| 6. | எனக்கு ஜளுப்பு | | | | |
| 7. | சித்தெ உள்ளெ வாயென். | | | | |

## பிற்சேர்க்கை 3. (அட்டவணைகள்)

### அட்டவணை-1

| | சூழல் 1 : வினா ஏட்டு முறை. | | | | சூழல் 2 : கலவைக் கூட்டச் சூழல் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நடை மாற்றம் | | நடைமாற்றம் இல்லை | |
| ஆய்வில் உட்பட்டவர் | வினா ஏட்டில் கொடுக்கப்பட்ட காரணிகள் | இனங்கண்டு கொள்ளப்பட்டவட்டாரம்/சாதி | வடுப் பட்டவை | வடுப் படாதவை | வடுப்பட்டவை | வடுப்படாதவை | வடுப் பட்டவை | வடுப படாதவை |
| A | 16 | 15 | 5 | 10 | 2 | 2 | 1 | — |
| B | 16 | 11 | 4 | 7 | 1 | 3 | — | 2 |
| C | 16 | 10 | 10 | 0 | 5 | — | 1 | — |
| D | 15 | 15 | 4 | 11 | 1 | 3 | — | 4 |
| E | 8 | 8 | 5 | 3 | 5 | 1 | — | — |
| F | 18 | 16 | 9 | 7 | 2 | 1 | — | 1 |
| | 89 | 75 | 37 | 38 | 16 | 10 | 2 | 7 |

**அட்டவணை 2. ஆய்வில் உட்பட்ட A**

| எண் | வினா ஏட்டில் கொடுக்கப் பட்டுள்ள பேச்சு வழக்கு | இனங் கண்டு கொள்ளப் பட்டது (முதலியாரது பேச்சில் உள்ளதாக) | இனங் கண்டு கொள்ளப்பட வில்லை | வடுப் பட்டது | வடுப் படாதது | கலவைக் கூட்டச் சூழலில் பேசப்பட்ட, அதற்கிணையான பேச்சுருவம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | இன்னா | × | | | × | என்ன |
| 2. | காஸனது | × | | | × | அதே வழக்கு |
| 3. | எட் நூறு | × | | | × | இக்காரணிபேச்சில் இடம் பெறவில்லை |
| 4. | துண்ணு | × | | × | | சாப்புடு |
| 5. | ப(b)ல்லி | × | | | × | இக்காரணி பேச்சில் இடம் பெற வில்லை. |
| 6. | துலுக்கவி | × | | × | | இக்காரணி பேச்சில் இடம் பெற...ல்லை |
| 7. | கீது | × | | × | | இருக்குது |
| 8. | அத்தெ (அதை என்ற | × | | | | இக்காரணி பேச்சில் இடம் பெறவில்லை |
| | பொருளில்) | × | | × | | இககாரணி பேச்சில் இடம் பெறவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | வரா காட்டி | × | | × | × | இக்காரணி பேச்சில் இடம் பெறவில்லை |
| 10. | (யாருக்கோஸரம்) | × | | | × | இக்காரணி பேச்சில் இடம் பெறவில்லை |
| 11. | அஞ்சு தபா (ɗaba:) | | × | | | இக்காரணி பேச்சில் இடம் பெறவில்லை |
| 12. | ருப்பு (rubbu) | × | | | × | இக்காரணி பேச்சில் இடம் பெறவில்லை |
| 13. | ஜ ஞப்பு | × | | | × | கோல்டு |
| 14. | (b) பேஜாரு | × | | | × | அதே வழக்கு |
| 15. | காவா | × | | | × | இக்காரணி பேச்சில் இடம் பெற வில்லை. |
| 16. | அப்பாலே | × | | | × | இக்காரணி பேச்சில் இடம் பெற வில்லை |
| | | 15 | 5 | | 10 | 2 வடுப்பட்ட பேச்சுருவங்கள் மாற்றமடைந்துள்ளன 2 வடுப்படாத பேச்சுருவங்கள் மாற்ற மடைந்துள்ளன 1 வடுப்பட்ட பேச்சுருவம் மாற்றமடையவில்லை |

## அட்டவணை 3. ஆய்வில் உட்பட்ட B

| எண் | வினா ஏட்டில் கொடுக்கப் பட்டுள்ள பேச்சு வழக்கு | இனங்கண்டு கொள்ளப்பட்டது முதலியாரது பேச்சில் உள்ளதாக) | இனங் கண்டு கொள்ளப் படவில்லை | வடுப் பட்டது | வடுப் படாதது | கலவைக் கூட்டச் சூழலில் பேசப்பட்ட அதற்கிணையான பேச்சுருவம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | இன்னா | × | | | × | என்ன |
| 2. | காஸனது | × | | | × | காசனது |
| 3. | எட்நூறு | × | | × | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 4. | துண்ணு | × | | × | | சாப்புடு |
| 5. | (b) பல்லி | | × | | | இக்காரணிப் பேச்சில் இடம்பெறவில்லை |
| 6. | துலுக்கஸி | | × | | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 7. | கீது | × | | × | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 8. | அத்தெ (அனத என்ற பொருளில்) | | × | | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 9. | வராகாட்டி | × | | | × | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. (யாரு)க்கோஸரம் | | | | | |
| 11. அஞ்சு தபா (daba:) | | × | | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 12. ருப்பு (rubbu) | × | | | × | அதே வழக்கு |
| 13. ஜனுப்பு | × | | × | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 14. (b) பேஜாரு | × | | | × | அதே வழக்கு |
| 15. காவா | | × | | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 16. அப்பாலெ | × | | | × | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| | 11 | | 4 | 7 | 1 வடுபட்ட பேச்சுருவம் மாற்றமடைந்துள்ளது. 3 வடுப்படாத பேச்சுருவங்கள் மாற்றமடைந்துள்ளன, 2 வடுப்படாத பேச்சுருவங்கள் மாற்றமடையவில்லை |

அட்டவணை 4 ஆய்வில் உட்பட்ட G

| எண் | வினா ஏட்டில் கொடுக்கப்பட்டுள்ள வழக்கு | இனங்கண்டு கொள்ளப் பட்டது (தாழ்த்தப் பட்ட மக்கள்/ ரிக்ஷா இழுப் பவர்கள் இவர்களது பேச்சில் உள்ளதாக) | இனங்கண்டு கொள்ளப் படவில்லை | வடுப் பட்டது | வடுப் படாதது | கலவைக் கூட்டச்சூழலில் பேசப்பட்ட அதற்கிணையான பேச்சுருவம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | இன்னா | × | | × | | என்ன |
| 2 | காஸனது | × | | × | | காச்சணும் |
| 3 | எட்றூறு | | × | | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 4 | துண்ணு | × | | × | | சாப்புடு |
| 5 | (b) பல்லி | | × | | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 6 | துலுக்களி | × | | × | | இக்கார்ணி பேசசில் இடம்பெறவில்லை |
| 7 | கீது | × | | × | | இருக்குது |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | அத்தெ (அதை என்ற | × | | × | | அதெ |
| 9 | வராகாட்டி பொருளில்) | | × | | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 10 | (யாரு)க்கோஸரம் | | × | | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 11 | அஞ்சு தபா (daba:) | × | | × | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லல |
| 12 | ருப்பு (rubbu) | | × | | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 13 | ஜனுப்பு | × | | × | | இக்காஜணி சேச்சில் இடம்பெறவில்லை |
| 14 | (b) பேஜாரு | × | | × | | அதே வழக்கு |
| 15 | கரவா | × | | × | | இக்காரணி பேச்சில் இடம்பெயவில்லை |
| 16 | அப்பாலெ | | × | | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| | | 10 | | 10 | 0 | 5 வடுப்பட்ட பேச்சுருவங்கள் மாற்றமடைந்துள்ளன. 1 வடுப்பட்ட பேச்சுருவம் மாற்றமடையவில்லை. |

அட்டவணை-5 ஆய்வில் உட்பட்ட D

| எண் | வினா ஏட்டில் கொடுக்கப் பட்டுள்ள பேச்சு வழக்கு | இனங்கண்டு கொள்ளப் பட்டது (இழ வரது பேச்சில் உள்ளதாக) | இணங் கண்டு கொள்ளப் படவில்லை | வடுப் பட்டது | வடுப் படாதது | கலவைக்கூட்டச் சூழலில் பேசப்பட்ட அதற்கிணையான பேச்சுருவம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வாளபளம் | × | | × | | அதே வழக்கு |
| 2. | வாறென் | × | | | × | வரேன் |
| 3. | வரக் கூடிய சமயத்துலெ | × | | | × | இக்காரணி பேச்சில் இடம்பெற வில்லை. |
| 4. | வரத்துலெ | × | | | + | இக்காரணி பேச்சில் இடம்பெற வில்லை |
| 5. | வருத்தி (வரவழைத்து என்ற பொருளில்) | × | | | × | இக்காரணி பேச்சில் இடம் பெறவில்லை |
| 6. | வேகமாட்டு | × | | × | | வேகமா |
| 7. | நிக்கி (நிற்கிறது என்ற பொருளில்) | × | | | × | நிக்குது |
| 8. | எங்கலெ (எங்கெ + விளியுருபு) | × | | | × | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | எம்ப்டு (என்னுடைய என்ற பொருளில்) | × | | × | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 10. | சமுட்டு (மிதிஎன்ற பொருளில்) | × | | × | அதே வழக்கு |
| 11. | (இட்லி) அவிச்சென் | × | | × | அதே வழக்கு |
| 12. | பைய | × | | × | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை. |
| 13. | மோண்டான் (ஒன்றுக்குப் போனான் என்ற பொருளில்) | × | × | | அதே வழக்கு |
| 14. | (பொடவெ) கொள்ளாமா (நன்றாக இருக்கிறதா என்ற பொருளில்) | × | × | | இக்காரணி பேச்சில் இடம் பெறவில்லை. |
| 15. | அப்பம் (அப்பொழுது என்ற பொருளில்) | × | | × | அப்ப/அப்பொ |
| | | 15 | 4 | 11 | 1 வடுப்பட்ட பேச்சுருவம் மாற்றமடைந்துள்ளது<br>3 வடுப்படாத பேச்சுருவங்கள் மாற்றமடைந்துள்ளன<br>4 வடுப்படாத பேச்சுருவங்கள் மாற்றமடையவில்லை. |

## அட்டவணை 6 ஆய்வில் உட்பட்ட E

| எண் | வினா ஏட்டில் கொடுக்கப்பட்டுள்ள பேச்சு வழக்கு | இனங்கண்டு கொள்ளப் பட்டது (அகமுடையரது பேச்சில் உள்ளதாக) | இனங்கண்டு கொள்ளப் படவில்லை | வடுப் பட்டது | வடுப் படாதது | கலவைக் கூட்டுச் சூழலில் பேசப்பட்ட அதற்கிணையான பேச்சுருவம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வாளபளம் | × | | × | | வாழபழம் |
| 2 | நாயமா | × | | × | | ந்யாயமா |
| 3 | யார்வாரம் | × | | × | | வ்யாபாரம் |
| 4 | அங்கிட்டு | × | | | × | அந்தப் பக்கம் |
| 5 | எத்தாந்தண்டி | × | | × | | எவ்வளவு பெருசு |
| 6 | எம்டு | × | | × | | என் |
| 7 | (இட்லி) அவிச்சென் | × | | | × | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 8 | பைய | × | | | × | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை. |
| | | 8 | | 5 | | 5 வடுப்பட்ட பேச்சுருவங்கள் மாற்றமடைந்துள்ளன 1 வடுப்படாதபேச்சுருவம். மாற்றமடைந்துள்ளது. |

## அட்டவணை 7 ஆய்வில் உட்பட்ட F

| எண் | வினா ஏட்டில் கொடுக்கப்பட்டுள்ள பேச்சு வழக்கு | இனங்கண்டு கொள்ளப் பட்டது (பிராமணரது பேச்சில் உள்ளதாக) | இனங்கண்டு கொள்ளப் படவில்லை | வடுப் பட்டது | வடுப் படாதது | கலவைக் கூட்டுச் சூழலில் பேசப்பட்ட அதற்கிணை யான பேச்சுருவம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வந்துடுத்து | × | | | × | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 2 | ஓட்ரது | | × | | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 3 | ஆத்துக்கு | × | | × | | இக்காரணிப் பேச்சில் இடம்பெறவில்லை |
| 4 | குத்துண்டான் | | × | | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 5 | இருக்கா | × | | | × | இருக்காங்க |
| 6 | அவாளயா | × | | × | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 7 | ஒஸரம் | | × | | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 8 | வெஸ்ஸெ | × | | × | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 9 | நன்னா | × | | | × | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | ஸேப்பு | × | × | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 11 | ஓடிடுத்து | × | | × | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 12 | நோக்கு | × | × | | உங்களுக்கு |
| 13 | நேக்கு | × | × | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 14 | அந்தண்டை | × | × | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 15 | வரச்செ | × | × | | அதேவழக்கு |
| 16 | அத்திம்பேர் | × | | × | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 17 | சித்தெ | × | × | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| 18 | ஏன்னா (மனைவி கணவனை விளிக்கும் போது பயன்படுத்தும் பேச்சு வழக்கு) | × | × | | இக்காரணி பேச்சில் இடம்பெறவில்லை |
| | | 16 | 10 | | 2வடுப்பட்ட பேச்சுருவங்கள் மாற்றமடைத்துள்ளன. 1 வடுப்படாத பேச்சுருவம் மாற்றமடைந்துள்ளது. 1 வடுப்படாத பேச்சுருவம் மாற்றமடையவில்லை. |

## அடிக் குறிப்புகள்

1 உலகமொழிகளில் நிலைபேறாக்கம் (Standardization) பொதுவாக இரண்டு வழிகளில் நடைபெறுவதைக் காணலாம். அவை (i) இயற்கை வழியிலே நடந்து முடியும் நிலை பேறாக்கம் (ii) சில வரையறைகள் கட்டுத் திட்டங்கள் மூலமாக உண்டாகும் திட்டமிட்ட நிலை பேறாக்கம். முன்னதற்கு உதாரணங்கள் இந்த ஆய்வுக் கட்டுரையில் உள்ளன. திட்டமிட்டநிலை பேறாக்கம் எதிர்ப்படுகின்ற மொழிச் சூழலுக்குத் தகுந்தாற் போல மக்கள் வழக்கில் உள்ள ஒரே மொழியின் பல வகைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அந்த ஒன்றை நிலைபேறாக்கம் செய்வதாகும். இதன் விரிவான விளக்கத்திற்கு Ghatage, 1967 மற்றும் Sridhar, 1976 காண்க.

2 இக்கருத்துக்குரிய வரலாற்று விளக்கமாக கார்த்திகேசு சிவத்தம்பியின் (Sivattambi 1978) "The politics of Literary Style" என்ற கட்டுரையையும் கைலாசபதியின் (Kailasapathy, 1979) "The Tamil purist movement" என்ற கட்டுரையையும் காண்க.

3 குறிப்பிட்ட ஒருமனை மொழியில் வட்டார/சாதிக் கிளைமொழிக் கூறுகள் இருந்தால் அம்மனை மொழிச் சொற்கள் **மற்றக் குழுவினரால்** (மற்ற மனைமொழி பேசும் குழுவினரால்) ஏற்றப்பட்ட வெறுப்பைத்தாங்கிய சொற்களாகி விடுகின்றன. பின்னர் நாளடைவில் **தங்கள்** கிளைமொழிச் சொற்களைப் பயன்படுத்துவது ஏளனத்துக்குரியது என்ற எண்ணத்தையும் பெறுகிறார்கள். ஏளனத்துக்குக் காரணமான அவ்வட்டார, சாதிக்கிளை மொழிக் கூறுகள் வடுப்பட்ட கூறுகளாகிவிடுகின்றன.

4 தொண்டைமண்டலப் பகுதிகளான சின்னசேலம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கொரட்டூர் (சென்னைக்கருகில்) முதலான ஊர்களில் /முயி~முழி; கோயி~கோழி; கயுவு~கழுவு/ முதலிய பேச்சுருவங்களும் வாணியம்பாடி, குடியாத்தம் முதலிய ஊர்களில் /முளி~முழி; கோளி~கோழி; நாளி—நாழி/ போன்ற

பேச்சுருவங்களும் அவ்வூர்களில் உள்ள படையாட்சி மக்களது பேச்சில் காணப்படுகின்றன.

ஒலியியன் /ழ/ தமிழ் மொழியில் மதிப்புப் பெற்ற (prestigious) ஒரு ஒலியாகக் கருதப்படுகிறது. ய விலிருந்து ழவிற்கும் ள விலிருந்து ழ விற்கும் செல்லும் இந்த இரண்டாட்ட நிலை (variation) படிக்காத மக்களிடையே மேலே குறிப்பிட்டுள்ள நிலப்பகுதிகளில் காணப்படுகின்றன. படிக்காத மக்களும் ஒருவேளை இரண்டுவிதமான பேச்சுநடைகளைக் கொண்டிருக்கலாம். ஒன்று குடும்பத்தினருடன் பேசிக்கொள்ளப் பயன்படும் மனைமொழி. மற்றொன்று கலவைக் குழுக்களில் வெளியாருடன் பேசும்போது பயன்படும் மனைமொழியல்லாத மொழிவகை (பொதுப் பேச்சுத்தமிழில் காணப்படும் சொற்கள்). ஒலியியன் நிலையில் உள்ளதுபோல காரணிகளை உருபனியல் (Morphology) சொல்லியல் (Lexicon) முதலான பிரிவுகளிலும் இனங் கண்டுகொண்டு 'பொ'வின் (1966) கொள்கையின்படி பல்வேறு சூழல்களிலும் மேலே குறிப்பிட்டுள்ள படையாட்சி மக்களுடைய பேச்சுக்களைக் கவனித்தால் (ஆராய்ந்தால்) பொதுப்பேச்சுத் தமிழை நிச்சயிப்பதற்கான இந்த நடைமாற்றத்திற்குப் படிக்காத மக்களும் ஆளாகிறார்கள் என்பது ஒருவேளை நிறுவப்படலாம்.

5 இவ்வாய்வில் வட்டார மற்றும் சாதியை உணர்த்தும் பேச்சு வழக்குகளைக் காரணிகள் என்று சொல்வது பின்வரும் பொருளில் – மதுரை ராமநாதபுரம் மாவட்டங்களின் வழக்கான அங்கிட்டு என்பது ஒரு காரணி என்று குறிப்பிடப்படும் போது அதே வழக்குக்கு இணையான அதாவது அவ்வழக்கு தரும் பொருளில் உள்ள மற்றொரு வழக்கான அந்தப் பக்கம் என்ற சொற்றொடரும் பெறப்படுகிறது. இவ்வாய்வில் ஒவ்வொரு காரணியிலும் வட்டார அல்லது சாதி வழக்கும், வட்டார-சாதி வழக்கற்ற பொது வழக்கும் பொருந்தியுள்ளதாக நம்பப் படுகிறது. அங்கிட்டு என்ற வழக்கு காரணி என்ற பொருளில் பயன்படுத்தப்படும்போது இரண்டு வழக்குகளையும் உள்ளடக்கியிருக்கிறது என்று பொருள்.

6 ஒவ்வொரு வட்டாரத்திற்கும், சாதிக்கும் உரிய நிறையமக்களை மாதிரியாளர்களாகக் (Samples) கொள்ளத்தான் இந்த ஆய்வாளர் விரும்புகிறார். நூற்றுக்கு எழுபதுபேர் குறிப்பிட்ட ஒரு வழக்கைத் தங்கள் வட்டாரத்தில் பேசப்படும்வழக்கு என்றோ அல்லது தங்களது சாதியினரால் பேசப்படும் வழக்கு என்றோ தெரிவித்து அதன்பின் அதை அவர்களது மனைவழக்கு என்று தீர்மானித்திருந்தால் அதுவே சரியான அறிவியல் பூர்வமான கண்டுபிடிப்பாக அமைந்திருக்கும். இம்முன்னோடி ஆய்வை நடத்துவதில் சில வ ரயறைகள் (Restrictions) இருப்பதால் நிறைய மாதிரியாளர்களை இவ்வாய்வில் சேர்த்துக் கொள்ள முடியாமல் போய் விட்டது.

7 சரியாகச் சொல்லப்போனால் மாதிரியாளர்கள் நிறையப் பேருடைய அபிப்பிராயங்களின் அடிப்படையில்தான் இதையும் தீர்மானித்திருக் ் வேண்டும். மீண்டும் . , ஆய்வை நடத்துவதில் உள்ள சில வரையறைககளால் இது சாத்தியமாகவில்லை என்றுதான் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

8 வில்லியம் லபாவ் (Labov, W: 1966; 1971) சமுதாய மொழியியல் கோட்பாட்டிற்கிணங்க உரையாடல் சூழல்களை – உரையாடல் நிகழ்ச்சிகளை (Speech situation), இயல்பான சூழ்நிலை (Casual situation) எச்சரிக்கையான சூழ்நிலை (Careful situations) பார்த்துப் படிக்கும்போது ஏற்படும் நடைச் சூழல் (Reading style) என்று இப்படியாகப் பல சூழல்களைத் தமது சமுதாய மொழியியல் ஆய்வுகளில் பயன்படுத்துகிறார். ஒரு குடும்பத்தினர் அல்லது நெருக்கமானவர்கள் தங்களுக்குள் உரையாடும்போது மனஇறுக்கம் சிறிதுமின்றி இயல்பாகப் பேசிக்கொள்கிறோமே அதை **இயல்பான சூழ்நிலை** என்றும், நெருக்கமற்றவர்களோடு உரையாடும்போது (இரண்டு சூழல்களிலுமே பேச்சுத் தமிழில்தான் உரையாடல் நிகழ்கிறது) ஏற்படும் சூழலை **எச்சரிக்கைச் சூழல்** என்றும் குறிப்பிடலாம். இப்படிச் சூழல் மாறும்போது **மொழிநடையிலும்** மாற்றம் நேர்கிறது என்பதை லபாவ் போன்றோர் தங்களது ஆய்வுகளில் நிரூபித்திருக்கிறார்கள். அந்த ஆய்வு முறைகளில் உள்ள அதே உத்திதான் இந்த ஆய்விலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இயல்பான சூழல், எச்சரிக்கைச் சூழல் என்ற இரண்டே இரண்டு சூழல்கள்தான் இந்த ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தன்படி தமிழர்கள் எச்சரிக்கை உரையாடல் சூழல்களில் தங்கள் மனைமொழியை விட்டு, வேறு மொழிநடை எதையாவது மேற்கொள்கிறார்களா என்பதுதான் இவ்வாய்வில் ஆராயப்படுகிறது.

**நன்றியுரை**

இந்த ஆய்வு முழுவதையும் மேற்பார்வையிட்டு, விவாதித்து அவ்வப்போது ஆக்கபூர்வமான யோசனைகள் நல்கிய டாக்டர் இ. அண்ணாமலைக்கும், இவ்வாய்வுக் கட்டுரையை எழுத ஆரம்பித்தபோது ஆய்வுப் பகுதிகளில் எனக்கு நேர்ந்த ஐயப் பாடுகளை உடனுக்குடன் விவாதங்கள் மூலம் தீர்த்தளித்த டாக்டர் மா. சு திருமலைக்கும் தங்களது எம் ஏ. ஆய்வுக் கட்டுரைகளில் உள்ள தமிழ்க் கிளைமொழி விவரங்களில் உள்ள தமிழ்க்கிளை மொழி விவரங்களை வினா ஏடு தயாரித்தபோது பயன்படுத்திக் கொள்ள அன்போடு அனுமதியளித்த டாக்டர் கி. அரங்கன், டாக்டர் சு. இராஜாராம், திரு. என். ராமசுவாமி, திரு எஸ். ஆரோக்கியநாதன் ஆகியோர்க்கும் கலவைக் கூட்டச் சூழல்களில் (எனது சமுதாய மொழியியல் ஆய்வுக்காக) பங்குகொண்ட பெண் களுக்கும். அவர்களது கணவன்மார்களுக்கும் எனது நன்றியை உரித் தாக்குகிறேன்.

இக்கட்டுரையின் முதல் ஆங்கில வடிவத்தை இந்திய மொழி களின் நடுவண் நிறுவனத்தில் படித்தபோது, கட்டுரை தெளிவாக வேண்டிய இடங்களைச் சுட்டிக்காட்டி உதவிய டாக்டர் டி பி. பட்ட நாயக், டாக்டர் சாம்பசிவராவ், டாக்டர் எம். வி. ஸ்ரீதர், திரு ராஜேஷ் சச்தேவ், திரு. ரஞ்சித்சிங்ரங்கீலா, திரு ஆர். இலங்கையன் மற்றும் திருமதி ராஜஸ்ரீ சுப்பையா ஆகியோர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றி.

## References:

1 Annamalai,E 1976 "Standard Spoken Tamil: Some observations" in *Studies In Dialectology* Ed. by R.V.K.

Thampuran, Vol. 1 No. 2, Trivandrum, Linguistics Dept., Kariavattom (mimeo).

2 ——— "Convergence of Literary and Colloquial Tamil". Forthcoming : *Pakha Sanjam*, University of Punjab.

3 Bloch 1910 Castes et dialects on Tamoul Memoires de la Socie 'te' de Linguistique, 16: 1-20.

4 Bright, William "1960 Linguistic change in some South Indian dialects." In Charles A. Ferguson and John J. Gumperz (Eds.), *Linguistic Diversity in South Asia*. Indiana University Research Centre in Anthropology, Publication No. 13 (International Journal of American Linguistics 26 (13) pt. III).

5 ——— "Social dialect and language history", *Current Anthropology*, 1 : 324-25.

6 Desilva, Sugathapala, M.V. 1976 *Diglossia and Literacy* CIIL Adult Literacy series, Central Insititute of Indian Languages, Mysore.

7 Ferguson, Charles A. 1959 '*Language and Culture in SOCIETY* Ed. by DellHymes, New York, Harper and Row Publishers.

8 Garvin, Paul L. 1964 "The Standard Language Problem: Concepts and methods" in *Language and Culture in Society* Ed. by Dell Hymes, New York, Harper and Row Pub.

9 Ghatage, A.M. 1967. "Language Standardization" *Indian Linguistics* Vol 28.

10 Gnanasundaram, V. 1973 *A Pilot Dialect Survey of Tondaimandalam*, (Unpublished Ph.D. dissertation) Annamalai University, Annamalainagar,

11 ——— 1975 "A programme for Teaching the formal and informal varieties of Tamil" Paper presented in the *VII Annual Conference of Indian Association for Programmed Learning and Education Innovations* CIEFL (mimeo), Hyderabad

12 Karunakaran, K. 974 "Social startification and standardization of Tamil dialects, *Proceedings of the Fourth International Conference - Seminar of Tamil Studies*, SriLanka.

13 ——— "Language standardization in Dravidian with reference to Tamil" in *Dravidian Linguistics* V Ed. by S. Agesthialingom and P.S. Subramanyam, CAS in Linguistics, Annamalai University, Annamalainagar.

14 Kailasapathy, K 1974 "The Tamil Purist movement"l *Social Scientist* No. 82, Trivandrum.

15 Krishnamurthi, Bh. 1976 "Problems of Language Standardization in India" *Osmania papers in Linguisties* Ed. by R.S. Ananthanarayana. Osmamia University Hyderabad.

16 Labov, W. 1966 *The Social startification of English in New York City*, D C. Centre for Applied Linguistics, Washington.

17 ——— 1971 "Hyper correction as a factor in Linguistic change" in *Sociolinguistics* Ed by William Bright, The Hague, Mouton.

18 Pattanayak, D P. 1975 "Caste and Language" in IJDL Vol. 4:1

19 Pillai, M. Shanmugam 1960 "Tamil Literary and Colloquial" in *Linguistic diversity in South Asia* IJAL 7 Ed. by Charles A. Ferguson and John J Gumperz.

20 Pillai, M. Shanmugam 1968 Discussion Panel (B) on Language stability and on the formal Vs. informal dictionary in Tamil" in the *proceedings of the Second International Conference Seminar of Tamil Studies*, Madras

21 ——— "Tamil Today" *Indian Linguistics*

22 Rajashree *Standardisation of Language: a Case study of Marathi* Central Institute of Indian Languages (Ph.D. dissertation in progress), Mysore.

23 Ramanujan, A. K. 1964 "Socio linguistic variation and language change". *In proceedings of the Ninth International Congress of Linguistics* The Hague, Mouton & Co.

24 Ramaswamy, N. 1979 *Formal and Informal Tamil*, (unpublished Ph.D. diss.). Linguistics Department' Kerala University, Trivandrum.

25 Rangan, K. 1964 A Comparative study of educated and and uneducated Harijans in South Arcot District", (unpublished M.A. diss.) Annamalai University, Annamnlainagar.

26 Sivathambi, Karthigesu. "The politics of a Literary style" *Social Scientist No.* 68, Trivandrum.

27 Sridhar, M.V. 1976 "Standardization of Naga pidgin', in *Anthropological Linguistics*.

28 Thirumalai, M. S. "Language and Style: A Linguistic sthdy" in the *Annals of Oriental research*, University of Madras.

29 Vasanthakumari T. 1976 "The standard spoken Tamil" in *Studies in Dialectology Vol.* 1. *No.* 1. Ed. by B. Gobinathan, Linguistics Department Kariavattom, Trivandrum.

30 Zvelebil, K. 1964 "Spoken Language of Tamilnadu" *Archiv Orientalni Vol.* 32/2.

# ஒரு புதிய பார்வை: இன்றைய மொழியியற் கொள்கைகளும் தமிழ் இலக்கிய இலக்கணங்களும்

இராம. சண்முகம்
காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

## 0. முன்னுரை

இன்று பெரிதும் வளர்ந்துவரும் மொழியியற் கொள்கைகளின் பின்னணியில் நம் தமிழ்நாட்டு இலக்கண நூலார் கொள்கைகளை ஆய்வது இருமரபுகளையும் அறிதற்குப் பெரிதும் துணை செய்வதாம். அம்முறையில் இவ்வாராய்ச்சிக் கட்டுரை குறுந்தொகை மொழி நெறியின் ஒலியியல் துறையில் சிற்சில குறிப்பிடத்தக்க செய்திகளை மட்டும் தொகுத்து இங்கு அளிக்கின்றது.

## 1.0. அந்நாளைய குறுந்தொகை மொழி நெறி

### 1.1. உயிர் ஒலியன்கள் (Vowel Phonemes)

குறுந்தொகை மொழிநெறியில் பன்னிரு உயிர்களும் வழக்கில் அமைந்துள்ளன. இவற்றைத் தொல்காப்பியர் குறில், நெடில் என

இரண்டாக வகைப்படுத்தி, நெடிலினுள் ஐகார, ஔகாரங்களையும் அடக்குவார்.

தொல்காப்பியர் வெவ்வேறு பன்னிரு வடிவங்களாகக் கொள்ளும் இவ்வுயிர்களைப் பிழிவுமுறை (Process of Abstraction)*யில் ஆறு அடிப்படை ஒலியன்களாகக் கொள்ளலாம். பொருள் வேறுபாடு உணர்த்தும் ஆற்றலின் அடிப்படையில் (Principle of Contrast) வெவ்வேறான வடிவங்கள் என ஐந்து குறில்களையும் வைத்துக் கொண்டு, இவ்ஐந்தின் நெடில் தோற்ற ஆற்றலை மட்டுமே தனியே வடித்தெடுத்து, ஒரே வடிவாய்க் கொண்டு உயிர் ஒலிகள் (Vowel Phones) பன்னிருபான்மையில் உள்ளனவற்றை ஆறு அடிப் படை உயிர் ஒலியன்கள் (Vowel Phonemes) என்னலாம்.

## 1.2. மெய்யொலியன்கள் (Consonant Phonemes)

மெய்யொலிகள் (Consonant Phones) பதினெட்டும் குறுந் தொகை மொழியில் அமைந்து நிற்கக் காணுகின்றோம். வழக் காற்றில் வருமுறை உரைக்கும் விதி வழியே (Principle of prediction) ஙகர நகர மெய்கள் குறுந்தொகை மொழிநெறியில் நிற்றலால் அவ் விரண்டையும் தனித்தனி ஒலியன்களாகக் கொள்ளாமல் விடுத்து, இவ்வகை விதிக்குள் அடங்கா மெய் ஒலிகளை வெவ்வேறு வடிவாகக் கொண்டு பதினாறு அடிப்படை மெய்யொலியன்களாகக் (Consonant Phonemes) கொள்ளலாம்.

## 1.3. சார்பெழுத்து

மொழி வழக்கில் வருமுறை உரைக்கும் விதி வழியே குறுந் தொகையில் அமைந்துள்ள குற்றியலுகரமும், குற்றியலிகரமும், ஆய்தமும் அமைந்து நிற்றலால், இவற்றை தனித்தனி ஒலியன் களாகக் கொள்ள வேண்டுவதில்லை. தொல்காப்பியர் கூற்றுக்கு

* In fact Bernard Russel long before the theory of phonemes had a theory of equivalenee between the property of a class & class membership; to paraphrase his 'Principle of abstraction", we might say that bumanity (in the abstract),, is humanity (mankind)' –*Yuen ren Chao*, "*Language & Symbolic Systems*", p. 36 (1968) Cambridge Univ. Press.

ஏற்பச் சார்ந்துவரல் மரபின் என்பதற்குக் குறுந்தொகையுள்ளும் அவை சான்றாக அமைகின்றன.

### 1.4. அளபெடை

அளபெடைகளும் (குறுந். 82, 135, 288, 141) இந்நூலில் மொழிநெறியில் அமைந்துள்ளன. அவையும் தனித்தனி அடிப்படை ஒலியன்கள் ஆகா; இவற்றை அடுத்தடுத்து நிற்கும் ஒலியன் வடிவினவாகவே கொள்ளலாம்.

### 2.0. ஒலியன்கள் அமைந்து நிற்கும் நெறி (Phonemic Sequences)

அளபெடையில் ஒலியன்கள் அமையும் நெறியை 1.4. இல் கண்டோம்.

### 2.1. உயிர் ஒலியன்கள் அமைந்து நிற்கும் நெறி

உயிர் ஒலியன்கள் மொழி (சொல்) முதலிலும், இடையிலும், கடையிலும் நிற்கின்றன. எனினும் எகரக் குறிலொலியன் ஔகாரம் ஆகியன கடையில் நின்ற சொல் குறுந்தொகை மொழியில் காணப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதொன்றாகும்.

### 3.0. வரலாற்று நோக்கில் (From the Historical point of view) குறுந்தொகை மொழிநெறி

மொழியை வரலாற்று நோக்கில் காண்பதென்பது ஒருபுனைவு உருவில் கூர்தல் அறநெறியை (Evolutionary Model)ப் பின்பற்றிக் காணும் காட்சியேயாம். இது மயக்க நிலைக்கு ஒப்பாகும். மொழி ஆராய்ச்சியில் ஈடுபாடுகொண்ட தமிழ் இலக்கண நூற் முதலாசிரியர் களும், உரையாசிரியர்களில் பெரும்பான்மையோரும் (சிவஞான முனிவர் போன்றோர் நீங்கலாக) இம்மயக்க நிலைக்கு ஆட்படாது மொழி நெறியை விழிப்பாக இருந்து விளக்கி வந்தனர்.

### 3.1. அண்ணச்சாயல் மெய்யொலியன்கள் (Palatal Consonant Phonemes)

சகரம், ஞகரம், யகரம் ஆகிய மெய்யொலியன்கள் அகரக் குறிலோடு கூடி (ஊர்ந்து), மொழி (சொல்) முதலில் வருவதை நன் னூலார் சுட்டுவார். தொல்காப்பியர் அவ்வாறு அமைவதில்லை

எனக் குறித்துச் சென்றுள்ளார். (தொல். எழுத். 62; 64; 65). குறுந்தொகையில் **சகடம்** (குறுந். 165), **ஞமலி** (குறுந். 179, என்ற சொற்கள் கொண்ட பாடல்கள் உள்ளன. இவை தொல்காப்பியர் காலத்து வழக்கிலில்லாத மொழி என்றோ, தொல்காப்பிய மொழி நெறிக்குப் பின்னாக வளர்ந்த குறுந்தொகை மொழி நெறி என்றோ கொள்ள இடம் அளிக்கிறது

## 3.2. ஒன்றாதல் (Merger), வேறாதல் (Split)

மறைதல் (Loss) என்ற வரலாற்று நெறி வழியே வளர்ந்திடும் தமிழ்மொழிக்குக் குறுந்தொகையே சான்று.

குறில் உயிர் ஒலியன்களான அகரமும் எகரமும் வேறுபாடின்றி ஒன்றாய், ஓர் அண்ணச்சாயல் ஒலியனாய் (Palatal Phoneme) இருந்ததையும், பின்னர் அவ்வோருயிர் ஒலியனிலிருந்து அவை பிரிந்ததையும் (Split), அண்ணச்சாயலைத் தோற்றுவித்த மொழி முதல் மெய்யொலியனான ஞகரம் கெட்டொழிந்து (Loss), மொழி முதல் நகர மெய்யோடு ஒன்றாய் இணைந்ததையும் (Merger) குறுந் தொகைமொழி காட்டுகின்றது. மலையாள மொழியும் தமிழ்மொழி யும் ஒன்றாய் (ஒரே மொழியாய்) இருந்த நிலைக்குச் சான்று கூறும் மொழி வழக்காறுகள் குறுந்தொகையில் காணப்படுகின்றன, அவ் வாறான வழக்குகளில் ஒன்றே **ஞெண்டு** (குறுந்.117). இச்சொல் இன்று **நண்டு** என வழங்குவதையும் இதனோடு குறுந்தொகை மொழியில் காணும் ஞெண்டு என்ற சொல்லையும் ஒப்பிட்டு ஆராய் வதால் (Comparative Study) மேற்குறித்த மொழி வரலாற்றில் விளைந்த ஒலியன் மாற்றங்கள் (Phonemic changes) தெளிவாகப் புலப்படும்

## 3.3. திராவிட மொழிகளாய்த் தனித்தனியே தமிழ், தெலுங்கு, கன்னடம் என்று இன்று பிரிவுபட்டு நிற்கும் நிலையும் அவற்றிடையே உள்ள உறவுக்குச் சான்றும்

குறுந்தொகை மொழியில் காணும் **கிளி** (குறுந் 133; 141; 142; 198 )யும் **கேடு** (குறுந். 216, 374 ),ம் **செம்பொன்** (குறுந் 356)னும், **செம்** (குறுந். 1; 2; 14 ) மையும், **செவி** (குறுந். 76; 246; 299; 322..) யும் கன்னடத்தில் கிளி, கேடு, கெம்பு, கிவி எனவும், தெலுங்கு மொழியில் சிறுக,

சேடு, செம்பு, செவி எனவும் வழங்கி வருவதை ஒப்பு நோக்குக் கண்ணோட்டத்தில் ஆராயும்போது, குறிலாகவேனும் நெடிலாகவேனும் விளங்கிய இகரம் அல்லது எகரம் ஏறியிருந்த மொழி முதல் அடிப்படை ஒலியனான ஒன்றே (ககரம் போன்ற ஒலியன்) இவ் அண்ணச் சாயல் உயிர் ஒலியன்களுக்கு (Palatalised Vowel Phonemes) ஏற்ப, அண்ணச்சாயல் சகர மெய்யொலியனாக (Palatalised Consonant Phonemes) வந்து நின்று சொல்லாக அமைந்ததும் மலையாளத்திலும் தமிழிலும் டகரம், ழகரம், ளகரம் (வளைநா ஒலியன்கள்) உயிர் ஊர்ந்து அச் சொல்லிலே அடுத்துவர, இம் மொழிமுதல் உயிர் ஊர்ந்து வரும் ககரம், வேறு வடிவான சகரமாக (Split) மாறாது நிற்றலையும் காணல் கூடும் கன்னடத்தில் மட்டும் மொழிமுதல் ககர ஒலியன் உயிர் ஒலியன்களுக்கு முன் வேறுவடிவம் கொள்ளாது வழிவழி வடிவான ககர ஒலியனாய் வருகிறது.

கன்னடத்துக் கெம்பும், கிவியும், தெலுங்கு சிலுகாவும், சேடு வும் குறுந்தொகை மொழியில் நேராக வாராவிடினும் அவற்றின் தடயங்களை விட்டுவிட்டு அம்மொழிகள் இன்று பிரிந்து நிற்கும் பாங்கைப் புலப்படுத்துகின்றன.

## 4.0. குறுந்தொகை மொழிநெறியும் இந்நாளைய பேச்சு (கட்டுரை யாளரின் பேச்சு) நெறியும்

### 4.1. கடைநிலையில் உயிர்

குறுந்தொகை மொழி நெறியில் சொல்லின் கடையில் உயிர் ஒலியன் ஊர்ந்து வராது வல்லின மெய்யொலியன்கள் மட்டுமே நிற்றல் இல்லை. உயிர் ஒலியன் ஊர்ந்து வாராது மெல்லினம், இடையினம் சார்ந்த ஒலியன்கள் சொற்களின் கடையில் நிற்றல் உளவாம். ஆனால் இந்நாளைய பேச்சு நெறியிலோ கடையில் உயிர் ஒலியன் (மெல்லினம், இடையினம் உட்பட்ட ஒலியன்கள் அனைத்திலும்) ஊர்ந்து வாராத சொல் இக்கட்டுரையாளரின் தமிழ்ப் பேச்சு வழக்கில் இல்லை.

### 4.2. மூக்கின (மெல்லின னகர, மகர மெய்யொலியன்கள் மறைவும் (Loss) அவை மூக்கின உயிர் ஒலியனாய் எழுதலும்

குறுந்தொகையுள் சொற்களின் கடையில் நிற்கும் னகரமும், மகரமும் இந்நாளைய பேச்சு நெறியில் கெட்டு (Loss), அவை மூக்கின உயிர் ஒலியன் வடிவாய் எழுதலைக் (Innovation) குறிப்பிடுதல் வேண்டும்.

### 4 3. ரகரமும், றகரமும் ஒன்றாதல் (Merger)

குறுந்தொகையுள் சொற்களின் இடையில் உயிர் ஒலியன்களுக்கிடையே நின்ற வல்லின றகர ஒலியனும், இடையின ரகர ஒலியனும் (மறம்/maram) குறுந். 255; மரம்/maram/குறுந். 19; 93) இந்நாளைய பேச்சு வழக்கில் ஒரே ஒலியனாக ஒன்றிவிட்டன (Merger).

### 4.4 பழைய ஒலியன்களிலிருந்து புதிதாய் ஒலியன்கள் எழுந்து - வேறாய் (Split) நிற்றல்

குறுந்தொகை மொழிநெறியுள் அடிப்படை ஐந்து வல்லின ஒலியன்கள் (க், ச், ட், த், ப்) வழக்காற்றில் வருமுறை உரைக்கும் விதிக்கும் உட்பட்ட சார்பொலிகள் (Allophones) கொண்டு விளங்கின. அச்சார்பொலிகள் இன்று அடிப்படை ஒலிகளாய் எழுந்து, வல்லின எண்ணிக்கையை இரட்டித்து வேறுபட்டு (Split) நிற்கின்றன.

எடுத்துக்காட்டு: க்/K/, க்/g/, ஃப/p , ப்/b போன்ற முறையில் அமைந்து நிற்கின்றன.

குறு < = சிறிய >; குரு < = ஆசான் >

'பாவம்' புண்ணியத்திற்கு எதிரான பொருள்தரும் சொல்.

'பாவம்': கலையைப் பற்றிய உரையாடலில் இச்சொல் சுவையைப்பற்றி நிற்கும்.

### 4.5. புதிய ஒலியன்கள் எழுதல் (Innovation)

குறுந்தொகை மொழிநெறி அறியாத புதிய மெய்யொலியன்கள் இன்று பேச்சுமொழியில் எழுந்துள்ளன. இக் கட்டுரையாளரின் பேச்சுமொழியில் அடிப்படை ஒலியன் நிலையோடு விளங்கும் ஒன்று ஷகரமாகும். (ஃப/f/ என்ற ஒலி (phone), ஒலியன் (phoneme)

நிலையில் சில சொற்களிலேயே மொழிமுதலில் நின்று வழங்குகிறது இங்குக் குறிப்பிடத்தக்கலாம்: ஃப்லிம் <= புகைப்படம்>

## 5.0. முடிவுரை

மொழி ஆராய்ச்சியில் புதிய பார்வை என்பது ஒரு விளையாட்டேயாம். சீட்டாட்டத்தில் ஒரே வடிவான சீட்டுக்களை வைத்துக் கொண்டு வெவ்வேறான வகையில் அடுக்கி வெவ்வேறான விதிகள் அமைத்துக்கொண்டு விளையாடிப் பொழுது போக்குவதும், அவற்றின் வாயிலாகச் சில நுட்பமான படிப்பினைகளைப் பெறுவதும் போன்றதொரு விளையாட்டாகவே இவ்வாராய்ச்சியைக் கருதுதல் வேண்டும். எனவே இந்தப் புதிய பார்வை இன்றைய விளையாட்டே அன்றி என்றென்றும் நிலைத்ததொரு நோக்கு அன்று என்பதை வலியுறுத்துதல் இக்கட்டுரையாளரின் கடனாம்.

### துணை நூல்கள்


Bloomfield, Leonard. 1933 *Language*, New York Holl Rinehart and Winston Inc. - Chapters, 17-27

Hockett, Charles F. 1958. *A Course in Modern Linguistics* New York. The Macmillan Company-pp 365-458

Hoenigswald, Henry. 1960 *Language change and Linguistic Reconstruction*, Chicago, University of Chicago Press.

Lehmann, Winfield P. 1962 *Historical Linguistics* New York, Holt, Rinehart and winston, Inc.

Shankara Bhat, D. N. 1972 *Sound Change* Poona, Bhasha Prakashan

Emeneau, M. B. 1970 *Dravidian Comparative Phonology* Annamalainagar, Annamalai University.

# சொற்றொடர்களில் எளிமையாக்கம்

தற்காலத் தமிழ் இலக்கிய வழக்கிலும், பேச்சு வழக்கிலும் சொற்றொடர் அமைப்புகளில் எளிமையாக்கம் கீழ்க்காணும் முறைகளில் தோன்றி வருவதைக் காணுகிறோம். ஒரு முழு வாக்கியத்திற்குப் பதிலாக ஒரு சொற்றொடர் பயன்படுத்தப்படுவதைச் சிலருடைய எழுத்துமொழி நடையிலும் பொதுவாகப் பேச்சு வழக்கிலும் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, **'ரொம்பத் தெளிவு'** (பையன் ரொம்பத் தெளிவு) என்ற சொற்றொடரின் வாயிலாக **'பையன் மிகவும் புத்திசாலியாக இருக்கிறான்'** என்ற வாக்கியம் தரும் பொருளை எளிமையாக வெளிப்படுத்தமுடிகிறது. இதேபோல **'ரொம்ப வேகம்'** என்ற சொற்றொடர் (G. T. ரொம்ப வேகம்) 'G. T. மிகவும் வேகமாகச் செல்கிறது' என்ற வாக்கியம் வெளிப்படுத்தும் பொருளினைத் தெளிவுபடுத்துகிறது. இது போன்ற பல சொற்றொடர்கள் பெரும்பாலான மக்களால் மொழிப்பயனில் பல்வேறு சூழ்நிலைகளில் இன்று பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் இம்மாதிரியான மொழியமைப்புகள் மொழிப் பயனில் ஒத்துக்கொள்ளப்பட்டும், எளிதாக எடுத்தாளப்பட்டும் வருவதோடு இவை ஆற்றல் மிக்க வகையிலும் பயன்பட்டு வருவதாக அறிகிறோம். மாற்றிலக்கண மொழியியலில் (Transfor mational Linguistics) இதனை 'use of ellirtical sentences' என்று சொல்லுவர். இவ்வகையான வாக்கியங்களை முழு வாக்கிய அமைப்புக்களிலிருந்து உருவாக்குவார்கள். **'அவள் கறுப்பு'** என்ற ellirtical வாக்கியம் 'அவள் கறுப்புநிறத்தைக் கொண்டவளாக இருக்கிறாள்' — 'அவள் கறுப்பாக இருக்கிறாள்' என்ற வாக்கியங்களிலிருந்து பெறப்படுகிறது.

— டாக்டர் **கி. கருணாகரன்**

மொழித்திட்டமிடுதல், அண்ணாமலைநகர் 1977

மொழியியல் 3, 2 (1979)

# வகைப்பாடும் பெயரீடும்

பொன். கோதண்டராமன்
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பொருளைப்பகுத்து ஆராய்ந்து வகைப்படுத்தி ஒவ்வொரு வகைக்கும் முறையாக ஒரு பெயரிடுவது அறிவியல் துறைகள் எல்லாவற்றுக்கும் பொருந்திய இன்றியமையாத ஒரு முதன்மைப் பணி எனலாம். ஆய்வுப்பொருளைப் பகுத்தறிந்த பிறகு பகுக்கப்பட்ட உட்கூறுகளை வகைப்படுத்துவதற்கு ஒரு இன்றியமையாத அடிப்படை வேண்டும். வகைப்படுத்திய பொருள்களுக்கு முறையாகப் பெயரிடுவதற்கும் பொருத்தமான அடிப்படை ஒன்று வேண்டும்.

## வகைப்பாட்டின் அடிப்படை

பகுக்கப்பட்ட உட்கூறுகளைப் பொதுவாக உருவத்தின் அடிப்படையிலும் தன்மை அல்லது செயற்பாட்டின் அடிப்படையிலும் வகைப்படுத்தலாம். எடுத்துக்காட்டாக தமிழில் உள்ள சொற்களை ஓரசைச்சொல் ஈரசைச்சொல் என்றும் ஓரெழுத்தொரு மொழி,

ஈரெழுத்தொரு மொழி என்றும் வடிவ அடிப்படையில் வகைப்படுத்தலாம். வேற்றுமை ஏற்கும் சொற்களை ஒருவகையாகவும் கால இடைநிலைகளை ஏற்கின்ற சொற்களை இன்னொரு வகையாகவும் வகைப்படுத்திய முறைமையினைச் செயற்பாட்டின் அடிப்படையில் எழுந்த வகைப்பாடு எனலாம். ஆய்வில் நாம் ஏற்படுத்தும் வகைப்பாடுகள் அந்தப் பொருளின் முழு ஆய்வுக்கும் பயன்படத்தக்கதாய் இருக்க வேண்டும். ஆய்வுக்குப் பயன்படாத முறையில் வகைப்பாடுகளை அமைப்பது தேவையற்ற வேலை. இதனால்தான் தமிழிலக்கணப் புலவர்கள் எழுத்துகளின் அடிப்படையில் ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொரு மொழி, இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி என்று மூன்று வகையோடு நிறுத்திக்கொண்டு நான்கெழுத்துமொழி, ஐந்தெழுத்து மொழி, ஆறெழுத்து மொழி என்றெல்லாம் கருதாமல் விடுத்தனர்.

ஆய்வுக்குரிய பொருளைப் பெரும் பிரிவாகப் பிரித்த பிறகு ஒவ்வொரு பிரிவிலும் தேவைப்படும்போது உட்பிரிவுகளையும் ஆக்கிக்கொண்டு அவற்றையும் வகைப்படுத்திப் பெயரிடுவர். எழுத்துகளை உயிரென்றும் மெய்யென்றும் இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்துக் கொண்டு உயிரெழுத்தில் குறில் நெடில் எனவும் மெய்யெழுத்தில் வலி, மெலி, இடை எனவும் உட்பிரிவுகளை ஆக்கிக் கொண்டு எழுத்திலக்கணம் கூறியிருப்பதை நோக்குங்கால் நாம் மேற்கூறிய உண்மை நன்கு விளங்கும். உட்பிரிவுகள் தேவைப்படுகின்ற அளவுக்கு மேலும் மேலும் பிரிக்கப்படுவது உண்டு. அப்படிப் பிரிக்கின்ற பிரிவுகள் பகுக்கப்பட்ட தனியொரு உள் உறுப்பைச் சுட்டுகின்ற அளவுக்குச் செல்லக்கூடும். இக்கருத்தைக் கீழ்க்காணும் உயிர்ப் பாகுபாட்டுப் படம் மேலும் விளக்கும்.




ஐ, ஔ ஆகிய இரண்டும் இக்கால வழக்கின்படி ஏனைய உயிர்

களினின்றும் வேறுபட்ட இயல்பினவாதலால் அவை மேற்காட்டிய படத்தில் இடம்பெறவில்லை.

பயனில்லாத பகுப்பு கூடாது என்பதனை நமது இலக்கணப் புலவர்கள் மிக நன்றாக உணர்த்தியிருக்கிறார்கள். அதனால்தான் பகாப்பதத்தை வரையறுக்க வந்த நன்னூலார்,

பகுப்பால் பயனற் றிடுகுறி ஆகி
முன்னே ஒன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை இடைஉரி நான்கும் பகாப்பதம்

என்று வரையறை செய்கின்றார். அடிப்படையும் நோக்கமும் இல்லாத வகைப்பாடு கைவிடப்பட வேண்டிய ஒன்றாகும். ஆய்வின் தொடக்கத்தில் ஒரு பயனைக் கருதி மேற்கொள்ளப்பட்ட ஒரு வகைப்பாடு ஆய்வின் இறுதி வரையிலும் பயன்படாமலே போகும் என்றால் அந்த வகைப்பாட்டினைக் கைவிட்டுவிட்டு ஆய்வை மீண்டும் பார்த்துச் சீர் செய்வது நல்லது.

சார்பெழுத்துகளை ஆராய்ந்த நன்னூலார் அவற்றைப் பத்து என்று வகைப்படுத்தி விட்டு அவற்றையே முந்நூற்று அறுபத்தொன்பது என்று விரித்துக் கூறுகிறார். இப்படி முந்நூற்று அறுபத்தொன்பதாக விரித்துக் கூறிய ஆய்வுப்பகுதி அவருடைய இலக்கண நூலில் வேறு இடங்களில் எந்த வகையிலும் பயன்பட்ட ஒன்றாகக் கருத இயலவில்லை. ஆகவே இந்த விரிந்த வகைப்பாடு தேவைதானா என்பது சிந்தனைக்கு உரியதாக உள்ளது.

பகுக்கப்பட்ட பொருள்களை வகைப்படுத்தும்பொழுது ஒரே நேரத்தில் நாம் பல்வேறு அடிப்படைகளை மனதில் கொண்டு வகைப்படுத்துவது பொருந்தாது. விளக்கமாகச் சொன்னால், சொற்களை வகைப்படுத்தும்போது அவற்றை 1. எழுத்தெண்ணிக் கையில் வகைப்படுத்தலாம் 2. அசையெண்ணிக்கையில் வகைப் படுத்தலாம் 3. மொழியில் சொற்கள் இயங்கும் தன்மைக்கேற்ப வகைப்படுத்தலாம் 4. அவை பயன்படும் இடம் செய்யுளா உரை நடையா என எண்ணி அதற்கேற்ப வகைப்படுத்தலாம். ஆனால் இந்த எல்லா அடிப்படைகளையும் ஒரே நேரத்தில் மனதில் கொண்டு சொல்வகைக்குப் பெரிய பட்டியல் போடுதல் கூடாது.

நமது இலக்கணப் புலவர்கள் இதை நன்கு மனதில் இருத்திக் கொண்டுதான் சொற்களை பெயர், வினை, இடை, உரிய என்னும் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்றும் தனித்தனி நோக்கிலும் தனித்தனி அடிப்படையிலும் வகைப்படுத்தி யுள்ளார்கள்.

ஒரு நூலாசிரியன் தனக்கு முன் இருந்த வகைப்பாடுகளையும் தழுவிக் கொண்டுதான் சில புதிய வபைப்பாடுகளை உருவாக்கி நடைமுறைப் படுத்தும்பொழுது அவன் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்; இல்லையேல் அவனுடைய ஆய்வால் ஏற்படுகின்ற தெளிவைவிடக் குழப்பம் மிகுதியாகி விடும் யாப்பிலக்கண வரலாற்றில் இப்படிச் சில குழப்பங்கள் ஏற்பட்டு விட்டன என லாம். ஒரு செய்யுளின் அடியினை ஆராய்ந்து வகைப் படுத்தும் போது மிக முற்காலத்தில் எழுத்தெண்ணிக்கையின் அடிப்படையில் அப்போதைய யாப்பறி புலவர்கள் அடிகளை வகைப்படுத்தியிருப்ப தாகத் தெரிகிறது சீர் பற்றிய கோட்பாடும் தளை பற்றிய கோட் பாடும் யாப்புலகில் தோன்றிய பிறகு அடிகளைச் சீரின் அடிப்படை யிலும் வகைப்படுத்தும் போக்கு தோன்றியது. இவற்றை நன்கு வேறு பிரித்து உணராதவர்கள் சீர்வகை அடிகளையும், தளை வகை அடிகளையும் எழுத்துவகை அடிகளிலேயே அடக்கிக் காட்ட முற்பட்டுப் பெரிதும் இடர்ப்பட்டனர். எனவே ஒரு ஆய்வாளன் புதிய வகைப்பாட்டை உருவாக்கும்போதும், புதிய பெயர்களை அல்லது குறியீடுகளைக் கையாளும்போதும் தான் மேற்கொள்ளும் வகைப்பாடு பற்றியும் பெயரீடு பற்றியும் மயக்கத்துக்கு இடமில்லாத வகையில் தெளிவாக விளக்குதல் இன்றியமையாததாகின்றது. நன்னூலார் தமது நூலில் பதவியல் என்றொரு இயலை அமைத்துத் தம்முடைய கோட்பாட்டினைத் தெளிவாக விளக்கி தாம் கையாளும் குறியீடுகளையும் தெளிவாக வரையறுத்திருப்பது இங்கே குறிப்பிடத் தக்கதாம்.

## பெயரீடு

பகுக்கப்பட்ட பொருள்களை வகைப்படுத்திய பிறகு ஒவ்வொரு வகைக்கும் மயக்கமில்லாத வகையில் பெயர் அல்லது குறியீடு தருதல் ஆய்விற்கு மிக இன்றியமையாததாம். பெரும் பிரிவுகளுக் குப் பெயரிடுவதோடு மேலும் மேலும் பிரிக்கப்படுகின்ற உட்பிரிவுகள்

எல்லாவற்றுக்கும் பெயரிடப்பட வேண்டும். அப்படிப் பெயரிடும் போது ஆய்வாளன் இடுகுறியாகவும் பெயரிடலாம்; ஏதாவது ஒரு காரணம் பற்றியும் பெயரிடலாம். ஒரு காரணம் பற்றிப் பெயரிட்டால் பிறர் அதனை எளிதில் நினைவிற்கொள்ள உதவியாகும் என்பதால் காரணம் பற்றிப் பெயரிடுவதைப் பொதுவாக எல்லோரும் வரவேற்பர் எப்படிப் பெயரிட்டாலும் தனது ஆய்வில் ஒருபெயர் அல்லது குறியீடு இன்னபொருளைக் அல்லது இன்னதைக் குறிக்க ஆளப்படுகிறது என்பதை ஆய்வாளன் தெளிவாக வரையறுத்துக் கூற வேண்டும். நன்னூலார் பதவியலில் இந்தக் கோட்பாட்டை நன்கு பின்பற்றியிருப்பது இங்கே நினையத்தக்கது. நன்னூலின் பொதுப்பாயிரப் பகுப்பில் நூலுக்குப் பெயரிடுதல் பற்றி நன்னூலார் கூறியுள்ள செய்திகள் இங்கே நினைத்து மகிழத்தக்கது. முதல் நூலாலும் கருத்தனாலும் நூலின் அளவினாலும் நூலில் மிகுதியாகப் பேசப்பட்ட பொருளினாலும், நூல் நுவன்ற பொருளாலும், செய்வித்தோனாலும் நூலின் தன்மையாலும் ஒரு நூலுக்குப் பெயர் அமையலாம். இவையெல்லாம் காரணம் பற்றி அமைந்த பெயர்கள்: இவையன்றி இடுகுறியால் கூட ஒரு நூலுக்குப் பெயர் அமைவதுண்டு. இப்படி நன்னூலார் கூறியிருப்பதை எண்ணிப் பார்த்தால் குறியீடு அல்லது பெயரீடு பற்றி அவர் வேறொரு சூழலில் வேறொரு வகையில் நன்கு சிந்தித்திருக்கிறார் என்பது நமக்கு இனிது விளங்குகிறது.

பெரும்பிரிவுகளுக்கும் உட்பிரிவுகளுக்கும் பெயரிடுவதன் நோக்கம் அவற்றைப்பற்றி வெவ்வேறு இடங்களில் நூலில் குறிப்பிட வேண்டிய தேவை வரும்போது மயக்கமில்லாமல் பெயர் சுட்டிக் குறிப்பிடுவதே ஆகும். இப்படிப் பெயரிடும்போது வகை ஒன்று, வகை இரண்டு, வகை மூன்று என்றோ அல்லது அ, ஆ, இ என்றோ பெயரிட்டால்கூடத் தவறில்லை. ஆகவே பெயரீட்டை மட்டும் மையமாக வைத்து ஆய்வில் வீண் விவாதங்களை எழுப்ப வேண்டியதில்லை. காலப்போக்கில் ஒரே வகைப்பாட்டைச் சுட்டப் பல்வேறு பெயர்கள் கூடத் தோன்றலாம்; பொருத்தமான பெயர்கள் நிலை நிற்கும். காலப்போக்கில் நீண்ட தொடர்கள்கூடச் சுருங்கிய தொகையாகி ஒருசொல் நீர்மைத்தாய்க் கலைச்சொல் இயல்புபெறும். தொல்காப்பியர் தம் நூலில் கூறிய பெயறெஞ்சு கிளவி என்ற

தொடரும் வினையெஞ்சு கிளவி என்ற தொடரும் சுருங்கிப் பெயர்களாகிப் பெயரெச்சம், வினையெச்சம் என்று நன்னூலார் காலத்தில் கலைச்சொல் இயல்பு பெற்றதனை ஈண்டு எண்ணிக் காண்க.

நாம் முன்பே தொடக்கத்தில் குறிப்பிட்டது போல ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பொருளைப் பகுத்தாராய்ந்து வகைப்படுத்துவதும் பெயரிடுவதுமாகிய பணிகள் நம்முடைய இலக்கணங்களில் மிக இன்றியமையாத இடத்தைப் பெற்றிருக்கின்றன. இந்த உண்மை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, பாட்டியல் ஆகிய எல்லா இலக்கணப் பகுதிகளுக்கும் பொருந்தும். இலக்கணக் கோட்பாடுகளிலேயே வகைப்பாடும் பெயரீடும் மிக இன்றியமையாத அடிப்படைக் கோட்பாடுகள் எனலாம்.

எழுத்திலக்கணத்தில் எழுத்துகளை உயிரென்றும் மெய்யென்றும் பெரும் பிரிவாகப் பிரித்திருப்பதையும் உயிரைக்குறில், நெடிலென்றும் மெய்யை வலி, மெலி, இடை என்றும் அவற்றின் உட்பிரிவுகளை ஆராய்ந்து மேலும் பிரித்திருப்பதையும் இங்கே எண்ணிக் காண்க. இவ்வாறே சொல்லிலக்கணத்தில் சொற்களை நான்கு வகையாகப் பிரித்துப் பெயர், வினை, இடை, உரி என்று பெயரிட்டிருப்பதையும் அந்தப் பெயர், வினை, இடை, உரிகளை மேலும் ஆராய்ந்து அவற்றின் உட்பிரிவுகளையும் பிரித்து வகைப்படுத்தி இருப்பதையும் இங்கே எண்ணிப் பார்ப்பது பொருந்தும். யாப்பு, அணி, பொருள், பாட்டியல் ஆகிய இலக்கணங்களில் இந்த வகைப்பாட்டுப் பெயரீட்டுக் கோட்பாடு நன்கு பொருந்துமாற்றை நீங்களே எண்ணிக் காணலாம்.

மொழியியல் 3.2 (1979)

# மானிட மொழியியல்

சு. சக்திவேல்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1.0. மனிதன் பேச்சாலும் எழுத்தாலும் தன்னுடைய கருத்தைப் பிறருக்குத் தெரியப்படுத்தும் கருவியே மொழியாகும். இன்றைய மொழி மனித வரலாற்றின் தொடக்கக் காலத்திலிருந்தே மனிதன் தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டிய உணர் வோடு முயன்று வந்த முயற்சியின் முற்றிய வளர்ச்சியேயாகும். மொழியியல் அறிவியல் துறையாக இன்றுதான் வளர்ந்து வருகிறது எனினும் பல நூற்றாண்டுகட்கு முன்னமேயே இலக்கணமும் மொழி ஆராய்ச்சியும் பிறந்துவிட்ட நிலையைக் காண்கிறோம். மனிதனின் வாழ்வோடு வாழ்வாய்ப் பின்னிப் பிணைந்துவிட்ட மொழி, மனித சமுதாயத்தில் தோன்றும் அறிவுக் கருத்துக்களும் ஆராய்ச்சி உண்மைகளும் காலம்கடந்து செல்ல உதவும் கருவியாக உள்ளது. எனவே, மனித வாழ்விலும் மனித நாகரிகத்திலும் மொழி யின் பங்கு மிகச்சிறப்பானதாகும்.

1.1. பண்டை கிரேக்கமும் இந்தியாவும்தான் மொழி ஆய்வில் முதன்மை வகித்தன எனக் கூறலாம். தொல்காப்பியமும் பாணினியமும் மிகப்பழமையான இலக்கண நூற்களாகும். கிரேக்க மொழியியலில் பிளேட்டோ, அரிஸ்டாட்டில், டயோனிசியஸ் திரேக்ஸ் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். குயிண்டிலியன் (Quintilian) டொனாட்டஸ் (Aelius Donatus) பிரிஸியன் (Prescian) ஆகியோர் ரோம இலக்கண வரலாற்றில் குறிப்பிடத்தக்க பேரறிஞர்கள். பண்டைக்கால மொழி ஆராய்ச்சி என்பது சொற்களின் பிறப்பு வரலாறு (etymology) பற்றியனவாக இருந்தது.

1.2. கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் இலத்தீன் மொழியைப் பற்றிய ஆராய்ச்சியும் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு மொழியைப் பற்றிய ஆராய்ச்சியும் நடந்தது. கி.பி. 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மைகிரேட் (Meigrat) இராபர்ட் எஸ்டின் (Robert Estienne), தியோடர் (Theodore) ஆகியோர் குறிப்பிடத்தக்க இலக்கண ஆசிரியர்களாவர். கி பி. 16. 17ஆம் நூற்றாண்டுகளில் கார், ஹுயூம் போன்றோர் ஆங்கில உச்சரிப்புப் பற்றி எழுதினர். இக்காலப் பகுதியில் ஆங்கில மொழியில் புதிய இலக்கணங்கள் தோன்றியது மட்டுமின்றி பிரெஞ்சு நாட்டில் தோன்றிய போர்ட் ராயல் நிலையமும் இலக்கண ஆராய்ச்சியில் ஈடுபட்டது. கி.பி. 16ஆவது நூற்றாண்டைச் சார்ந்த போஸ்டல், புஸ்மென், கெஸ்னர் உலகமொழிகளை வகைப்படுத்தும் முறையை ஆராய்ந்தனர். ஜெர்மன் நாட்டு அறிஞரான ஜான்காட்ரிபிரைட்வான் ஹெர்டர் (John gottrifried Von Herder) மொழிகள் மனிதனால் ஆக்கப்பட்டது என்றும் முதலில் தோன்றியது வினையே என்றும் குறிப்பிடுகிறார். ஹீப்ரு மொழியே மனித இனத்தின் முதல் மொழி என்றும் அதிலிருந்துதான் மற்ற மொழிகள் பிரிந்தன என்றும் சிலர் கருதினர். கி.பி. 18ஆம் நூற்றாண்டில் வில்லியம் ஜோன்ஸ் (William Jones) என்பவர் வடமொழி, ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் மொழியோடு தொடர்புடையது என எடுத்தியம்பி இந்தோ-ஐரோப்பிய மொழியினத்தை நிலைநாட்டினார்.

1.3. இன்றைய ஒப்பு மொழியியலுக்கும் வரலாற்று மொழியியலுக்கும் வித்திட்ட பெருமை ரஸ்க், ஜேக்கப் கிரீம், பிரான்ஸ் பாப் ஆகியோரைச்சாரும். ஹம்போல்டு அவர்கள் அமைப்புமுறை

ஆய்வில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர்கள் ஆராய்ச்சியில் பிறந்த ஒப்பு மொழியியலை கர்ட்டியஸ் சிலைட்சர், ஆகஸ்டுபிக் போன்றோர் வளர்த்தனர் எனக் கூறலாம். ஒலி விதிகள் விதி விலக்கு அற்றவை (Sound laws have no exceptions) என்ற புத்திலக்கணக் கொள்கையை (Neogrammarians' concept) கார்ல் புருக்மன், லெஸ்கியன், ஹெர்மன்பால் ஆகியோர் வளர்த்து அதில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தனர். 19 ஆம் நூற்றாண்டினை வரலாற்று ஒப்பீட்டு மொழியியலின் பொற்காலம் எனலாம்.

14. கி.பி. 20 ஆம் நூற்றாண்டில் பல்வேறு அறிஞர்கள் மொழியியலில் நாட்டம் செலுத்தினர். சசூர் அவர்கள் மொழியில் இரண்டு நிலைகளைக் காணலாம் என்றும் மொழியினைப் பேசும் மக்களிடம் காணப்படும் பொதுப்பண்பு (langue) என்றும் தனிப்பட்ட ஒருவரிடம் காணப்படும் தனிப்பண்பு (parole) என்றும் இவர் கூறியது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவற்றை இலக்கண ஆசிரியர்கள் மொழித்திறன் (competence) என்றும் வழக்குத்திறன் (performance) என்றும் வழங்குவர். கென்னத் பைக் (Kenneth Pike) அவர்கள் மொழிக் கூறுகளை புறக்கூறு (etic units) என்றும் அகக்கூறு (emic units) என்றும் இதையே மனதில் கொண்டு பிரிக்கிறார். மொழிகளுக்கும் அவற்றைப்பேசும் மக்களின் பண்பாட்டிற்கும் மிகுந்த தொடர்புண்டு என ஆய்வு செய்த மேயேயும் யெஸ்பர்ஸன் எழுதிய 'மொழியும் அதன் தோற்றமும்' இங்குக் குறிப்பிடத்தக்கவைகளாகும். பிராக் மொழியியல் கோட்பாடுகளை விளக்கிய ட்ரூபட்ஸ்காய், யாக்கோப்சன், கர்சவ்ஸ்கி, வாசெக் போன்றவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். 20 ஆவது நூற்றாண்டில் அமெரிக்க நாட்டில் அமைப்பு மொழியியல் வளரத் தொடங்கியது. போயஸ் (Franz Boas 1858–1942) சபீர் (Edward Sapir 1884–1939) புளூம் பீல்டு (Bloomfield 1887–1949) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மொழியியலில் மானிட மொழியியல் (Anthropological Linguistics), கணித மொழியியல் (Mathematical Linguistics), மொழிக்கணிதம் (Glossematics), மாற்றிலக்கணம் (Transformational grammar), சமூக மொழியியல் (Sociolinguistics), மாற்றிலக்கண எழுத்தியல் (Generative phonology) போன்ற துறைகள்

பல்வேறு நிலைகளிலும் வளர்ந்த வளர்ச்சியைக் காண்கிறோம். அமெரிக்காவில் மொழியியலை வளர்த்தவர்களே மானிடவியலாளர்கள்தான் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

2 0. மனிதனுடைய தொடக்ககாலத்திலிருந்து இன்றுவரை மனிதனைப் பற்றிய உருவத்தோற்ற, சமூக, பண்பாடு, பொருளாதார வளர்ச்சியைப்பற்றி ஆராய்வதே மானிடவியலாகும் மனிதன் தோன்றியதிலிருந்து இதுவரை அடைந்த மாறுபாடுகளை ஆராயும் மனிதத் தொல்லுயிரியல் (Human palaeontology) மனிதனைப்பற்றி ஆராயும் மானிட கூர்தலறம், இனக்குழுக்களின் உடலமைப்புக்கள், இரத்த அமைப்பு முதலியவற்றை ஆராயும் உருவத்தோற்ற மானிடவியல் (Physical anthropology), வரலாற்றிற்கு முற்பட்ட தொல்பொருளியல் (Prehistoric archaeology), மனிதப் பண்பாடு, மாற்றங்கள் முதலியவற்றை ஆராயும் பண்பாட்டு மானிடவியல் அல்லது சமூக மானிடவியல் (Cultural or Social anthropology) போன்றவைகள் மானிடவியலின் முக்கிய பெரும் பிரிவுகளாகும். ஆதிகாலத்திலும் வரலாற்றுக் காலத்திலும் வாழ்ந்த மனித இனத்தாரின் மொழிகளையும் அதிலேற்பட்ட மாற்றங்களையும் கொண்டு பல்வேறு பண்பாட்டுக் குழுக்களின் பண்புகளை ஆராய முற்படும் மொழியியல், அதன் கிளைப்பிரிவாகும். மானிடவியலானது பொதுவாக எழுத்தறிவிற்கு முற்பட்ட பழங்குடி மக்களின் பண்பாட்டினை ஆராய்வதுடன் அமைகிறது.

2.1. மானிட சமூகத்தின் பரிணாமம், வளர்ச்சி, இனம், பாரம்பரியம் முதலியவற்றில் உண்டாகும் மாறுதல்களை ஆராய்வது உடல்தோற்ற மானிடவியலாகும் (Physical anthropology) மானிட அளவியல் (Anthropomentry) எனும் ஆய்வு, சர் பிரான்சிஸ் கால்ட்டன் (Sir Francis Galton)நிறுவிய உயிரளவியல் Biometrics) கால்ட்டனும் ஹென்றியும் கண்டுபிடித்த கைரேகை முறை (Finger Print system), மென்டல் (Mendae), மார்கன் (Morgan) ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்ட மானிடப் பிறப்பியல் (Human genetics சம்பந்தமான உயிரின பாரம்பரிய விதிகள் (laws of heredity போன்றவைகள் மானிடப் பாரம்பரியத்தை விளக்குகின்றன. மானிடவியலின் வளர்ச்சியின் காரணமாக மனித இரத்தத்தை O, A, B, AB என்ற நான்கு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். மானிட

வியலார் உடலுறுப்புத் தோற்றத்தினாலும் அளவினாலும் மேற்கண்ட முறைகளினாலும் மனிதவருக்கத்தைப் பல இனங்களாகப் பிரிக்கின்றனர்.

2.2. மனிதன் பரிணாமத்தால் அடைந்த சில தேர்ச்சிகளால் இயற்கைப் பொருட்களைக் கையாள்வதோடு செயற்கைப் பொருட்களையும் செய்து கையாண்டு வந்தான். இவ்வாறு மனிதன் செய்து கொண்ட பொருள்களையும் அவைகளின் மூலம் அவ்வாறு வாழ்ந்த மனித வாழ்க்கையையும் பண்பாட்டையும் தொல் பொருளியல் விளக்கும். பழங்காலத்தில் உணவுப் பொருட்களைச் சேகரித்தும் வேட்டையாடியும் வாழ்ந்த மனிதன், புதிய கற்காலத்தில் உணவு உற்பத்தி செய்யவும் பானை செய்யவும் ஆடை தயாரிக்கவும் கற்றுக்கொண்டான். புதிய கற்காலத்தில் சமூக அமைப்புக்கள் சிறுசிறு கிராமங்களாக யிருந்ததுடன் தொழில் வளர்ச்சியும் போக்குவரத்தும் அதிகரிக்க அதிகரிக்க நாகரிகமும் ஏற்பட்டது.

2.3. மனிதனுடைய சமூக வாழ்க்கைக்குப் பண்பாடு அடிப்படையானது. சமூக அமைப்பும் பண்பாடும் மனிதனின் சூழ்நிலையையொட்டி வளர்ச்சியடைந்திருந்த போதிலும், மனிதன் மட்டுமே தன் சூழ்நிலையைத் தன் தேவைகளுக்கேற்றவாறு அமைத்துக்கொள்ளும் ஆற்றல் உடையவனாக இருக்கிறான். சமூகத்தின் பழக்கவழக்கங்கள் சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள், விதி விலக்குகள் ஒன்றுசேர்ந்த சமூகப் பண்பாடு, மனிதனைப் பின்பற்றும்படிச் செய்கிறது. மனிதன் தன் சமூகத்தின் அங்கமாகத் தான் கற்றவைகளைத் தன் இனத்தாருக்கும் சந்ததியாருக்கும் கற்பிப்பதையே பண்பாடு எனலாம். இவ்விதம் சமூக வாயிலாகக் கற்றுக் கொண்டு பிறருக்குக் கற்பித்துக் கொடுக்கும் கற்றுப் பயிலும் நடத்தையே (learned behaviour) பண்பாடாகும். இத்தகைய நடவடிக்கை சமூகத்தின் சில முக்கிய அமைப்புக்களில் நிலைத்திருக்கிறது இவ்வித அமைப்புக்களில் சமூக – பொருளாதார, அரசியல் அமைப்புக்கள் முக்கியமானவையாகும்.

3.0. மொழியியலாளர்கள் சிலர் மொழியை அடிப்படையாக வைத்து மனித வரலாறு, சமூக வாழ்வு போன்றவற்றை ஆராய்கின்றனர். மனிதனுடைய சமூகப் பழக்க வழக்கங்களில் மொழி

பேசும் பண்பும் ஒன்று. ஒரு மொழியில் காணப்படும் சொற்கள், அதன்கண் காணப்படும் அமைப்புமுறை போன்றவை அம்மொழி பேசுவோனுடைய வாழ்வையும் வரலாற்றையும் சமூகக் கோப்பையும் பிரதிபலித்து நிற்பது உண்டு மலைகளில் வாழும் பழங்குடி மக்களது மொழியில் மரங்கள் விலங்குகள், காய்கள், கனிகள் போன்றவற்றைக் குறிக்கும் பல்வேறு சொற்களைக் காணலாம். ஏற்றத்தாழ்வுகள் பலவற்றைக் கொண்ட சமுதாயத்தினரின் பேச்சு அவற்றைக் காட்டும் மொழிநிலைகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம். இத்தகைய நிலையை உள்ளத்தில் கொண்டு மொழியை அடிப்படையாக வைத்து மனிதனின் சமுதாயத்தை ஆராய்கின்றனர் சமூக மொழியியல் அறிஞர்கள். மொழியைப் பற்றிய அறிவால் மொழியின் அமைப்பையும் ஆக்கத்தையும் ஆராய்வது மொழியியல் அறிஞனின் (linguist) தொழில். மொழியை மையமாக வைத்து மனித வரலாற்றை ஆராய்வது மானிட மொழியியல் அறிஞனின் (Anthropologial linguist) தொழில். இது போன்றே மொழியின் துணைகொண்டு சமூகத்தின் தன்மைபற்றி ஆராய்வது சமூக மொழியியலாளரின் (Sociolinguist) தொழில். இத்தகைய ஆராய்ச்சித் துறைகளை முறையே மொழியியல் (Linguistics), மானிட மொழியியல் (Anthropological linguist), சமூக மொழியியல் (Sociolinguistics) என அழைப்பர். 19 ஆம் நூற்றாண்டில் மானிடவியல் வளராத நிலையில் பிந்திய இரண்டையும் இணைத்து 'Ethnological philology அல்லது Linguistic ethnology என்று அழைத்து வந்தனர். லூயி (Louie), குரோபர் (Kreobar), எமனோ (Emeneau) போன்றோர் மொழியியல் சார்ந்த மானிடவியல் (Linguistic Anthropology) என அழைக்கின்றனர். வோகலின் (Voegelin) போன்றோர் மானிட மொழியியல் (Anthropological linguistics) என அழைக்கின்றனர். சிலர் metalinguistics என்றும் Linguistics in anthropology என்றும் அழைப்பர். இன்னும் சிலர் இதனை இன மொழியியல் (Ethnolinguistics) என அழைப்பர். இவ்வியல் மொழியைப் பற்றிய அறிவினை மட்டுமின்றி அம்மொழி பேசும் மக்களின் பண்பாட்டையும் அறிவதற்குத் துணையாக உள்ளது. குறிப்பாக பழங்குடி மக்களின் வாழ்க்கையையும் வாழ்க்கை வளர்ச்சியையும் அறிய இது மிகத்துணை புரியும்.

மொழிநூல் ஆய்வினின்றும் முகிழ்த்ததே ஐரோப்பிய மொழியியல். அமெரிக்க மொழியியல் மானிடவியலைச் சார்ந்த பிரிவாகவே வளர ஆரம்பித்தது. அமெரிக்க நாட்டு மானிடவியல் மாணவர்களனைவரும் மொழியியலைக் கற்று அம்மொழி பேசும் மக்களது பண்பாட்டினை ஆராய இஃது இன்றியமையாதது என எண்ணுகின்றனர். போயஸ் போன்றோர் வரலாற்று மொழியியலைக் காட்டிலும் விளக்க மொழியியலில் (Descriptive Linguistics) ஈடுபாடு கொண்டனர் அதன் விளைவாக மொழிக்கும் பண்பாட்டிற்குமுள்ள உறவைக் காணும் முயற்சியில் ஈடுபட்டனர். மானிட மொழியியல் மொழி ஆராய்ச்சியில் மட்டுமின்றி, பண்பாட்டை உருவாக்குவதிலும் சிந்தனையை வளர்ப்பதிலும் மொழிக்குள்ள ஈடுபாட்டையும் ஆராய்கின்றது மானிடவியல் மனித வரலாற்றைப் பற்றி ஆராய்வது; மொழியியல் அம்மனிதனது பேச்சைப்பற்றி ஆராய்வது. மானிட மொழியியலானது மொழியை மையமாக வைத்துப் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கங்களைப் பற்றி ஆராய்கிறது. மொழியியல் மொழியை மொழி நோக்கில் ஆராய்வது; மானிட மொழியியல் மொழியை மனித நோக்கில் ஆரய்வதாகும். ஐரோப்பிய நாட்டில் இலக்கிய மொழிபற்றி ஆராயும் ஆராய்ச்சிதான் மொழியியல் எனக் கருதப்பட்டது. ஆனால், அமெரிக்க மொழியியல் அறிஞர்கள் எழுத்துருவமற்ற பழங்குடி மக்களால் பேசப்படுகின்ற அமெரிக்க இந்திய மொழிகளைப் (American Indian Languages) பற்றி ஆராய்வதிலும் அமெரிக்க இந்தியர்களின் வாழ்க்கை, வரலாறு, நாகரிகம் போன்றவற்றிலும் நாட்டம் செலுத்தினர். இவர்கள் இம்மொழிகளை ஆராய்வதற்குச் சில முறைகளை உருவாக்கியதோடு தனியொரு மொழியியல் துறையும் உருவாக்கினர். இதனை மானிட மொழியியல் என்பர். எழுத்து வழக்கற்ற பேச்சு வழக்கிலுள்ள பழங்குடி மொழிகளை ஆராய்ந்து, அவற்றின் மொழியமைப்பையும் அவற்றின் வாயிலாக அம்மக்களின் வாழ்க்கை, வரலாறு, பண்பாடு, நாகரிகம் போன்றவற்றையும் கண்டு ஆராய்வதே மானிட மொழியியல் எனக் குறிப்பிடுவர்.[1] அம்மொழி பேசுகின்றவர்களையே

1 Anthropological Linguistics may briefly be defined as an area of linguistic research which is devoted in the main to studies, synchronic and diachronic of the languages of people who have no writing.

தகவலாளர்களாக வைத்து, அவர்களிடமிருந்து செய்திகளைச் சேகரித்து, அம்மொழிக்கு விளக்க இலக்கணங்கள் (Descriptive Grammars) எழுதத் தலைப்பட்டனர் எழுத்துருவமற்ற பழங்குடி மக்கள் பேசுகின்ற மொழிகளைப்பற்றி ஆராய்கின்ற ஆராய்ச்சி இன்று வளர்ந்திருக்கக் காணலாம். அமெரிக்க- இந்திய மொழிகளைப் பற்றி பவல் (J.W. Pawell), போயஸ் (F. Boas), சபீர் (Sapir) மக்குவன் (N. A. Mcquown), பைக் (K.L. Pike), வோகலின் (C. F. Voegelin) போன்ற அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர் இந்தியாவில் பேசப்படும் திராவிடப் பழங்குடி மொழிகளைக் குறிப்பாக சுதிபூஷண் பட்டாச்சாரியா, எமனோ, பர்ரோ (Burrow) போன்றோரும் ஆஸ்டிரோ-ஆஸ்டிரிக் மொழிகளைப்பற்றி கூய்ப்பர், பின்னோ, நார்மன் ஜெய்ட் (Norman Zide) போன்றோரும் திபெத்தோ-பர்மிய மொழிகளைப்பற்றி இராபர்ட் ஷாபர், ஹட்டன், போன்றோரும் ஆராய்ந்துள்ளனர். இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக கிரியர்ஸன் (Grierson) அவர்கள் இந்திய மொழிகளனைத்தையும் ஆராய்ந்து, பதினொன்று தொகுதிகளாக Linguistic Survey of India) என்ற நூலை வெளியிட்டார்கள்.

இத்தகையதொரு ஆராய்ச்சிக்கு அடிப்படையாக விளங்கிய முன்னோடிகள் மானிடவியல் பேரறிஞர்கள் போயஸும் (Boas) சபீரும் (E. Sapir) ஆவர். இவர்களது வாழ்க்கை வரலாற்றை அறிவதே மானிட மொழியியலைப் பற்றி அறிவது போன்றதாகும். ஒவ்வொரு மொழியும் ஒலி அமைப்பும் இலக்கண அமைப்பும் என இரண்டு வகை அமைப்புக்களைக் கொண்டது என்றும் அம்மொழியை ஆராயும்பொழுது அம்மக்களின் பண்பாடு வெளிப்படுகிறது என்றும் போயஸ் கருதினார். ஒவ்வொரு மொழிக்கும் இலக்கணக் கூறுகள் தனித்தனியே அமைந்துள்ளன என்றும் மற்ற மொழியின் கூறுகளை மனதில் நினைத்து, அம்மொழி

Anthropological linguist because he finds no written literature or early records for languages he seeks to describe must secure his own corpus of utterances directly from the native speakers.

— Harry Hoijer 'Anthropological Linguistics', in *Trends in European and American Linguistics*, 1930-1970, P. 110.

களை ஆராயக் கூடாது என்றும் கூறினார். போயஸ் எழுதிய அமெரிக்க இந்திய மொழிகளைப் பற்றிய நூல் (Hand book of American Indian languages) மிகச் சிறந்த நூலாகக் கருதப்படுகின்றது அமெரிக்க மொழியியலின் தோற்றத்திற்கும் அது அறிவியல் அடிப்படையில் அமைவதற்கும் முதல் காரணமாக அமைந்தவர் போயஸ் ஒரு மொழி பேசுகிறவர்களையே தகவலாள ராக வைத்து, அவர்களிடமிருந்து தகவல் சேகரித்துப் பழங்குடி மொழிகட்கு இலக்கணம் எழுதி வெற்றி பெற்ற பெருமை போயஸை யும் சபீரையும் சாரும். அமெரிக்க மொழியியல் அறிஞர்களில் தலைசிறந்தவராகக் கருதப்படுபவர்களுள் எட்வர்ட் சபீரும் ஒருவர். இவருக்கு மொழியியல், மானிடவியல், உளவியல் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு உண்டு சினூக், யானா, திலின் கித், நோட்கா, சார்சே, இங்காலிக், கூபா, நாவகோ, தென்பையூட் போன்ற பலவற்றிற்குச் சிறந்த இலக்கணம் அமைந்துள்ளார். நோட்கா மொழி பற்றி ஆராய்ந்த பொழுது இவரது இனவியல் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது. அமெரிக்க இந்திய மொழிகளைப் பற்றி பல ஆண்டுகள் ஆராய்ந்த இவர் அவற்றை இன அடிப்படையில் (genetic classification) வகைப்படுத்தினார். இவர் மொழியியலில் எழுதாத துறையே இல்லை எனலாம். மொழி மாற்றம், பிற மொழிகளுடன் உறவாடும் பொழுது ஏற்படும் செல்வாக்கு, கிளை இன மொழிகளாக உருவாகும் போது ஏற்படும் மாற்றம் போன்ற பல கூறுகள் பற்றி சபீர் எழுதியுள்ளார். இவர்கள் இருவரும் செய்த ஆய்வின் பயனாக மொழியியல் கோட்பாட்டில் தெளிவும் ஆராயும் முறைகளில் செறிவும் ஏற்பட வாய்ப்பேற்பட்டது. அமெரிக்க இந்திய மொழிகள் என்ற நூலில் எழுத்துருவமற்ற மொழிகளின் இலக்கணங்கள் எவ்வாறு அமையவேண்டுமென்றும் குறிப்பிட்டு தான் ஆராய்கின்ற மொழியை மற்ற மொழிகளின் இலக்கண அமைப்பை மனதில் நிறுத்திக் காணக்கூடாது என்று கூறுகின்ற இவரது கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது.[2] மொழியினுடைய

2 Boas established the basic principle that each language is to be described not in terms of its preconceived standard but in terms of its own from native texts.

— Harry Hoijer 'Anthropological Linguistics' In *Trends in European and American Linguistics 1930-1960*.

அமைப்பை ஆராய்வது மொழியியலாரின் வேலை என்றும் அம் மொழி பேசுவோரின் நாகரிகத்தின் ஒரு கூறே மொழி என்றும் அவனுடைய நாகரிகத்தை மையமாக வைத்து சமுதாய நிலையைப் பின்னணியாகக் கொண்டு மொழியை ஆராயவேண்டுமென்று கருதியதாகக் குறிப்பிடுவர்.[3] இவர்களுடைய ஆய்வினால்தான் பழங்குடி மொழிகளும் ஆராயப்படத்தக்கநிலை முதலில் உண்டாயிற்று. மற்ற இலக்கிய மொழிகளில் காணப்படும் ஒலி, இலக்கண மாற்றங்கள் அனைத்தும் அமெரிக்க இந்திய மொழிகளிலும் காணலாம் என்றும் இம்மொழிகளும் மூப்பு மொழியியல் ஆராய்ச்சிக்கு உகந்தவை என்றும் எடுத்துக்காட்டினார்கள். மற்ற மொழிகள் போன்று இம்மொழிகளையும் இன அடிப்படையில் வகை செய்தனர். பண்பாட்டின் வரலாற்றை அறிவதற்குறிய சான்றுகள் இல்லாதபோது, முடிந்த முடிவுக்கு வர மொழியியல் சான்றுகள் அரணாக அமைகின்றன. மொழி வரலாற்றை ஆராயும் பொழுது நாகரிக வரலாறும் தெள்ளத் தெளிவாக விளங்கும். மொழியின் சொற்பொருள் ஆராய்ச்சி பண்பாட்டின் துணையின்றி முழுமை பெறாது என கிரின்பெர்க் (Greenberg) சுட்டிக் காட்டுகிறார். மொழியின் சொற்கோவை (Vocabulary) மொழியியலாளர்கட்கு மட்டுமின்றி இனவியலாளர்கட்கும் (Ethnologist) பெரிதும் பயன்படும் வரலாற்று மீளுருவாக்கம் (Historical reconstruction) மானிடவியலுக்கும் மானிட மொழியியலுக்கும் பெரிதும் பயன்படுகின்றது.

3.1. சொற்கோவைப் புள்ளியியல் அல்லது மொழிக் கால வரையறையியல் (Glottochronology or Lexico statistics) என்றழைக்கப்படுகின்ற துறை மானிட மொழியியலின் ஒரு கூறாக

3 Formal linguistic descriptions and analyses were, for Sapir, only the beginning of the linguist task. For he under stood linguistics as a special science and every language as one aspect of a whole culture In his writing and teaching he stressed the importance of dealing with the phonomena of language in the culture context, of studying speech in its social setting.

— Harry Hoijer 'Anthroplogical Linguistics' in *Trends in European and American linguistics* 1930–196g, p. III.

வளர்ந்தது.[4] சபீரின் மாணவரான சுவாடாஷ் (Marris Swadesh) என்பவரால் உருவாக்கப்பட்ட இத்துறை மொழியியல் துறையின் ஒரு பகுதியாக வளர்ந்துள்ளமை காணலாம். ஒரு இன மொழி களிடையே காணப்படும் மொழியியல் கூறுகளிடையே வேற்றுமை கள் அதிகமாக இருக்குந்தோறும் அவை தொல் மொழியிலிருந்து பிரிந்த காலமும் அதற்கேற்ப அதிகமாக இருக்கும். இந்தத் தத்துவத் தின் அடிப்படையில் எழுந்ததுதான் சொற்கோவைப் புள்ளியியல் எனலாம். இது மூல மொழியினின்றும் இன மொழிகள் பிரிந்த காலத்தை அம்மொழிகளது மாற்றத்தின் அடிப்படையில் கணிக்கும் முறையாகும். இச் சொற்கோவைப் புள்ளியியல் சில அடிப்படையின் மீது உருவாக்கப்பெற்றது எனலாம். ஒரு மொழியிலுள்ள அடிப் படைச் சொற்களை (Basic Vocabulary) கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்வடிப்படைச் சொற்கள் எல்லா மொழிகட்கும் பொதுவானதோடு ஏனைய தொகுதியைவிட நிலைப்பாற்றல் மிக்கது மாகும். இவ்வடிப்படைச் சொற்களை அடிப்படையாகக் கொண்டு தான் காலவரையறை செய்கின்றனர். இவ்வடிப்படைச் சொற்களை முழுமையும் ஆராய்ந்தால் 1000 ஆண்டுகளில் 86 சதவிகிதமே ஒரு மொழியில் பழஞ்சொற்கள் பாதுகாக்கப்பட்டிருக்கும் இரண்டாயிரம் ஆண்டென்றால் கிட்டத்தட்ட 66 சதவிகிதம் அம்மொழியில் இருந்து வரும். இந்த விகிதத்தைப் பாதுகாப்பு விகிதம் (Rate of retension) எனக் கூறுவர். சுவாடாஷையொட்டி ராபர்ட் லீஸ், சாரா குட்சின்ஸ்கி (Sarah Gudschinsky) லூன்ஸ்பரி (Floyd Lounsbury) போன்ற அறிஞர்கள் இத்துறையில் ஆராய்ந்துள்ளனர். ஆந்த்ர னோவ்(Andronov) அவர்கள் திராவிட மொழிகள் பிரிந்த காலத்தை இவ்வடிப்படையில் ஆராய்ந்துள்ளார். காலச் சான்றுகள் எதுவு மில்லாத மொழிகளிடையே காணப்படும் மாற்றங்களை அறிய துணையாகயிருப்பினும், இத்துறை இன்னும் வளரவில்லையென்றே கூறலாம்.

---

4 One of the more interesting developments in Anthropological linguistics during the recent times is Glottochronology or Lexico statistics.

— Harry Hoijer 'Anthropological Linguistics' in *Trends in European and American Linguistics*, 1930-1960.

4.0. மானிடவியலாளர்கள் மனித இனத்தை இனம், மொழி, பண்பாட்டின்கீழ் ஆராய்ந்து வருகின்றனர். சமுதாயத்துக்கும் மொழிக்கும் தொடர்பு இருப்பதுபோன்று பண்பாட்டிற்கும் மொழிக்கும் தொடர்புண்டு. மனிதன் இல்லையேல் மொழியில்லை. மொழியில்லையேல் சமுதாயமில்லை. சமுதாயம் இல்லையேல் இனமில்லை. இனம் இல்லையேல் பண்பாடு இல்லை. இனம் (Race) என்ற சொல் பல பொருள்பட எடுத்தாளப்படுகின்றது. சில சமயங்களில் நாட்டுமக்கள் என்று பொருள்படுமாறு இச்சொல் வழங்கப்படுகின்றது. பிரெஞ்சு இனம், சீன இனம், அமெரிக்க இனம் என்று பேசுவதைக் காண்கிறோம். ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இனம் என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட இடத்திலுள்ள மொழி, சமயம், சமூகம், அரசியல், பொருளாதார நிறுவனங்களால் கட்டுண்டு செயல்படும் மக்கள் கூட்டத்தையும் 'இனம்' என்னும் பெயரால் சுட்டுகின்றனர்.[5] இப்பொருளிலேயே பண்டை கிரேக்கரும் யூதரும் தனி இனத்தவர்களாகக் கருதப்பெற்றனர். உண்மையில் உடற்கூற்றுப் பண்பினால் ஒன்றாகயிருக்கின்ற குழுவினர்கள் ஏனைய குழுவினர்களிடமிருந்து மாறுபட்டிருப்பதால் இனம் என்ற பெயர் பெறுகின்றனர். உடற்கூற்று மாற்றங்கள் உண்மையெனினும் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இனம் என்ற கருத்து கோட்பாட்டளவான கருத்துப் பொருளேயாகும். இன்னும் சற்று விரிவாக கூறவேண்டுமானால் தோல், மண்டை ஓடு, கண்மணி, உதடுகளின் அமைப்பு, தலைமுடி ஆகிய உடற்கூற்றுப் பண்புகளின் வேற்றுமைகளைக் கருத்தில்கொண்டு இனப்பாகுபாடு செய்யப்பெறுகிறது.

மானிடவியல் பேரறிஞர் டாக்டர் குஹா அவர்கள் இந்தியாவிலுள்ள மனித வர்க்கத்தை ஆறு இனங்களாகப் பிரித்துள்ளார்:

1. நீக்ரிட்டோ (Negrits)
2. பழைய ஆஸ்திரேலிய இனம் (Proto Australoid)
3. மங்கோலிய இனம்
   அ) பழைய மங்கோலாயிடு இனம்
   ஆ) திபெத்திய மங்கோலாயிடு இனம்

5 Metranx Guy and Crouzet Francois *Studies in the Cultural History of India*, Agra, 1965 p 187.

4. மத்தியதரைக்கடல் இனம்
5. மேல்நாட்டு அகன்ற மண்டையர் இனம்.
(Western Brachycephals)
 அ) அல்பினாயிட் (Alphinoids)
 ஆ) டினாரிக்ஸ் (Dinarics)
 இ) ஆர்மினாயிட் (Armenoids)
6. நார்டிக் இனம் (The Nordics)

இந்தியாவின் இனப்பிரிவுகள் மொழிப் பிரிவுகளுடன் பொருந்துவதில்லை. மொழிகளும் சமூகப் பழக்க வழக்கங்களும் உறவினால் பெறப்படுதலால் மாற்றத்திற்கு உரியவையாகும் ஆனால், வாழுகின்ற இடங்களுக்கும் மொழிகட்கும் சிறிதளவே தொடர்பு உள்ளது. ஒவ்வொரு மொழிக்குடும்பத்திலும் பற்பல இனத்தவர்கள் இருக்கின்றனர். இவ்வினப் பிரிவுகள் மொழிக் குடும்பத்தோடு இணைந்தவையல்ல. உதாரணமாக திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் நீக்ரிட்டோ இனப் பிரிவினரான காடர், புலையராலும் ஆஸ்திரேலிய இனத்தைச் சார்ந்த செஞ்சுக்களாலும் பேசப்படுகின்றன. ஆஸ்டிரிக் மொழிகளோ அஸ்ஸாமிலிருக்கும் பழைய மங்கோலிய இனத்தவரன்றி முண்டா, சந்தால், ஹோவினருக்கும் மலேயாவிலுள்ள சிமாங்க், சகாய் மக்கட்கும் தாய்மொழிகளாக உள்ளன. மனித இனத்தை அவர்கள் பேசும் மொழியினை அடிப்படையாகக்கொண்டு மொழிவழி இனங்களாகப் பாகுபாடு செய்கின்றனர். மொழிப் பாகுபாட்டிற்கும் இனப்பாகுபாட்டிற்கும் தொடர்பில்லை. 'திராவிடர்' என்ற சொல்லை மொழிவழி வாழ்வோரைக் குறிக்கும் சொல்லாகக் கருதவேண்டும். இந்தியாவிற்கு வந்து குடியேறிய முதலினம் நீக்ரிட்டோக்கள். மத்தியதரைக் கடல் இனத்தைச் சார்ந்த திராவிடர்கள்தாம் இந்தியாவிற்கு முதன் முதலில் வந்தவர்களென்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். ஜீன் பிரிஸிலுஸ்கி (Jean Przylushki) போன்ற அறிஞர்கள் 'திராவிடம்' 'ஆஸ்டிரிக்' போன்ற சொற்கட்கு இனப் பொருளைத் தருவது அவ்வளவு ஏற்புடைத்தன்று எனக் கூறுகின்றனர். இனமும் மொழியும் வளர்ச்சியிலும் உறவிலும் வெவ்வேறாக உள்ளன. எனவே, மொழியையும் இனத்தையும் (Race and language) தொடர்புபடுத்திக்காட்ட இயலாது.

5.0. இந்தியாவின் பண்பாட்டினை அறிய சாதி, குடும்ப அமைப்பு, மொழி ஆகிய இம் மூன்றினையும் அறிதல் இன்றியமையாததாகும். ஒரே மொழிப் பிரிவைச் சார்ந்த அகமணப் பகுப்புடைய பிரிவைச் சாதி என்பர். இரத்தக்கலப்பாலும் பெற்றோர் கால்வழியாலும் மண உறவினாலும் ஒரே இடத்தில் வாழும் தன்மையாலும் உறவுமுறை அமைகிறது. சமுதாயத்தில் சமுதாய நடைமுறை அடிப்படையிலிருந்து எழுவதுதான் உறவுமுறைப் பெயர்கள் (Kinship terms) என டாக்டர் ரிவர்ஸ் (Rivers) கருதுகிறார். ஓரின மக்களின் பண்பாட்டு வரலாற்றை அறிவதற்கு உறவு முறைப் பெயர்கள் பெரிதும் பயன்படுகின்றன என டாக்டர் ஐராவதி கர்வே (Iravathi Karve) அவர்கள் கூறுகிறார்கள். உறவுமுறை அமைப்பு சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்ட உறவு நெறிகளுக்கு உட்பட்டனவாக இருக்கும். சமுதாய அமைப்பின் கூறுகளைப் பெரிதும் தெளிவுபடுத்துவதாகவும் அமைகின்றது. உறவுமுறைச் சொற்களை மொழியியல், இனவியல், சமூகவியல், உளவியல் கண்ணோட்டங்களில் ஆராயலாம். உறவுமுறைச் சொற்களுக்கும் சமுதாய அமைப்பிற்கும் தொடர்பு இருப்பதாகப் பிரவுன் என்பவர் கருதுகிறார். உறவுமுறைச் சொற்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது குரோபர் மொழியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். வம்சா வழித் தொடர்பாலும் சொந்தத்தினால் உண்டாகும் கடமையாலும் உறவுமுறை வரையறுக்கப்படுகின்றது. உறவுமுறைப் பாகுபாடுகள், தாய் தந்தையர் மூலம் உள்ள உறவுகள், மணவினை காரணமாக எழும் உறவுகள் ஆகியவற்றை இவற்றில் அடக்கலாம்.

1. குடும்ப முறையைக் குறிப்பவை
2. விளக்க முறையைக் குறிப்பவை
3. பாகுபாட்டு முறையைக் குறிப்பவை என உறவு முறையைப் பகுக்கலாம்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், இங்கிலாந்திலும், அமெரிக்க நாட்டிலும் குடும்பம் என்பது பெற்றோரையும் குழந்தைகளையும் கொண்ட சமூக அமைப்பாகும். இத்தகைய சமூகங்களில் தாய், தந்தை, மகன், மகள், சகோதரன், சகோதரி என்ற சொற்கள்

குடும்பத்திலுள்ள அங்கத்தினர்களைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. மற்ற உறவினர்களை அன்கிள் (uncle) ஆன்ட் (aunt) கசின் (cousin) நெவ்யூ (nephew) என்னும் பிரிவுக்குள் அடக்கிவிடுகின்றனர். இவர்களைக்குறிக்க தனிச்சொற்கள் இல்லை. இத்தகைய உறவுமுறை சுட்டுமுறை (Denotative system) என்று வழங்கப்படுகின்றது. குடும்ப உறவு முறைச் சொற்கள் குடும்பத்தில் இல்லாத மற்ற உறவினர்களைக் குறிப்பதாகும். அரபு மொழி பேசும் மக்களிடையே தந்தையின் சகோதரனை 'அம்' என்றும் அவர் மனைவியை இம்ராத் அம்மி' என்றும் தந்தையின் சகோதரனுடைய புதல்வனை 'இபின் அம்மி' என்றும் தந்தையின் சகோதரனுடைய புதல்வியை 'பிந்து அம்மி' என்றும் கூறுவர். சமூகத்தில் பொதுவான கடமைகளையுடைய உறவினர்களை ஒரே சொல்லால் குறிப்பிடுகின்றனர். இத்தகைய முறையைப் பாகுபாட்டு முறை என்பர். தமிழ் நாட்டில் தந்தையின் மூத்த சகோதரரை 'பெரியப்பன்' என்றும் தந்தையின் இளைய சகோதரரை 'சித்தப்பன்' என்றும் அழைப்பர். தாய் மாமன் மகளை மணந்து கொள்ளும் வழக்கமிருப்பதால் மனைவியின் தந்தையையும் தாயின் சகோதரனையும் 'மாமன்' என்ற சொல்லால் அழைக்கிறோம்.

தென்னிந்தியாவிலுள்ள உறவுமுறை அமைப்பினையும் குடும்ப அமைப்பினையும் நுணுகி ஆராய்ந்தால், பெரும்பாலானோர் பழங்குடிகள் உட்பட தந்தைக் கால்வழியமைப்பினையும் (patrilineal) சிலர் தாய்க்கால்வழியமைப்பினையும் (matrilineal) பின்பற்றுபவர்களாக உள்ளனர் என அறியலாம். கால்வழி சமஸ்கிருதத்தில் 'கோத்ர' என்றும் கர்நாடகாவில் 'பெடகு' என்றும் கோத்தர் பழங்குடிகளிடையே 'கேரி' என்றும் குறும்பரிடையே 'கும்பு' என்றும் தெலுங்கரிடையே 'இண்டிபேரு' என்றும் மலையாளிகளிடையே 'இல்லம்பேரு' என்றும் அழைக்கப்படுகின்றது. திருமணத்தினால் குடும்பங்களிடையே பண்பாட்டு உறவை உருவாக்குவது உறவுமுறை. அத்தகைய உறவுமுறையைப் பண்பாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுதான் விளக்கமுடியும். தமிழில் தந்தையைக் குறிக்கும் உறவுமுறைச் சொற்களாக கீழ்க் கண்டவற்றைக் குறிப்பிடலாம்.

i) தந்தை, எந்தை, முந்தை
ii) அய், அய்யன்
iii) அப்பா, தகப்பன்
iv) அண்ணன், அண்ணா
v) அத்தன், அச்சன்
vi) அம்மான்

'தந்தை' என்ற சொல் மற்ற திராவிட மொழிகளிலும் காணப்படுகின்றது.

தந்—தை
எந்—தை
முந்—தை

'தந்தை' என்ற சொல் திருவாசகத்தில் காணப்படுகின்றது. தந்தை என்ற சொல் பிராகிருத மொழியிலுள்ள தாய் என்ற சொல்லினின்றும் பிறந்ததாக ஐராவதி கர்வே குறிப்பிடுகின்றார். 'அண்ணா' என்ற சொல் பொதுவாக மூத்த சகோதரரைக் குறிக்கும். ஆனால், இலக்கியத்தில் 'அண்ணா' என்ற சொல் தந்தையைக் குறிப்பிடுவதாகும். (எம் அண்ணா போற்றி, திருவாசகம் 4. 149, 33-36). தாயைக் குறிக்கும் சொற்களாக

i) தாய், தாயி
ii) ஆயி, ஆயாள், ஆய்
iii) அன்னை, தம்மன்னை
iv) அம்மா, அம்மாள்

ஆய், ஆயி, ஆயாள் என்ற சொற்கள் வடமொழி 'ஆர்ய' என்ற சொல்லினின்றும் பெறப்பட்டதாகும். அன்னை, தம்மன்னை, அம்மா, அம்மான் போன்ற சொற்கள் வழக்கில் உள்ளன. அம்மா என்ற சொல் கன்னட, மலையாள, தெலுங்கு மொழிகளிலும் உள்ளது. இளைய சகோதரரைக் குறிக்க தம்பி, எம்பி என்ற சொற்களும் வழக்கில் உள்ளன.

தம் + பி
எம் + பி

tarpin → i) tar > tam
ii) tam + pin > tampin
iii) tampi (n → ϕ)

மனைவியைக் குறிக்கும் உறவுமுறைச் சொற்களாக

அகமுடையாள்
மனைவி
ஆத்துக்காரி
பெண்டாட்டி
பெண்சாதி
பெண்ட்லாமு (தெலுங்கு)
ஹெண்டதி
எணிதி (கன்னடம்)

காணப்படுகின்றன. கணவனுடன் பிறந்த சகோதரனின் மனைவியை 'ஓர்பிடியாள்' எனக் குறிப்பிடுவர். திருமண உறவால் ஏற்படும் உறவை 'உறவின் முறையர்' என்றும் திருமணமாகப் போகும் உறவுப் பெண்ணையோ ஆணையோ 'முறைப்பெண்', 'முறை மாப்பிள்ளை' என்றும் குறிப்பிடுவர்.

உறவு முறையால் எழும் கடமைகள் மாறும்போது, அவை பற்றிய சொற்களும் மாறுகின்றன உறவுமுறைச் சொற்களைக் கொண்டு முற்காலத்திய சமூக நிலையை அறிந்து கொள்ளலாம். இவ்வாராய்ச்சி மார்கன் என்பவரால் தொடங்கப்பட்டு, ரிவர்ஸ் என்பவரால் அறிவியல் முறையில் வளர்ச்சியடைந்தது. டாக்டர் ஐராவதி கர்வே அவர்கள் 'இந்தியாவில் உறவுமுறை அமைப்பு' (Kinship organisation in India) என்ற நூலில் தென்னிந்திய உறவுமுறைச் சொற்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். தென்னிந்திய உறவுமுறை அமைப்பில் அடிப்படை ஒற்றுமைகள் உள்ளன என்றும் அவ்வுறவு முறைச் சொற்கள் திராவிட இன உறவு முறையை விளக்குவனவாக உள்ளன என்றும் துமோன் கருதுகின்றார்.

6.0. விலக்கப்பட்ட சொல்வழக்குகள் (Taboo words) சமூகத்தின் நம்பிக்கைகளையும் சமூக உறவினையும் விளக்குகின்றன.

எதை, எப்பொழுது, எங்கே சொல்ல வேண்டும், சொல்லக்கூடாது என்பனவற்றின் மூலம் சமூகத்தின் பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் அறிகிறோம். மொழி ஆய்வில் ஈடுபடுபவர் களும் ஒரு மொழியைக் கற்பவர்களும் விலக்கப்பட்ட சொல் வழக்குகளை அறிதல் இன்றியமையாத தொன்றாகும். Taboo என்பது சமயத்தால் அனுமதிக்கப்பட்ட, விலக்கப்பட்ட சொல் வழக்காகும். இப்பாலினேசிய சொல் தமிழிலுள்ள ‘தபு’ ‘தபுத்த’ என்ற சொற்களுடன் நெருங்கிய தொடர்புடையதெனச் சிலர் கூறுகின்றனர்[6] பாலினேசியாவுக்கும் தமிழகத்திற்கும் மிகப் பண்டைக்காலத்திலிருந்தே தொடர்பு இருந்ததை வரலாற்றுச் சான்றுகள் மூலம் அறிகிறோம். தொல்காப்பியர் கூறிய தகுதி வழக்கே Taboo ஆகும். மனித சமுதாயத்தில் குறிப்பாகப் பழங்குடி மக்களிடையே தொடத் தகாதவை, தின்னத்தகாதவை, பேசத் தகாதவை என விலக்கப்பட்டவைகள் உள்ளன. அச்சத்தாலும் நம்பிக்கையாலும் சமூகமாற்றத்தாலும் விலக்கப்பட்ட சொல் வழக்கு கள் தோன்றுகின்றன. பழங்குடி மக்களின் எச்சமாக நாகரிக வளர்ச்சி பெற்ற மக்களிடையேயும் இவ்வழக்குகளில் சில நின்று நிலவுகின்றன.

பழங்குடி சமுதாயத்தில் சில பொருட்களைப் புனிதமான வ என்றும் தொடக்கூடாப் பொருள்கள் என்றும் பிரித்து வைத்துள் ளனர். தொடக்கூடாப் பொருட்களைத் தொட்டுவிட்டால், தூய்மைச்சடங்கு நடத்தித்தான் தன்னினத்தில் சேர்த்துக்கொள்வர். சில பழங்குடி மக்களிடையே விலங்குகளும், பறவைகளும், செடி, கொடிகளும் குல மரபுச்சின்னங்களாக (totem) கருதப்படுகின்றன அக்குழுவைச் சார்ந்தவர்கள் அந்த குலமரபுச் சின்னங்களான விலங்குகளையோ, பறவைகளையோ உண்பது தடை செய்யப் பட்டுள்ளது. தென் ஆப்பிரிக்காவிலுள்ள போதங்கா பழங்குடி மக்களிடையே (Bothanga tribe) வெளி இடங்களுக்குச் சென்று வந்தவர்களை, தூய்மைச் சடங்கிற்குப் பின்னர்தான் சேர்த்துக் கொள்வர். ஆஸ்திரேலியாவில் ஒரு பழங்குடியினர் மற்றொரு பழங்குடியினரைச் சந்திக்கச் செல்லும்பொழுது, காற்றைச் சுத்த

6 பி. எல். சாமி ‘தமிழில் விலக்கப்பட்ட சொல் வழக்குகள்’ ஆராய்ச்சி 21, 34-50, 1977.

மாக்க நெருப்புப் பந்தங்களை எடுத்துச் செல்கிறார்கள். மனித சமுதாயத்தில் பலவிதமான விலக்குகள் (taboo) உள்ளது.

1. உடம்பின் மீதான விலக்கு (Physical taboo)
2. உணவு விலக்கு (Food taboo)
3. வட்டார விலக்கு (Teritorial taboo)
4. பாலின விலக்கு (Sexual taboo)
5. தொழில் விலக்கு (Occupational taboo).

மாதவிலக்காகும் பெண்களைத் தொடக்கூடாது என்ற வழக்கம் பழங்குடி மக்களிடையேயும் மற்ற மக்களிடையேயும் உள்ளது. மாதவிலக்காகும் பெண்களின் கைபட்டாலே தேனீக்கள் சாகும்; இரும்பு துரு பிடிக்கும்; பயிர் பதராகும் என்ற நம்பிக்கை கேரள நாட்டிலுள்ள புலையர்களி டயே உள்ளது. அமாவாசைத் தினத்தன்று சந்திரன் வீட்டுக்கு விலக்காக இருப்பதாகவும் மேகத்தில் மறைந்துகொள்வதாகவும் முதுவர்கள் நம்புகின்றனர். பருவமடைந்த பெண்களையும் பிள்ளைப்பேற்றினை அடைந்த பெண்களையும் பழங்குடிச் சமுதாயத்தில் தனிக்குடிசையில் வைக் கின்றனர். பழங்கால மனிதன் இரத்தத்தைக் கண்டு அஞ்சிய அச்சத்தால் தோன்றி, சடங்கு, மதம் முதலியவற்றுடன் கலந்து அஃது உருமாறிற்று.

மாட்டுக்கறி தின்னக்கூடாது என்ற தடை சங்ககாலத்தில் இருந்தது. 'ஆன்முலை யறுத்த அறனிலோர்' என்று புறநானூறு கூறுகிறது. மாட்டுக்கறி உண்பது தடை செய்யப்பட்டதால் மாட்டுக் கறியை பெரிய ஆட்டுக்கறி எனக் கூறுவதைக் காணலாம். தமிழ் நாட்டில் வாழும் வேளாளர்களுடைய வரலாற்றை ஆராய்ந்தால் அவர்கள் ஒரு காலத்தில் அசைவ உணவு உண்பவர்களாக இருந் தனர். தங்களுடைய சமுதாயத்தை உயர்த்தவும் பிராமணர்களோடு சம அந்தஸ்து பெறவும் அசைவ உணவை நீக்கி, சைவ உணவை மேற்கொண்டனர். இதனை மேல்நிலையாக்கம் (Sanskritization) என்று சமூகவியல் பேரறிஞர் எம்.என். சீனிவாசன் குறிப்பிடுகிறார்.

பல்லவர்கள் நீசர்களாகக் கருதப்பட்டனர். ஆந்திராவிலிருந்தும் கர்நாடகாவிலிருந்தும் வந்த சக்கிலியர், ஈழத்திலிருந்து வந்த ஈழவர்

ஆகியோர் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்டனர். வேறினத்தில் திருமணம் செய்தலையும் அக்காலத்தில் தடை செய்திருந்தனர். பிராமணருக்கும் சூத்திரப் பெண்ணுக்கும் பிறந்தவனை நிஷதா என்றனர் தர்மசூத்திரா காலத்தில் கூடாவொழுக்கத்தில் பிறந்தவர்களை ஆரியர்கள் விலக்காகக் கருதினர். ஈமச்சடங்கு சம்பந்தப்பட்ட தொழில். தோல் (leather) சம்பந்தப்பட்ட தொழில் செய்வோரை விலக்காகக் கருதினர்.

ஒருவர் பெயரை மற்றவர் உச்சரிக்கக்கூடாது என்ற தடையும் பழங்குடி மக்களிடையே இருந்தது. தமிழ்நாட்டில் கணவன் பெயரை மனைவி சொல்லாமை – மாமன் மாமியார் பெயரை மறைமுகமாகக் குறிப்பிடுதலைக் குறிப்பிடலாம். கிறிஸ்தவர்கள் பதின்மூன்று என்ற எண்ணை உச்சரிக்கப் பயந்தனர் இஃது மதத்தால் வந்த தடையாகும். சுடுகாட்டை நன்காடு என்றும், தாலி அறுத்தலை தாலி பெருகிற்று என்றும் கூறுகின்றனர். அக்காலத்தில் கணவன் செத்த பத்தாம் நாள் தாலியை அறுத்ததால் பத்து என்ற சொல்லையும் சொல்லப் பயந்தனர் என தெர்ஸ்டன் குறிப்பிடுகிறார். பாம்பு போகிறது என்பதை கயிறு போகிறது என அச்சத்தால் கூறுகிறோம். பாம்பு கடித்தது என்பதை பாம்பு தீண்டிற்று என்கிறோம். பாலி மொழியில்கூட 'தீண்டது' என்று சொல்கின்றனர். பண்டை கிரேக்கர்கள் பயங்கரமான புயற்காற்றை அன்புடைய காற்று என்றழைக்கின்றனர். இத்தாலியர்களும் ஸ்பானியர்களும் பாம்பை வேறு பெயரால் குறிப்பிடுகின்றனர். சேர்வராயன் மலையில் வாழும் மலையாளிகள் புலி வேட்டைக்குச் செல்லும்போது புலியை நாய் என்றும் நரி என்றும் அழைக்கின்றனர். மீனவர்களும் கோலா என்ற மீனை கவலை என்றழைக்கின்றனர். புலியை நரி என்றழைப்பது போல கவலை என்றழைப்பது தடை விலக்காகும். சங்க நூல்களிலும் நரியை 'குறுநரி' என்றும் மலையாளத்தில் குறுக்கன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இன்று கிராம மக்களிடையே மூத்திரம் பெய்தான் என்பதை ஒன்னுக்கு இருந்தான் எனக் கூறுகின்றனர். மூத்திரம் என்பதை நீரல் ஈரம் (நற்றிணை 103) என்று குறிப்பிட்டுள்ளது சங்க இலக்கியத்திலும் 'Sex' என்பதற்கு 'நலம்' என்ற சொல்லே காணப்படுகின்றது. 'விலைநலப் பெண்டிர்' (புறம் 365) என்றே குறிப்பிடுகிறது. நலம் என்பது Sex என்ற பொருளிலும்

கலவியின்பம் என்ற பொருளிலும் வழங்கி வந்த தகுதி வழக்காகும். சங்க காலத்தில் தடை வழக்காக இல்லாத 'முலை' என்ற சொல், நாகரிகம், பண்பாடு மாற்றங்கள் காரணமாக தற்பொழுது 'மார்பு' என்று குறிப்பிடுகிறோம். தடை விலக்கான பொருட்கள் சமூகபடி நிலைக்கு (social stratification) அடிப்படையாக அமைந்துள்ளது என்பதை அறிகிறோம்.

7.0 மனிதன் பேசும் மொழி பற்றியும் அவன் சார்ந்துள்ள சமுதாயம் பற்றியும் ஆராய்வது சமூக மொழியியலாகும் (Socio-linguistics). மொழியமைப்பைக்கொண்டு சமுதாய அமைப்பை ஆராய முற்படுகின்றனர். மொழியின் வேற்றுமைத் தன்மையினை (Linguistic diversity) ஆராய்வதே இவ்வியலின் நோக்கமெனை வில்லியம் பிரைட் கூறுகிறார். மனித இனத்தின் சூழ்நிலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றிற்கேற்ப மொழிகளும் மாறுபடுகின்றன. மொழியானது எவ்வாறு ஒரு குறிப்பிட்ட இடத்தில் பல்வேறு சமுதாயங்களுக்கிடையே பயன்பட்டு வருகிறது என்றும் எந்த அளவிற்கு அம்மொழியில் மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதையும் லெபாவ் (Labov) அவர்கள் விளக்கியுள்ளார்கள். இந்தியாவைப் பொறுத்தமட்டில் சமூகக் கிளைமொழிகளை (social dialects) ஆராய்கின்றனர் (Bright & Gumperz) சாதி, மதம், கல்வி, தொழில், பொருளாதார நிலை முதலிய கூறுகள் இவ்வாராய்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிகின்றது.

மொழியையும் சமூகத்தையும் தன்னியல்பான முறையிலும் உளவியல் முறையிலும் சமூகவியல் முறையிலும் ஆராயலாம். சோம்ஸ்கி (1957)யால் மாற்றிலக்கணக் கோட்பாடு வளர்ந்ததன் காரணமாக, உளவியல் அணுகுமுறை வளர்ச்சியடைந்தது. போவாஸும் (Boas) சபீரும் (Sapir) தன்னியல்பான அணுகுமுறையையும் சமூக அணுகுமுறையையும் மொழியை ஆராய்வதற்குப் பயன்படுத்தினர். மொழியை சமூகக் கண்ணோட்டத்தில் ஆராயும் ஆராய்ச்சிமுறை அண்மைக் காலத்தில் வளர்ச்சி பெற்றது (Ervin-Tripp, Fishman, Hymes and Sankoff). இந்திய சமூக மொழியியலைப்பற்றி பண்டிட் (P. B. Pandit), பிரைட் (Bright) பெர்குசன் (Fergusan) கும்பர்ஸ் (Gumperz), அப்தே (Apte), குப்சந்தானி (Khubchandani) பட்டநாயக், செ. வை. சண்முகம், கி. கருணா

கரன் போன்றோர் ஆராய்ந்துள்ளனர். மொழி வேறுபாட்டை அறிந்துகொள்வதில் பேசுபவர், கேட்பவர், சூழல் ஆகிய இம் மூன்றும் முக்கிய காரணங்களாகும்.

7.1 மொழி மாறுபாட்டின் அடிப்படையில் சமூகத்தைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம்.—ing என்பது சிறப்புப் பேச்சுநடை (formal style) என்றும் –in என்பது பொதுப் பேச்சுநடை (Informal style) என்றும் ஆராய்ந்துள்ளனர் (ficher1958 .—ing என்பது சிறப்புப் பேச்சுநடை என்பது மற்றொரு ஆய்வாளருடைய முடிவும் ஆகும் (Trudgill 1974). ஆங்கில மொழி பேசும் சமுதாயத்தில்— in ing வேறுபாடு சமூகவேறுபாட்டைக் காட்டும் அறிகுறியாகக் கருதப்படுகின்றது.

7.2. சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட கடமையும் பங்குமுண்டு. uncle, mother போன்றவர்களுக்கு உள்ள கடமையும் உரிமையும் சமூகத்திற்கு சமூகம் மாறுபடுகின்றது. ஒருவர் அழைக்கும் அழைப்பில் கூட, அழைக்கப்படுபவரின் தகுதிக் கேற்ப அழைக்கும் சொல்லிலும் சொற்றொடரிலும் வேறுபாட்டைக் காண்கிறோம். கணவன் – மனைவி பணியாற்றுபவர்களாக யிருப் பின், பணியைக் குறித்து பேசும்போது formal style லும் சொந்த வீட்டு விஷயம் பேசும்போது informal style லும் பேசுகின்றனர். ஒருவர் சமூகத்தில் பெற்றிருக்கின்ற நிலைக்கேற்ப மொழியும் மாறு படுகின்றது. அமெரிக்கப் பண்பாட்டில் தாயுடன் பிறந்த சகோத ரர்க்கும் தந்தையுடன் பிறந்த சகோதரர்க்கும் சமூகக் கடமைகளில் எந்தவித வேறுபாடுமில்லை. அந்த உறவை uncle என்ற சொல் லால் குறிப்பிடுகின்றனர். தமிழ்ப்பண்பாட்டில் தாயுடன் பிறந்த சகோதரர்க்கும் (தாய்மாமனுக்கும்) தந்தையுடன் பிறந்த சகோத ரர்க்கும் சமூகக்கடமை மாறுபடுகின்றது. அத்துடன் உறவுமுறைச் சொற்களும் வேறுபடுகின்றன. தாயுடன் பிறந்த சகோதரரை 'மாமா' என்றும் தந்தையுடன் பிறந்த மூத்த சகோதரரை 'பெரியப்பா' என்றும் இளைய சகோதரரைச் சிற்றப்பா' என்றும் அழைக்கிறோம்.

7.3. இந்தியாவில் சமூகப்பாகுபாடு Social stratification) என்பது சாதியாகும். சமூகப் பிரிவுக்கும் (Social class) சமூகப் பாகுபாட்டிற்கும் (Social Stratification) மிகுந்த வேறுபாடு

உண்டு. சமூகப்பாகுபாடு என்பது பரம்பரை பரம்பரையாக வரும் சாதியில் பிறப்பதாகும். பொருளாதார – பதவி காரணமாக ஒருவர் தனது நிலையை உயர்த்திக் கொள்ளலாம். ஒருவர் சாதியில் உயர்ந்த நிலைக்கு வரவேண்டுமானால், அச்சாதியே உயர்ந்த நிலைக்குச் செல்லவேண்டும் (Nadars in TamilNadu, Hardgr ve 1969). இந்திய நாட்டில் தீண்டத்தகாத ஒருவர் பொருளாதாரத் துறையில் முன்னேறினாலும் தீண்டத்தகாத பிரிவைச் சார்ந்தவர் என்பது மாறாததொன்றாகும். தமிழ்நாட்டில் பேசப்படும் மொழியை ஆராய்ந்தால் சமூகப் பாகுபாட்டினை எளிதில் அறிந்து கொள்ளலாம். ஒருவர் பேசும் பேச்சைக் கொண்டு, பிராமணர், பிராமணரல்லாதவர் (Non – Brahmins) தீண்டத்தகாதவர் (untouchable) என்பதை இனங்கண்டு கொள்ளமுடியும். பிராமண ரல்லாதாரின் உட்பிரிவு பேச்சு வழக்கைக் கொண்டு அறிதல் சற்று கடினமான தொன்றாகும். ஆனால், பிராமணர் பேச்சும் அரிசனங் களின் பேச்சும் இடம் வேறுபட்டிருப்பினும் அவற்றில் ஒரு பொதுத் தன்மையைக் காண்கிறோம். கேரளாவிலுள்ள சமூகப் பாகுபாட்டை பிராமணர், நாயர், தீண்டத்தக்கவர் (touchables) தீண்டத்தகாதவர் என நான்கு வகையாகப் பிரிக்கின்றனர் (Bright, 1966). வட இந்தியாவில் தீண்டத்தக்கவர் (touchable), தீண்டத்தகாதவர் (untouchable) என்ற இரண்டு பாகுபாடே உண்டு. கும்பர்ஸ் (Gumperz 1958) சண்முகம் பிள்ளை (1965) மாக்கொர்மக் (Mc cormack 1968) போன்றோர்கள் சாதிப்பேச்சினை ஆராய்ந் துள்ளனர். வடஇந்திய கிராமம் ஒன்றில் பேசப்படும் சாதிப் பேச்சினை ஆராய்ந்து ஒலியியல் அடிப்படையில், இரண்டு பிரிவாகப் பிரித்தனர். சண்முகம் பிள்ளை அவர்கள் 'சாதிப் பேச்சும் உறவுமுறைப் பெயரும்' என்ற கட்டுரையில் பதின் மூன்று சாதியினரிடையே காணப்படும் உறவு முறைப் பெயர்களில் காணப்படும் வேறுபாடுகளை ஆராய்ந்துள்ளார். கோ. சீனிவாச வர்மா அவர்கள் தமிழ்நாட்டில் பேசப்படும் வட்டாரக்கிளை மொழிகளையும் சமூகக் கிளைமொழிகளையும் விரிவாகவும் விளக்கமாகவும் 'கிளை மொழியியல்' என்ற தனது நூலில் ஆராய்ந்துள்ளார் ஏ. கே. இராமானுஜம் அவர்கள் மொழி யின் அடிப்படையில் மூன்று சமூகப் பகுப்பாகப் பிரிக்கின்றார்கள். பிராமணர், பிராமணரல்லாதோர், அரிசனங்கள். பிராமணர்

பேசும்பேச்சை ஒன்றாகக் கருதினாலும், அய்யர் பேசும் தமிழுக்கும் அய்யங்கார் பேசும் தமிழுக்கும் வேறுபாடு உண்டு (G. Srinivasa, Verma, 1978). அய்யர்கள் சைவசமயத்தையும் அய்யங்கார்கள் வைணவ சமயத்தையும் பின்பற்றுவதால் சமயச் சம்பந்தப்பட்ட சொற்கள் வேறுபடுகின்றன.

7 4. மனிதனின் ஆளுமைக்கேற்ப மொழியின் அமைப்பும் மாறுபடுகின்றது. சமூகத்தில் முன்னிலை ஒருமை, பன்மை பயன் படுத்தப்படுவதைப் பற்றி ஆராய்வோம். வரலாற்றை நோக்கினால் முதலில் முன்னிலைப் பன்மை அரசரைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டது முடியாட்சி நிலவிய காலத்தில் அரசருக்குள்ள மதிப்பையும் மரியாதையையும் உணர்ந்து பலரைச் சுட்டும் பன்மை ஒருவரைச் சுட்ட பயன்படுத்தப்பட்டது. பின்னர் பன்மை ஆளுவோரையும் சமூகத்தில் உயர்ந்தோரையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. உயர்ந்த சாதியினர் அனைவரும் கீழ்ச்சாதியினரை 'நீ' என்ற சொல்லால் அழைக்கின்றனர். கீழ்ச்சாதியினர் உயர்ந்த சாதியினரை 'நீங்கள்' என அழைக்கின்றனர். 15ஆம் நூற்றாண்டில் ஆங்கில மொழியில் நகரப்பகுயில் 'you' என்றும் நாட்டுப்புறப் பகுதியில் 'thou' என்றும் அழைத்தனர். நம்மைக்காட்டிலும் உயர்ந்தவர்களை 'நீங்கள்' என அழைக்கிறோம். சம அந்தஸ்து உள்ளவர்களை 'நீர்' என்றும் கீழ்ச்சாதியினரை 'நீ' என்றும் அழைக்கிறோம். முன்னிலை ஒருமை, பன்மையில் மட்டும் வேறுபடுத்தவி லை; ஒருவருக்கு சமூகத்திலுள்ள தகுதிக்கேற்ப வினைமுற்றும் வேறுபடுகின்றது. சாதாரணமாக 'நீ சொன்னாய்' எனக் கூறுகிறோம் மரியாதையும் மதிப்பும் கொடுக்க வேண்டி, 'நீர்சொன்னீர்' என்றும் 'நீங்கள் சொன்னீர்கள்' என்றும் கூறுகிறோம். இதைப் போன்று தெ. பொ. மீனாட்சிசுந்தரன். மு. வரதராசன் போன்ற பெயர்களை – ஆர் விகுதி சேர்த்து தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், மு. வரதராசனார் எனக் கூறுகிறோம். ஆனால், படித்த மக்களிடையே நீ, நீர், நீங்கள் என்ற வேறுபாடு ஓரளவு மறைந்து வருகிறது எனக் கூறலாம்.

7.5. சமுதாயத்தில் ஆண்களுக்கென சில பணிகளும் பெண் களுக்கென சில பணிகளும் வரையறுக்கப்பட்டுள்ளன சமூக அமைப்பில் பால் (sex) வேறுபாடு காரணமாக, பேச்சிலும் வேறு

பாடு காணப்படுகின்றது. யுககிர் Yukaghir) என்ற மொழியில் ஆண்கள் /tj/ /dj/ என்று உச்சரிக்க, அதனை பெண்கள் /ts/ /dz/ என்று உச்சரிக்கின்றனர். கிராஸ் வெண்டிரே (Gros Ventre) என்ற மொழியில் ஆண்கள் u:tse என்பதையும் பெண்கள் e:ha என்பதையும் வியப்பிடைச் சொல்லாகப் பயன்படுத்துகின்றனர். யானா (Yana language) மொழியில் ஆண்கள் நெருப்பினை pauna என்றும் பெண்கள் pauh என்றும் கூறுகின்றனர். துணிகா (Tunica) பிலோகி (Biloxi மொழிகளில் கேட்கின்ற ஆண், பெண்ணுக்கேற்ப மூவிடப்பெயர்கள் மாறுகின்றன. ஒரு காலத்தில் வட இந்தியாவில் ஆண்கள் சமஸ்கிருதமும் பெண்கள் பிராகிருதமும் பேசியதாக மட்டுமின்றி குழந்தைகளும் கீழ்சாதியினரும் பிராகிருதமும் உயர்சாதிப் பெண்கள் மஸ்கிருதமும் பேசியதாக அறிகிறோம். வடதிராவிட மொழியான குருக்கிலும் (Kuıukh) ஆண், பெண் பேச்சில் வேறுபாடு காணப்படுகின்றது. ஆண், பெண் பேச்சில் ஏவல் வினைவடிவம் வேறுபடுகின்றது. மீனவர்களது ஆண், பெண் பேச்சிலும் வேறுபாட்டைக் காண்கிறோம். ஆண்களது வாழ்க்கை கடலோடு கலந்த வாழ்க்கை. பெண்களது வாழ்க்கை மீனை விற்கும் பொருட்டு மற்ற மக்களோடு கலந்த வாழ்க்கை. கன்னியாகுமரி மீனவ ஆண்களின் பேச்சில் 'பசு' என்பதை 'பய்வு' எனவும் பெண்களது பேச்சில் 'பசுவு' என்றும் காணப்படுகின்றது. 'காசு' என்பதை ஆண்கள் 'காயி' எனவும் பெண்கள் 'காசி' எனவும் கூறுகின்றனர். சமுதாயத்திலுள்ள தகுதிக்கேற்ப மொழி மாறுபடுவதுபோல, சில மொழிகளில் பால்வேறுபாடு காரணமாகவும் மொழி மாறுபடுவதைக் கண்டோம்.

8.0. மனிதன் இனத்தால் சில பண்புகளையும் சமூகத்தால் சில கட்டுப்பாடுகளையும் சூழ்நிலையால் சில மாற்றங்களையும் அடைகிறான். மனிதனுடைய எண்ணத்தின் எழுச்சியும் வளர்ச்சியும் பண்பாட்டின் பிறப்பிடமாக அமைகிறது இடமாற்றமும் மாற்றார் தொடர்பும் பண்பாட்டு வளர்ச்சிக்குக் காரணமாகின்றன, மானிடவியல் பேரறிஞர் டெய்லர் (Tylor) 'மனிதனின் அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், பண்பு, சட்டம், வழக்கம் முதலியவற்றைக்கொண்டதுதான் பண்பாடு' என்கிறார். பரிமாற்றத் தொடர்பின் மூலம் கற்ற அனைத்தையும் உள்ளடக்கியதே பண்பாடு என்கிறார் எல்வுட் எனும் அறிஞர். 'வாழ்க்கை முறைகளின் கூட்டுச்

சேர்க்கையே பண்பாடு' என்கிறார் மானிடவியல் பேரறிஞர் மாலினோவ்ஸ்கி. பண்பாட்டினை வாழ்முறையாகக் கருதினால் மனிதனின் பல சடங்குகள் இதன்கண் அடங்கி விடுகின்றன. பண்பாடு புறப்பண்பாடு (material culture) அகப்பண்பாடு (non-material culture) என இருவகைப்படும். ஒரு இனத்தினர் பயன் படுத்தும் பொருட்களைக் கொண்டு புறப் பண்பாட்டினை ஆராய லாம். ஒரு இனத்தினரின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், சமூக அமைப்பு, மொழி முதலியவற்றைக் கொண்டு அகப் பண் பாட்டை ஆராயலாம். அகப்பண்பாட்டினை மக்கள் பேசும் மொழி வாயிலாக அறியலாம். சமூக அமைப்பினை ஆராய மொழியறிவு இன்றியமையாததாகிறது. மொழி அகப்பண்பாட்டின் ஒரு பிரிவாக அமைவதுடன் அப்பண்பாட்டின் மற்றைய கூறுகளை அறிய உதவும் கருவியாகவும் உள்ளது. எனவே மக்கள் பண்பாட்டின் ஒரு கூறே மொழி (Language is an index of culture) எனலாம். ஒரு மொழி யிலுள்ள சொற்கள் அம்மொழி பேசும் மக்களின் பண்பாட்டினை விளக்குவனவாக அமைந்துள்ளன. பண்பாடும் பழக்க வழக்கங் களும் மாறுவது போன்று, மொழி எளிதில் மாறுவதில்லை. ஒரு இனத்தார் மற்றொரு இனத்தாரிடமிருந்து தொடர்பு மூலமும் (by contact) கடன் பெறல் மூலமும் (borrowing) பண்பாட்டு கூறுகளைப் பெறுகின்றனர். இஃது மொழிக்கும் பொருந்தும். பண் பாடு மாற்றம் பெறும்போது, மொழியில் சொற்கள் பெருகுகின்றது. பொருளும் மாற்றமடைகின்றது. மொழியின் துணையில்லாமல் பண் பாட்டை விளக்கமுடியுமாயினும், பண்பாட்டின் நுட்பங்களை மொழி யறிவால்தான் விளக்க முடியும், ஒரு பண்பாட்டின் எல்லையையும் மற்றொரு பண்பாட்டின் செல்வாக்கினையும் மொழி ஆராய்ச்சியால் விளக்க முடியும். ஒரு மொழியின் சொற்பொருள் ஆராய்ச்சிக்கு அம்மொழி பேசும் மக்களது பண்பாட்டு அறிவு மிக இன்றி யமையாதது. மக்கள் பண்பாட்டின் ஒரு கூறாக மொழி இருப்பதால் தான் மானிடவியலாளர்களும் (Anthropologists) சமூகவியலாளர் களும் (Sociologists) இதில் ஈடுபாடு கொண்டனர். தங்களது ஆய்வுக்கு மொழியை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர்.

ஒரு மொழிக்கே உரித்தான லக்கிய நடை, யாப்பு, அணி போன்றவற்றின் வளர்ச்சி அம்மொழியையும் அம்மொழிப் பண்

பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றது. மொழியும் பண்பாடும் (Language and culture) இரண்டெனினும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்து நோக்கமுடியாது. ஓர் இனத்தவரின் பண்பாட்டையும் எல்லையையும் அப்பண்பாடு மற்ற எல்லைகளுக்குப் பரவி இன்னொரு பண்பாட்டிலும் கடன் வாங்கப்பட்ட பண்பாட்டிலும் மாறிய முறையையும் மொழி ஆய்வுமூலம் அறிகிறோம். ஒரு இனத்தவரின் பண்பாட்டைப் புரிந்துகொள்ள பெரிதும் உதவுவது மொழி என்பதை மொஹஞ்சதாரோ – ஹரப்பா அகழ்வாராய்ச்சி மூலமும் சங்காலியா மேற்கொண்ட இராமாயண மொழியாராய்ச்சி மூலமும் அறிகிறோம்.

மனிதனின் வாழ்வையும் வளத்தையும் பிரதிபலித்து நிற்பது மொழி என்பதை வடமொழியினை ஆராயின் அம்மொழியில் காணப்படும் மதக்கோட்பாடு தெய்வ வழிபாடு போன்றவற்றை அது பிரதிபலித்து நிற்பதைக் காணலாம். தொல்காப்பியரின் பொருளதிகாரம் மூலம் அக்காலத் தமிழரின் சமூக வாழ்க்கையை நன்கு தெரிந்துகொள்ளலாம். ''இன்றைய தமிழ் மொழியிலிருந்து வடசொற்களை அறவே நீக்கிவிட்டு நோக்கினால் மிகுந்துள்ள பண்டைத் திராவிடச் சொற்கள் ஆரியச்சார்பற்ற திராவிட நாகரிகத்திற்கு நல்லதொரு சான்று பகரும். அவ்வாறு வடசொற்களை நீக்கிப் பண்டைத் தமிழ்ச் சொற்களை மட்டும் ஆராய்ந்து அதனால் புலனாகும் தமிழ் மக்களின் உள்ளநிலை, பழக்கவழக்கங்கள் சமய உண்மைகள் முதலானவற்றைக் காணலாம்''[7] என டாக்டர் கா டுவெல் அவர்கள் குறிப்பிட்டுச் செல்கிறார்.

தமிழகத்திலுள்ள மீனவர்களின் மொழியினை ஆராயின் அவர்களது வாழ்க்கைக்கேற்ப அம்மொழிகளில் சொல் வளத்தைக் காணலாம். மீனவர்களின் வாழ்க்கையையொட்டி அமைந்திருக்கும் படகு, காற்று, கடல், மீன் வகைகள், கடலின் போக்கு, காற்றின் போக்கு போன்றவற்றைக் குறிக்கும் சொற்களே நிறைய உள்ளன. மீனவரின் வாழ்க்கையின் போக்கும் வரலாறும் மொழியில் பிரதிபலித்து நிற்பதைக் காணலாம்.

7 R. Coldwell A Comparative Grammar of Dravidian or South Indian Family of languages Madras, 1956 pp. 113–114.

அந்தமான் தீவில் வாழும் ஒங்கே (Onge) பழங்குடிமக்களால் மூன்றுவரைதான் எண்ண முடிகிறது. இஃது அவர்களது பழைமை நிலையையும் பண்பாட்டையும் எடுத்துக்காட்டுகின்றது. கற்கால பழங்குடியான தாசடாய் மக்களது மொழியில் 'மற்ற மக்கள்' என்பதற்குரிய சொல் இல்லாமையும் அவர்களாலும் பன்னிரண்டு வரைதான் எண்ணமுடியும் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.[8] தமிழகத்திலுள்ள நீலகிரியில் வாழும் தோடா பழங்குடி மக்களது வாழ்க்கை எருமையைச் சுற்றியே சுழல்வதால், எருமையைப் பற்றியே நூற்றுக்கு அதிகமான சொற்களை அம்மொழியில் காண லாம். மந்தை மேய்த்து வாழும் பழங்குடிகளாதலால் அவர்களது மதம் எருமையுடனும் பால் பண்ணையுடனும் கலந்துள்ளது. தோடரது எருமைப் பண்பாடு அவர்களது மொழிவாயிலாக நன்கு புலனாகின்றது. உணவுப் பொருட்களைச் சேகரித்தும் வேட்டை யாடியும் வாழுகின்ற சிரிசாகுவ அபாச்சி பழங்குடி மக்களது மொழியில் செடி, கொடி, விலங்குகள் பற்றிய விளக்கங்களை யெல்லாம் காணலாம். பண்பாட்டை ஆராயும் வரலாற்றாசிரி யனுக்கு மொழியும் மொழியின்கண் உள்ள சொற்களும் அவனது ஆய்வுக்குப் பெருந்துணை புரிகின்றன. மொழி பேசும் பகுதி, அம்மொழி பேசும் இனத்தின் தொன்மை இடம், பின்பு இடம் பெயர்ந்தமை முதலியவற்றையும் அறிகிறோம். எஸ்கிமோ மொழி யில் ஸ்னோ (Snow) என்பதற்குரிய பொதுவான சொல் கிடையாது. ஆனால், பனியின் ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு சொல்லாக இருபதுக்கு மேற்பட்ட சொற்களைக் காணலாம். பனிபடர்ந்த பிரதேசத்தில் வாழும் எஸ்கிமோக்களின் வாழ்வை அது பிரதி பலித்து நிற்பதைக் காணலாம்.

மொழி சமூகத்தின் மூலப் பண்புக்கூறுகளில் ஒன்று என்பது சபீரின் (Sapir) கொள்கையாகும். எந்தப் பண்பாடும் தனித்து வாழவோ வளரவோ முடியாது. உலகிலுள்ள அனைத்துப் பண் பாடுகளிடையேயும் ஒரு ஒற்றுமையைக் காணலாம். ஒவ்வொரு மொழிக்கும் சில சிறப்புக்கூறுகள் உண்டு. ஆங்கில மொழியில் பன்மையைக் காட்ட-S என்ற ஒட்டு இருப்பதுபோல, நாவகோ

8 சு. சக்திவேல் 'தோடர்'
தமிழகப் பழங்குடிமக்கள் (பதி) டாக்டர் ச. அகத்தியலிங்கம், 197-, ப. 62

(Navaho) மொழியில் கிடையாது. மேலும் ஆங்கில மொழியிலுள்ள ஐந்து நிற வேறுபாட்டையும் நாவகோ மொழியில் காணமுடியாது நாவகோ மொழி பேசும் மக்கள் 'நீலம்' 'பச்சை' என்று நிறங்களை வேறுபடுத்திக் காண்பதில்லை. ஆங்கில மொழியிலுள்ள 'black' என்ற நிறத்தை நாவகோ மொழியில் இரண்டு பிரிவாகப் பிரிக்கின்றனர். ஆங்கில மொழியில் காணப்படும் அவன், அவள், அது என்ற வேறுபாடு இம்மொழியில் இல்லை. நாவகோ மொழியில் படர்க்கைப் பெயரை நான்கு பிரிவாகப் பிரிக்கின்றனர். நாவகோ ஆங்கில மொழிகளுக்கிடையேயுள்ள தொடர்பின்மையானது அகவேறுபாட்டின் புறத்தோற்ற வெளிப்பாடாகும் (the lack of equivalences in Navaho and English is merely outward expression of inward differences) நாவகோ, கூபா என்ற மொழிகள் அதபாஸ்கன் என்ற மொழியினத்தைச் சார்ந்ததாயினும், இம்மொழிகள் பேசும் மக்களது பண்பாடு முற்றிலும் வேறுபட்டவை. அதைப் போன்றுதான் கூபா, தென்பையூட் மொழிகளுக்கிடையே உறவுயிருப்பினும் அவர்களது பண்பாட்டில் உறவில்லை. கூபி மொழியில் மின்னல் (lightning) இடி (thundering) இரண்டையும் வினையாகக் கருதுகின்றனர். இம்மொழியில் 'பத்து தினங்கள்' என்பதை பத்து தினங்கள் வரை எனக் குறிப்பிடுகின்றனர். இம் மொழியில் (Hopi) வினைச் சொற்கள் காலங்காட்டுவதில்லை. விந்து மொழியில் (Wintu language) கூட பன்மையைக் குறிக்கும் உருபுகள் இல்லை. அமெரிக்க இந்திய மொழியான நோட்கா (Nootka) வில் வினைச் சொற்கள் தான் இருக்கின்றன. சூனி (Zuni) மொழியிலும் 'ஆரஞ்சு' 'மஞ்சள்' என்று நிறங்களை வேறுபடுத்தி அறிவதில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இத்தகைய கூறுகள் மக்களது ஆய்வு, பகுப்பு முறை முதலியவற்றை பிரதிபலித்து நிற்கின்றன. மானிட மொழியியல் பேரறிஞர்கள் (Anthropological Linguists) இத்தகைய மொழிகளை ஆராய்வதிலும் அவற்றின் அமைப்புக்களைப் பற்றி எழுதுவதிலும் அம்மொழி பேசும் மக்களது பண்பாடு, பழக்க வழக்கங்கள், நாகரிகங்கள் போன்ற இன்னோரன்ன பல செய்திகளை மொழியாராய்ச்சி மூலம் அறிவதிலும் நாட்டம் கொண்டிருந்தனர் என்பதை இதுவரை கண்டோம்.

9.0. மானிட மொழியியல் மொழியியலின் சிறந்ததொரு பகுதியாக விளங்குகிறது. இது இலக்கியமற்ற எழுத்துருவமற்ற மொழிகளை ஆராய்ந்து அவற்றின் அமைப்பு முதலியவற்றை அறுதியிடுவதோடு அம்மொழி பேசும் மக்களுடைய பண்பாடு, பழக்க வழக்கங்களையும் எடுத்தியம்புகின்றது. எழுத்துருவம் இல்லாத மொழிகட்கு இலக்கணங்கள் எழுத முற்பட்டபொழுது, மொழியியல் கோட்பாட்டில் தெளிவும் ஆராயும் முறைகளில் செறிவும் ஏற்பட வாய்ப்பேற்பட்டது. வளர்ந்துவரும் இத்துறை நல்ல பயன் உடையது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## துணை நூல்கள்


அகத்தியலிங்கம் ச. (பதி) 1972 **தமிழகப் பழங்குடி மக்கள்,** அண்ணாமலைநகர்.

அகத்தியலிங்கம், ச. & புஷ்பவல்லி, க. 1977 **மொழியியல்-2 வாழ்வும் வரலாறும்,** அண்ணாமலைநகர்.

கருணாகரன், கி. 1975 **சமுதாய மொழியியல்** அண்ணாமலை நகர்.

சக்திவேல், சு. 1967 "இனமும் மொழியும்", **கலைக்கதிர்,** கோயம்புத்தூர்

——— 1966 "பழங்குடி மக்களின் மொழியும் பண்பாடும்", **செந்தமிழ்ச் செல்வி 41,** சென்னை.

——— 1971 **இந்தியப் பழங்குடிகள்,** சென்னை

——— 1973 **பழங்குடிகள்,** சென்னை

——— 1976 *Tribal Languages of India* Madurai.

——— 1980 **தமிழ்நாட்டுப் பழங்குடிகள் — வாழ்வும் வரலாறும்** சென்னை, (fourth coming)

சண்முகம், செ. வை. 1966 "சொற்கோவைப் புள்ளியியல்", **கலைக்கதிர்** கோயம்புத்தூர்

சண்முகம்பிள்ளை, மு. 1977 **இக்கால மொழியியல்**, மதுரை.

சாமி, பி. எல். 1977 "தமிழில் விலக்கப்பட்ட சொல் வழக்குகள்", **ஆராய்ச்சி**, 8, 1, 21, 34-50

சீனிவாசவர்மா, கோ. 1977 **கிளைமொழியியல்**, அண்ணாமலை நகர்.

Andronov, M. 1964 "Lexicostatistic analysis of the chronology of disintegration of Proto-Dravidian", *Indo-Iranian Journal* Vol. VII.

Boas, Franz 1911 *Hand book of American Indian languages* Washington.

——— 1940 *Race Language and Culture*, New York.

Caldwell, R. 1956 *A Comparative Grammar of the Dravidian or South Indian family of languages*, Madras.

Dale, Ian 1977 *Language and Society in India*, University of Wisconsin (mimeo)

Greenberg, J. (Ed) 1971 *Language, Culture and Communication* Stanford

Harris, Z. 1957 "Review of Selected writings of Sapir" *Language*, Vol. 17.

Hoijer, Harry 1954 *Language in Culture*, Chicago.

——— 1962 "Anthropological linguistics", In *Trends in European and American Linguistics* 1930-1960.

Hymes, Dell 1963 "A History of Linguistic anthropology" *Anthropological Linguistics* Vol. V, No. 1.

——— 1964 *Language in Culture and Society, A Reader in Linguistics and Anthropology*, NewYork

Iravathi Karve 1968 *Kinship Organisation in India*, Asia Publishing House, Bombay.

Kroebar 1968 *Anthropology*, Calcutta.

Lander, Herbert 1966 *L nguoge and Culture*, Oxford University Press.

Lehmann, Winfred P. 1968 *Historical Linguistics An Introduction*, New Delhi.

Mandelbaum, D.G (Ed) 1958 *Selected writings of Edward Sapir in Language Culture and Personality*, University of California Press

Metranx Guy, S. & Grouzet Francois 1961 *Studies in the cultural history of India* Agra.

Robins, R.H. 1967 *A Short History of Linguistics* London.

# ஒலியும் உணர்வும்

**கே. வி. தாட்சாயணி**
அரசினர் கலைக்கல்லூரி, திண்டிவனம்

கவிச் சக்ரவர்த்தியான காப்பியச் சக்கரவர்த்தி கம்பன், ஒலியிலே விந்தை செய்கின்ற ஒரு வித்தைக்காரர். படமெழுதிக் காட்டுவது போல் பாத்திரங்களின் உணர்ச்சிகளைக் காட்டுகின்றார். சங்கத் தமிழிலே ஊறி ஆழ்வார்களின் நெஞ்சை உருக்கும் அழகுத் தமிழில் ஆழ்ந்த கம்பர் ஓசைகளைக் கையாள்கின்ற முறையே அவரை கவிஞர்களில் மன்னனாக்கியுள்ளது. வார்த்தைகளினால் மட்டும் பொருளைப் பெற வைப்பது மிகமிகச் சாதாரணமானது. மொழி தெரியாத ஒருவருக்கும் பொருள் புரியும் வண்ணம் கம்பர் ஒலிகளையே பேசவைத்து விடுகிறார். ஓசைகளின் நுண்ணிய நிழலைக்கூடக் கண்டுபிடித்து, அதிலே கவிதை குளிரச் செய்வதைக் காணலாம். பாடல்களுக்குச் சுவை கூட்ட ஒலிகளைப் பயன்படுவதில் அவர் கைவண்ணம் உள்ளங்கை நெல்லிக்கனியாகின்றது. ஒலிகளைக் கேட்கும்போதே சுவைஞரையும் அதே உணர்ச்சிச் சுழலில் சிக்கிக் கொள்ள வைப்பதுதான் கம்பரின் தனித்தன்மை. ஒவ்வொருவகை ஒலியையும் தனித்தனியே பிரித்துப் பார்த்து எடை போட்டு அவ்வ

வற்றிற்கு ஏற்றவாறு கூட்டிக் குறைத்து கவிதைக்கு உயிரூட்டுகிறார். ஏதேனும் ஒரு தனிப்பட்ட ஒலியினை ஆராய்ந்து பார்த்தால் இதனை அறிந்து கொள்ளலாம்.

நீண்ட ஓசையாம் – நெட்டொலியைக் கம்பர் கையாள்கின்ற விதமே அலாதியானது. நெட்டொலியை வல்லொலியோடு கூட்டித் தருவதால் இன்னொரு சுவை.

முதலில் நெட்டொலி உள்ளத்தே ஆழ்ந்து கிடக்கும் அவலச் சுவைக்கே மிகுதியாகப் பயன்படுத்தப் படுகின்றது. மண்டோதரி 'அன்னேயோ! அன்னேயோ!' என புலம்புகின்றாள். 'அண்ணாவோ அண்ணா !' என்று கதறுகிறான் விபீடணன். 'நாராயணனே ! தனிநாயகனே' என்று அரற்றுகிறாள் சீதை. 'எந்தையே! எந்தையே!' என்று அழுது புரள்கின்றான் அங்கதன். இம்முறையில் நெட்டொலியைப் பயன்படுத்துவது உலகியல் முறை, யாவரும் அறிந்தது.

இதே நெட்டொலியினை ஒவ்வொரு அடியின் இறுதிச் சொல்லில் அமைப்பதன் மூலம் பெருமிதச் சுவையினை மிக அழகாகக் காட்டு கின்றார் கம்பர். குகனது பெருமிதத்தைக் கூறுங்கால் குகனைப் பற்றிய சுயசிந்தனையைக் காட்ட நெடில் ஓசையையே அமைக் கின்றார்,

"ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?"
(குகப்படலம் – 15)

என்னிவன் னென்னை யிகழ்ந்ததில் வெல்லை கடந்தன்றோ !
மன்னவர் நெஞ்சினில் வேடர் விடுஞ்சரம் வாயாலோ!
(குகப்படலம் – 16)

இங்கு நெடிலொடு மெல்லினத்தைக் கூட்டுவதன் மூலம் ஒரு வகை அற்புதக் கூட்டு உணர்ச்சியினைக் காட்டுகின்றார். குகனின் பெருமிதம், அத்துடன் அவன் இராமன் பால் வைத்துள்ள அன்பின் நெகிழ்ச்சி. ஒரு பக்கம் நெகிழ்கின்ற மனமும் – பெருமிதத்தைச் சுட்டும் தன்னையே உயர்த்திக் காட்டுகின்ற மன இறுக்கமும் நமக்குத் தெரிகின்றது.

நீண்ட ஒலியின் மூலம் இகழ்ச்சிக் குறிப்பினையும் காட்டுகின்றார்.

"வாய்மையும் மரபுங்காட்டு மன்னுயிர் துறந்த வள்ளால்
தூயவன் மைந்தனே நீ பரதன்முன் தோன்றினாயே"
(வாலிவதைப் படலம் – 76)

முதலில் அமைந்துள்ள நெடிலோசைகள் உயர்வினைக் காட்டுவது போல் அமைந்து இறுதிச் சொல்லிலே அமைந்துள்ள இகழ்ச்சிக் குறிப்புக்குத் துணை செய்வதாக அமைந்துள்ளன. உயரத்தில் தூக்கிக் கீழே போடுவது போல் காப்பிய பாத்திரத்தின் குணச் சித்திரம் ஏற்றி இறக்கப்படுவதை உணரலாம்.

அடுத்து கோபத்தினைக் காட்டுதற்கும் நெடிலோசையைப் பயன்படுத்துகின்றார்.

"பேதாய்! பிழை செய்தனை பேருலகின்
மாதா வனையாளை மனக்கொடு நீ
யாதாக நினைத்தனை எண்ணமிலாய்
ஆதாரம் நினக்கினி யாருளரோ"
(சடாயு உயிர்நீத்த படலம் –.95)

சடாயுவின் கோபத்தைக் காட்டுதற்கு நெடிலோசையைப் பயன் படுத்திய கம்பர் இராவணனது இழிந்த எண்ணத்தைப் பற்றிச் சடாயு நினைத்ததை மெல்லொலி இடையொலிகளைக் கூட்டித் தருவதன் மூலம் நமக்குக் காட்டித் தருகின்றார். இகழ்ச்சிச் சுவையும், வெகுளிச் சுவையும் கலந்ததாக அமைகின்றது.

இதுமட்டுமின்றி, இதனாலோ! அதனாலோ! என்ற ஐயப்பாட்டு நிலையினைக் காட்டுதற்கு ஓகார நெடிலோசை கையாளப்படுகின்றது. ஐய மனத்தினைப் படம்பிடித்துக் காட்டுகிறது நெடிலோசை.

"பாராய் இளையவனே பட்டவனோ? வேறே ஓர்
பேராளன் தானோ? ஒளிவிளங்கும் பெற்றியனாய்
நேர், ஆகாயத்தின் மிசைநிற்கின்றான்; நீ இவனை
ஆராய்! என அவனும் ஆர்கொலோ நீ என்றான்"
(கவந்தப் படலம் – 52)

கவந்தன் இராட்சச உருமாறி விண்ணனாகக் காட்சியளித்தபோது ஏற்பட்ட இராமனது ஐயப்பாட்டினை விளக்கி நிற்கின்றது நெடிலொலி.

இனி, மகிழ்ச்சியின் மிகுதிப்பாட்டினைக் காட்டுதற்கும் இவ்வொலியே பயன்படுவதைக் காணலாம். அநுமன் இராமனின் சிறப்பினை எண்ணி மகிழ்ந்து அதனைச் சுக்ரீவனிடம் கூறும்போது அந்த மகிழ்ச்சியின் அளவிறந்த நிலையினை நெடிலொலி காட்டி நிற்பது தெளிவாகும்.

"ஆயமா னாகர்தா ழாழியா னேயலால்
காயமா னாயினான் யாவனே காவலா!
நீயமா னேர்தியோ னிருத மாரீசனார்
மாயமா னாயினான் மாயமா னாயினான்"

(நட்புகோட்படலம் - 11)

கிட்டத்தட்ட 32 முறை நெடிலொலிகள் இங்கே பயன்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம்.

வஞ்சினம் கூறுதற்கும் இந்த நீண்ட ஓசையே வழிகாட்டி அமைவதைக் காட்டுகின்றார்.

"நீளாண்மையி னுடனேயெதிர் நின்றாயிஃ தொன்றோ
வாளாண்மையு முலகேழினோ டுடனேயுடை வலியும்
தாளாண்மையு நிகராறாமில் தனியாண்மையு மினிநின்
தோளாண்மையு மிசையோடுடன் துடைப்பேனொரு
புடைப்பால்"

(முதற்போர்புரிபடலம் - 164)

அநுமனின் பேராண்மையும், போராண்மையும் விளக்கி நிற்பதாக இப்பாடலில் நெடிலோசைகள் அமைந்துள்ளன. நெடிலோசையோடு 'டகர' வல்லொலியைச் சேர்ப்பதன் மூலம் ஒரு விண்ணரங்கினைத் தன் பண்ணரங்கினில் நம்கண்முன் நடனமாடச் செய்கின்றார்.

"ஆடரம்பை நீடரங்கு ஊடுநின்று பாடலால்
ஊடல்வந்து கூடவிக் கூடுவந்து கூடினேன்"

(விராதன் வதைப்படலம்-64)

கீழ்வரும் பாடலில் இரண்டு முரண்பட்ட நிலைகளுக்கு இந்த நெடிலோசை ஒன்றினைப் பயன்படுத்துவதைக் காணலாம். முதல் இரண்டு வரிகளில் ஓங்கி என்ற நெட்டோசைச் சொல்லால் நம்மை மிக உயர்ந்த மலைமீது ஏற்றுகின்ற கவிஞர் அடுத்த இரு வரிகளில் நெடிலோசையோடு மெல்லொலி இடையொலிகளைச் சுவைபடச் சேர்ப்பதன் மூலம் மெது மெதுவாக மிகமிகக் கீழே நதியின் இறக்கத்திலேயே நம்மையும் இறக்கி விடுகின்றார்.

"ஓங்கு மரனோங்கி மலையோங்கி மணலோங்கி
பூங்குலை குலாவுதளிர் சோலைபுடை விம்மி
தூங்குதிரை யாறுதவழ் சூழலதொர் குன்றின்
பாங்கருள தாலுறையுள் பஞ்சபடி மிஞ்ச"
(அகத்தியப்படலம்-57)

மலைஉச்சிக்குச் சென்றநாம் அருவியின் ஊடே இறங்கி சமவெளிக்கு ஒலியின் விந்தையால் வந்துவிடுகின்றோம்.

கம்பரைப் போல மற்ற புலவர்களும் இந்த நெடிலோசையினைப் பயன்படுத்தியிருக்கின்ற ஒருசிலநிலைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த நெடிலொலியின் தனித்தன்மை நமக்குப் புலப்படும்.

அவலச் சுவைக்காகக் கம்பரின் முன்னோடியான திருத்தக்கத் தேவர் தம் சிந்தாமணியின் கனகமாலையார் இலம்பகத்தில்

"கோமான் மகனே! குருகுலத்தார் பொற்றேரே!
ஏமாங்கதத்தார் இறைவா! என் இன்னுயிரே!"
(கனகமாலை இலம்பகம்-249)

என்று புலம்பலுக்குப் பயன்படுத்துகின்றார்.

வில்லி தமது பாரதத்தில் பெருமிதச் சுவையினை இவ்வொலியி னால் காட்டுகின்றார்.

"ஏவிளங்கு சிலையைவா வந்தணுகில் யானயர்ந்து
எளிதிருப்பேனோ
கோவிளங்கு பொரவஞ்சுமோ! காரணுகு நகரங்கள்
பகைகொண்டகால்"
(கிருஷ்ணன் தூது சருக்கம்-122)

இகழ்ச்சிப் பொருளுக்கும் வில்லியார் இதனையே கையாள்கிறார்.

"விசயனுக்கு நிகர் நீ கொலோ? கடவுண் வெண்மதிக்கு
நிகர் வெள்ளியோ?"
(கி. தூ. சருக்கம்-138)

அடுத்து கோப உணர்ச்சியினைக் காட்டுதற்கும் இதே ஒலி பாரதத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

"பூபாலர் அவையத்து முற்பூசை பெறுவார் புறங்கானில்வாழ்
கோபாலரோ" (ராசசூயசருக்கம்-114)

என்றபாடல் வெகுளிச் சுவையை நன்கு விளக்கி நிற்கிறது.

அரிச்சந்திர புராணத்தில் நெடிலொலி ஐயநிலையினைக் காட்டுதற்குக் கையாளப்படுவதைக் காணலாம்.

"எப்பாலனைக் கருதியேவள் கொன்றானோ? அல்லது
யார் கொன்றாரோ
தெய்வமே இப்பாவி தலையில் வைத்தாய்"
(அரிச்சந்திரபுராணம்.)

மிக்க மகிழ்ச்சியினையும் வியப்பினையும் காட்டுதற்கு இவ்வொலியே சிலப்பதிகாரத்தில் பயன்படுத்தப் படுகின்றது.

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!" (காதை-2)
"மலையிடைப் பிறவா மணியே என்கோ!
அலையிடைப் பிறந்து அழிழ்தே என்கோ!" (காதை-2)

என்று கண்ணகியின் அழகைப் போற்றும் கோவலனின் மகிழ்ச்சியினையும், வியப்பினையும் இளங்கோவடிகள் உரைச் செய்கின்றார்.

வஞ்சினத்திற்கு வில்லி தன் பாரதத்தில் இவ்வொலியை எடுத்தாள்கின்றார்.

"யாரடா உனக்கு யாது? தானர்தம் மகளிர்க்குமோ
வானமாதர்தோள்.
சேரடா" (வேத்ரகீயச்சருக்கம்)

இங்ஙனம் பலகாப்பியங்களில் பல்வேறு சுவைகளுக்குப் பயன்படுத்து கின்ற நிலையினைக் காணலாம். இதை ஊன்றிப் பார்ப்போமே யானால் இதிலுள்ள ஒரு பொதுத் தன்மை நமக்குப் புலப்படும்.

மகிழ்ச்சியாக இருப்பினும் அவலமாக இருப்பினும் கோபமாக அமையினும் வஞ்சினமாக வெடிப்பினும் வியப்பாகச் சிறப்பாக இருப் பினும் சாதாரண நிலையினின்று மேம்பட்ட உணர்ச்சியின் மிகுதிப் பாட்டினை இவற்றில் நாம் காணலாம். அளவிறந்த நிலையே இங்கு அடிப்படையாக உள்ளது. இந்த உணர்வு மிகுதியினைக் காட்டுதற்கு எண்ணத்தின் ஆழத்தினை உணர்த்துவதற்கு இந்த நெடிலொலி பயன்படுத்தப்படுவதை நாம் தெளிவாக அறியலாம். கவிதையின் உண்மையான உணர்வறிந்து சுவைப்பதற்கு இவ்வொலியே காரண மாக அமைகின்றது.

உள்ளத்தை, உணர்ச்சியை விளக்கிக் காட்ட ஒலியே ஒளியாக அமைகின்றது.

## திராவிட மொழிகளும் மைதன்னி மொழியும்

மைதன்னி கி.மு. 15-ஆம் நூற்றாண்டையொட்டி யூப்பிரட்டிஸ் நதிக் கரையோரத்தில் வழக்கிலிருந்த மொழியாகும். இம்மொழி பேசியவர்களை அடுத்துக் கிழக்கே அசிரிய மக்களும் **(Assyrians)** மேற்கே ஹிட்டைட் **(Hittite)** மக்களும் வாழ்ந்து வந்தனர். இம் மக்கள் எகிப்தியரை எதிர்த்து நின்று பின்னால் ஹிட்டைட் மக்க ளுடன் ஒன்றியவர்கள். இவர்கள் மொழி பற்றி அதிகம் தெரியா விடினும் தெல் அல் அமர்வினால் கிடைத்த சில சான்றுகளைக் கொண்டு இம்மொழி பற்றி அறிஞர்கள் எழுதியுள்ளனர். இவர்களுள் பெர்டினண்ட் போர்க் **(Ferdinand Bork)** குறிப்பிடத்தக்கவர். இவர் எழுதிய இலக்கணத்தையும், தந்துள்ள சொற்களையும் அடிப் படையாக வைத்துதான் பிரௌன் ஆராய்ந்துள்ளார். திராவிட மொழிகளில் பயிற்சியுள்ள பிரௌன் இவ்விரு மொழிகளும் தம்முள் இனவொற்றுமையுடையன எனக் கருதுவர்.

**டாக்டர் ச. அகத்தியலிங்கம்**
உலகமொழிகள் – பகுதி 5 திராவிடமொழிகள் – 1
அண்ணாமலைநகர்

# மீனவர் பேச்சுமொழியில் வலைகளைக் குறிக்கும் சொற்கள்

மீனவர்கள் இருபதிற்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான வலைகளை மீன் பிடிக்கப் பயன்படுத்துகிறார்கள். அத்தனைவகை வலைகளையும் அவற்றிற்குரிய வெவ்வேறு சொற்களைக் கொண்டு குறிப்பிடுகின்ற அளவு சொல் வளத்தினை அவர்கள் பேச்சு மொழி கொண்டுள்ளது. இதனைக் கீழ்வரும் சொற்களினால் அறியலாம்.

**வலைகளின் பெயர்கள்**

| | |
|---|---|
| வாழா வலை | கூனி வலை |
| தூரி வலை | கெண்ட வலை |
| எட வலை | மணி வலை |
| பயிண்ட வலை | நண்டு வலை |
| பெரிய வலை | சன்னா வலை |
| ரெட்ட வலை | நொள்ளா வலை |
| ரா வலை | மஞ்சி வலை |
| தெளிஞ்ஞாரா வலை | கவுது வலை – பருத்தி கயிறால் ஆனது |
| கோ வலை | திருக்கா வலை |
| இழுப்பு கோவலை | தாமணி வலை |
| பரண்டா வலை | தெளிஞ்ச வலை |
| உள்ளா வலை | மம்டி வலை |
| குழி வலை | பயிச்சி வலை |

— கே. வி. ராஜகுமாரி
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
(களவாய்வில் கண்டவை 1)

# தமிழ் பயிற்றல்

கோ. சங்கரநாராயணன்
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

தமிழ் கற்பவர்களைப் பொதுவாக தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், அல்லாதவர்கள் என்று இருவகையாகப் பிரிக்கலாம்.

## தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் தமிழ்ப் பயிற்சி

இந்தப் பிரிவில் அடங்குபவர் பெரும்பாலும், ஆரம்பப் பள்ளியிலிருந்து தமிழைக் கற்றுக்கொள்ளும் தமிழ்க் குழந்தைகளே. இவர்களுக்கு இம்மொழியில் "முன் கூட்டியே கேட்குந் திறனும் பேசுந் திறனும் அவர்கள் வயதிற்கேற்றவாறும் அனுபவத்திற் கேற்றவாறும் அமையும்" (திருமலை, 1978 : 148). அதாவது பள்ளியில் நுழையும் முன்பே இவர்களுக்குப் பேச்சுத் தமிழில் ஓரளவு பயிற்சி உள்ளது. ஆனால் இவர்கள் பள்ளியில் கற்றுக்கொள்ளப் போவதோ எழுத்துமொழி[1]. இங்குத் தமிழைக் கற்பிப்பது என்பது எழுத்து

1 தமிழகப் பள்ளிக் கல்வித்திட்டத்தில் தமிழின் வகையைத் தெரிந்தெடுத்த முறையிலும், பாடத்திட்டம், பாடநூல் பயிற்சி முறை போன்றவற்றிலுமுள்ள குறைகளையும் அவைகளைச்

மொழியைக் கற்பிப்பது ஆகும். பேச்சுத் தமிழ் என்பது ஒதுக்கப் பட்ட மொழி. அதற்குப் பள்ளிக் கல்வியில் இடமே இல்லை. வட்டார அடிப்படையிலும் சமூக அடிப்படையிலும் பல்வேறு வழக்கு களைக் கொண்டுள்ள (எழுத்துத் தமிழிலிருந்து வேறுபட்டு நிற்கும்) பேச்சு மொழியில் ஏற்கனவே திறமையை வளர்த்துக் கொண்ட தமிழ்க் குழந்தைகளுக்கு அவர்கள் பள்ளியில் நுழைந்ததும் திடீரென எழுத்துமொழி கற்றுத் தரப்படுகிறது. பேச்சு மொழியின் தாக்கம் எழுத்து மொழிக்கு வராமலிருக்க பேச்சு மொழியிலிருந்து எழுத்து மொழிக்குச் செல்லும் வழி செப்பனிடப் பட்டுச் சீர் செய்யப்பட வேண்டும். அது நடைபெறாமலேயே எழுத்துத் தமிழ் கற்றுத்தரப் படுகிறது. இதனால் எழுத்து மொழிப் பயிற்சி சரிவர அமையாமல் போய்விடுகிறது. இதைப் புரிந்து கொள்ள ஒரு கிராமப் பள்ளியின் முதல் வகுப்பை எடுத்துக் கொள்ளலாம். இதில் உள்ள மாண வர்கள், பார்ப்பனர், பிள்ளை போன்ற உயர்ந்த அந்தஸ்த்தைப் பெற்றவர்களின் குழந்தைகளும் அரிஜன் போன்ற தாழ்ந்த நிலையிலுள்ளவர்களின் குழந்தைகளும் அடங்குவதாக வைத்துக் கொள்வோம். முதற் பிரிவினரின் பேச்சுமொழி எழுத்து மொழி யிலிருந்து நிரம்ப வேறுபட்டதல்ல. மேலும் இப்பிரிவினரின் பெற்றோர் ஓரளவு கல்வித் தகுதியைப் பெற்றிருக்கின்ற காரணத் தால், தம் பிள்ளைகளின் மொழிப் பயிற்சிக்கு உறுதுணையாய் விளங்குகின்றனர். பேச்சு மொழியின் தாக்கம் ஏற்படும் போதெல் லாம் அதைக் களைந்து பிள்ளைகளின் மொழிப்பயிற்சி செம்மை யடைய உதவுகின்றனர். ஆனால் இரண்டாவது பிரிவைச் சார்ந்த அரிஜன மாணவரின் பெற்றோர்கள் கல்வித் தகுதி சிறிதுகூடப் பெற்றிராத காரணத்தால் தம் பிள்ளைகளின் மொழிப் பயிற்சியில் தலையிடாமல் ஒதுங்கியிருக்கின்றனர். இந்நிலையில் முதற் பிரிவி னர் (பேச்சு மொழியின் தாக்கம் இன்றி) எழுத்து மொழியில் நல்ல தேர்ச்சி பெறும் வாய்ப்பினைப் பெற்றும், அடுத்த பிரிவினர் அந்த வாய்ப்பினைப் பெறாதும், ஒரே பள்ளி வகுப்பில் திறமை பெற்றவர்கள் திறமை குறைந்தவர்கள் என்ற பாகுபாட்டை ஏற்படுத்தி விடுகிறது. இந்த இழிநிலையினைப் போக்குவது தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர் கையில்தான் (முக்கியமாக) உள்ளது.

---

சரி செய்யும் வழிகளையும் பற்றி விரிவாக பலர் விளக்கியுள்ள னர். (பார்க்க திருமலை 1976, 1978, ஞானசுந்தரம் 1976).

அவருக்கு ஒவ்வொரு மாணவனின் சமூகப் பின்னணி பற்றித் தெரிந்திருக்க வாய்ப்புண்டு. இந்த அறிவின் துணை கொண்டு மொழிப் பயிற்சியில் பின் தங்கிய மாணவர்களுக்கு பொறுமையுடனும், அக்கறையுடனும் தனிக் கவனம் செலுத்திப் பேச்சு மொழியிலிருந்து எழுத்து மொழிக்கு இட்டுச் செல்வதற்குச் சரியான பயிற்சி கொடுத்து, அவர்களது திறமையை மற்ற மாணவர்களுக்குச் சமமாகக் கொண்டு வரவேண்டும்[2].

அடுத்து, தாய் மொழிப் பயிற்சியின் மேம்பாட்டுக்குத் தடையாக உள்ளவை நர்சரி கான்வென்ட் பள்ளிகளாகும். இங்குத் தாய்மொழிக் கல்வியைவிட ஆங்கிலக் கல்விக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அதற்கு ஊக்கத்துடன் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதனால் இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மற்ற பாடங்களில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றாலும் தாய்மொழிப் பாடத்தில் சராசரி அளவுகூடத் தேர்ச்சி பெறாமல் பின்தங்கி விடுகின்றனர். இந்நிலையினைச் சரிசெய்வதில் அரசுதான் முக்கிய பங்கு ஏற்கவேண்டியுள்ளது.

**தாய்மொழி தமிழ் அல்லாதவர்களின் தமிழ்ப் பயிற்சி**

பெரும்பாலும் வயது வந்தவர்களே இப்பிரிவில் உள்ளார்கள். இவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளையோ அல்லது தங்கள் தாய் மொழியை மட்டுமோ பயின்ற அனுபவத்தையும் அது தொடர்பான வேறு பல அனுபவங்களையும் பெற்றவராயுள்ளனர். இவர்களையும் வகுப்பில் பயில்பவர்கள், அஞ்சல் வழிக்கல்வி முறையில் பயில்பவர்கள் என்று இரு பிரிவாகப் பிரிக்கலாம். வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு ஆசிரியரோடு நேரடித் தொடர்பு இருப்பதால், தங்கள் மொழிப் பயிற்சி செம்மையுற ஆசிரியரின் துணை அவர்களுக்கு (அஞ்சல் வழியில் பயிலும் மாணவர்களைப் போலல்லாது) எளிதில் கிடைக்கிறது.

சில பல்கலைக்கழகங்களும், டில்லித் தமிழ்ச்சங்கம், லக்னோவிலுள்ள **School of South Indian Languages** போன்ற தனியார்

2 தமிழைக் கற்றுத் தரப் பயன்படும் பாடநூல்களிலுள்ள குறைபாடுகளை எடுத்துக்கூறி அவற்றை நீக்குதற்குரிய வழிவகைகளையும் சான்றோர்கள் சிலர் (பார்க்க திருமலை 1976, 1978, ஞானசுந்தரம் 1976) எடுத்துக் கூறியுள்ளதால் இங்கு அவைகள் குறிப்பிடப்படவில்லை.

நிறுவனங்களும் பிற மொழி மாணவர்களுக்குத் தமிழைக் கற்றுத் தருகின்றன. ஆனால் மேற்கூறிய கல்விக்கூடங்களில் ஒரு சில வற்றைத் தவிர மற்றவை எழுத்து மொழியை மட்டும் கற்றுக் கொடுத்து விடுவதோடு நின்று விடுகின்றன. பேச்சு மொழியைக் கற்பிக்கவேண்டும் என்ற எண்ணமே இங்கில்லை. மேலும் எழுத்து மொழியைக் கற்றுக்கொடுக்கச் சரியான பாட நூல்களும் இல்லை. பல குறைபாடுகளையுடைய தமிழ்நாடு அரசு பள்ளிப்பாட நூல் களையே இவர்கள் பயன்படுத்துகிறார்கள். கற்பிக்கும் முறையும் பழைய பத்தாம்பசலி முறையாகவே உள்ளது. தமிழ் கற்றுக் கொடுப்பதற்கு மொழியியலறிவு இணைந்த நவீன முறையிலமைந்த பயிற்சியும், நவீன முறையில் எழுதப்பட்டுள்ள பாடநூல்களுமே இங்குத் தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களது உடனடித் தேவைகள்.

தமிழைப் பிறமொழியாளருக்குச் செம்மையாகக் கற்பிப்பதில் மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. இப்பணியில் இந்த நிறுவனத்தின் நோக்கம் பரந்தது. பல மாநிலத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு பத்துமாத கால அளவில் பேச்சுத்தமிழ், எழுத்துத்தமிழ் இரண்டையும் செம்மை யாகக் கற்றுத் தருவதோடு பயிற்சி முடிந்து தங்கள் பள்ளி திரும்பி யதும் தான் கற்ற மொழியைத் தங்கள் மாணவர்களுக்குத் திறம்படக் கற்றுக் கொடுக்கவும் இவ்வாசிரியர்கள் தயார் படுத்தப் பெறுகிறார்கள். மொழிப் பயிற்சிக் கூடம் மூலம் மொழி உச்சரிப்பைச் சரியாகக் கற்று, மொழியியல் அறிவோடு முறைப்படி எழுதப்பட்டுள்ள பாடநூல்களின் துணையோடும், மொழி கற்பதில் தற்கால அறிவியல் முறைப்படிப் பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்களின் சிறந்த கற்பிக்கும் திறனின் துணையோடும் இவ்வாசிரியர்கள் இத்தகைய சிறந்த நிலையைப் பெறுகிறார்கள். சுருங்கக்கூறின் தமிழ் மொழியில் கேட்குந்திறன், பேசுந்திறன், படிக்குந்திறன், எழுதுந்திறன் முதலிய நான்கு திறன் களையும் இவ்வாசிரியர்கள் சரிவரக் கைவரப் பெறுவதோடு தம் மாணவர்க்கும் தமிழ் மொழியைச் செம்மையாகக் கற்பிக்கும் ஆற்ற லும் பெறுகிறார்கள். மொழிப் பயிற்சிக் கூடங்களும், மொழியியல் உணர்வோடு எழுதப்பெற்ற பாடநூல்களும், தற்கால அறிவியல் முறைப்படி மொழி பயிற்றுவிக்கும் ஆசிரியரும் இருந்தால், தமிழ் மொழி என்றில்லை; வேறு எந்த ஒரு மொழியையும் குறுகிய காலத்

தில் குறைவற்ற முறையில் கற்று, அதை நன்கு பயன்படுத்தும் திறனும் பிறர்க்குக் கற்றுத்தரும் ஆற்றலும் பெறமுடியும் என்பது இதனால் தெரிகிறதல்லவா?

சூழ்நிலையின் காரணமாகவோ, வேறு ஏதாவது ஒரு காரணத்தினாலோ, ஒரு மொழியைக் கற்கவேண்டும் என்ற விருப்பு இருந்தாலும், அந்த விருப்பத்தைச் செயல்படுத்த முடியாத நிலையில் பலர் உள்ளனர். இவர்களுக்கு அஞ்சல்வழிக் கல்வி ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது. இக்கல்வி முறையில் அச்சாகிய பாட வழிகாட்டிகளும் மாணவரை அவ்வப்போது சோதித்தறிவதற்குரிய பயற்சித்தாள்களும் அஞ்சல் மூலம் அனுப்பப்பெறுகின்றன; ஆசிரியர் மாணவர் நேரடித் தொடர்பு அவ்வப்போது ஏற்படுத்தப்படுகின்றன; சிறப்பான மொழிப் பயிற்சிக்கு இசைத் தட்டுக்கள், பதிவு நாடாக் கருவிகள், வானொலி தொலைக்காட்சி முதலியவைகளும் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

அஞ்சல் வழிக் கல்வியில், வகுப்பறைக் கல்வியில் உள்ள ஆசிரியர் மாணவர் நேரடித் தொடர்புச் சூழ்நிலை மிக அரிதாகவே காணப்படுகிறது. மொழிப் பயிற்சியில் தனக்கேற்படும் நிறை குறைகளை எடுத்துச் சொல்லி (மொழிப் பயிற்சி) செம்மையடைய உதவும் ஆசிரியர்களுடன் நிலைத்த தொடர்பு இம்முறையில் மாணவர்களுக்கு இல்லை. சுருக்கமாகக் கூறினால் மாணவர் தன் சொந்த முயற்சியினாலேயே மொழியைக் கற்றுக் கொள்ளவேண்டும். எனவே, மாணவர்கள் தானே மொழியைக் கற்றுக் கொள்வதற்கு ஏற்றவாறு அஞ்சல்வழிப் பாடநூல்கள் அமைய வேண்டும். இதற்குச் சுழல் பாடத்திட்டம் (**Programmed Instruction**) என்ற முறை மற்ற முறைகளை விடச் சிறந்து விளங்குகிறது. எளிமையிலிருந்து கடினம் என்ற நோக்கோடு, மொழியின் அடிப்படையான எளிய அமைப்பை எடுத்துக் கொண்டு, அதைச் சிறு சிறு கூறுகளாக்கி கற்பிப்பதோடு கற்பிக்கப்பட்ட அந்தச் சிறு கூறுகளையும் மாணவர், மனதில் வாங்கிக்கொண்டாரா என்று சோதனையும் உடனுக்குடன் செய்யப்படுகிறது. இம்முறையில் மொழி கற்றுக் கொடுக்கப்படும்போது (ஆசிரியரின் நேரக்கண்காணிப்பு இல்லாத இச்சூழ்நிலையில்) மொழியின் அமைப்பு மாணவரின் மனதில் தானாகவே பதிந்து விடுகிறது. இயந்திரகதியில் பயில்வதால்

மாணவனுக்குத் தான் கற்ற மொழியமைப்பைப் பயன்படுத்தும் ஆற்றல் இம்முறையினால் கிடைக்கப் பெறாது என்று இதனைக் குறைகூறுவர். இக்குறையைப் பின்வருமாறு போக்கலாம். இந்தப் பாடத்திட்டத்தை சிறு சிறு யூனிட்டுகள் கொண்ட பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு, அந்தப் பகுதிக்குள் மொழியமைப்பின் ஒரு சில அமைப்புக்களைக் கற்பித்தல் வேண்டும். இப்பகுதிக்குப் பின்னர் இயற்கைச் சூழலில் அமைந்த உரையாடல் பகுதியை அமைத்திடலாம். இவ்வுரையாடல்கள் அதற்கு* முன் உள்ள யூனிட்டுகளில் கற்பிக்கப்பட்ட மொழியமைப்பால் அமைந்திருக்கும். இவ்வுரையாடலைத் தொடர்ந்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்துப் பதிலீடு செய்தல் போன்ற பயிற்சிகளும் அதனைத் தொடர்ந்து மொழியமைப்புச் சம்பந்தமான பண்பாட்டு விளக்கங்களையும் இலக்கண விளக்கங்களையும் அமைத்துக் கொள்ளலாம். இலக்கண விளக்கத்தின் போது கடினமான கலைச்சொற்களை பெரிதும் தவிர்த்து எளிமையாக விளக்குவது நலம். ஏனெனில், படிக்கும் எல்லா மாணவரும் மொழிக் கலைச் சொற்களை நன்கு அறிந்திருப்பார்கள் என்று சொல்லமுடியாது.

அடுத்து அஞ்சல் வழிக்கல்வி முறையில் தமிழைக் கற்பவர்கள் ஒவ்வொருவரும் தன் தாய்மொழி, இனம், கல்வித் தகுதி போன்ற பின்னணியில் பலவிதமாக வேறுபடலாம். எடுத்துக்காட்டாக மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டவரும் இதில் மாணவராக இருக்கலாம்; இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவரும் மாணவராக இருக்கலாம். இவ்வாறு தமிழோடு நெருங்கிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவருக்கும் வேற்றுமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவருக்கும் பாடத்திட்டமும் பயிற்சி முறையும் ஒரே மாதிரியாக இல்லாது வேறுவிதமாக அமைய வேண்டாமா? என்ற கேள்வி எழலாம். வேறு விதமாக அமைவது நல்லது. ஆனல் அவ்வாறு அமைத்துக் கொள்வது நடைமுறையில் சிரமமான காரியமாகும். அதனால் எல்லோருக்கும் ஓரளவு பொருந்தி வருகிறமாதிரி பாடத்திட்டத்தை அமைத்துக் கொள்ளலாம். மேலும் தன் பின்புலச் சூழ்நிலை காரணமாக மொழிப் பயிற்சியில் மாணவர் தவறும் இடங்களை பயிற்ச்சித்தாள்கள் நமக்குக் காட்டிவிடும். அவற்றிற்குத் தகுந்தாற்போல் தவறைத் திருத்திக்கொள்ளும் **(Remedial Exercises)**

பயிற்சிகளை அந்தந்த மாணவர்களுக்கு அளிப்பதன்மூலம் மொழிப் பயிற்சியில் ஒரு பொதுத் தன்மையை ஏற்படுத்தலாம்.

அடுத்து அஞ்சல்வழிக் கல்வியில் பயிலும் மாணவருக்குச் சந்தேகங்கள் பல எழலாம் பாடசம்பந்தமான இச்சந்தேகங்களை ஆசிரியருக்கு எழுதிக் கேட்கலாம். இவற்றிற்குரிய விளக்கங்களைச் சந்தேகம் கேட்டவர் என்றில்லாமல் எல்லோருக்குமே எழுதி அனுப்பினால் மற்ற மாணவர்களும் பயனடைவர். இச்சந்தேகங்களைத் தீர்க்கும் விளக்கங்களை எல்லாம் குறித்து வைத்துக் கொண்டு பின் வரும் மாணவர்களுக்கு எழுதும் பாட வழிகாட்டிகளில் அவற்றைச் சேர்த்துக்கொள்ளலாம்.

தான் கற்றதைப் பயன்படுத்திப் பார்க்க மாணவர்கள் ஆர்வமுள்ளவர்களாயிருப்பர். இந்த ஆர்வத்திற்கு ஈடு செய்யும் வகையில் நாம் ஏதாவது செய்தாக வேண்டும். எடுத்துக்காட்டாக வட இந்தியாவிலுள்ள ஒரு மாணவர் எழுத்துத் தமிழைக் கற்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் கற்றுக்கொண்ட தமிழ் மொழியறிவைப் பயன் படுத்திப்பார்க்கும் முகமாக, எளிய நடையில் அமைந்த பத்திரிகைகள், கதைகள் முதலியவற்றை அவருக்கு அனுப்பிக் கொடுக்கலாம்.

தமிழைப் பொருத்தவரை பேச்சுத்தமிழ், எழுத்துத்தமிழ் என்ற இரு பிரிவினை உடையது என்பதை அறிவோம். இவற்றில் எந்தப் பிரிவை மாணவர்க்குக் கற்றுத் தருவது? எழுத்துத்தமிழை மட்டும் கற்க ஒரு சிலர் ஆர்வம் கொண்டிருக்கலாம். பேச்சுத்தமிழ் மட்டும் கற்க வேறு சிலர் ஆர்வம் கொண்டிருக்கலாம். இன்னும் சிலர் இரண்டு பிரிவினையுமே கற்க விரும்பலாம். மாணவரின் தேவையை முன்னரே அறிந்து கொண்டு அதற்குத் தகுந்தாற்போல் எழுத்துத் தமிழை பயிற்றுவிக்கும் பாட நூல்களையோ அல்லது பேச்சுத் தமிழைப் பயிற்றுவிக்கும் பாடநூல்களையோ நாம் அனுப்பவேண்டும். இதைச் செய்யத் தவறினால் மொழியைக் கற்க வேண்டும் என்ற மாணவரின் ஆர்வத்தை முளையிலேயே கிள்ளி எறிந்தவர்களாவோம். எடுத்துக்காட்டாக எழுத்துத் தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் இருக்கும் மாணவர் ஒருவருக்கு நாம் பேச்சுத்

தமிழைக் கற்றுக்கொள்வதற்குரிய பாடங்களை அனுப்பினால், அம் மாணவர் ஏமாற்றத்துக்குள்ளாகி, அவர் படிப்பைத் தொடரவிடாமல் செய்துவிடும்.

எழுத்துத் தமிழை மட்டும் கற்றுக்கொடுக்கும் போது நாம் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். எழுத்துத்தமிழை உரையாடலில் பயன்படுத்துவது அரிதாகும். ஆனால் எழுத்துத் தமிழைக் கற்பிப்பதற்கு என எழுதப்பட்டுள்ள சில பாடநூல்களில் பேச்சு மொழி மட்டுமே பயன்படும் சில உரையாடல்கள் (உ-ம் உணவகம், சந்தை) எழுத்து மொழியில் அமைக்கப் பெற்று எழுத்து மொழியை விளக்கப் பயன் படுத்தப்பட்டுள்ளது. இது செயற்கையாக இருப்பதோடு பயிலும் மாணவர்க்கு எழுத்து மொழியின் பயன்பாட்டைப் பற்றி உண்மைக்கு மாறான கருத்துக் கொள்ளவும் ஏதுவாகும். எழுத்துத் தமிழின் பயன்பாட்டை விளக்க, அது மிகுதியாகப் பயன் படும் செய்தித்தாள், கதை, கட்டுரை, கடிதங்கள், விண்ணப்பங்கள் முதலியவற்றிலிருந்து சிலபகுதிகளை எடுத்துப் பாடமாக அமைத்துக் கொள்ளலாம். இப்பொழுது வரும் கதைகளில் ஆசிரியர் கூற்று, கதைச்சம்பவம் முதலியன எழுத்துத் தமிழிலும் கதை மாந்தர் கூற்று பேச்சுத்தமிழிலும் அமைத்து ஒரே கதையில் தமிழின் இருபிரிவின் பயன்பாட்டை நாம் பார்க்கலாம். எழுத்துத் தமிழையும் பேச்சுத் தமிழையும் ஒன்றாகக் கற்க விரும்பும் மாணவர்க்கு இக்கதைகள் உதவியாயிருக்கும்.

பேச்சுத்தமிழ் என்பது வட்டாரப் பிரிவினாலும் சமூகப் பிரிவினாலும் வேறுபட்டுள்ளதை அறிவோம். பேச்சுத்தமிழைக் கற்றுக் கொடுக்கும் பொழுது நிலை பேறு பெற்ற கிளை மொழி வழக்கை **(Standard Dialect)** தெரிந்தெடுத்துக் கற்பிப்பது நலம். கிளை மொழி ஆய்வு முற்றிலும் நடத்தப்பெற்று அதன்பின் நிலைபேறு பெற்ற கிளை மொழியைக் கண்டு பிடித்தலே முறையானது. ஆனால் இதுவரை ஆய்வு முற்றுப் பெறாத நிலையில் இந்தக் கண்டுபிடிப்புக் கடினமானதே. இந்நிலையில் ஒரு குறிப்பிட்ட வட்டார வழக்கையோ சமூக வழக்கையோ ஒட்டியிராமல், ஒரு பொதுவான பேச்சுவழக்கை தெரிந்தெடுத்து பேச்சு மொழிப் பயிற்சிக்குப் பயன்படுத்தலாம்.

பேச்சு மொழியைக் கற்றுக்கொடுப்பது என்பது அதனுடைய மொழியமைப்பை மட்டும் மாணவர்க்குத் தருவதல்ல, இயற்கைச் சூழ்நிலையில் தாய்மொழியாளரோடு உரையாடும் திறமையைப் பெறுதலே ஆகும்; அதனால் அந்த அடிப்படையில் உரையாடல்களை உடலாகக் கொண்ட பாடத்திட்டமே சிறந்தது என்பது வில்கின்ஸ் போன்ற அறிஞர்களின் வாதமாகும். ஆனால், பேச்சு மொழி இரு பொருள் தரும் மயக்கத் தொடர்கள், மரபுத் தொடர்கள், நுட்பமான மொழி வேறுபாடுகள் முதலியவை அமையப்பெற்று, அதன் பயன்பாடு கணக்கிலடங்காமல் உள்ளது.

**ஆமா நேத்து நீங்க எங்கே போயிருந்தீங்க?**
**அதாங்க அது ஒரு இதுங்க**
**ஆமா, இவரு பெரிய கொடை வள்ளலு**

போன்ற வாக்கியங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இவையெல்லாம் தாய் மொழியாளரோடு பலகாலம் இணைந்து உரையாடிய பின்னரே தெரியவரும். இவற்றைக் கற்றுக் கொடுத்து மாணவர் பயன் படுத்துவது என்பது நடைமுறையில் முடியும் என்று கூறவியலாது. ஆகையால் பேச்சு மொழியைக் கற்றல் என்பது "அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் புரிந்து கொள்ளும்படி பேசுவது என்பதே" (திருமலை, 1978:262). அதாவது "செய்திப் பரிமாற்றம்" நடப்பதற்குரியஅளவு பேச்சு மொழியைக் கற்றுக் கொடுத்தால் போதுமானது. இந்த மொழியறிவோடு, தன் சொந்தத்திறமையினால் மாணவர் பின்னர் தமிழ் வழங்கும் சூழ்நிலையில் தாய்மொழியாளரோடு உரையாடிப் பேச்சு மொழியின் நுணுக்கங்கள் பலவற்றை அறிந்து கொண்டு தாய் மொழியாளருக்கு ஈடாகத் தன் பேச்சித்திறனை மேம்படுத்திக் கொள்ளலாம். எத்தனையோ வெளிநாட்டுக்காரர்கள் இத்தகையப் பேச்சுத்திறனை வளர்த்துக் கொண்டது இதே முறையில்தான் என்பதை நாம் அறிவோம்.

## துணை புரிந்த நூல்கள்

1. திருமலை, மா. சு. 1978 **தமிழ் கற்பித்தல்** (அல்லது) **மொழி கற்பித்தல்**, சென்னை.

2. V. Gnanasundaram 1975 'A programme for Teaching the formal and informal Varieties of Tamil' Paper presented in the 8th Annual conference of Indian Association for programmed learning and Educational innovations, held in CIEFL, Hyderabad

3. ——— 1976 'Teaching Tamil as a mother tongue; Syllabus and text books for secondary schools' 8th AIUTA Conference-Seminar, Mysore.

4. Pattanayak, D. P. 1974 'Language curriculum : An Approach to and Structure of Curriculum in Indian Languages, CIIL, Mysore.

5. Rajaram, S. 1979 *An Intensive course in Tamil,* Mysore.

Thirumalai, M. S. 1976 'Primary School Tamil Syllabus and Text books: A review' Paper presented in the 8th Conference Seminar of AIUTTA, Mysore.

Wilkins, Arnold, 1975 *Linguistics in Language Teaching,*

# தொடர்மொழியில் பொருள் நிலை

இரா. பாலகிருஷ்ணன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1.0 ஆறறிவு படைத்தவன் மனிதன். மற்றெந்த உயிரினங்களுக்கும் இல்லாத அந்த ஆறாவது அறிவை, அவனது எண்ணங்களாலும் கருத்துக்களாலும் செயல் முறைகளாலும் வெளிப்படுத்த உதவும் கருவியே மொழியாகும். இது மனிதர்களுக்கிடையே அமைந்த கருத்திணைப்புப் பாலமாக விளங்குகிறது. ஆற்றின் இக்கரையிலிருந்து அக்கரைக்குச் செல்லப் பாலம் அமைக்கிறோம். ஒரு இடத்திற்கும் இன்னொரு இடத்திற்கும் இடையே ரோடு போட்டு இணைக்கிறோம். இப்படி ஒன்றை இன்னொன்றுடன் இணைக்கப் பல வழிகளைக் கையாண்டு, இணைப்பிடத்திற்கிடையே பல தொடர்புகள் ஏற்படுத்துவதைக் காணலாம். இதைப் போன்றே எண்ணங்களாலாய மனிதன் இன்னொருவனுடன் கருத்துப் பரிமாற்றம் செய்ய மொழியெனும் கருவியைத் தோற்றுவித்து, அதையொரு பாலமாகப் பயன்படுத்துகிறான்.

1.1 கருத்திணைப்புப் பாலம் அல்லது மொழி உலக மனித இனங்கள் அனைத்திற்கும் பொதுவானது ஆனால், அதன் இயல்பு அமைப்பு, அழகு அனைத்தும் வெவ்வேறானவை. அதனால்தான் பொருளியல்களன் (semantic field) அனைவருக்கும் பொதுவானதாக இருந்தாலும், அதை விளக்க அமைப்பில் மாறுபட்ட சொற் குறியீடுகள் பயன்படுவதைக் காணுகிறோம். உதாரணமாக, உலகில் அமைந்த நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம் போன்றவை அனைவருக்கும் பொதுத் தன்மையனவாகவே அமைந்துள்ளன. ஆனால், இவைகள் முறையே நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம் எனத் தமிழ்மொழியிலும், earth, fire, water, air, sky என ஆங்கில மொழியிலும், tere feu eou, vent, ciel, எனப் பிரஞ்சு மொழியிலும் வெவ்வேறு குறியீடுகளால் அழைக்கப் படுகின்றன. இதனால், ஒரு பொருளைக்குறிக்கப் பொருளியல் களன் ஒன்றாக இருந்தாலும், வேறுபட்ட குறியீடுகள் மாறுபட்ட மொழிகளில் அமைவது இயல்பு என உணரலாம். அதனால் தான், ஒரு மொழி, கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுகின்ற நேரத்தில், ஒரு நியாயத்தின் அடிப்படையிலும், தனித் தன்மையை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்த நிலைக் களனாக விளங்கிவருகிறது. மொழிக்குமொழி அமைந்துள்ள வேறு பாட்டுணர்ச்சி இயற்கையானது. ஒரு மொழிக்குள்ளேயும் கூட, ஒரு குழந்தைக்கோ ஒரு இடத்திற்கோ பெயரிடும்போது, புதிய - அதிகமாகக் கேள்விப்படாத பெயராக அமைத்துக் கொள்வதில் அதிக ஆர்வம் இருப்பதை இன்றும் காணுகிறோம். எனவே, வேறு பட்ட மொழிகளுக்குள் மாறுபட்ட குறியீடுகள் அமைத்துக் கொள்வது இயற்கையான தன்மை என்றே கொள்ளவேண்டும் காரணம், பொருளியல்களன் ஒன்றாக இருப்பினும், அது பயன்படுகின்ற மன உரு (concept) வேறுபட்டிருப்பதேயாகும்

1.2 அதனால்தான், ஒரு மொழியில் பால்பாகுபாடு (gender distinction) இருக்க, இன்னொரு மொழியில் அது இல்லாதிருக்கிறது; ஒரு மொழியில் ஒருமை-பன்மைப் பாகுபாடு (singular and plural) இருக்க, இன்னொரு மொழியில் ஒருமை- இருமை-பன்மை (singular duel and plural) என்ற மாறுபட்ட எண்பகுப்பு இருப்பதைக் காணுகிறோம். இது போன்று எத்தனையோ அமைப்புக்கள் மொழிக்கு

மொழி மாறுபட்டிருப்பதைப் பல மொழியியல் அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர் (உதாரணம் அகத்தியலிங்கம், 1978, 1980). இந் நிலையில் மோரிஸ் ஸ்வதேஷ் (Morris Swadesh) என்பார், உலக மொழிகள் அனைத்திற்குமுள்ள மன உருக்களை (concepts) ஆராய்ந்து, நூற்றுக்கும் மேற்பட்ட பொது மன உருக்கள் உள்ளன என வரையறுத்துள்ளார் என்று கர்ரோலும் (Corrol) காசகிரந்தேயும் (Gasagrande) (1966:490) கூறுகின்றனர். அவற்றுள் மூவிடப் பெயர்களும், செயல்வினைச் சொற்களாகிய (action verbs) நட, வா, போ, நில், இரு, விழு, பற, நீந்து, பிடி, போன்றவைகளும், இயற்கைப்பெயர்களாகிய சூரியன், நட்சத்திரம், உப்பு, தண்ணீர், காற்று, நிலம் போன்றவைகளும், குணப்பெயர்களாகிய பழைய, உலர்ந்த குளிர்ந்த, நல்ல, கெட்ட போன்றவைகளும், மற்றும் இன்மை, உண்மை, பெயர், ரோடு போன்றவைகளும் அடங்கும் எனக் குறிப்பிடுகிறார்கள். இப்பொதுமைத்தன்மை எப்பொழுதும் ஒரே மாதிரியே இருக்குமெனக் கூறமுடியாது. ஏனெனில், எண்ண அலைகள் வளர்ந்த வண்ணம் இருப்பதால், பொருளியல் களனும் மன உருவும் விரிவடைந்து, மொழியின் பயனாக்கம் தேவைக் கேற்ப மாறிக்கொண்டேயிருக்கிறது. இதை யாரும் மறுக்கவும் முடியாது; இதனால் ஒரு மொழியை எப்படியும் பயன்படுத்தலாம் என்று கருதவும் முடியாது. அதோடு ஒரு மொழியில் பேசுவோரின் மன உருவுக்கு ஏற்பவே பொருளியல் தன்மை அமைந்திருக்கும். இதற்கு மொழி பேசுவோரின் சமூக அமைப்பும் ஒரு காரணமாகக் கொள்ளப்படும்.

2 0 தமிழ் மொழியின் தொடர்மொழியில் அமைந்த சொற்களின் பொருளமைதியும் அதன் விளையாட்டும் பற்றி ஒரு சில எடுத்துக் காட்டுக்கள்மூலம் விளக்கிக் காட்டுவதே இக்கட்டுரையின்நோக்கம்.

2.1 தமிழில் பெயர்கள் உயர்திணை (human) அஃறிணை (non-human) எனும் இரு பெரும் பிரிவுகளுள் அடங்கி விடுதல் காணலாம். மேலும் அஃறிணை உயிர்த்திணை (animate), உயிரல் திணை (inanimate) என்று இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. இப்பாகுபாடு இலக்கண அடிப்படையில் அமைந்துள்ளது. சில மொழிகளில் சொல்லமைப்பின் அடிப்படையில் அமையும் (அகத்தியலிங்கம், 1980) இலக்கண அடிப்படையில் அமைந்திருப்ப

தால்தான், இவ்விரு திணைகளுள்ளும் மாறிவரும் பெயர்களும் உண்டு எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதனால்தான்,

> **பெயர்எனப் படுபவை தெரியுங் காலை**
> **உயர்திணைக் குரிமையும் அஃறிணைக்குரி மையும்**
> **ஆயிரு திணைக்குமோ ரன்ன உரிமையும்** (645 2-4)

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தொல்காப்பியனார் இலக்கணம் அமைத்துச் சென்றுள்ளார்.

இவ்வாறு ஒரு மொழியிலுள்ள சொற்களைப் பல்வேறு இலக்கணக் கூறுகளாக வகுத்துப் பொருள் கூறினும், அது பயன்படு நிலையை அடையும்போது, அவை ஒன்றுக்கொன்று கொண்டுள்ள உறவுத் தன்மையைக் கொண்டே கேட்போரும் கற்போரும் புரிந்து கொள்ள முடியும். ஒரு மொழி ஒருவருக்குப் புரியாவிட்டால், அது மொழியின் இயல்பிலிருந்து மாறுபட்டுவிடுவதாகவே கொள்ள வேண்டும். எனவே, புரியவைக்கிற தன்மையைப் பொறுத்தே அது மொழியெனக் கருதப்படும். இதனால், ஒரு மொழியிலுள்ள சொற்களைப் பயன்படுத்துவோருக்கு அவை புரியவேண்டும்; அவ்வாறு புரிந்தால்தான், அவரால் பயன்படுத்தப்படும் மொழியும் மற்றையோரால் புரிந்துகொள்ளப்பட்டுக் கருத்திணைப்புப் பாலமாக அமையும். பேசுவோருக்கே புரியாமல் பேசுவதைக் கேட்போர் புரிந்துகொண்டதாக வரலாறேயில்லை.

**2 2** ஒரு மொழியில் ஆயிரக்கணக்கான சொற்கள் உள்ளன. எல்லாச் சொற்களையும் ஒருவர் நினைவில் வைத்திருக்க முடியாது. அனைத்துச் சொற்களின் தொகுதியே அகராதி எனப்படுகிறது. ஒரு அகராதியில் உள்ள சொற்களையெல்லாம் நினைவில் வைத்திருப்பதால், அம்மொழி தெரிந்தவராக ஒருவரை ஒத்துக்கொள்ள முடியாது. காரணம் எல்லாத் தனிச் சொற்களையும் - அகராதியில் இடம் பெற்றுள்ள சொற்களையும் சொல்லன்கள் (lexemes) என்றுதான் கொள்ளவேண்டும். செங்கற்களை வீடென்று சொல்ல முடியாதது போலச் சொல்லன்களை மொழியென்று கூறமுடியாது. சொல்லன்களைப் பயன்படுத்தும் முறையாலேயே கருத்துப் பரிமாறச் (communication) ஏற்படும். கருத்துப் பரிமாற்றம் ஏற்பட்டால் தான் அது மொழியென்று ஆகும். ஆனால் கருத்தைப் பரிமாற்றம் சொல்லன்களை நினைத்த மாதிரி பேச்சிலோ எழுத்திலோ பயன்

படுத்தமுடியாது. ஏனெனில் ஒவ்வொரு சொல்லுக்குமிடையே அதன்தன் தன்மைக்கேற்பச் சில கட்டுப்பாடுகள் அமைந்துள்ளன. அதனால்தான், இதுஇது இன்னின்ன இடத்தில், இன்னின்ன வாறு வரும் என்று வரையறுக்கப்பட்டு, அதுவே ஒரு மொழியின் இலக்கணமாக அமைந்துள்ளது என்றால் அதில் தவறில்லை. இக்கட்டுப்பாடு அல்லது வரன்முறை அறியாத ஒருவர் சொல்லன் களை ஆளுவாராயின், 'அவர் என்ன! அர்த்தமில்லாமல் பேசுகிறார் அல்லது எழுதுகிறார்' என்ற கேலிப்பேச்சுக்கு அது இடமளித்துவிடும் எனவே, எந்தச்சொல்லை? எங்கெங்கு? எப்படி யெப்படி? பயன்படுத்தவேண்டும் என்று அறிந்தே அவற்றை ஆளவேண்டும். இது கற்றுத் தெரிந்து கொள்ளக்கூடியதல்ல – தன் புரிந்துகொள்ளும் திறமையின் அடிப்படையிலேயே - அவை தானாக அறிந்துகொள்ளப்படும். ஒருவனது மனத்தில் எழுகின்ற கருத்து, அவன் புரிந்துகொள்ளும் விதத்திலேயே வாக்கியங்களாக உருவாகும் அதையே பிறர் புரிந்துகொள்வர்.

**தேர்தல்களத்தில் போட்டி பலமாக இருக்கிறது**

என்ற வாக்கியக் கருத்தை மனத்கில் கொண்டு,

**இருக்கிறது போட்டி தேர்தல் பலமாக களத்தில்**

என்று பேசினாலோ எழுதினாலோ, அதன் கருத்துப் புரியாமல் ஆகிவிடுவதைக் காணலாம். இதனால், சொற்கள் ஒவ்வொன்றும் உறவு முறையில் ஏதோ ஒருவகைத் தொடர்பு உடையது என உணர்ந்து, அதற்கேற்றவாறு பயனாக்கம் செய்தால்தான் பொருள் தெளிவுபெறும்.

இதையுணர்ந்தே தொல்காப்பியர், சொல்' என்பது எது? அதன் பொருளியல் தன்மை என்ன? என்பனவற்றையெல்லாம்

**எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே** (640)

**பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்**
**சொல்லின் ஆகும் என்மனார் புலவர்** (641)

**தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்**
**இருபாற் றென்ப பொருண்மை நிலையே** (642)

என்னும் சூத்திரங்களையமைத்துத் தெளிவுபடுத்தியிருப்பது எண்ணி வியத்தற்குரியதொன்றாகும். இதனடிப்படையில் சொல்லின் பொருளை உணரவேண்டிச் சேனாவரையர்,

> "சொற்றான் இரண்டு வகைப்படும், தனிமொழியும் தொடர் மொழியும் என. அவற்றுள் தனிமொழியாவது சமயவாற்ற லால் பொருள் விளக்குவது. தொடர்மொழியாவது, அவாய் நிலையானும் தகுதியானும் அண்மைநிலையானும் இயைந்து பொருள் விளக்குந் தனிமொழி ஈட்டம்"

என்று சொல்லதிகார முதற் சூத்திரவுரையில் விளக்கிச்செல்வது ஆராயற்பாலது

**2.2.1** தனிமொழியாக நின்று ஒரு சொல் பொருளை உணர்த்து வது சமய வாற்றலால் – அதாவது இறைவனின் விருப்பத்தால் என்றும், அதனாலிதைச் 'சங்கேத ரூபாசக்தி' என்று வடநூலார் கூறுவர் என்றும் குறிப்பிடப்படுகிறது. தமிழ் மொழியைப் பொறுத்த அளவில் தனிமொழி பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும். இவை விகுதிகளுடன் இணைந்தோ இணையாமலோ பொருள் உணர்த்தி நிற்கும்.

**2.2.2** தொடர்மொழி இருமொழித் தொடர், பன்மொழித் தொடர் என இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. எனவே, சொற்கள் ஒருமொழி, இருமொழி, பன்மொழி என மூன்றுவகையாக நின்று பொருளை உணர்த்துவதாகக் கொள்ளலாம். தொல்காப்பியர் கூறிய 640, 641, 642 ஆகிய சூத்திரங்கள் ஒரு மொழியின் பொருண்மைத் தன்மையினையே விளக்கி நிற்கின்றன. ஆனால், மொழிப் பயன் பாட்டு நிலையில் (communicative purpose) இருமொழியும் பன் மொழியுமே பெரிதும் பயிலப்பட்டு வருதல் காணலாம். அதனால் தான் இன்று தொடரியியல் இலக்கணம் (syntax) பற்றி ஆராய்கின்ற பல்வேறு மொழியியல் அறிஞர்கள், தொடரியலில் சொல்லமைப்பின் நிலைபற்றி விரிவாக ஆராய்ந்துவருகின்றனர். தொடர்மொழி மூலமே தனிமொழியின் பல பொருள்நிலைகளை அறியமுடியும். இவ்வுண் மையை உணர்ந்தே சேனாவரையர் (14ஆம் நூற்றாண்டு) அவாய் நிலை, தகுதிநிலை, அண்மைநிலை ஆகிய மூவகை நிலைகளால் தொடர்மொழி பொருள் விளக்கி நிற்கிறது என்கிறார். இவர்

கருத்தைப் பின்பற்றியே, கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த வைத்தியநாத தேசிகர் தன் இலக்கண விளக்கத்தில்,

> **தனிமொழி சமய வாற்றலாற் றனித்துந்**
> **தொடர்மொழி யவாய்நிலை தகுதி யண்மையின்**
> **றொகைநிலை தொகாநிலை யாயிரு வகையிற்**
> **றொடர்ந்தும் பொருளைத் தோற்றுத லியல்பே (161)**

எனக் கூறிச் சொற்கள் பொருள் விளங்கச்செய்யும் பான்மையினை விளக்குகிறார்.

**2 2.2 1** ஒரு சொல் தன் பொருளை விளக்க இன்னொரு சொல்லைத் தழுவி நின்றால் அது ஆவாய் நிலை ஆகும் தொடர்மொழியில் வருகின்ற சொற்கள் ஒவ்வொன்றும், அவ்வாக்கியத்தின் உறுப்புக்களாகக் (components) கருதப்படுகின்றன. எல்லாச் சொல்லுமே வாக்கியத்தின் அடிப்படை உறுப்புக்களாகக் (ultimate constituents) கருதப்படும். ஆனால் ஒவ்வொன்றும் தங்களுக்குள் தழுவி நிற்பதில்லை. உதாரணமாக

1. மழை பெய்தது
2. மழை நன்றாகப் பெய்தது

என்னும் இருவாக்கியங்களில் **மழை, பெய்தது** ஆகியவை ஒன்றையொன்று தழுவி—அவாவி நிற்கின்றன. ஆனால் **மழை, நன்றாக, பெய்தது** என்னும் சொற்களுள் **மழை, நன்றாக** ஆகிய இரண்டும் ஒன்றையொன்று தழுவி நிற்கவில்ல. **நன்றாக, பெய்தது** ஆகிய இரண்டும் ஒன்றையொன்றுத் தழுவிப் பின்னர் **மழை, நன்றாகப் பெய்தது** என்னும் சொற்கோவையுடன் அவாவி நிற்பதைக் காணுகிறோம். இதனை *Immediate Constituents* என மொழியியல் கோட்பாட்டில் கூறுவர்.




**2.2.2.2** இனி, இன்னசொல் இன்ன சொல்லுடன்தான் வர வேண்டும் என்ற நியதியும் அமைந்துள்ளது. இதனடிப்படையில்

பெயரும் வினையும் தொடர் மொழியில் வரும்போதுதா ் இந்நியதிகள் வலியுறுத்தப்படுகின்றன, உதாரணமாக,

3. செடி பூத்தது
4. செடி நடந்தது

எனும் வாக்கியங்களில் 3 ஆம் வாக்கியம் சரியான பொருளைத் தர, 4 ஆம் வாக்கியம் அமைப்பு நிலையில் சரியாக இருந்தாலும், பொருள் நிலையில் தவறுடையதாக இருக்கிறது. இதற்குக்காரணம் 'இன்ன சொல் இன்னதற்குத் தகுதி உடையது' என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் அமையாததேயாகும். நடக்குந்தொழில் செடிக்கு உரியதல்ல. எனவே நடக்குந்தொழில் சம்பந்தப்பட்ட சொற்கள் செடிக்குத் தகுதியில்லாமலாகி விடுகிறது. எனவே, தகுதியுடையவற்றைக் குறிப்பிடவே தகுதி நிலை எனத் தமிழ் இலக்கணம் குறிப்பிடுகிறது. இதையே மொழியியலாளர் *Selectional Restrictions* என்பர்.

2.2 2.3 மூன்றாவதாகச் சொற்களை இடையீடின்றிக் கூறுவது தான் அண்மைநிலை எனக் கூறப்படுகிறது. ஒரு சொல்லைச் சொல்லி விட்டு, ஓரிரு நாழிகை கழித்து இன்னொரு சொல்லைச் சொன்னால் அச்சொற்களுக்கிடையேயுள்ள இடைவெளி அதிகரித்துப் பொருள் விளக்கம் கெட்டுவிடும் – அதனால் அடுத்தடுத்து இடையீடின்றிக் கூறுதல் வேண்டும் – அதுவே அண்மை நிலை எனக்கருதப்படுகிறது. மனிதனின் மனத்தில் எழும் எண்ணங்கள் இடையீடின்றித் தோன்றுவன. அவ்வெண்ணங்களுக்கு ஏற்பவே சொற்கள் தோன்றும். இதனால், இயல்பாகவே சொற்கள் இடையீடின்றித் தோன்றி அமையும். ஆகவே, அவாய் நிலை, தகுதி ஆகியவற்றிற்கேற்பச் சொற்களை அமைப்பதே அண்மைநிலை எனக் கொள்ளல் பொருத்தமாகும். இதை *Item and Arrangement* என மொழியியலாளர்கள் கூறுவர்.

3.0 அவ்வாறு இக்கால மொழியியல் கோட்பாட்டு நிலையை அன்றே மனத்தில்கொண்டு இலக்கணம் அமைத்த பெருமை தமிழ் இலக்கணவல்லார்க்கே உரியது. இதன்படி இன்று தமிழ்மொழித் தொடர்மொழியில் பொருள்நிலை எவ்வாறு உள்ளது? என்பதைப்

பொருளியல் அடிப்படையில் விளக்கி, அதற்கு எவ்வாறு சமூக மொழியியல் கோட்பாடு ஆக்கமாய் அமைந்துள்ளது என்பதைக் கீழ்வருவனவற்றால் அறியலாம்.

**3.1** ஒலி எழுப்புகிற நிலையினைக்காட்ட **இரை, கரை, முழங்கு, கூவு, அகவு, கொக்கரி, பிளிறு, கர்ஜி, குரை, கனை, உறுமு, கத்து, பாடு, அழு, அலறு, கூப்பிடு, ஊளையிடு, ஒப்பாரி இடு, குரவையிடு, ஒலி எழுப்பு சப்தமிடு, சப்தம் போடு** போன்ற 20-க்கும் மேற்பட்ட சொற்கள் தமிழ் மொழியில் வழங்குதல் காண லாம். இவை ஒவ்வொன்றின் பொருள் நிலையையும் நோக்கினால் சில உண்மைகள் விளங்கும். தமிழ் மொழியில் முன்பு கூறியது போன்று பெயர்கள் உயர்திணை, அஃறிணை, உயிரல்திணை, உயிர்த்திணை எனப் பாகுபடுத்துவதற்கு அரணாக மேலே காட்டிய சொற்கள் இருப்பதை அறியலாம். எடுத்துக்காட்டாக,

5. அ) காற்று இரைகிறது
   ஆ) கடல் இரைகிறது
   இ) மோட்டார் இரைகிறது
   ஈ) சங்கு முழங்குகிறது

இங்கு உயிரல் திணைக்கென இரை, முழங்கு ஆகிய வினைச் சொற்கள் வருவதைக் காண்கிறோம்.

6. அ காகம் கரையும்
   ஆ) குயில்/கோழி கூவும்
   இ) சேவல் கொக்கரிக்கும்
   ஈ) மயில் அகவும்
   உ) யானை பிளிறும்
   ஊ) நாய் குரைக்கும்
   எ) நரி ஊளையிடும்
   ஏ) குதிரை கனைக்கும்
   ஐ) கழுதை கத்தும்
   ஒ) புலி/பன்றி உறுமும்
   ஓ) சிங்கம் கர்ஜிக்கும்
   ஔ) குழந்தை அழும்

போன்ற வாக்கியங்களில் வரும் வினைச் சொற்கள் அஃறிணை-உயிர்த்திணைக்குத் தகுதியுடையனவாக அமைந்துள்ளன

7. அ) அவன் பேசினான்
ஆ) சீதை முணுமுணுத்தாள்
இ) அவள் ஒப்பாரியிட்டாள்
ஈ) அவர்கள் குரவையிட்டனர்

போன்ற வாக்கியங்களில் வரும் வினைச்சொற்கள் உயர்திணைக் கேயுரியனவாக உள்ளன. மேலே காட்டிய 5, 6, 7 ஆகிய வாக்கிய அமைப்புகளை நோக்கும்போது பொருளியல்களன் எத்தன்மையில் அமைந்திருக்கிறது என்பது விளங்கும். ஆனால், மேலே காட்டிய பெரும்பான்மையான வினைகளுமே உயர்திணைக்கு உரியனவாக வருவதைக்கொண்டு, ஆறறிவும் அடங்கியவன் மனிதன் என்பதால், இவ்வாறு வருகிறதா? என ஐயுற வேண்டியிருக்கிறது. உயர்திணைக்கேயுரிய வினைகள் மற்ற திணைகளுக்கு வருவதில்லையென்பது மேலும் அதற்கு அரண் செய்வதாகவுள்ளது. இவ்வாறு பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் உள்ள பொருள்நிலை, தொடர்மொழியால் அறுதியிடப்படுவதன் மூலம் ஒவ்வொரு சொல்லன்களுக்கும் உள்ள தனித்தன்மை மேலும் விரிவாக்கப்படுதல் காணலாம். இவ்வாறு பொருளியல்களனில் ஏற்பட்ட தெளிவு இன்று இல்லை காரணம், ஒலிசெய், சப்தமிடு, சப்தம்போடு ஆகிய வினைகளை அனைத்துச் சொல்லன்களுக்கும் தகுதியுடையதாகப் பயன்படுத்துவதே ஆகும். முன்னர் அமைந்திருந்த பொருளியல் வளர்ச்சி மொழியின் ஆக்கத்தையும் தாக்கத்தையும் விளக்கி நின்றது; ஆனால், பிற்கால வளர்ச்சி சுருங்கச்சொல்லி விளக்கும் முகமாக உள்ளது.




என்று இருந்த ஆக்கம்,

உயிர்த்திணை　　　உயிரல்திணை

அஃறிணை　　　உயர்திணை

பொருளியல் களன்

எனத் தலைகீழாக மாறி நிற்பதை உணரலாம்.

**3 2** இதுபோன்று காலப்பெயர்களையும் இங்குக் குறிப்பிட்டு விளக்குவது பொருத்தமாகும். எல்லா மொழியினருக்கும் காலம் பொதுவானது. காலத்தை அடிப்படையாகக் கொண்டே மனித வாழ்க்கை அமைந்துள்ளது. மனிதன் இரவு வருவதால் ஓய்வு எடுக்கிறான் – பகல் வருவதால் பணிசெய்கிறான்; ஒவ்வொரு நொடியும் ஒருவனது ஆயுளைக் குறைத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் நன்றாக உணர்ந்திருந்தான்.

இரவு – பகலை அடிப்படையாக வைத்துக் காலப்பெயர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இரவு – பகல் இணைந்தது ஒரு நாள். **நாள்** என்ற கால அளவுப் பெயரை அடிப்படையாக வைத்து, அதன் மேல் நிலையிலும் கீழ் நிலையிலும் பல்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேல்நிலையில் **வாரம்** (7 நாள் கொண்டது), **மாதம்** (4 வாரம் அல்லது 30/31 நாட்கள் கொண்டது), **ஆண்டு** (12 மாதங்கள் கொண்டது), **யுகம் / ஊழி** (பல்லாயிரம் ஆண்டுகள் கொண்டது) எனவும், கீழ் நிலையில் **நொடி** (மாத்திரை), **விநாடி** (60 நொடி கொண்டது), **மணி** (60 விநாடி கொண்டது), **நாள்** (24 மணி கொண்டது) எனவும் கால அளவுப்பெயர்கள் வகுக்கப்பெற்றுள்ளன.

மேலும் **நாள்** எனும் காலஅளவு **இரவு**, பகல் எனும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதோடு **காலை, அதிகாலை, கருக்கல்** (விடியற்காலம்), **மாலை** (அந்தி, சாயங்காலம்), **மத்தியானம்** (நண்பகல்), **முன்னிரவு, பின்னிரவு, சாமம்** (நடுச்சாமம்) என்று பலவேறு உட்பிரிவுகளையும் கொண்டுள்ளது. இவற்றை **நேரக்கிளவி** எனக்கொள்ளலாம். இவ்வுட்பிரிவுகள் சமூக அமைப்பை ஒட்டி மொழிக்கு மொழி மாறுபடுவதும் உண்டு. இது தவிர, காலக்கிளவி

யாகக் **காலம், பொழுது, நேரம், வேளை** என்னும் பெயர்களைக் கொள்ளலாம். இவ்வாறு 1) **கால அளவுப் பெயர்** 2) **நேரக்கிளவி** 3) **காலக்கிளவி** என்று காலத்தைக் குறிக்கும் பெயர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவை அனைத்தும் தனிச்சொற்களாக வரின் சொல்லன்களாகக் கொண்டு அகராதியில் இணைக்க மட்டுமே பயன்படுகின்றன. இவைகள் பொருளியல் களத்தில் விளையாட வரும்போது தனித்து வருவதே யில்லை.

**3.2.1** முதலில் கால அளவுப்பெயர்களை நோக்கின், பொருள் நிலையில் சில தெளிவுகள் ஏற்படுவதைக் காணலாம். இவை **கீழ்நிலை அளவு, மேல்நிலை அளவு** என இரண்டாகப் பிரிக்கப் பட்டுள்ளதை முன்னரே குறிப்பிட்டோம் இவ்விரண்டும் பொருள் நிலையில் மாறுபட்டுள்ளன எ ்பதைக் கீழ்க்காணும் உதாரணங் களால் அறியலாம்.

8. அ) ஒரு நாள்
   ஆ) இரண்டு வாரம்
   இ) மூன்று மாதம்
   ஈ) நான்கு ஆண்டு

என்று எண்ணடைகளை (numaral adjectives) ஏற்று வருவதோடு **அந்த இந்த, பல, சில, நல்ல** போன்ற பெயரடைகளையும் **கெட்ட, சிறந்த, வாழ்ந்த, இறந்த** போன்ற பெயரெச்சங்களையும் ஏற்கும். இவ்வடைகள் இன்றி இவை பெயர்ச்சொற்களாக வருவதில்லை. இவ் அளவுப் பெயர்களுள் நாள் என்ற பெயரைத்தவிர மற்றவை பெயரடைகளாக வரும், அப்பொழுது எண்ணடைகளை ஏற்றுக் **காலம்** என்ற காலக் கிளவியைத் தொடர்ந்தே வரும்.

9. அ) ஒரு வார காலம்
   ஆ) இரண்டு மாத காலம்
   இ) ஐந்தாண்டு காலம்

இந்நிலை கீழ்நிலைக் கால அளவுப் பெயர்களாகிய **நொடி, விநாடி, மணி** ஆகியவற்றில் காணப்படவில்லை, **மணி** என்ற அளவுப்பெயருக்கும் **நொடி, விநாடி** என்ற பெயர்களுக்கும் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது.

10. அ) ஒரு நொடியில் வா/ஒரு நொடிப்பொழுதில் வா
ஆ) ஒரு விநாடியில் வா/ஒரு விநாடிப்பொழுதில் வா

எனக் கூறலாம். ஆனால்,

11. அ) ஒரு மணியில் வா

என்று கூற முடியாது. இதற்குப் பதிலாக,

12. அ) ஒரு மணி நேரத்தில் வா

எனக் கூறலாம், எனவே **மணி** என்ற சொல் கால அளவுப் பெயராகப் பயன்பட வேண்டுமானால் எண்ணடையும், **நேரம்** என்ற காலக்கிளவியும் முறையே பின்னும் முன்னும் இணைய வேண்டும். அவ்வாறன்றி,

13. அ) ஒரு மணிக்கு வா
ஆ) இரண்டு மணிக்கு வா

எனக் கூறின், இவை கால அளவைக் குறிக்கவில்லை. அதற்குப் பதிலாகப் பன்னிரண்டு பன்னிரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கும் நாள் அளவில், குறிப்பிட்ட அந்தப் பிரிப்பையே இந்த **மணி** என்ற பெயர் குறித்து நிற்கக் காணலாம்.

மேலும், இக்கீழ்நிலை அளவுப்பெயர்கள், மேல் நிலை அளவுப் பெயர்களைப் போன்று எண்ணடைகளை ஏற்றுவந்தாலும், **மணி** என்ற அளவுப்பெயர் மட்டுமே கண்டிப்பாக அவ்வடைகளை ஏற்று வரும் நிலையில் உள்ளது. மற்ற இரண்டும்,

14. அ) நொடிப்பொழுது
ஆ) விநாடிப்பொழுது

எனப் **பொழுது** எனும் காலக்கிளவியை ஏற்றுப் பெயடையைப் பெறாமலும் வரும்.

**எத்தனை** என்ற வினாச்சொல் இக்கால அளவுப் பெயர்களுடன் வரும்போது

15. அ) எத்தனை நாள்? : நாள் எத்தனை?
ஆ) எத்தனை வாரம்? : வாரம் எத்தனை?
இ) எத்தனை மாதம்? : மாதம் எத்தனை?
ஈ) எத்தனை ஆண்டு? : ஆண்டு எத்தனை?

என இடம் மாறி வருகிறது இது பெயரடையாகவும் பெயராகவும் வரும் இயல்பினது. எனவேதான் கால அளவுப்பெயருக்குப்பின் எண்ணடைகளைச் சேர்த்தும், அடுத்து எண்ணுப் பெயர்களைச் சேர்த்தும் இவ்வினாவுக்கு விடையாகக் கூறலாம்.

16. அ) ஒரு நாள் : நாள் ஒன்று
ஆ) இரு வாரம் : வாரம் இரண்டு

ஆனால், வாககியம் 15-ஐ புறநிலை (surface structure) வாக்கிய மாகக் கொண்டு அதன் அடிநிலை (deep structure) வாக்கியத்தை நோக்கின், **இருக்கிறது/உண்டு** எனும் வினைமுற்றுக்கள் இருப்பதையும்; அவ்வாறாயின் **அதற்கு/இதற்கு, இன்னும், அதற்கு இன்னும், இன்னும் அதற்கு** என்று ஒன்றோ இரண்டோ வினையடைகளை ஏற்பதையும் காணலாம்.

17. அ) அதற்கு இன்னும் எத்தனை நாள் இருக்கிறது?
அதற்கு இன்னும் நாள் எத்தனை இருக்கிறது?

ஆ) இன்னும் அதற்கு எத்தனை வாரம் இருக்கிறது?
இன்னும் அதற்கு வாரம் எத்தனை இருக்கிறது?

**எப்படி** என்ற வினா வினையடையும் இக்கால அளவுப் பெயர்களுடன் வரும்.

18. அ) நாள் எப்படி?
ஆ) வாரம் எப்படி?
இ) மாதம் எப்படி?
ஈ) ஆண்டு எப்படி?

**எப்படி** என்பது வினையடையென்றால், அது வினையைச் சார்ந்து வரல் வேண்டும். ஆனால், வாக்கியம் 18-ல் வினை இல்லையாகையால், இவ்வாக்கியங்களை புறநிலை வாக்கியங்களாகக்கொண்டு, அடிநிலை வாக்கியத்தில் **இருக்கிறது** என்ற வினைமுற்றை அமைத்துக்கொள்ள வேண்டும். இவ்வினையடை வரும்போது **அந்த/இந்த** என்ற பெயரடையைக் கால அளவுப்பெயர்கள் ஏற்றுவரும்.

19 அ) அந்த நாள் எப்படி இருக்கிறது?
ஆ) இந்த ஆண்டு எப்படி இருக்கிறது?

மேலே காட்டிய 15, 16, 17, 18, 19 ஆகிய எடுத்துக்காட்டுக்கள் மூலம் **எத்தனை**, **எப்படி** ஆகிய இரண்டும் மேல்நிலைக் காலஅளவுப் பெயர்களுக்கே வருவனவாக உள்ளன. ஆனால், கீழ்நிலை அளவுப் பெயர்களுள் **மணி** என்ற பெயருக்கு முன் அல்லது பின் **எத்தனை** என்ற பெயரடை மட்டும் வருதல் காணலாம்

20. அ) மணி எத்தனை?: எத்தனை மணி?

இவ்வாக்கியம் **ஆயிற்று** அல்லது **ஆகிறது** என்னும் வினைமுற்றை அடிநிலையில் கொண்டுள்ளது. அதோடு, இங்கும் **மணி** என்பது கால அளவுப் பெயரைக் குறிக்கவில்லை என்பது நோக்கத்தக்கது. அதனால்தான் **எத்தனை** முன்னோ பின்னோ வந்து வாக்கியத்தை அமைக்கிறது. ஆனால், கால அளவுப்பெயரைக் குறிக்கவேண்டுமாயின்,

21. அ) எத்தனை மணி நேரம் ஆயிற்று

என்றே வரவேண்டும். ஆகவே **நேரம்** என்ற காலக்கிளவி **மணி**யை அடுத்து வந்தால்தான், அது கால அளவுப் பெயராகும் என்பது உய்த்துணரற்பாலது.

**பலன்** என்ற பெயர்ச்சொல் மேல்நிலைக் கால அளவுப்பெயர்களை அடுத்துவர, அவை பெயரடைகளாக மாறி, மற்ற பெயரடைகளை ஏற்றும் ஏற்காமலும் வரும்.

22. அ) நாள் பலன்/ஒரு நாள் பலன்
    ஆ) வாரப்பலன்/இருவாரப் பலன்
    இ) மாதப்பலன்/மூன்று மாதப் பலன்
    ஈ) ஆண்டுப்பலன்/அந்த ஆண்டுப் பலன்

**3.2.2** இனி நேரக்கிளவிகளாகிய **காலை**, **மாலை** போன்றவற்றின் பொருள்நிலையை, அவை காலக்கிளவிகளை ஏற்று வரும் பான்மையில் சில தனித்தன்மைகளைக் கீழ்வரும் அமைப்பு முறையால் அறியலாம்.

23. அ) { மாலை, காலை, பகல், இரவு, முன்னிரவு, பின்னிரவு } { காலம், நேரம், பொழுது, வேளை }

ஆ) { மத்தியானம், அந்தி, கருக்கல் } { வேளை, நேரம், பொழுது }

இ) { விடியற்காலம், சாயங்காலம் } { வேளை, நேரம் }

24. அ-வில் உள்ள நேரக் கிளவிகள் நால்வகைக் காலக் கிளவிகளையும் ஏற்று வருவதால், சங்கத்தமிழர்கள் பொழுதைப் பிரித்தது போல் **காலை, மாலை, இரவு, பகல், முன்னிரவு, பின்னிரவு** ஆகிய வற்றைப் பெரும்பொழுது எனக்கொள்ளினும் தவறாகாது போல் தோன்றுகிறது. 23. ஆ-வில் காலம் என்ற காலக்கிளவி வராததால் அவற்றைச் சிறுபொழுதாகக் கொள்ளலாம். இவற்றின் பொருளியல் களத்தை நோக்கினும் இவ்வுண்மை புலப்படும். **பகல், இரவு** இரண்டும் ஒரு நாளின் இரு பகுதிகளையும் **காலை, மாலை** பகலின் இரு பகுதிகளையும் **முன்னிரவு, பின்னிரவு** இரவின் இரு பகுதிகளையும் குறித்து நின்றமையால் இவற்றைப் பெரும்பொழுது என்பதில் தவறில்லை. ஆனால் மற்ற பெயர்கள் பகலின் சில குறிப்பிட்ட நேரத்தை மட்டுமே குறித்து நிற்கின்றன. இத் தன்மைக்கு ஏற்பவே இவை காலக்கிளவியை ஏற்றுவந்து அவற்றின் பொருள்நிலையைத் தெளிவுறுத்தி நிற்கக் காணுகிறோம்.

23. இ-யில் காலக்கிளவியாகிய **பொழுது** இடம் பெறாமைக்குக் காரணம், நேரக்கிளவி ஏற்கனவே **காலம்** எனும் காலக் கிளவியை கொண்டு முடிந்திருப்பதேயாகும்.

மேலும், இந்நேரக்கிளவிகள் கால அளவுப்பெயர் போன்று பெயரடைகளை ஏற்றுவருவதில்லை என்பதும், சுட்டடையாகிய **அந்த இந்த** என்பதை மட்டுமே ஏற்றுவரும் என்பதும் குறிப்பிடத் தக்கச் செய்திகளாகும்.

**3.2.3** காலக்கிளவிகளுள் **காலம், பொழுது** என்பன எண்ணடை களை ஏற்காததாலும், **வேளை, நேரம்** என்பன ஏற்பதாலும் இவ் விரண்டு ஜோடிகளும் இருவேறு தன்மையினையுடையதெனக் கொள்ளலாம். ஆனால் **பொழுது** என்னும் காலக்கிளவி காலமாற்றத் தால் பெயர்ச்சொல் தன்மையிலிருந்து மாறிப் பயிலப்பட்டு வருகிறது. பெரும்பாலும் கட்டுவடிவமாக (bound form)வே வழங்கிவருவதால், மற்ற கிளவிகளினின்றும் சற்றே மாறுபட்டுள்ளது. எனவேதான்,

24. அ) எல்லா நேரங்களிலும்
    ஆ) எல்லா வேளைகளிலும்
    இ) எல்லா காலங்களிலும்

என வரும்போது,

ஈ) எல்லாப் பொழுதுகளிலும்

என வராமலிருக்கிறது. இதுபோன்றே **நல்ல, கெட்ட** போன்ற பெயரடைகளும் **அந்த, இந்த** போன்ற சுட்டடைகளும் **பல, சில** போன்ற அடைகளும் **பொழுது** என்னும் கிளவிக்கு வருவதில்லை.

25. அ) பொழுது புலர்ந்தது
    ஆ) பொழுது போய்விட்டது

எனச் சில இடங்களில் வழங்கினாலும், இங்குச் **சூரியனை** அல்லது **பகலைக்** குறித்தே நிற்கிறதென்று கொள்ளவேண்டியிருக்கிறது.

26. அ) ஒரு நேரம் : இரண்டு நேரம்
    ஆ) ஒரு வேளை : இரண்டு வேளை

என எண்ணடைகளை ஏற்று வருவதால், **நேரம், பொழுது** ஆகிய வற்றை எண்ணப்படு பெயர்களாக (count nouns)வும் கொள்ளலாம். 'ஒருவேளை' என்னும்போது 'சிலசமயம்' (perhaps) என்னும் பொருளில் வந்து மாறுபட்டும் நிற்கும். **சமயம்** எல்லா காலக் கிளவிக்கும் பொதுவானதாக உள்ளது.

**3.2.4** இவ்வாறு பொருள்நிலையில் பல்லாற்றானும் மாறுபட்டுக் காணப்படும் காலப்பெயர்கள் சில பொருளியல்களினில் பொதுமை காட்டி நிற்பதையும் கவனிக்கவேண்டும்.

27. அ) வாரா வாரம்
    ஆ) மாதா மாதம்

28. அ) வேளா வேளை
    ஆ) காலா காலம்

எனவும்,

29. அ) நாள்தோறும்
    ஆ) வாரந்தோறும்
    இ) மாதந்தோறும்
    ஈ) ஆண்டுதோறும்

50. அ) காலந்தோறும்
    ஆ) நேரந்தோறும்
    இ) வேளைதோறும்

என்வும் தொடர்மொழியில் ஆக்கம்பெற்று பொருள் நிலையைக் காட்டி நிற்பது மேலும் ஆராய்ச்சிக்குரியதாக அமைந்துள்ளது.

இவ்வாறு பல நிலைகளில் தனி மொழி தொடர் மொழியாகின்ற நேரத்தில் பொருள்விளக்கம் பெறுவதைக் காணலாம்.

## துணை நூல்கள்

1. அகத்திலிங்கம்,ச. 1978. **உலகமொழிகள்-திராவிடமொழிகள் 2,** அனைத்திந்தியத் தமிழ் மொழியியற்கழகம், அண்ணாமலை நகர்.

2. ——— 1980, **சொல்லியல் 1,** அனைத்திந்தியத் தமிழ் மொழியியற்கழகம், அண்ணாமலைநகர்.

8. John B. Corrol and Toseph B. Casagrande, 1966. 'The function of Lantuage Classificat:ons in Behavior' *Communication and Culture*, Holt. Ninchart and Winston, Nawyork.

# படர்க்கை இடப்பெயர் தான்-அதன் தொடரியல் பண்புகள்

எம். சுசீலா
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1. தமிழிலுள்ள இடப்பெயராகிய **தான்** இருவகைப் பயன்பாடுகளைக் கொண்டு விளங்குகிறது. இச்சொல் தற்சுட்டுப் பெயராகவும் (Reflexive pronoun) எழுவாய்ப் பெயரைத் தொடர்ந்து அதனைக் குறிக்கும் படர்க்கை இடப்பெயராகவும் (Third person pronoun) பயன்படுத்தப்பெறுகிறது. இதனைக் கீழ்வரும் தொடர்களில் காணலாம்.

1. அவன் தன்னையே பாராட்டிக்கொண்டான். (தற்சுட்டு இடப்பெயர்)
2. அவன் தன்னைப் பார்க்க ஒருவரையும் அனுமதிப்பதில்லை. (படர்க்கை இடப்பெயர்)

படர்க்கை இடப்பெயரான **தான்** என்னும் சொல்லின் தொடரியல் பண்புகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தற்சுட்டு

இடப்பெயர் என்ற வகையில் அதன் பண்புகள் இங்கு இடம் பெறவில்லை

## 2. தொடரியல் பண்புகள்

2.1. தன்மை – முன்னிலை இடப்பெயர்களையும், படர்க்கை இடப்பெயர்களையும் ஒப்பிடுகையில் அவற்றிடையே ஒரு வேறுபாடு காணப்படுகிறது. தன்மை – முன்னிலை இடப்பெயர்கள் ஒரேவகை பதிலீட்டு இடப்பெயர்களைக் (Suppletive pronoun) கொண்டிருக்க படர்க்கை இடப்பெயர்கள் இருவகை பதிலீட்டு இடப்பெயர்களைக் கொண்டுள்ளன.

3. நான் என்னுடைய நண்பனைப் பார்த்தேன்.

4. நீ உன்னுடைய நண்பனைப் பார்த்தாய்.

5. அவன் { அவனுடைய / தன்னுடைய } நண்பனைப் பார்த்தான்.

தொடர்கள் 3, 4-ல் எழுவாய் இடப்பெயர்களின் வேற்றுமைத் திரிபு சொற்களே எழுவாய் இடப்பெயர்களைக் (நான், நீ) குறிக்கின்றன. ஆனால் தொடர் 5-ல் **அவன்**, **தான்** ஆகிய இரு இடப்பெயர்களின் வேற்றுமைத் திரிபு சொற்கள் எழுவாய் இடப்பெயரை(அவன்)க் குறிக்கின்றன.

2.2. **அவன்**, **தான்** ஆகிய இரு இடப்பெயர்களின் வேற்றுமைத் திரிபு சொற்களும் எழுவாய் இடப்பெயரைக் குறிப்பினும், **தான்** ஒருவகைத் தனித்தன்மையைக் கொண்டு விளங்குகிறது. படர்க்கை இடப்பெயர்களும், பெயர்களும் தொடரின் எழுவாயாக வரும்போது மட்டுமே இந்த இடப்பெயர் அவற்றைச் சுட்டும்.

6. அவன் தன்னுடைய நண்பனுக்குக் கொடுத்தான்.

7. அவள் தன் தோழியோடு கோவிலுக்குச் சென்றாள்

*8. அவனுக்குத் தன்னுடைய நண்பன் கொடுத்தான்.

*9. அவனோடு தன் தோழி சென்றாள்.

தொடர்கள் 8, 9, போன்றவற்றில் மற்றொரு இடப்பெயரான **அவன்**, அல்லது **அவள்** போன்றவை மட்டுமே வருகின்றன.

10. அவனுக்கு அவனுடைய நண்பன் கொடுத்தான்.

11. அவளோடு அவளுடைய தோழி சென்றாள்.

2.3. இடப்பெயர் **தான்** தொடரியல் (syntax) அமைப்போடு தொடர்பு கொண்டதாகும். தொடரியல் அமைப்பின்படியே அது எழுவாயைச் சுட்டுகிறதேயன்றி பொருள் அமைப்பின்படி (semantics) இல்லை. இதனை செயப்பாட்டு வினையாக்கத் தொடர்களில் (passive sentences) காணலாம்.

12. ராமன் தன் ஊரில் ராவணனைக் கொன்றான்.

13. ராவணன் தன் ஊரில் ராமனால் கொல்லப்பட்டான்.

தொடர் 12-ல் இடப்பெயர் **தான் ராமனைச்** சுட்டுகிறது. ஆனால் தொடர் 13-ல் அது **ராவணனைச்** சுட்டுகிறது. பொருள் மாறுபடாவிடினும், தொடரியல் அமைப்பு மாறும்போது அந்த அமைப்புக் கேற்ப இடப்பெயர் சுட்டும் எழுவாயும் மாறுகிறது.

2.4 தனித் தொடர்களில் (simple sentences), **அவன், அவள்** போன்ற இடப்பெயர்கள் பொருள்மயக்கத்திற்கு இடமளிக்கின்றன. எடுத்துக்காட்டாக,

14. தாமரை அவளுடைய துணிகளைத் துவைத்தாள். என்னும் தொடரில் **அவளுடைய** தாமரையையோ அல்லது வேறு ஒரு பெண்ணையோ சுட்டலாம். இத்தகைய பொருள்மயக்கம் **தான்** பயன்படுத்தப்பெறின் தோன்றுவதில்லை.

15. தாமரை தன்னுடைய துணிகளைத் துவைத்தாள்.

2.5. **தான்** தனித்தொடர்களில் மட்டுமே மேற்கண்ட வண்ணம் பொருள்மயக்கம் நீக்கும் சொல்லாக விளங்குகிறது. புதைநிலை அமைப்பில் (deep structure) ஒன்றிற்கு மேற்பட்ட தொடர்களையும் அவற்றின் எழுவாய்களையும் கொண்டு விளங்கும் கலப்புத் தொடர்களில் (complex sentences) இந்த இடப்பெயரும் பொருள் மயக்கத்திற்கு இடம் தருவதாகவே உள்ளது. கீழ்வரும் தொடர்கள் இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளன.

16. கண்ணன் தன் தங்கையைக் கண்டித்தது ராமனுக்குப் பிடிக்கவில்லை.

17. கண்ணன் தன் வீட்டில்தான் இருக்கின்றான் என்ற உண்மையை ராமன் கமலாவிடம் சொல்லிவிட்டதை சீதா அறிந்தாள்.

தொடர் 16-ல் **தான் கண்ணனையோ, ராமனையோ** சுட்டக்கூடிய தாக இருக்க, 17-ல் அது **கண்ணனையோ, ராமனையோ** அல்லது **சீதாவையோ** சுட்டக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, தொடர் 16 இரு வேறு பொருள்களையும், தொடர் 17 மூன்று வெவ்வேறு பொருள்களையும் தருகின்றன.

மேற்காணும் கலப்புத் தொடர்களில் அடங்கு தொடர்களின் (constituent sentence) அமைப்பு எழுவாய் - செயப்படுபொருள் உயர்த்தல் (Subject-object raising) போன்ற எவ்வகை மாற்று விதிகளினாலும் (Transformational rules) மாற்றப்படாமல் அவற்றின் உண்மை நிலையிலேயே அமைந்துள்ளது. தலைமைத்தொடர்களும் (Matrix sentences) அடங்கு தொடர்களும் தெளிவாக உள்ளன. இதனைக் 191-ம் பக்கம் வரைபடத்தில் காணலாம்.

இதற்கு மாறாக, சில தொடர்களில் ஏதேனும் உயர்த்தல் மாற்று விதி (Raising Transformational rule) அடங்குதொடர்களில் உள்ள ஓர் உறுப்பை தலைமைத்தொடருக்கு உயர்த்திவிடுவதனால் அடங்கு தொடர்களின் எழுவாய்கள் அவற்றின் உண்மை நிலையில் தெளிவாகக் காணக் கிடைப்பதில்லை. கீழ்வரும் தொடர்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

18. அவன் தன் தங்கையை நன்றாகப் படிக்கச் செய்தான்.
19. கண்ணன் தன்னைக் கெட்டிக்காரன் என்று நினைக்கிறான்.
20. சந்திரா கமலாவைத் தன் தங்கையோடு விளையாடச் சொன்னாள்.

இத்தொடர்களில், அடங்கு தொடர்களின் எழுவாய்கள் தலைமைத் தொடர்களின் செயப்படுபொருளாக உயர்த்தப் பெறுகின்றன. இதன் காரணமாக தொடர் 20-ல் இடப்பெயர் **தன், சந்திராவையோ**




அல்லது **கமலாவையோ** சுட்டி நின்று ஒரு தொடரின் எழுவாயை மட்டுமின்றி செயப்படுபொருளையும் சுட்டக் கூடியதாகவும் தோற்ற மளிக்கிறது. இவ்வகைத் தொடர்களின் புதைநிலை அமைப்பை நோக்குகையில் இந்த இடப்பெயர் மாற்றமின்றி எழுவாயை மட்டுமே சுட்டி நிற்கக்கூடியது என்பது தெளிவாகும். இதனை 19 -ம் பக்க வரைபடத்தில் காணலாம்.




இங்கு, **தன்** தலைமைத்தொடரின் எழுவாயான **சந்திராவையோ,** அடங்குதொடரின் எழுவாயான **கமலாவையோ** சுட்டுகிறது.

2.6. கலப்புத்தொடர்களில் இடப்பெயர் புகுத்தப்பெறும் மாற்றுவிதி செயல்படும்போது அவை சுழற்சிமுறையில் (cyclical) செயல்படுகின்றன.

**விதிகளின் வரன்முறை** (ordering of rules)

(1) உயர்த்தல் (Raising) பிறவினையாக்கம் (causativisation), நிரப்பியம் (complementation), சார்பாக்கம் (Relativization) போன்ற மாற்றுவிதிகள்.

(2) இடப்பெயராக்கம் (Pronominalization).

2.6.1 **பிறவினையாக்கத் தொடர்கள்** (causative sentences) கீழ்வரும் தொடரில்,

21. கண்ணன் தன் தங்கையைப் படிக்கச் செய்தான்

புதைநிலை அமைப்பின் இரு தொடர்கள்

i) கண்ணன் செய்தான்.

ii) கண்ணனுடைய தங்கை படித்தான்.

ஆகியவை ஆகும். சுழற்சிமுறையில் மாற்றுவிதிகள் செயல்படுகையில் முதல் சுழற்சியில் (cycle) (இது அடங்குதொடரில் செயல்படுகிறது.) எந்த மாற்றுவிதியும் செயல்பட இயலாது. இரண்டாவது சுழற்சியில் (இது அடங்குதொடரை உள்ளிட்ட தலைமைத்தொடரில் செயல்படுகிறது.) முதலில் அடங்குதொடரின் எழுவாய் தலைமைத் தொடரின் செயப்படுபொருளாக உயர்த்தப்பெறலும், பிறவினையாக்கமும் செயல்படுகின்றன. இதன் விளைவாக,

கண்ணன் கண்ணனின் தங்கையைப் படிக்கச் செய்தான். என்ற தொடர் பெறப்படுகிறது. அடுத்து, **கண்ணனின்** என்ற பெயர் **தன்** என்ற இடப்பெயரால் மாற்றப்படுகிறது.

22. முல்லை கமலாவைத் தன் தங்கையோடு விளையாடச் சொன்னாள்.

இத்தொடர் இருவேறுபட்ட பொருளைத் தருகிறது.

i) அ) முல்லை சொன்னாள்
ஆ) கமலா கமலாவின் தங்கையோடு விளையாடு

ii) அ) முல்லை சொன்னாள்
ஆ) கமலா முல்லையின் தங்கையோடு விளையாடு.

முதல் பொருளைத் தருகையில், முதல் சுழற்சியில் உயர்த்தல் மாற்றுவிதி செயல்படுவதில்லை, ஆனால் இடப்பெயரைப் பயன்படுத்த இயலும். பின்னர், இரண்டாவது சுழற்சியில் அடங்கு தொடரின் எழுவாய் தலைமைத் தொடரின் செயப்படுபொருளாக உயர்த்தப் பெறுகிறது; பிறவினையாக்கமும் செயல்படுகிறது. இரண்டாவது பொருளைத் தருகையில், முதல் சுழற்சியில் எந்த மாற்று விதியும் செயல்படுவதில்லை. இரண்டாவது சுழற்சியில், எழுவாய் செயப்படு பொருளாக உயர்த்தப்பெறுதலும், பிறவினையாக்கமும், இடப்பெயராக்கமும் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெறுகின்றன.

2 6.2. **நிரப்பியத் தொடர்கள் (complement sentences)** கீழ்வரும் தொடரில்,

23. கண்ணன் தன்னைக் கெட்டிக்காரன் என்று நினைக்கிறான் புறநிலை அமைப்பின் இரு தொடர்கள்

i) கண்ணன் நினைக்கிறான்
ii) கண்ணன் கெட்டிக்காரன்

ஆகியன ஆகும். முதல் சுழற்சியில் எந்த மாற்றுவிதியும் செயல்படுவதில்லை. இரண்டாவது சுழற்சியில், எழுவாய்-செயப்படுபொருள் உயர்த்தலும், நிரப்பிய மாற்றுவிதியும் செயல்படுகின்றன. இதன் விளைவாக,

> கண்ணன் கண்ணனைக் கெட்டிக்காரன் என்று நினைக்கிறான்.

என்ற தொடர் பெறப்படுகிறது. பின்னர், இடப்பெயர் **தன்னை** என்ற சொல்லால் **கண்ணனை** என்ற சொல் மாற்றப்படுகிறது.

கீழ்வரும் தொடரில்,

24 கமலா தன் தங்கையைக் கண்டித்ததைக் கண்ணன் அறிந்தான்

இடப்பெயர் **தன் கமலாவையோ** அல்லது **கண்ணனையோ** சுட்டக் கூடும். அதன் இருவேறு பொருள்களாவன

(i) அ. கண்ணன் அறிந்தான்.
ஆ. கமலா கமலாவின் தங்கையைக் கண்டித்தாள்.

(ii) அ. கண்ணனின் அறிந்தான்.
ஆ. கமலா கண்ணனின் தங்கையைக் கண்டித்தாள்.

தொடர் 24-லும் இருவேறு பொருள்களுக்கேற்ப இடப்பெயராக்கம் நடைபெறும் சுழல்களும் மாறுபடும். முதல் பொருளைக் தருகையில் முதல் சுழற்சியிலும், இரண்டாவது பொருளைத் தருகையில் இரண்டாவது சுழற்சியிலும் இடப்பெயர் பயன்படுத்தப்பெறுகிறது.

**2.6.3 பெயரெச்சத்தொடர்கள் (Relative clause Sentences)**
பெயரெச்சத்தொடர்களிலும், இடப்பெயர் பயன்படுத்தப்பெறும் சுழல்கள் மாறுபடுகின்றன.

25. தன் அண்ணன் வரும்போது கமலாவும் வருவாள்.

26. தன் தம்பியைக் கண்டித்த கண்ணன் ராமனையும் கண்டித்தான்.

27. கண்ணன் தன் தம்பியை அடித்தபோது ராமன் அருகில் தான் இருந்தான்.

தொடர் 25-ல் முதல் சுழலில் எந்த மாற்றுவிதியும் செயல்படுவதில்லை. இரண்டாவது சுழலில் சார்பாக்கமும், இடப்பெயராக்கமும் செயல்படுகின்றன. தொடர் 26-ல், முதல் சுழற்சியில் இடப்பெயராக்கமும், இரண்டாவது சுழற்சியில் சார்பாக்கமும் செயல்படுகின்றன. தொடர் 27, இருவேறு பொருள்களைத் தருகிறது. இடப்பெயர் **தன் கண்ணனையோ** அல்லது **ராமனையோ** சுட்டக்கூடும்.

(i) கண்ணன் கண்ணனுடைய தம்பியை அடித்தபோது ராமன் அருகில்தான் இருந்தான்.

(ii) கண்ணன் ராமனுடைய தம்பியை அடித்தபோது ராமன் அருகில்தான் இருந்தான்.

இருவேறு புதைநிலை அமைப்புகளுக்கேற்ப, இடப்பெயராக்கம் செயல்படும் சுழல்களும் மாறுபடுகின்றன. முதல்பொருளைத் தருகையில், முதல் சுழற்சியில் இடப்பெயராக்கமும், இரண்டாவது சுழலில் சார்பாக்கமும் செயல்படுகின்றன. இரண்டாவது பொருளைத் தருகையில், முதல் சுழலில் எந்த மாற்றுவிதியும் செயல்படுவதில்லை. இரண்டாவது சுழலில், சார்பாக்கமும், இடப்பெயராக்கமும் செயல்படுகின்றன.

**2.7. புறனடை அமைப்புகள் (Exceptional constructions)** சில குறிப்பிட்ட தொடர்கள் இந்த இடப்பெயரின் மேலே காணும் இயல்புகளுக்கு முரண்பட்டு விளங்குகின்றன.

முதலாவதாக, பெயர்த்தொடரை **தான்** இட்டுக் கூறுவதற்கு இன்றியமையாததாக உள்ளது அது சுட்டிவரும் சொல் தொடரின் எழுவாயாக இருத்தல் ஆகும். ஆனால், உணர்வுகள் காரணமாக (cause)ச் செயல்படும் அமைப்புகளில் (Emotive Causative Construction) இது இன்றியமையாததாகக் காணப்படுவதில்லை.

28. தன் தந்தை நோய்வாய்ப்பட்ட செய்தி அவனைக் கவலைப்படுத்தியது.

29. தன் தோழி வந்திருக்கும் செய்தி அவருக்கு மகிழ்வை அளித்தது.

இரண்டாவதாக, ஒரு தொடரில் தன்மை, முன்னிலை இடப் பெயர்கள் அமைதல் **தான்** பயன்படுத்துவதைத் தடை செய்கிறது. கீழ்வரும் தொடர்கள் இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளன.

30. கமலா தன்னைக் கேள்வி கேட்பதை கண்ணன் விரும்ப வில்லை.

*31. நான் (அல்லது) நீ தன்னைக் கேள்வி கேட்பதை கண்ணன் விரும்பவில்லை.

32. ராமன் தன் தம்பியை அடித்தபோது கண்ணன் அருகில் தான் இருந்தான்.

*33. நான் (அல்லது நீ) தன் தம்பியை அடித்தபோது கண்ணன் அருகில்தான் இருந்தான்.

3. இந்த இடப்பெயரின் மேலே கண்ட தொடரியல் பண்புகள் வேறு சில தொடரியல் உண்மைகளையும் விளக்கவும் உறுதிப் படுத்தவும் ஒரு சான்றாக உள்ளது.

எடுத்துக்காட்டாக, பிறவினையாக்கத் தொடர்களில் வரும் வினைகளை இருவினைகளாகப் பிரிப்பதற்கும், அத்தொடர்களை புதைநிலை அமைப்பில் இரு தொடர்களாக விரிப்பதற்கும் இந்த இடப்பெயரை ஒரு சான்றாகக் காட்டலாம்.

34. ராமன் கண்ணனைத் தன் அறையில் படிக்கச்செய்தான்

இடப்பெயர் **தன் ராமனை** அல்லது **கண்ணனைச்** சுட்டுகிறது. ஒரு எழுவாயை மட்டுமே சுட்டக்கூடிய தன்மையுடையதாகையால் இந்தத் தொடருக்கு இரண்டு எழுவாய்கள் **(ராமன், கண்ணன்)** இரண்டு பயனிலைகள் **(படி, செய்)** உள்ளதையும், இத்தொடரை இரண்டு தொடர்களிலிருந்து **(ராமன் செய்தான், கண்ணன் படித் தான்)** வருவிக்கவேண்டும் என்பதையும் எளிதில் விளக்கலாம்.

இதைப் போன்றே குறைவினையோடு கூடிய தொடர்களில் –கு வேற்றுமைப் பெயர்களையே எழுவாயாகக் கொள்ளவும் இப்பெயர் **தான்** ஒரு சான்றாக இருக்கிறது.

35. கண்ணனுக்குத் தன் புத்தகம்தான் வேண்டும்.

36. கண்ணனுக்குத் தன் தங்கையைப் பிடிக்கும்.

37. கண்ணனுக்குத் தன் நண்பனை மட்டும்தான் தெரியும்.

38. கண்ணனுக்கு இந்தப் பாடம் புரியும்.

–கு வேற்றுமைப் பெயர்களை எழுவாய்ப் பெயர்களாகக் கொள்ளாவிடில் **தான்** அவற்றை ஏன் சுட்டுகிறது என்பதை விளக்க இயலாது.

---

## சொல் புதிது சுவை புதிது

'சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே' என்பது பாரதியாரின் கருத்து. 'தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கமரார் சிறப்புக் கண்டார்' என்பார் பாரதி. ஒரு சொல்லுக்கு உயர்வு, ஆற்றல், வலிமை, வீறு, வேகம், இனிமை, நயம் வருவது அது அகராதியில் 'அசையாமல்' கிடக்கும்போது அல்ல. தக்க இடத்தில் தக்க சொல்லைத் தக்க விதத்தில் பயன்படுத்தும்போதுதான் மேலே சொன்ன இயல்புகள் அனைத்தும் சொல்லுக்குக் கிடைக்கின்றன. பாரதி இதை நன்கு உணர்ந்தவன். அதனாலேயே, அவனுடைய சொற்றொடர் அமைப்பு வியப்புக்குரியதாய், புதியதாய், சுவை பயப்பதாய் இருக்கிறது. சொல் புதிது என்றால் இல்லாத சொற்களை புதிதாகப் படைப்பது மட்டும்தானா? இல்லை அதற்கு மேலும் ஒன்றுண்டு. இருக்கிற சொற்களையே புதிய முறையில் சேர்த்து அமைத்துச் சுவை காட்டுவதும் அதில் அடங்கும். தமிழ்ச் சொற்களுக்குப் புதுப்பொருள் தருவதிலும், புதியவீறு சேர்ப்பதிலும் புதிய சுவை ஊட்டுவதிலும், பாரதியின் ஆற்றல் தனிச்சிறப்புடையது. சமையற்காரனின் திறமைக்கேற்பச் சாம்பாரில் சுவை கூடுகிறதல்லவா?

— **இராம. சுந்தரம்**

சொல் புதிது சுவை புதிது ப. 37.

## ஆங்கிலத்திலுள்ள தமிழ்ச் சொற்கள்

தமிழ் மொழியிலிருந்து பல சொற்கள் கலாச்சாரக் கலப்பு காரணமாக ஆங்கிலத்திற்குச் சென்றுள்ளன. அவற்றில் சில வருமாறு-

| தமிழ் | ஆங்கிலத்தில் |
|---|---|
| காசு | cash |
| கத்தை | catechu ∞ cutch |
| கயிறு | coir |
| கறி | curry |
| கிட்டங்கி | godown |
| சக்கை | jack |
| சர்க்கரை | jaggery |
| மாங்காய் | mango |
| ஊற்று | woots |
| கட்டுமரம் | catamaran |
| சுண்ணாம்பு | chunam ∞ chunaming |
| அகில் | eagle-wood |
| வெற்றிலை | betal |
| சுருட்டு | cheroot |
| பட்டாளம் | pultun |
| மிளகு-தண்ணீர் | mulliga-tawny |
| மஞ்சாடி | mangelin |

ஆதாரம்: டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம்
தமிழ் மொழி வரலாறு, பக். 236
மதுரை 1977.

# உளவியலும் மொழிபயில் கோட்பாடும்

ந. நடராச பிள்ளை
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

மொழி பயில் கோட்பாடுகளின் வரலாற்றில் இரண்டாம் உலக மகா யுத்தக் காலம் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது. 'கேட்டுப் பேசல் வழக்கக் கோட்பாடு' **(Audio - Lingual habit theory)** உச்ச நிலையிலிருந்த காலம் சோம்ஸ்கியின் மாற்றிலக்கண ஆய்வுகள் எழுந்ததும் மாறிவிட்டது. 15 அல்லது 17 ஆண்டுகளாக ஸ்கின்னரின் வாய்மொழி நடத்தையையும் **(Verbal Behaviour)** சேர்த்துக் கொண்டு எழுந்த கற்றல் கோட்பாட்டிற்கு நேர் எதிரானதொரு கோட்பாடு ஓர்தல் விதி பயில் கோட்பாடு **(Cognitive Code Learning Theory)** - எழுந்தது. அது மொழி கற்றலில் மட்டுமன்றி உளவியலிலும் பெரியதொரு புரட்சியை ஏற்படுத்திவிட்டது.

காரணவாத மொழி கற்றல் கோட்பாட்டைப் பற்றிக் காண்பதற்கு முன்னர் ஸ்கின்னரின் வாய்மொழி நடத்தையிலிருந்து சோம்ஸ்கி எவ்வாறு வேறுபடுகின்றார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

1) ஸ்கின்னர், சோம்ஸ்கி இருவருக்குமிடையிலான உளவியல் வேறு

பாடுகள் என்றும், 2) இவ்வேறுபாட்டால் விளைந்த ஓர்தல் விதி பயில் கோட்பாட்டின் விளக்கம் என்றும் இரு பகுதிகளை இக்கட்டுரையில் காணலாம்.

1957-இல் சோம்ஸ்கியின் **'Syntactical Structures'** மாற்றிலக்கணக் கோட்பாடுகள் – வெளியிடப்பட்ட பிறகு பல்வேறு மொழிக் கோட்பாடுகளை உடையவர்களின் ஆய்வுக்கு மூலக் கருவாக அமைந்திருப்பது மாற்றிலக்கணக் கோட்பாடுகளே! ஸ்கின்னரின் **'Verbal Behaviour'** வெளியிடப்பட்ட பின்னர் இவ்வாதம் அதிகமாகியது எனச் சொல்லலாம். பல்வேறு மொழிக்கோட்பாடுகள் இருப்பினும் இக்கட்டுரை ஸ்கின்னர் சோம்ஸ்கி இருவரின் கோட்பாட்டு வேற்றுமைகளை மட்டுமே ஆய்கிறது. சோம்ஸ்கியின் 'மொழியின் படைப்பாக்கப் பயன் **(Creative use of Language)** மொழியியலை மட்டும் அடிப்படையாகக் கொண்டது அல்ல; தத்துவத்தையும் உளவியலையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அவைகளிலும் பெரும் அளவு கொள்கைமாற்றத்தை ஏற்படுத்தி விட்டது என்றே சொல்லலாம்.

ஸ்கின்னர் தனது மொழியைப் பற்றிய ஆய்வுகளுக்குப் புற நடத்தையையே அடிப்படையாகக் கொண்டார். மேலும் மொழியின் செயல்நிலை ஆய்வின் **(Functional Analysis)** அடிப்படையில் அதை ஒரு புறநடத்தை என்றும் நிருபித்திருக்கிறார். ஆக, அவருடைய ஆய்வு வாய்மொழி நடத்தையின் அடிப்படையையும் பயனையும் விளக்க முயற்சி செய்கின்றது. மொழி புறநடத்தையின் ஒரு பகுதி. அது பல தூண்டல்களால்தான் **(Stimulus)** தீர்மானிக்கப்படுகின்றது. எனவே, வாய்மொழி நடத்தையைப் புற நடத்தையில் வெளிப்படுகின்ற அல்லது அதிலிருந்து தெரிந்துகொள்ள முடிகின்ற கூற்றுக்களோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியும். காரணம், வெளிப்படுகின்ற கூற்றுக்கள் பெரிதும் புறநடத்தையால் ஆக்கநிலையுறுத்தப் பட்டிருக்கின்றன **(Condition).** மேலும் இப்புற நடத்தைக் கூற்று, வருகின்ற சூழ்நிலையால் பெரிதும் கட்டுப்படுத்தப்படுகின்றது. மொழி புறநடத்தையோடு தொடர்புபடுத்தப்படுவதால் புறநடத்தையையும் மொழியையும் வேறுபடுத்திக் காணமுடியாது. ஒன்று இல்லையேல் மற்றொன்று இயங்காது. எனவே, மொழியைப் பற்றிப் படிக்க வேண்டுமெனில் பேசுபவரின் புறநடத்தையைத் தனியாகக் குறிப்பிடவேண்டும்.

ஸ்கின்னர், சோம்ஸ்கிக்கு எதிராக மொழி ஓர் 'அறியக் கூடிய துலங்கல்' (response) என்றே நோக்குகிறார். சொல் என்பது மனிதனின் புறநடத்தை. சொல்லைப் போன்றே தொடர்களும் வாக்கியங்களும் மொழிப்புற நடத்தையையும் வாய்மொழி நடத்தையையும் சார்ந்த கூறுகள். இருவரின் பேச்சு உரையாடல்–என்பது தூண்டல்–துலங்கலின் பரிமாற்றமே! எனவே கட்டுப்பாடும் ஆக்க நிலையுறுத்தலும் (Control & Condition) இவ்வாராய்ச்சிக்கு அடிப்படையாகின்றன. கட்டுப்பாடுகளை அறிந்து கொள்ள தூண்டு முதலையும் (Source) காரணத்தையும் அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், மொழி புறநடத்தையின் கூறு–அப்புற நடத்தையும் கட்டுப்பட்டது, ஆக்கநிலையுறுத்தப்பட்டது, அறுதியிடப்பட்டது.

1959-ல் சோம்ஸ்கி ஸ்கின்னரின் வாய் மொழி நடத்தை என்ற நூலுக்கு எழுதிய கருத்துரையில் அப்புத்தகம் மொழியியலாரும் தத்துவவாதிகளும் 'தங்கள் ஆய்வு கடைசியில் புறநடத்தை உளவியல் கொடுத்திருக்கின்ற கட்டுக் கோப்புக்குள் புகுந்து அடங்கி விடும் என உணருவதாகக்' கூறுகின்றார். (சோம்ஸ்கி 1959:26) புறநடத்தை உளவியலின் ஆராய்ச்சி நெறிமுறைகளும் உத்திகளும் மொழி ஆய்வுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. செயல் நிலை ஆய்வு புறநடத்தையின் பகுதியான மொழி ஆய்வுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. மனிதனின் பழக்க வழக்கங்களும் ஒழுங்கு முறையும் (pattern) ஒரு குறிப்பிட்ட ஆக்கநிலையுறுத்தலுக்கும் கட்டுப்பாட்டுக்கும் தொடர்புபடுத்தப்படுவது போன்றே மொழியாய்வும் தொடர்புபடுத்தப் படுகின்றது. குறிப்பிட்ட துலங்கல்களைப் பெறுகின்ற கூறுகளின் (Variables) அடிப்படையிலேயே மொழியறிவைப் பெற முடியும். இக்கூறுகளோ வெளிச் சூழலைச் சார்ந்திருக்கின்றது. இக்கூறுகளும் கூட தூண்டல், வலியுறுத்தல் (reinforcement) இழப்பு/இடர்ப்பாடு (deprivation) போன்றவைகளால் விளக்கப்படுகின்றன. எனவே புறச்சூழ்நிலையின் அடிப்படையிலேயே புறநடத்தையைக் கவனித்துக்கையாண்டே மொழியைத் தெளிவாக ஆராய முடியும்.

ஸ்கின்னரின் மொழிக் கோட்பாடுகள் நூறு விழுக்காடு தவறானது எனச் சோம்ஸ்கி சொல்லவில்லை. மனிதனைப் பற்றியும் அவனுடைய குணங்களைப்பற்றியும், இயற்கைப் பண்புகளைப்பற்றியும் அறிந்து

கொள்ள புறநடத்தை உளவியல் சிறிதளவும் உதவவில்லை என்பது கண்மூடித்தனமானது. மனிதன் புறநடத்தையோடும் மனக்குறை வோடும் **(Mental illness)** ஒப்பிடப்பட்டால் புறநடத்தையின் முறைமைகளும், உத்திகளும் மதிப்பும், பெருமையும் பெற்றனவாகவும் மூலக்கூறு உடையனவாகவும் ஆகின்றன.

மனிதன் எப்போதும் தனியாக இருக்க முடிவதில்லை. அவன் எப்போதும் எதையோ சார்ந்திருக்கின்றான். இந்தச் சார்புநிலையே சோம்ஸ்கி – ஸ்கின்னர் வேறுபாட்டிற்கு அடிப்படையாகின்றது. சோம்ஸ்கி ஸ்கின்னரின் கோட்பாடுகள் தவறானவை எனச் சொல்ல வில்லை; இக்கோட்பாடுகள் எல்லாம் சில சூழ்நிலைகளுக்கு மட்டும் கட்டுப்பட்டவை, மேலோட்டமானவை என்றுதான் சொல்கின்றார். "புகு அளவு-விளைவளவு **(Input-Output)** தொடர்புகள் மட்டும் முக்கியமானவை அல்ல. இம்மாதிரியான கவனிக்கத்தக்க **(observable)** புறநடத்தைகளுக்கு அவர் விதிக்கின்ற கட்டுப்பாடுகளும் புறநடத்தைக்குக் காரணமாக காட்டுகின்ற செயல்நிலையும் தான் வியப்பிற்குரியனவாக இருக்கின்றன. ஆனால் ஓர் உயிர்ப்பொருளின்/பொறியின் புறநடத்தையை ஆராய – ஊகிக்க – வெளிப்புறச் சூழ் நிலையோடு அந்த உயிர்ப்பொருளின் பொறியின் உள்ளமைப்பு **(Internal Structure)**, உட்படுகின்ற செய்திகளை அது செயற்பாடு **(process)** செய்கின்ற முறை, பின் அது தன் புறநடத்தையை ஒழுங்கமைக்கின்ற முறை எல்லாம் எடுத்துக் கொள்ளப்பட வேண் டும்." என்பது சோம்ஸ்கியின் கருத்து (1959:27). ஆனால் மனி தன்-அவனுடைய மொழி போன்ற சிக்கலான கூட்டு அமைப்புக்க ளெல்லாம் இந்தப் புறநடத்தையாளர்களால் மிகக் குறைவாக எடை போடப்படுவதைத்தான் அவர் பின்னர் எழுதிய கட்டுரைகளிலும் எதிர்க்கிறார். அவர்கள் கொடுக்கின்ற விளக்கத்தின் ஆழமின்மை, மேலோட்டமான கருத்து, மனதின் அமைப்பு மிகவும் குறுகியது/எளி தானது எனும் நம்பிக்கை, முன்னர் அறிஞர்களால் கொடுக்கப்பட்ட ஊகங்களே-கவனிக்கத்தக்க கூறுகளைப் பற்றிய ஊகங்களே-போதும் எனும் திருப்தி இவையே இக்கோட்பாடுகளின் முக்கியமான குறைபாடு கள். ஆக, மொழி என்பது பழக்க வழக்க அமைப்பு **(habit structure)** என்றும் ஒன்றுக் கொன்று தொடர்பு கொண்ட-தூண்டல்துலங்கலுக்குத் தொடர்பு கொண்ட – பின்னல் என்றும் உணரப்படுகின்றது. மொழி 'எப்படிச் செய்வது?', 'எவ்வாறு பதிலளிப்பது?' என்பதையே ஒரு

பகுதியாகக் கொண்டிருக்கின்றது என்றும் திருப்பித் திருப்பிச் சொல்வதாலும் கடினமான பயிற்சியாலும்தான் மொழியறிவு வளரும் என்றும் கூறப்படுகின்றது (சோம்ஸ்கி 1971). அறிவியல் அடிப் படையில் ஸ்கின்னரின் கோட்பாடுகள் எவ்வாறு பொருத்த மற்றவை – போதாதவை என்பதையும் சோம்ஸ்கி எடுத்துக் காட்டு கின்றார். மனிதனின் புறநடத்தையின்றி அவனின் எந்த ஒரு கூறையும் ஸ்கின்னரின் முறைமை எடுத்துச் சொல்ல முடியாத நிலையைத்தான் சாடுகின்றார். இதற்கு மூலக்காரணம் அந்தச் சிக்கலான கூறின் **(complex)** குறை மதிப்பீடுதான்.

அறிவியலும் தொழில் நுட்பவியலும் இயற்கைச் சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்தி நமக்கு வழிவகுத்துத் தந்திருக்கின்றன. இவை களையே நாமும் மனம் பற்றிய ஆய்வுகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். "நமக்குத் தேவையானது புறநடத்தையைப் பற்றிய தொழில்நுட்பமே" (ஸ்கின்னர் 1971:3). மேலும், விலங்கியல் இயற்பியல் போன்றவற்றில் ஏற்பட்டிருக்கும் மேம்பாடுகளை எண்ணிப்பார்க்கும் போது, மனிதனைப்பற்றிய ஆய்வுகள் மிகவும் பழமையானவைகளாகத் தோன்றுகின்றன. கோட்பாடுகளிலும் மிகச் சிறிய மாற்றங்களே ஏற்பட்டிருக்கின்றன.

இயற்பியல் பொருட்களின் உள்ளமைப்பைப்பற்றி ஆராயாததால் மனிதனைப் பற்றிய ஆய்வுகளும் அவ்வாறே செய்யவேண்டும் என்பதில்லை. ஆனால் சோம்ஸ்கி இவ்வாறு பொருள்களின் ஆய் வோடு மனிதனைப்பற்றிய ஆய்வுகளை ஒப்பிடாமல் மனிதனின் உள்ளமைப்பை – (மொழியையும் மொழிச் செயலையும் உண்டாக்கு கின்ற மொழியமைப்பை) ஆராய வேண்டும் என்கிறார். புறநடத்தை யினர் தங்கள் ஆய்வுகளைக் காரணத்திற்கும் விளைவிற்கும் **(cause and effect)** கட்டுப்படுத்துவதால் மனித ஆய்வும் வெளி யமைப்பிற்கும் கவனிக்கத்தக்க நடத்தைகளுக்கும் கட்டுப்படுத்தப் படுகின்றது. இவ்வாறு கட்டுப்படுத்திக் கொள்வதால்தான் புற நடத்தையினர், சோம்ஸ்கி சொல்கின்ற அகஅமைப்பு போன்றவை களைத் தேவையற்றவை எனக் கருதுகின்றனர்.

சோம்ஸ்கியின் கருத்துரைகளும் ஸ்கின்னரின் கருத்துக்களுக்கு எதிர்ப்புகளும் அதிக அளவு வெளிடப்பட்டிருக்கின்றன. ஆனால்

ஸ்கின்னர் அவைகளுக்குத் தெளிவானதொரு பதிலை இன்னும் கொடுக்கவேயில்லை. அண்மையில் நடந்த ஒரு பேட்டியிலும் **"I have been misunderstood"...** என்ற கட்டுரையிலும் அவர் பதிலளித்திருக்கிறார். " இல்லை, இதுவரை பதிலளிக்கவில்லை. பதிலளிக்கும் எண்ணமும் இல்லை. **'The New York Review'**வில் சோம்ஸ்கியின் கடுமையான கருத்துரைக்குப் பதிலளிக்க வேண்டும் என நினைத்திருந்தேன், நான் கருத்துரையின் முதல் பத்தியை மட்டும்தான் படித்தேன், மேலும், சோம்ஸ்கி - பொறுப்பு வாய்ந்தவர். ஏன் அவ்வாறு எழுதுகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிய வில்லை என்று என் நண்பர்களும் கூறியிருக்கிறார்கள். நான் அதற்குப் பதிலளிக்க மாட்டேன். நான் என்ன பேசுகிறேன் என்பது சோம்ஸ்கிக்குப் புரியவில்லை, சில காரணங்களால் அவரால் அதைப் புரிந்துகொள்ளவும் முடியவில்லை என்பதால்தான் என் **Verbal Behaviour**-க்கு அவர் எழுதிப் புகழ்பெற்ற கருத்துரைக்கு நான் பதிலளிக்கவில்லை" (ஸ்கின்னர் 1972 : 63)

சோம்ஸ்கி ஸ்கின்னரைப் புரிந்துகொள்ள வில்லை எனச் சொல் வதனால் ஸ்கின்னர் தன் கோட்பாடுகளைச் சோதனைகள் மூலம் விளக்கியிருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாகத் தன் கட்டுரையிலும் (ஸ்கின்னர் 1972:32) சோம்ஸ்கி தன் ஆய்வுகளைத் திறனாய்வு செய்ய வில்லை, சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றும் அதனால்தான் எதிர்வாதம் செய்கிறார் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

எடுத்துக்காட்டுக்கள் கொடுக்க முடியாத கோட்பாடுகளுடைய அனுபவ வாதியா அவர்? அவருடைய கோட்பாடுகளின் போதாமை **(inadequacies)** அவரை மேற்கூறியவாறே காட்டுகின்றது எனச் சொல்லலாம். ஸ்கின்னரின் கோட்பாடுகள் சோதனை செய்து காட்டுவது வரைக்கும் - எடுத்துக்காட்டுக்கள் கொடுக்கப்படுவது வரைக்கும் - அவருடைய ஆய்வு ஓர் ஆர்வமூட்டும் கருதுகோள் தான் **(hypothesis)**.

இவ்வாறு சொல்வதால், சோம்ஸ்கி - ஸ்கின்னர் எனும் இரு பெரும் ஆய்வாளர்களுக்கிடையே நடக்கும் கொள்கைப் போராட்டம் இது என்று எடுத்துக்கொள்ள முடியாது. வெறும் சொற்சாலமும்

அல்ல. ஸ்கின்னரின் புறநடத்தைக் கொள்கைக்கு எதிரான வாதம் அண்மைக்கால மொழியியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது, ஏற்படுத்துகின்றது. சூழ்நிலைக்குப் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்ட கொள்கையால், புறநடத்தையின் தோற்றமாக வருகின்ற மொழியின் புற அமைப்புக்களைத்தான் விளக்க முடியும். புற அமைப்பிலிருந்து அக அமைப்பிற்குச் செல்ல — சோம்ஸ்கியின் அக அமைப்பிற்குச் செல்ல — இவை வழிவகுப்பதில்லை. சோம்ஸ்கியை பொறுத்தவரை அக அமைப்பு - புற அமைப்பு சார்ந்த ஆய்வுகளும் மொழித்திறன் — மொழிச்செயல் முதலிய கோட்பாடுகளும் தூண்டல் — துலங்கல் கோட்பாட்டிலிருந்தும் விளக்கமொழியியலிலிருந்தும் பெரிதும் வேறு பட்டவை.

சோம்ஸ்கியின் சமகாலத்தவரான சார்லஸ் எஃப் ஹாக்கெட் சோம்ஸ்கியின் மொழியியற் கொள்கைகளுக்குச் சிறந்ததொரு திறனாய்வாளர் எனப் பெயர் பெற்றிருக்கிறார். இவர் தம் புத்தகத்தில் (ஹாக்கெட் 1968) சோம்ஸ்கியின் மாற்றிலக்கணத்தைச் சிறப்பாக — ஆனால் சோம்ஸ்கிக்கு எதிராக — திறனாய்வு செய்திருக்கிறார். சோம்ஸ்கி சொல்கின்ற மனிதனின் உருவாக்கத் திறனை **(creativity)** ஒப்புமையாக்கத்தின் அடிப்படையிலும் தொகுப்பு **(editing)** அடிப்படையில் விளக்கிவிடலாம். மனிதன் தன் சூழ்நிலைக்கு ஏற்ப, தன் அனுபவத்திலிருந்து ஏதாவது ஒன்றின் அடிப்படையில் (எடுத்துக்காட்டாக, ஒப்புமையாக்கம்) செயல்பட்டுப் பதில் தருகின்றான். ஆனால் இதை நிரூபிக்க கடந்த காலத்தில் நடந்த ஒன்றோடு ஒப்பிட்டுக்காட்ட வேண்டும். ஆனால் சோம்ஸ்கி தன் கோட்பாடுகளை நிரூபிக்கக் கொடுக்கின்றவை எல்லாம் சோதனை மூலம் விளக்க முடியாதவை. ஆக, ப்ளூம்ஃபீல்டு, ஸ்கின்னர் போன்றே ஹாக்கெட்டும் நேரடியாக, உடனடியாகக் கவனிக்கத் தக்க, சோதிக்கத்தக்கவைகளிலிருந்தே மொழியை ஆராய முயல் கிறார். எனவே இவ்வாராய்ச்சி மனிதனின் உருவாக்கத்திறனுக்கும் சுதந்திரத்திற்கும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சோம்ஸ்கி பயன்படுத்துகின்ற கலைச்சொற்கள் யாவும் உளவியலைச் சார்ந்த இரட்டைப் பொருள் கொண்டவை எனக் கூறி சோம்ஸ்கி ஓர் உள வியலாரேயன்றி மொழியியலார் அல்ல என ஹாக்கெட் முடிவு செய்கின்றார். கலைச்சொல்பற்றி ஹாக்கெட் சொல்கின்றவை மறுக்க முடியாதவையே. அவை உடலியற்கும் உளவியற்கும்

பொருந்தி வருகின்றன. ஆனால் சோம்ஸ்கி தன் கோட்பாடுகளில்-முறைமைகளில் இரட்டைநிலை கொண்டிருக்கவில்லை. அவருடைய ஆய்வுகளின் அடிப்படையே புறநடத்தைக் கொள்கை கொண்டிருக்கும் இரட்டை நிலையை வெளிப்படுத்துவதே.

மொழியின் அகஅமைப்பு எவ்வளவு கடினமானது; சிக்கலானது! இதை ஒரு குழந்தை அறிந்து கொள்வது எப்படி? குழந்தையின் அறிவில் அதற்குரிய அறிகுறிகள் பிறப்பிலேயே இருந்தாலொழிய இந்த அமைப்பின் சிக்கல்களைப் புரிந்து கொள்ளல் இயலாது என்பதுதான் சோம்ஸ்கியின் கோட்பாட்டின் அடிப்படை. மொழியைக் கற்றுக்கொண்டு ஒரு குழந்தைதன் மொழித்திறனை வளர்க்கின்ற வேகம் மற்ற எந்தச் செயலையும்விட அதிகமாக இருப்பது சோம்ஸ்கி சொல்வது மெய்யென உறுதிப்படுத்துகின்றது. குழந்தையின் உள்ளியல்பில் தங்கியிருக்கும் உளஅமைப்பும் மொழியின் அகஅமைப்பும் தொடர்புடையவை. அதனால்தான் குழந்தையின் மொழித்திறன் இத்தனை வேகமாக வளர்கின்றது என்கிறார். மொழியின் சிக்கலையும் குழந்தை அச்சிக்கலான அமைப்புக்களைப் புரிந்துகொள்வதையும் எண்ணற்ற வாக்கியங்களை உருவாக்குவதையும் ஆராய உள்ளியல்புத்திறன்களையே எடுத்துக்கொள்ள வேண்டும் என நினைத்தால் தூண்டல் – துலங்கல் முறை குறைபாடானது மேலோட்டமானது என்றாகும். தூண்டல் – துலங்கல்முறை அந்த சிக்கலான செயற்பாட்டின் **(process)** வெளிப்பரப்புதான். எனவே சோம்ஸ்கியின் அகஅமைப்பு – புறஅமைப்புக் கொள்கை உறுதி பெறுகின்றது, மதிப்பு உடையதாகின்றது.

சோம்ஸ்கியின் கோட்பாடுகள் வெளியான பிறகு மொழிகற்றலின் கோட்பாடுகளிலும் பெரும் அளவு மாற்றங்கள் ஏற்படலாயின. மாற்றிலக்கணக் கோட்பாட்டைப் பின்பற்றுகிறவர்கள் அனுபவவாதிகளின் நோக்கை **(empiricist approach)** மறுத்துக் காரணவாதிகளின் நோக்கை ஆதரிக்க ஆரம்பித்தனர். மாற்றிலக்கணத்தார் புதியதொரு மொழிகற்பிக்கும் முறைமையை, அனுபவவாதிகள் போல், கொடுக்கவில்லை எனினும் அவர்களின் கோட்பாடுகள் – மொழியின் அமைப்புபற்றியும் மொழிகற்றலைப் பற்றியும் அமைந்த கோட்பாடுகள் – தற்கால மொழிகற்றலின் அமைப்பையே மாற்றிவிட்டது. அனுபவவாதிகளின் கற்றல் கோட்பாட்டையும் பெரிதளவு பாதித்து

விட்டது. எனவே அவர்களின் நோக்கை அறிந்து கொண்டால் சோம்ஸ்கி போன்றோரின் மொழிக்கொள்கைகளுக்கும் அமைப்பு மொழியியலாரின் கொள்கைகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் தெளிவாகும்.

ஓர்தல் விதி பயில் கோட்பாட்டின் அமைப்பைச் சிறிது பார்க்கலாம். இக்கோட்பாடு புதுமையர்க்கப்பட்ட இலக்கணமொழிபெயர்ப்புக் கோட்பாடே என்பது எவ்வளவு தூரம் பொருத்தமானது அல்லது பொருத்தமற்றது என்பதைப் பின்னர் பார்க்கலாம்.

இரண்டாம் மொழி பயில்தல் என்பது பயில்மொழியின் (**Target Language**) ஒலியனியல், இலக்கணம், சொல் ஆகிய அமைப்புக்களை நினைவு நிலையில் **Conscious**) படித்து – பிரித்துப்பார்த்து– ஒழுங்கமைத்துக் கொள்வதாகும். இக்கோட்பாடு பயில்மொழியின் அமைப்பைப் புரிந்துகொள்வதையே முதன்மையாக்குகிறது. இதற்குப் பின்னரே மொழியைப் பயன்படுத்துதல் முக்கியத்துவம் பெறுகிறது. ஆனால் கேட்டுப்பேசல் வழக்கக் கோட்பாடு பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை வழக்கப் படுத்திக் கேட்டுப் பிரித்துப் பார்த்துக் கொடுக்கும் துலங்கல்களாகவும் பயிலப்படவேண்டும் எனச் சொல்வது ஓர்தல் கோட்பாட்டிற்கு நேர் எதிர்மாறானது என்பது தெளிவாகிறது. ஒரு மொழியின் அமைப்பை ஓர்ந்துகொள்கின்ற திறன் ஒருவருக்குக் கிடைக்குமெனில் அம்மொழியைத் தேவையான அளவு தேவையான இடத்தில் பயன்படுத்துகின்ற ஆற்றல் இயல்பாகவே வந்துவிடுகின்றது என்பது ஓர்தல் கோட்பாட்டின் அடிப்படை. ஆனால் கேட்டுப்பேசல் கோட்பாடோ வழக்கப்படுத்தப்பட்ட அமைப்புக்கள் எல்லாம் இயல்பாக்கப்படவேண்டும் என்றும் அவ்வாறு இயல்பாக்கப்படவேண்டிய நேரத்தில் அவை நினைவிலி (**Unconscious**) நிலையிலேயே திருப்பிச் செல்லப்படவேண்டும் – பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றது. அதாவது அவனுக்கு மொழி பற்றிய சிந்தனை கற்கும்போதும் பேசும்போதும் எழலாகாது என்பதுதான் இக்கோட்பாட்டின் கருத்து. இதையே எதிர்த்து இவை நினைவு நிலையிலேயே கற்கப்படவேண்டும் என்கின்றது ஓர்தல் கோட்பாடு. திருப்பித் திருப்பிக் கிளிபோலச் சொல்வதால் உருவாக்கத்திறன் கிடைப்பதில்லை.

ஓர்தல் கோட்பாட்டைக் கீழ்வரும் குறிப்புக்களால் விளக்கலாம். அனுபவாதிகளின் கோட்பாட்டிலிருந்து இக்கோட்பாட்டை வேறு படுத்தவும் கேட்டுப்பேசல் வழக்கக் கோட்பாட்டின் போதாமையை எடுத்துரைக்கவும் இது போதுமானது.

1. மொழியே அடிப்படையானது; பேச்சு அல்ல.
2. மொழி என்பது விதிகள் அடங்கிய உருவாக்கத்தைக் கொண்டது.
3. மொழியின் விதிகள் உளவியலின் அடிப்படையிலும் உண்மை யானவை.
4. மொழி உள்ளியல்புக் கூறினால் பயிலப்படுகின்றது. மனி தன் மொழிகற்கும் அமைப்பை இயற்கையாகவே பெற்றி ருக்கின்றான்.
5. மொழி நம் எண்ணத்தை வெளியிடவும் சிந்திக்கவும் உதவு கிறது.

இனி ஒவ்வொன்றையும் விளக்கமாகக் காணலாம்.

1. கேட்டுப் பேசல் கோட்பாடு பேச்சை அடிப்படையாகக் கொள்கின்றது. ஆனால் ஓர்தல் கோட்பாடு மொழியையே அடிப் படையாகக் கொள்கிறது. பேச்சும் எழுத்தும் பின்னர் வருகின்ற செயலாற்றும் **(active)** திறன்கள். இவ்விரண்டையும் மொழியின் அமைப்பு நிலைகளிலிருந்து வேறுபடுத்திச் சொல்லமுடியாது.

போலச் செய்தலுக்கு முதலில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுப் பின்னர் பகுத்துப்பார்க்கும் திறன் ஏற்படுவதாக இருந்தால் மொழித் திறன் வளருமா என்பது ஐயத்திற்கிடமானது. சான்றாகப் பதிலீடு வாய்பாட்டுப் பயிற்சியை **(Substitution drill)** எடுத்துக் கொள் வோம்.

'அவன் நேற்று வந்தான்'

இதுதான் மாதிரி வாக்கியம். இதில் நான், நாங்கள், நாம், நீ, நீங்கள், அவள், அவர், அவர்கள் ஆகிய பெயர்ப்பதிலிகளைப் பதி லீடு செய்ய மாணவன் அதற்கு முன்னர் பாலெண் இயைபு விதி

களை அறிந்திருக்க வேண்டும். அதுவும் கற்கின்றது பேச்சுத் தமிழாக இருப்பின் உச்சரிப்பிலும் (சில வேறுபாடுகள்) கவனம் செலுத்த வேண்டும். இந்த அறிவின்றி அவனால் பதிலீடு செய்ய முடியாது என்பது திண்ணம். அதையே சோம்ஸ்கி, "ஒரு வாக்கியத்தின் ஒலிப்பு முறையை அறிந்து கொள்ளக் கூட அதன் தொடரியல் அமைப்பு பற்றிய அறிவு சிறிதளவாவது தேவைப்படுகின்றது" எனச் சொல்கிறார் (1966 : 49).

ஆக, பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுவதற்கு முன்பு மொழியறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். பேச்சுக்கு அடிப்படையாக இருப்பது மொழியறிவுதான். கேட்டுப் பேசல் கோட்பாட்டின் உயிர் நாடியான தோரணிப் பயிற்சி **(Pattern practicc)** கூட – திருப்பித் திருப்பிச் சொல்கின்ற ஒரு சில வாய்பாட்டு பயிற்சி தவிர்த்து – மொழியறிவின்றி பயனற்றதாகின்றது. எனவே, கேட்டுப் பேசல் முறைமையின் கோட்பாட்டின் போதாமை" யும் மொழியறிவின் – மொழி விதிகளின் – முக்கியத்துவமும் வெகு எளிதாகத் தெளிவாகின்றது.

2. ஒருவர் சொல்கின்ற வாக்கியங்களையே இன்னொருவர் திருப்பிச்சொல்லி-பின்னர் பேசுவது மட்டும் மொழியல்ல. ஒருவர் ஒரு மொழியைப் புரிந்து கொண்டிருக்கிறார் என்றால் அவரால் புதிய புதிய வாக்கியங்களைச் சூழ்நிலைகளுக்கேற்ப உருவாக்க முடியும் என்று பொருள். சோம்ஸ்கி 'மொழி நடத்தை என்பது......உருவாக்குவது' (சோம்ஸ்கி 1966 : 46) எனச் சொல்கின்றார். சில சூழ்நிலைகளில் இப்படிப்பட்ட வாக்கியங்கள் தான் வரும் – வரமுடியும் என ஊகிக்க முடியாது, எடுத்துக்காட்டாக, 'நான் இந்தி சினிமா பார்ப்பேன்' என ஒருவர் சொல்ல, அதைத் தூண்டலாக எடுத்துக் கொண்டால், துலங்கல்(கள்) இப்படித்தான் இருக்கும் என ஒருவராலும் சொல்ல முடியாது.

மொழியில் புதிதுபுதிதாக வாக்கியங்களை உருவாக்குவது இலக்கண வரம்பிற்குக் கட்டுப்பட்டது. புதிய புதிய வார்த்தைகளை அடுக்கிச் சொல்வது மட்டும் – புதிய புதிய அமைப்புக்களை உருவாக்குவது மட்டும் 'உருவாக்கமாகாது'. ஆனால் அவை இலக்கண விதிகளுக்குட்பட்டிருக்குமானால் அவை பொருள் நிறைந்தவை

ஆகின்றன. இலக்கண விதி ஒன்றாக இருப்பினும் அதன் விளைவாக ஏற்படுகின்ற – உருவாக்கப்படுகின்ற – வாக்கியங்கள் எண்ணிக்கையில் அடங்கா. எனவேதான் மொழி முடிவற்ற எண்ணிக்கையற்ற ஓர் அமைப்பு எனச் சொல்லப்படுகின்றது. இதே போன்று வாக்கியத்தின் அளவும் முடிவற்றது. குறிப்பிட்ட அல்லது எண்ணிக்கையில் அடங்கிய இலக்கண விதிகளைக் கொண்டு எண்ணிக்கையிலடங்கா வாக்கியங்களை உருவாக்குகின்றோம். இதையே, மொழி கற்றல்/பயில்தல் **(Language acquisition, Learning)** ஆகியவற்றின் நோக்கிலிருந்து பின்வருமாறு சொல்லலாம்.

ஒருவர் ஒருமொழியை அறிந்து கொண்டிருக்கிறார் என்றும் அவரால் எண்ணிக்கை யிலடங்கா வாக்கியங்களை உருவாக்க முடியும் என்றும் அவரால் செய்தி பரிமாற்றத்தில் – உரையாடலில் ஈடு கொடுக்கமுடியும் என்றும் சொல்ல, அவர் மொழியின் எல்லா வாக்கியங்களையும் படித்திருக்க வேண்டும், மனதில் பதித்திருக்க வேண்டும் என்ற தேவையில்லை. அம்மொழியின் விதிகளை அறிந்திருந்தாலே போதும்.

இரண்டாம் மொழிக் கல்வியைப் பொறுத்தவரை ஒருவர் அவருடைய தாய்மொழியோடு இரண்டாம் மொழி விதிகளைச் சேர்த்துக் கொள்வது அவர் அனுபவத்தை அதிகரிக்கின்றது. அவ்விதிகளைப் பயன்படுத்தி நாம் இன்னொரு மொழியைப் பேசுகின்றோம் என்ற நினைவு நிலையோடு புதிதாக வாக்கியங்களை உருவாக்குவது அவருடைய திறனை அதிகஅளவு வெளிக்காட்டுகின்றதே யன்றி இன்னொரு மொழியைப் பேசுகின்றோம் என்ற நினைவிலி நிலையிலேயே அம்மொழியின் அடிப்படை வாக்கியங்களை – தன்னகப் படுத்திக் கொண்ட அடிப்படை வாக்கியங்களை – சூழ் நிலைக்குத் தகுந்தவாறு பயன்படுத்துவது அவருடைய திறனைக் காட்டுவதில்லை. சிந்திக்காமல் தன்னகப்படுத்திக் கொண்ட வாக்கியங்களும் அவற்றைப் பயன்படுத்த எடுத்துக்கொள்கின்ற கால அளவும் அதன் பயனாகக் கிடைக்கின்ற மொழித்திறனும், சிந்தித்து நினைவு நிலையில் கற்றுக் கொள்ளப்பட்ட விதிகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்க எடுத்துக் கொள்ளப்படுகின்ற கால அளவை விட அதிகமாகவும் அதன் மொழித்திறனைவிடக் குறைவாகவும் இருப்பதையே பெரும்பாலான மொழி பயில்தல் சோதனைகள் காட்டுகின்றன.

3. குழந்தைகள் மொழிகற்கும்போது சொற்களை அடுக்கியே – பொருள் நிறைந்த – வாக்கியங்களை உருவாக்குவதால், ஒரு சொல், இருசொல் வாக்கியத்தில் ஆரம்பித்து முதிர்ச்சி பெறுவதால் – உளவியல் அடிப்படையிலேயும் சொற்கள் மதிப்புப் பெறுகின்றன, உண்மையாகின்றன. அதாவது ஒரு வாக்கியத்தின் தொடரை அல்லது சொற்களைத் தனித் தனியாகப் பிரித்து பள்ளிக்குச் செல்லாதவர்களால் கூறமுடியுமா? என்ற ஐயத்தை மேற்கூறிய கூற்று போக்கிவிடும். குழந்தைகள் சொற்கள் தொடர்கள் வாக்கியங்கள் என்னும் வரிசையில் பள்ளிச் செல்லாமல் கூட கற்றுக்கொள்வதால் கண்டிப்பாக அது அவர்களுக்குக் தெரியும். ஆனால் இலக்கணக் குறிப்புக்களோடு கொடுக்கத் தெரியாது, அவ்வளவுதான்.

ஒரு குழந்தை 'படம்லே அதைப் பார்த்தேன்' (படம்லே அதெ பா(ர்)த்தே(ன்) என்று சொல்லும்போது அதற்கு ஏழாம்வேற்றுமை உருபான /-லே/யின் பயன் தெரிந்திருக்கின்றது, அதாவது விதி தெரிந்திருக்கின்றது. ஆனால் உருபனியல் தெரியவில்லை என்று மட்டும் ஆகிறதேயன்றி அதற்கு மொழியைச் சரியாகப் பேசுகின்ற முறைமை தெரியவில்லை எனச் சொல்வது தவறு. தாங்கள் கற்கின்ற வாக்கியங்களிலிருந்து ஒரு விதியை உருவாக்குகின்ற திறன் பெரும்பாலும் இல்லை என்றாலும் குழந்தைகளுக்கு அவ்விதி தெரியும் என்பது உண்மையா? இக்கேள்விதான் பெரும்பாலான மொழியியலார்களைச் சிந்திக்க வைத்தது. அது உண்மை என்பதே முடிவு. இதையே இன்னொரு விதமாகச் சொல்லலாம். குழந்தைகளுக்கு விதிகளின் பயன் தெரியும், அதாவது விதிகளைப் பயன்படுத்தித் தாம் நினைததவைகளைத் தெரிவிக்கத் தெரிகின்றது. இதற்குக் காரணம் என்ன? அவர்கள் தன்னகப்படுத்தியிருக்கும் விதிகள்தாம் காரணம்.

குழந்தைகள் 'இது பேனா', 'இது பென்சில்', 'இது சாக்குக் கட்டி' என்று பெயர்களை அறிந்து கொள்வதற்கு முன்பு அவைகளின் பயன் – இவைகளை எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்னும் பயன் – தெரிந்து அவைகளைப் பயன் படுத்தி அவர்கள் எழுதுவது மேலே எழுப்பப்பட்ட ஐயத்தைத் தெளிவாக்குகின்றது. குழந்தைகள் உருவாக்குகின்ற வாக்கியங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு அவர்களின் மொழித்திறனின் வளர்ச்சியை–

விதிகளை அறிந்து கொள்ளும் முறையையும் அளவையும் – நாம் அறிந்து கொள்ளலாம். கொடுக்கப்பட்ட வாக்கியங்களிலிருந்து விதிகளை உருவாக்குவது தனிக்கலை. அதற்குத் தனியான பயிற்சியும் தேவை. (அது நம் கல்வித் திட்டங்களில் கொடுக்கப்படுவதில்லை).

அனுபவவாதிகள் மொழி ஒரு குறிப்பிட்ட வழக்கங்களின் சேர்ப்பு என்கிறார்கள். மொழி விதிகளால் ஆனது எனச் சொல்வது தவறு என்பதின் அடிப்படையே மொழியை நாம் பயன்படுத்துவது இயல்பான ஒன்று **(automatic)** என்பதும் சிந்தித்து நினைவு நிலையில் செயல்படுகின்றது அல்ல என்பதும்தான்.

ஒப்புமைக்காகச் சமையற்கலையை எடுத்துக்கொள்வோம், 4:1 என்னும் விகிதத்தில் அரிசியையும் உளுத்தம் பருப்பையும் தனித் தனியாக ஊறவைத்து தனித்தனியாக ஆட்டி உப்பிட்டு பின்னர் இட்டிலித் தட்டில் விட்டு வேக வைக்க வேண்டும் என்பது விதி. அளவும் ஆட்டி எடுக்கின்ற பதமும் அனுபவத்தால் வருகின்றது உண்மை. ஆனால் இவை எல்லாமே ஒரு வழக்கத்தின் சேர்ப்பாக எழுந்த இயல்பான ஒன்று என்று சொல்லிவிட முடியாது. இதே போன்று மொழியும் விதியைத் தன்னகப்படுத்திக் கொண்ட பிறகு சிந்தித்து, நினைவு நிலையோடு பேசநினைப்பதில்லை. ஆனால் பேச்சின் அனுபவத்தால் பின்னர் அது இயல்பாகிவிடுகின்றது.

சில ஆக்க நிலையுறுத்தல்களாலும் **(Conditioning)** வாய்ப்பாட்டு பயிற்சிகளாலும் மொழி பயிலப்படுகின்றது என அனுபவவாதிகள் சொல்வதின் அடிப்படையும் மொழி இயல்பானது என்பது தான். அது உண்மையல்ல. வாய்பாட்டு பயிற்சியால் ஒருவர் எந்த அளவு மொழியின் அடிப்படை வாக்கியங்களைத் தன்னகப்படுத்திக் கொள்கிறார் என்பதுவும் பின்னர் அவ்வாக்கியங்களை இயல்பாக நினைவிலி நிலையில் எந்த அளவு பயன்படுத்திக் கொள்கிறார் என்பதுவும் கேள்விக்குரியவை.

வாய்ப்பாட்டுப்பயிற்சி மொழிபயில்வதில் எந்த அளவு துணை செய்கின்றது? மனதிலிருத்திக்கொண்ட வாக்கியங்களைச் சூழ் நிலைக்கு ஏற்ப (மொழியியலறிவு வளர்ச்சியடைந்த நிலையிலும்)இயல்

பாகப் பயன்படுத்தச் செய்வதைத் துணைசெய்தல் என்று கொண்டால் வாய்பாட்டு பயிற்சி ஒன்றுதான் இத்துணைசெய்தலுக்கு ஆற்றல் தருகின்றது என்பது உண்மையல்ல. ஒருவர் இயல்பாகப் பேசுகிறார் என்றால் அவர் வாக்கியங்களையும் அவைகளின் பயன்களையும் இயல்பாகவே-வழக்கங்களின் சேர்ப்பாகக் கற்றுக்கொண்டார் எனப் பொருள்படாது. மொழிக்கல்வியின் முதல் ஓரிரு நிலைகளில் வாய்பாட்டுப்பயிற்சி பயனுள்ளது போலத் தோன்றினாலும் அதன் பிறகு அது முழுமையும் பயனற்றதாக ஆகிவிடுகின்றது **(Schaffler 1965)**

"மொழியறிவில் இரு நிலைகள் இருக்கின்றன, முதல்நிலை, நினைவு நிலை **(Conscious Stage).** இந்நிலையில் நாம் மொழியை மெதுவாக, விதிகளைப் பயன்படுத்திச் சொற்களின் தொடர்புகள் (தேர்வுக் கட்டுப்பாடுகள் போன்றவை – கட்டுரை ஆசிரியர்) எல்லாம் பார்த்து முன்னேறுகிறோம். இரண்டாவது நிலை இயல்பு நிலை **(automatic).** இந்நிலையில் வேகமாக, விதிகள் பற்றிய நினைவின்றி, தாய்மொழி பேசுபவர்போல் இயல்பாகப் பேசுகின்றோம்!! **(de sauze 1953:14).** இவ்விரு நிலைகளும் எதைக் காட்டுகின்றன? ஓர் இலக்கண நூல் கொடுக்கின்ற விதிகளைத் தன்னகப்படுத்திப் பின்னர் அவைகளைச் சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் என்று வெவ்வேறு நிலைகளிலோ ஒன்றாகவோ பயன்படுத்தாமல் கிடைக்கின்ற வாக்கியங்களிலிருந்து விதிகளை நினைவிலி நிலையில் நாமாக உருவாக்கித் தன்னகப்படுத்திக் கொண்டு பின்னர் அவைகளைப் பயன்படுத்துகின்றோம் என்பதைக் காட்டுகின்றன. எனவே விதிகள் உளவியல் அடிப்படையிலும் உண்மையானவையே

4. மனிதனின் தனிப்பெரும் சொத்து மொழி. உண்மை. மனிதன் பேசுகின்றான். மிருகங்கள் பேசுவதில்லை எனச்சொல்லும் போது மனிதன் மட்டுமே தன்னைச் சேர்ந்தவர்களோடு செய்திப் பரிமாற்றத்தில் ஈடுபடுகிறான் என்றும் மிருகங்கள் அவ்வாறு செய்வதில்லை என்றும் சொல்ல முடியாது. மிருகங்களிடத்திலும் செய்திப்பரிமாற்றம் உண்டு. அது வேறு வகையானது. ஆனால் மனிதனின் மொழியும் அவன் பேசுவதற்கு உடலியலின் அடிப்படையிலேயே வேண்டிய வசதிகள் பேச்சுறுப்புக்கள், சிறப்பாக குழல்நார்கள், மூளையின் அதிகப்படி வளர்ச்சி – போன்றவை இயற்கையாகவே அமைந்துள்ளன.

சிக்கல் நிறைந்த சூழ்நிலைகளிலும் மனிதன் மொழியைக் கற்றுப் பேசுகிறான் என்றால் அதற்கு அவனுடைய உடலியற் கூறே காரணம். குருடர்களாகவும் செவிடர்களாகவும் இருக்கின்ற சிறுவர்களும் செவிடர்களை அல்லது ஊமையர்களைப் பெற்றோராகக் கொண்டுள்ளவர்களும் ஒரு சொல்கூட பேசமுடியாத, உடல் ஊன முற்ற குழந்தைகளும் மொழியைப் புரிந்துகொள்கிறார்கள் (**Lenneberg 1967**). இது, அவர்கள் பிறப்பிலேயே மொழியைப் புரிந்து கொள்ளும்/கற்கும் ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது. எந்தப் பண்பாட்டைச் சேர்ந்தவர்களானாலும் எந்த மொழிகற்க/பேச எடுத்துக் கொள்கின்ற அணுகு முறைகள் (**Strategies**)ஒன்றாக இருப்பதையும் குழந்தைகளின் மொழி வளர்ச்சி நிலையையும் பார்க்கும்போது (பார்க்க நடராசபிள்ளை 1979) இக் கோட்பாடு உண்மை எனத்தெளிவாகிறது.

காரணவாதிகள் மொழிகற்பதற்கான பொறி/அமைப்பு மனிதனில் இயற்கையிலே (பிறப்பிலேயே) அமைந்திருக்கின்றது எனச் சொல்ல அனுபவவாதிகள் அனுபவம் வாயிலாகவே மொழி கற்கப்படுகின்றது எனக் கூறுகின்றனர். அதாவது மனிதனுக்குப் பிறப்பில் மொழி கற்கும் அமைப்பு அவன் மூளையில் அமைந்திருக்கவில்லை. அது ஒரு தூய்மையான சுவர், அனுபவத்தால் தான் சித்திரம் எழுதப் படுகின்றது எனச் சொல்கிறார்கள். இதையே ஸ்கின்னர் வாய் மொழி நடத்தை வெளிப்புறச் சூழலுக்குக் கட்டுப்படுத்தப்பட்டது – வெளிப்புறச் சூழலால் வெளிப்படுத்தப்படுகின்றது என்கிறார். ஆனால் மனிதனுக்கு இன்னொரு ஆற்றல் – சிந்திக்கும் ஆற்றல் – இருப்பது மறக்கப்படுகின்றது அல்லது மறைக்கப்படுகின்றது. மிருகங்களிலிருந்து மனிதன் வேறுபடுவதற்கு இச்சிந்திக்கும் திறனும் ஒரு காரணம் ஆகும். "ஒரு சிக்கலான உயிர்ப்பொருளின் (**Organism**) நடத்தையை ஊகிப்பதற்கு வெளிப்புற தூண்டுதல் பற்றிய செய்தியோடு அவ்வுயிர்ப்பொருளின் உள்ளமைப்புப் பற்றிய செய்தியும், அது எவ்வாறு புகுபொருளை (**input**) செயற்பாடு (**process**) செய்கின்றது என்பதுவும், பின்னர் அது எவ்வாறு அதன் நடத்தையை ஒழுங்கு படுத்திக்கொள்கின்றது என்பது பற்றிய ஆய்வும்" எந்த அளவு தேவைப்படுகின்றது என்பதைச் சோம்ஸ்கி (1959:27) விளக்குகின்றார். கேட்டுப்பேசல் கோட்பாடு புறநடத் தையை அடிப்படையாகக் கொண்டது – அனுபவத்தை அடிப்படை

யாகக் கொண்டது. ஆனால், ஓர்தல் கோட்பாடு அனுபவத்தின் பயனை விட்டு விடச் சொல்லிலை. ஆனால் மொழி கற்பதில் நடப்பது என்ன என்பதுதான் பிரச்சினை. மனிதன் (குழந்தை) தன்னிடமிருக்கும் "எலும்புக் கூட்டிற்குச் சதை சேர்க்கிறான்" (**Langacker** 1968:23) அதாவது அவன்மூளையில் பிறப்பிலேயே ஓர் உள்ளியல்பு இருக்கின்றது. அவ்வுள்ளியல்பால்தான் அவன் தான் வெளிப்படுத்தப்படுகின்ற (**expose**) சூழ்நிலையில் தன்னிடமிருக்கும் அமைப்பை முழுமையாக்குகிறான். இது மட்டுமே கற்கப் படுகின்றது என்பது காரணவாதிகளின் கருத்து.

பயில்மொழி அமைப்பு, தாய்மொழி அமைப்போடு வெளிப்படையாக வகுப்பறையில் தொடர்பு படுத்திக் காட்டப்படமாட்டாது; ஆனால் அதே நேரத்தில் பாடம் தயாரிக்க உறழ்வு ஆய்வுகள் (**Contrastive**) பயன்படுத்தப்படும். அதாவது இந்த அமைப்பு வேறுபாடுகள் மறைமுகமாக வாய்ப்பாட்டுப் பயிற்சியில் கொடுக்கப்படும் என்பது இங்கு மறுக்கப்படுகின்றது. இவ்வாறு இருமொழித் தொடர்பும் மறைக்கப்படுவதால் நேர்முக மாற்றம் (உறுதுணைமாற்றம்) (**positive transfer**), அதாவது தாய்மொழிக்கும் பயில்மொழிக்கும் இடையிலான ஒற்றுமை அவனுக்குப் பயன்படாமற் போகின்றது. இதே போன்றே எதிர்மறை மாற்றம் (**Negative Transfer**), அதாவது தாய்மொழிக்கும் பயில்மொழிக்கும் இடையிலான வேற்றுமைகள் வெளிப்படையாகக் கற்பிக்கப்படாததால் ஏற்படுகின்ற இடையீட்டுப் பிழைகள் (**interference errors**) செய்யப்படுவதற்குக் காரணம் ஆகின்றது. ஆகவே, தாய்மொழிக்கும் பயில்மொழிக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகள் வெளிப்படையாகக் கற்கப்படவேண்டும்/கற்பிக்கப்படவேண்டும்.

தாய்மொழி பயில்மொழிக்கிடையிலான வேற்றுமைகளில் அதிக அளவு பயிற்சி கொடுக்கப்பட்டு மறைமுகமாக அவ்வேற்றுமை – நினைவிலி நிலையிலேயே – பயிலப்படவேண்டும் எனக் கேட்டுப் பேசல் முறை உரைக்கின்றது (**Carrol 1965:104**), இது எத்துணைத் தவறானது? மாணவனின் (மனிதனின்) பகுத்தறியும் திறன் பயன்படுத்தப் படாமலேயே இருக்கின்றது. பயிற்சி அதிக அளவில் ஒரு பகுதியில் கொடுக்கப்பட்டால் அவனுடைய இயற்கையான சிந்திக்கும் திறன் அவ்வேற்றுமைகளை வெளிப்படையாக உணர்ந்து

கொள்ளாதா? மாணவனின் சிந்திக்கும் திறன் பயன்படுத்தபடுத்தப் படாமல் கட்டுப்படுத்தப்படுவதால்தான் இடையீட்டுப் பிழைகள் ஏற்படுகின்றன. இவ்வாறு உண்மையும் திறனும் இருட்டடிக்கப்படு வது மனிதனின் இயற்கைக்கு எதிரானது அல்லவா? எனவே இரு மொழிகளுக்கும் இடையிலான வேற்றுமைகளைக் கொண்டு கொடுக்கப்படுகின்ற வாய்பாட்டுப்பயிற்சி பயனற்றுப் போகின்றது. மனிதனிடம் இயற்கையிலேயே மொழிகற்கும் திறன் — அதாவது அதற்குரிய அமைப்பு – உள்ளியல்பாக அமைந்திருக்கின்றது என்பது உறுதியாகின்றது.

5. மொழியின் பலப்பல பயன்களில் செய்திப் பரிமாற்றம் போல் சிந்திக்கப் பயன்படுவதும் ஒன்று. மற்ற எல்லாப் பயன்களையும் விட இது மிக முக்கியத்தும் பெற்றிருக்கின்றது. கருத்துப் படிவம் **(Concept)** உருவாக, சிந்தனை வளர நாம் செலவிடுகின்ற மொழியளவு மற்ற எல்லாப் பயன்களையும் விட பலப்பல மடங்கு அதிகமானது. ஏன் மொழியின்றி சிந்தனை வளராது என்று கூடச் சொல்லிவிடலாம். இவ்வாறு சொல்லும் போது கருத்துப்படிவம் உருவாகத் தாய்மொழி உதவுவதுபோலக் கற்றுக்கொண்ட இரண்டாம் மொழி உதவுவதில்லை; உதவினாலும் அதன் அளவு மிகக் குறைவாகவே இருக்கும். இதனால் தாய்மொழி வழி படிப்பின் முக்கியத்துவத்தையும் உணரலாம்.

ஒருவர் சொல்வதை இன்னொருவர் திருப்பிச் சொல்லலாம், தெரியாத மொழியில் பாடலாம். இதற்கும் சிந்தனைக்கும் ஒரு தொடர்பும் இல்லை. இவ்வாறு திருப்பிச் சொல்வதால் மட்டும் மொழித்திறன் வளர்ந்துவிடாது, உருவாகியும்விடாது. இதே போன்று திருப்பித் திருப்பிச் சொல்லி ஒரு வழக்கத்தை ஏற்படுத்தி மொழியைக் கற்றுக்கொள்வதால் அம்மொழியில் சிந்திக்கின்ற அல்லது சிந்திக்கப் பயன்படுத்திக் கொள்கின்ற திறமை கிடைக்காது. இதனால் அம்மொழி அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று சொல்வது தவறு. ஆக, ஒரு மொழியில் பேசவும் வாசிக்கவும் எழுதவும் திறனைப் பெறுவதோடு சிந்திக்கும் திறனையும் பெறுவதும் மொழி பயில்தலின் குறிக்கோள்களில் ஒன்றாக இருக்கவேண்டும்.

இதைப் போன்றே இலக்கண விதிகளைத் தன்னகப்படுத்திக் கொள்வது மட்டும் மொழியைப் புரிந்துகொண்டதாகப் பொருளாகாது.

ஆனால் அவ்விதிகளைச் சிந்தனையோடு நினைவு நிலையில் பயன்படுத்துகின்ற திறனைப் பெற்றிருப்பதுவும்தான் மொழியைப் புரிந்து கொண்டிருப்பதைக் காட்டும்.

சிந்தனைக்கு மொழிதுணையாவது போன்றே மொழிவளர்ச்சிக்கும் சிந்தனை பயன்படுகின்றது. புதிய புதிய சிந்தனைகளின் பயன், மொழியில் புதிய புதிய சொற்களைத் தோற்றுவித்தல், புதிய புதிய பொருளை இருக்கின்ற சொற்களுக்கு அளித்தல போன்றவையாகும். ஆக, மொழிவளர்ச்சி மக்களின் சிந்தனையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றது.

இதைப் போன்றே ஒருசொல்லை ஞாபகத்திலிருத்திக் கொள்வதும் சிந்தனையோடு தொடர்புகொண்டிருக்கின்றது. ஒருவருக்குத் 'தோட்டம்', 'காரன்' எனும் இருசொற்கள் தெரிந்திருந்தால் அவரால் 'தோட்டக்காரன்' எனும் சொல்லை எளிதாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. இதைப் போன்றே 'பணம்' என்னும் சொல்வரும்போது 'பணக்காரன்' என்று புதியதொரு சொல்லை உருவாக்கிப் பயன்படுத்துவது ஓரளவு சிந்தனையைக் காட்டுகின்றது. அவ்வாறன்றி அடிப்படை வாக்கியங்களை ஞாபகப்படுத்திப் பதிலீடு செய்து புதிய புதியவாக்கியங்களைச் சிந்திக்காமல் உருவாக்குவது சிந்தனை வளர்ச்சிக்கும் கற்பவரின் மொழிவளர்ச்சிக்கும் உதவாது. புரிந்து கொள்ளாமல் வெறும் போலச் செய்தலையே அடிப்படையாகக் கொண்டிருந்தால் மொழியின் முக்கியமான வித்தைக்கூறு **(magic feature)** புரியாது; சிந்திக்கும் திறனையும் கட்டுப்படுத்தும்.

மக்களோடு வாழ்ந்து வருகின்ற ஒருமொழியைப் பயில்தல் என்பது அம்மொழியில் சிந்திக்கும் திறனையும் பெறுவது ஆகும். ஆனால் இச்சிந்திக்கும் திறன் எவ்வாறு வளர்ச்சியடைகின்றது? வாய்பாட்டுப் பயிற்சியால் வந்துவிடுகின்றதா என்றால், கண்டிப்பாக இல்லை. ஆனால் பொருளுள்ள பயிற்சியால் இத்திறன் கிடைக்கும் என்பது தெளிவு. துவக்கக் காலங்களில் மொழியோடு அரவணைத்துச் செல்வது தேவைதான் எனினும் அவ்வரவணைப்புத்தான் பெறுகின்ற மொழித்திறனுக்குக் காரணம் என்றும் இவ்வரவணைப்புத்தான் கற்கப்படுகின்ற மொழியளவுக்குக் காரணம் என்றும் சொல்வது மூட நம்பிக்கையே.

## உசாத்துணை நூல்கள்.

Carroll, John B. 1965. "The Contributions of Psycological Theory and Educational Research to the teaching of Foreign Languages", Modern Language Journal V

Chomsky, Noam. 1957. Syntactic Structures, The Hague: Mouton.

——— 1959. "A Review of Verbal Behaviour by B. F. Skinner", Language 35.

——— 1966. Cartesian Linguistics, New York : Harper & Row.

——— 1966. "Linguistic Theory" North East Conference Report of the Working Committee, (Ed Robert G. Mead Jr.)

——— 1968. Language and Mind, New York: Harbourt, Brace & World Inc.

——— 1971. "The Case against B. F. Skinner", The New York Review of Books XVII : II (Dec. 30)

de Souzé, Emile B. 1959. The cleveland plan for the teaching of Modern Languages with special reference to French, Philadelphia : Winston.

Donaldson, W. D. Jr. 197 ; "Code Cognition Approaches to Language learning" in Towards a cognitive approach to Second Language Acquisition. (Ed. Robert C. Lugton & Charles H. Heinle) philadelphia. The center for curriculam development. Inc.

Langacker, Ronald W. 1968. Language and its structure, Newyork : Harcourt, Brace and World.

Lenneberg, Eric. 1967. Biological foundation of Language, New York : Wiby.

Rivers, Wilga M. 1964. The Psychologist and the Foreign Language Teacher, Chicago: The University of Chicago Press.

Scheffler, Israel. 1965. Coditions of Knowledge, Chicago: Scott & Foreman.

Skinner, B.F. 1957. Verbal Behaviour, Appleton Century crofts.

——— 1971. Beyond Freedom & Dignity. Newyork : Alfred Aknopt.

——— 1972 "I have been misunderstood", The Center Magazine, V. 2 (Mar./Apr)

——— 1972. "On having a poem", Saturday Review July 15.

என். நடராசப் பிள்ளை, 1979. "மொழித்திறனும் மொழிபயில்தலும்" மொழியியல் 2.4. அண்ணாமலைநகர்.

# காடர் மொழியில் உறவுமுறைச் சொற்கள்

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆனை மலைப் பகுதியில் உள்ள காடுகளில் வாழும் பழங்குடி மக்களுள் காடர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் நீக்ரிடோ இனத்தைச் சார்ந்தவர்கள் என்று மானிடவியலார் கூறுகின்றனர். இவர்கள் பேசும் மொழி காடர் மொழியாகும். இக்காடர் மொழியில் பேச்சு வழக்கில் காணப்படும் சில சிறப்பான உறவுமுறைச் சொற்களைக் கீழே காணலாம்.

| | | |
|---|---|---|
| அப்பன் | — | தந்தை |
| அம்மை | — | தாய் |
| மூத்தப்பன் | — | தந்தையின் மூத்த சகோதரர். |
| குட்டியப்பன் | — | தந்தையின் இளைய சகோதரர் |
| தீய்யா | — | சின்னம்மா/சிற்றன்னை |
| பேரா | — | தந்தையின்/தாயின் தந்தை |
| | — | மகனின்/மகளின் ஆண்குழந்தை |
| அளியன் | — | அத்தை மகன்/மாமன் மகன் |
| பெண்ணனெ | — | அத்தை மகள்/மாமன் மகள் |
| துவி | — | அண்ணன்/தங்கையின் குழந்தைகள் |
| நாத்தன் | — | மனைவியின் சகோதரன் |
| நாத்தலு | — | கணவனின் தங்கை / அண்ணன் மனைவி/மனைவியின் சகோதரன் |
| மனவாளன் | — | கணவனின் தங்கையின் கணவன் |
| மத்லெ | — | மனைவி |
| மத்நா | — | கணவன் |
| இளையகுடி | — | கணவனின் இரண்டாவது மனைவி |
| பைதலு | — | வளர்ப்பு மகன் |

ஜெ. சுரேஷ்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
(களவாய்வில் கண்டவை)

மொழியியல் 3, 2 (1979)

# சென்னை மீனவர் கிளைமொழியில் வேற்றுமை உருபுகள்

கே. வி. ராஜகுமாரி
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மீன்பிடிக்கும் தொழில் தமிழ்நாட்டின் முக்கியத் தொழில்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மீனவர் என்னும் சொல் பொதுவாக சமுதாயத்திலுள்ள மீன்பிடிக்கும் தொழிலைச் செய்கின்ற பிரிவினரைக் குறிக்கின்றது. மீனவர்களில் பலர் மற்ற வேலைகளி லிருப்பினும் மீனவர் சமுதாயம் என்னும் பெயருக்கேற்ப இன்றும் அவர்களில் பெரும்பான்மையோர் மீன் பிடிப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். சமுதாயத்தில் பின் தங்கிய வகுப்பினராக மீனவர்கள் கருதப்படுகின்றனர். தமிழ்நாட்டின் ஆறு மாவட்டக் கடற்கரையோரங்களில் மீனவர்கள் வாழ்கிறார்கள். அவை செங்கல்பட்டு, தென்ஆற்காடு, தஞ்சாவூர், ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களாகும். சென்னை நகரின் கடற்கரையோரப் பகுதிகளிலும் மீனவர்கள் வாழ்கிறார்கள். இந்தச் சமுதாயம் மற்ற சமுதாயங்களினின்று தொழில் முறையால்

மாறுபடுகின்றது. இவர்கள் பேசும் தமிழ் மற்ற சமுதாயத்தினர் பேசும் தமிழிலிருந்து வேறுபடுகின்றது. மீன்பிடிக்கும் தொழிலை ஆண்களும், பிடித்த மீன்களை விற்கும் வேலையைப் பெண்களும் செய்கிறார்கள். ஆண்கள் எக்காரணத்தைக் கொண்டும் மீன் விற்பதற்குப் போவதில் ல. ஆதலால் பெண்களிடையே நாம் இருவேறுபட்ட பேச்சுத்தமிழைக் காணலாம். பெண்கள் மீன் வாங்குபவரிடம் பே சும் தமிழும், தங்கள் சமுதாயத்தினரிடம் பேசும் தமிழும் வெவ்வேறாகும். மீனவர் கிளைமொழியில் காணப்படும் வேற்றுமைகள் சமுதாயத்தில் அவர்களைத் தனித்துக் காட்டுவதாக விளங்குகின்றன. மீனவர் கிளைமொழி கலைச்சொற்களும், அருஞ் சொற்களும் செறிந்த வளமிக்க மொழியாக மட்டுமின்றி மொழியியல் நோக்கிலும் ஒலியனியல், இலக்கணம் ஆகிய பலவற்றிலும் மொழி யியல் மாற்றங் ள் நிறைந்த கிளைமொழியாகவும் உள்ளது.

மீனவர் பேச்சுமொழியில் அவர்களது தொழிலுக்கேற்ப பல புதிய பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களும் வழங்கி வருகின்றன. அண்மைக்காலத்தில் சில ஆங்கிலமொழி சொற்கள் அவர்கள் மொழியில் கலந்துவிட்டன. பிறமொழி பேசுவோருடன் நேரடித் தொடர்பு இல்லாத இம்மக்கள் வேற்றுமொழிசொற்கள் என பிரித் தறிவதில்லை. தமிழ் சொற்கள் ஏற்கும் விகுதிகளையே இப் பிற மொழி சொற்களும் ஏற்று வருகின்றன.

சென்னை நகரில் மீனவர் கிளைமொழியில் பெயர்ச்சொற்கள் எவ்வாறு வேற்றுமை உருபுகளை எடுத்துக் கொள்கிறது என்று விரிவாக காண்போம். பேச்சு மொழியில் பெரும்பாலும் வேற்றுமை உருபுகள் ஒருமைப்பெயர்களை அடுத்தே வருகின்றன. இக்கிளை மொழியில் எட்டு வேற்றுமைகள் உள்ளன.

**எழுவாய் வேற்றுமை:** எழுவாய் வேற்றுமைக்கென தனிஉருபு இல்லை. பெயர்ச் சொல்லின் அடிப்படை வடிவமே எழுவாய் வேற்று மயாக வரும். முற்றுச் சொற்றொடரில் எழுவாய் நிலை யில் வரும்.

எ-டு 'வலெ எங்க போச்சி'

'மீனு துடிக்குது'

'படவு நல்லாக்குது'
'மூர்த்தி வரான்'

{-எ-} **வேற்றுமை:** இரண்டாம் வேற்றுமை மூவிடப் பெயர்களுடனும், உயர்திணைப் பெயர்களுடனும் உருபு ஏற்றே வரும். ஏனையப் பெயர்ச்சொற்களுடன் உருபு ஏற்றும் அல்லது உருபு ஏற்காமலும் வரும்.

உருபு 'எ'

எ-டு உயர்திணை, மூவிடப்பெயர்களுடன் உருபு ஏற்றேவரும்.

ராமென் – எ → 'ராமெனெ'
'ராமெனெ காணோம்'

நாயகொம் – எ → 'நாயகத்தெ'
'நீ நாயகத்தெ கூப்புடு'

என் – எ → 'என்னெ'
'யாரு என்னெ கூப்பிட்டது.

உன் – எ → 'உன்னெ'
'அவெ உன்னெ போய் கேக்க சொன்னா'

அவென் – எ → அவெனெ
'நீ அவெனெ வரச்சொல்லு'

அஃறிணைகளுடன் உருபு ஏற்றும் ஏற்காமலும் வரும்.

எ-டு மீன் – எ → 'மீனெ'
'நீ மீனெ கழுவு'
'நீ மீனு புடிக்கப்போ'

வலெ – எ → 'வலயெ'
'நீ வலெயெ பொத்து'
'இந்த வலெ வாங்கு'

ஊடு – எ → 'ஊட்டெ'
'ஊட்டெ காட்டு'

**{ஆலெ} வேற்றுமை:** இவ்வேற்றுமையை உணர்த்த 'ஆலெ' என்ற உருபு பெயர்ச் சொற்களுடன் பின்னொட்டாக இணைக்கப்படுகிறது இவ்வுருபு சேராமல் கருவி வேற்றுமைக்குரிய கருத்தை உணர்த்த முடியாது.

எ-டு ஆலெ

கை - ஆலெ → 'கையாலெ'
'இந்த கையாலெ எதுவும் செய்ய முடிலெ'

கத்தி - ஆலெ → 'கத்தியாலெ'
'கத்தியாலெ வெட்டு'

அவென் - ஆலெ → 'அவெனாலெ'
'அவனாலெ ஒண்ணும் முடியாது'

மீனு - ஆலெ → 'மீனாலெ'
'இந்த மீனாலெ கொழம்பே நல்லால்லே'

கன்னியாகுமரி மாவட்ட கிளைமொழியில் "ஆலெ, வச்சி, இட்டு, கொண்டு, ஏவச்சி, ஏயிட்டு, ஏகொண்டு" ஆகியன மூன்றாம் வேற்றுமை உருபுகளாக வழங்குகின்றன. இங்கு இவ்வுருபுகளில் சில இரண்டாம் வேற்றுமையான 'எ'வை அடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

எ-டு 'நான் கத்தியாலெ வெட்டினேன்'
'நான் கத்தியெவச்சி வெட்டினேன்'
'நான் கத்தியிட்டு வெட்டினேன்'
'நான் கத்தியெகொண்டு'* வெட்டினேன்

{ - கு - } வேற்றுமை: இவ்வேற்றுமையை உணர்த்த இரு வேறுபட்ட அடிப்படை உருபுகள் உள்ளன. ஒன்று 'கு'வின் திரிபான "க்கு, க்கி, உக்கி, இக்கி" ஆகிய வகைகளாகும். மற்றொன்று இரண்டாம் வேற்றுமை உருபுடன் வடிவொத்து வரும் 'எ' வாகும். இந்த 'எ' வேற்றுமை உருபு சேர்ந்து வரும் 'கு' வேற்றுமைச் சொற்கள் குறைவாகும்.

எ-டு: மணி - க்கி → மணிக்கி
'மணிக்கி இந்தவேலெ புடிக்கில'

கடெ - க்கி → 'கடெக்கி'
'நீ கடெக்கி போயட்டு வா'

* Agesthialingom, S. 1967 A Generative Grammar of Tamil (A Fragment of Tamil Syntax) p. 19 Annamalai University, Annamalainagar.

வேலெ – க்கி → 'வேலெக்கி'
'வேலெக்கி போய்ட்டு வா'/பூட்டுவா

ராமென் – உக்கு → 'ராமெனுக்கு'
'நான் ராமெனுக்கு மீன் குடுக்கலெ'

அவுனு – உக்கு → 'அவுனுக்கு'
'எனக்கு பாதி அவுனுக்கு பாதி'

இவென் – உக்கு → 'இவெனுக்கு'
'இவெனுக்கு இன்னா கோவொம் வருது பார்'

வாய் – இக்கி → 'வாய்க்கி'
'இந்த பொயலெ வாய்க்கி நல்லால்லெ'

இடப்பெயர்கள் க்கு உருபை ஏற்றும், ஏற்காமலும் வரலாம்.

எ–டு 'நான் மெட்றாஸ் போனேன்'
'நான் மெட்றாஸுக்குப் போனேன்'

எ உருபு கீழ்கண்ட இரண்டுச் சொற்களுடன் மட்டுமே வரும்.

ஊடு – எ → 'ஊட்டெ'
'நீ ஊட்டெ போ'

காடு – எ → 'காட்டெ'
'நீ காட்டெ போ'

கொல்லிமலை வாழ்மக்கள் பேசும் தமிழில் 'க்க்' எனும் ஒரே ஒரு நான்காம் வேற்றுமை உருபு மட்டுமே காணப்படுகிறது.

ஏ - க்க் → 'ஏக்கு'
ஊ – க்கு → 'ஊக்கு'
காசு – க்க் → 'காசுக்கு'

{– ஓட –} **வேற்றுமை:** இவ்வேற்றுமையைக் குறிக்க 'ஓட' எனும் உருபு பயன்படுகிறது. 'கூட' என்ற தனி சொல்லும் பெயர்ச் சொல்லையடுத்து இந்த வேற்றுமைப் பொருளைத் தருகிறது.

எ–டு அவென் – ஓட → 'அவெனோட'
'நான் அவெனோட போனேன்'

கண்ணன் - ஓட → 'கண்ணனோட'
'அவெ கண்ணனோட வரா'

என் - கூட → 'என்கூட'
'நீ என்கூட வாயேன்'

அவ - கூட → 'அவகூட'
'நீ அவெகூட ஏன் போனே'

{- உடைய -} **வேற்றுமை:** இவ்வேற்றுமை ஏனைய வேற்றுமைகளிலிருந்து சொற்றொடர் அமைப்பில் வேறுபடுகிறது. இந்த வேற்றுமை உருபு ஒத்த வரிவடிவம் வேறொரு பெயர்ச் சொல்லுக்கு முன்னால் பெயரடைப் போன்றும் வரும். ஏனைய வேற்றுமைகள் வினைச் சொற்களுக்கு முன்னே மட்டும் வரும் என்பது குறிப்பிடத் தக்கது. இவ்வேற்றுமை உடைமைப்பொருளிலும் (Possessive), சினைப் பொருளிலும் வரும். இவ்வேறுபாடுகளுக்கேற்ப உருபுகள் 'ஓட' மற்றும் வடிவமற்ற உருபும் பெயர்ச் சொற்களுடன் வழங்கும்

உருபு ஏற்காதுவரும் மூவிடப் பெயர்கள் -

எ-டு என் - $\phi$ → என்
'என் மொவன்'
'எம் பையன்'
'எம் பொண்ணு'
'ஓம் பொண்ணு'
'ஒன் ஊட்டுக்கார்ரு'
'அவெ மாப்பிளெ'
'அவெமவெ'

உடைமைப் பொருளில் வரும் பெயர்ச்சொற்கள் இவ்வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வரும்.

எ-டு என் - ஓட → 'என்னோட'
'என்னோட வலெ'

Korunakaran. K. 1969 A Descriptive Grammar of The Dialect of Kollimalai Tribes. p. 210 Annamalai University, Annamalai Nagar.

என் - ϕ → 'என்'
'என் வலெ'

அவென் - ஓட → அவெனோட'
'அவெனோட தோணி'

அவென் - ϕ → 'அவென்'
'அவென் தோணி'

{- லெ -} **வேற்றுமை:** இட வேற்றுமை இக்கிளைமொழியில் பலஉருபுகளைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இது வட்டார கிளைமொழியுடன் பெரும்பான்மை சொற்றொடர்களில் வழங்குகிறது. வேற்றுமை உருபான 'லெ'வும், கிட்ட, கையிலெ, ஆண்ட ஆகிய தனிச் சொற்களும் உள்ளன. இவைகளில் கையில என்ற சொல் கை + லெ = பெயரும் இட வேற்றுமை உருபும் சேர்ந்த வேற்றுமை வடிவமே தனிச்சொல் போல இயங்கி வருகின்றது. சென்னை நகரப் பேச்சு வழக்கில் 'எங்கையிலெ' 'ஊட்டாண்ட' 'அவகிட்டெ' போன்ற அமைப்புகளைக் காணலாம். உயர்திணைப் பெயர்கள் இவ்வேற்றுமை உருபு ஏற்காது வேறோரு துணைச் சொல்லை (கையில, கிட்ட, ஆண்டெ) எடுத்துவரும். இடப்பெயர்களும், அஃறிணைப் பெயர்களும் 'லெ' விகுதியை எடுத்துக்கொள்ளும். இவ்விகுதி உயர்திணைச் சொற்களை ஏற்றுவராது. ஆனால் உயர்திணை ஏற்கும் தனிச்சொற்களை அஃறிணைச் சொற்களும் ஏற்றுவரும்.

**எ-டு அஃறிணைச் சொற்கள்**

பானை - லெ → 'பானையிலெ'
'பானையிலெ சோறில்லெ'

கை - லெ → 'கையிலெ'
'உன் கையிலெ இன்னா காயம்'

காலை - லெ → 'காலையிலெ'
'நாம்ப காலையிலெ போவோம்'

உயர்திணையோடும் அஃறிணையோடும் சேர்ந்துவரும் தனிச் சொற்கள்-

எ-டு என் - கையில → எங்கையிலெ
'எங்கையிலெ சொல்லாத யார்கையிலெ சொல்லபோறெ'

மாடு - ஆண்டெ → 'மாட்டாண்டெ'
'மாட்டாண்டெ போவாதெ'

அவ - கிட்டெ → 'அவகிட்டெ'
'அவகிட்டெ ஏன் போனெ'

பிறமொழி சொற்களும் இந்த வேற்றுமை உருபான 'லெ'வை ஏற்று வழங்கி வருகிறது.

'அரெ அவர்லெ வந்துட்ரென்' நான் அரை மணி நேரத்தில் வந்து விடுகிறேன். இங்கு சென்னைத் தமிழில் உயர்திணைப் பெயர்களுடன் ஏழாம் வேற்றுமையைக் குறிக்க 'கையிலெ' என்ற தனிச்சொல் சேர்க்கப்படுகிறது. இந்த சொல்லையும் கை + லெ என்று பிரிக்கலாம். ஆனால் விளக்க மொழியியலார் (Descriptive Linguists) அவ்வாறு பிரித்துப் பார்ப்பதில்லை. ஏனெனில் அது மொழிவரலாற்றினை காட்டுவதாக அமையும். சென்னையில் வழங்கும் பேச்சுத் தமிழ் அங்குள்ள மீனவர் சமுதாயத்திலும் காணப்படுகிறது. ஏனைய மாவட்டங்களில் இதற்கிணையாக கிட்ட என்ற தனிச்சொல் வழங்குவதைக் காணலாம். 'அவர்' (Hour) ஆங்கில மொழிச் சொல்லாகும்.

**{இருந்து} வேற்றுமை:** ஏழாம் வேற்றுமை உருபுடன் ''ருந்து'' எனும் (ablative) வேற்றுமை உருபும் சேர்ந்து இக்கிளைமொழியில் வழங்குகிறது. ஒரு பெயருடன் இரண்டு வேற்றுமை உருபுகள் சேர்ந்து வழங்குவது குறிப்பிடத்தக்கது. இவ்வேற்றுமை (உருபு) 'ருந்து' எனும் பின்னொட்டு மூலம் உணர்த்தப்படுகிறது.

எ-டு அடுப்பு - லெ - ருந்து → 'அடுப்பிலெருந்து'
'அடுப்பிலெருந்து சோத்தெ இறக்கு'

ஊர் - லெ - ருந்து → 'ஊர்லெருந்து'
'ஊர்லெருந்து ஆரும் வரலெ'

வாய் - லெ - ருந்து → 'வாய்லெருந்து'
'அவன் வாய்லெருந்து ஒரு வார்த்த வராது'

**எட்டாம் வேற்றுமை:** எட்டாம் வேற்றுமையை இலக்கண வழியொட்டி விளி வேற்றுமையாகக் கருதினாலும் அவ்வேற்றுமைக் கென தனி உருபோ, சொல்லோ இல்லை. பெயர்ச் சொல்லின் அடிப்படை வடிவத்தில் சில ஒலியன்கள் மாற்றமடைந்து விளி வேற்றுமையை உணர்த்துகின்றன. ஈற்று ஒலியின் கேடு, அதற்கு முந்திய ஒலியன் பொதுவாக் உயிரொலியன் நெடிலாதலும் விளி வேற்றுமையைக் குறிக்கும். ஈற்றொலி உயிராக இருந்தால் பெரும் பாலும் கெடுவதில்லை. மாறாக நெடிலாகிறது. நெடிலே ஈற்றுயிராக இருந்தால் அதுவே மேலும் சில மாத்திரைகள் பெற்று நீண்டு ஒலிக் கின்றது. ஈற்றசையும், ஈற்றசையிலுள்ள உயிரும் திரிந்து நீளும். ஆனால் அவை வரிவடிவம் பெறுவதில்லை. ஆதலால் முதல் வேற்றுமைக்கும், விளிவேற்றுமைக்கும் சொற்களின் வரிவடிவம் ஒன்றாகவே அமைந்துள்ளது.

உயிர் நீளுதல்

எ–டு பழனி – பழனீ

இறுதி மெய்கெட்டு உயிர் நீளுதல் (னகரம்கெட்டு உயிர் நீண்டது)

குப்பன் – குப்பா

இறுதி உயிராக இருந்தால் அதுவே சிலமாத்திரைகள் நீண்டு ஒலிக்கும்.

மாமா – மாமா (ஆ)

ஈற்றசையிலுள்ள உயிர் நீளும்.

விநாயகொம் – விநாயகோம்

மீனவர் சமுதாயத்தினர் பேசும் தமிழில் பெயர்ச்சொற்கள் இலக்கண அமைப்பு பெரும்பான்மையளவில் பொதுப் பேச்சுத் தமிழுடன் **(Standard Spoken Tamil)** ஒப்புமையுடையதாக இருக்கிறது. செய்தொழிலின் காரணமாக பெயர்ச் சொற்களில் வேறு பாடுகள் காணப்படுகின்றன. எனினும் அவை இலக்கண அமைப் பினை மாற்றவில்லை.

# திரும்பி வந்த கமலம்

கமலம் என்ற இந்தச் சொல்லின் வரலாறு நமக்கு ஒருவகையில் வியப்பூட்டுவதாகவே உள்ளது. குவளை என்ற தமிழ்ச்சொல் கமலம் என்ற சொல்லோடு மிகத் தொடர்புடையது. குவளை என்பது வடமொழி உலகுக்குப் போய்க் கமலம் என்ற உருவில் திரும்பி வந்துள்ளது.

| | |
|---|---|
| தமிழ் : குவளை | வடமொழி : குவல |
| தமிழ் : கொவளை | வடமொழி : கோமள |

தமிழில் மொழிமுன் நிற்கும் உகர உயிர் அதனை அடுத்து அகரம் தொடரும்போது ஒகரமாக மாறுவதுண்டு. இதில் உகரம் முந்தியதா ஒகரம் முந்தியதா என்ற கேள்வி இப்போது நமக்கு வேண்டாம். உரல் > ஒரல், உலகம் > ஒலகம். அடுத்து, வகரம் மகரமாக மாறியிருக்கிறது. வகரத்தில் மூக்கொலி சேர்ந்தால் மகரம்; மகரத்தின் மூக்கொலி நீங்கினால் வகரம். குவளை > கொவளை > கொமளை. தமிழில் உள்ள இறுதி ஐகாரத்திற்கு ஒப்புநிலையில் வடமொழியில் அகரம் அல்லது ஆகாரம் ஏற்கும். எனவே கொமளை என்பது கொமள என மாறுகிறது. வடமொழியில் ஒகர, ஓகார வேற்றுமையில்லை. ஒகரக் குறில் இல்லை என்றும் கூறலாம். ஆகவே கொமள என்பது கோமள என மாறுகிறது. குவளை > கொவளை > கொமளை > கொமள > கோமள. வடமொழியாளர் தமிழ் ஒகரத்தைத் தமது வழக்கில் ஓகாரமாகவும் சிறுபான்மை அகரமாகவும் வழங்குவர். எனவே கொமள என்பது கோமள என வழங்குவதோடு கமள என்றும் மாறுகிறது. வடமொழியில் ளகர லகரம் பொருள் வேற்றுமை செய்வதில்லை. அதாவது ஒரு சொல்லில் ளகரத்திற்குப் பதிலாக லகரத்தை ஒலித்தாலும் பொருள் மாறுவதில்லை. எனவே கமள என்பதைக் கமல என்று ஒலித்திருக்கின்றனர் இந்த நிலைக்குப் பிறகு கமல என்ற சொல் தமிழுலகுக்குத் திரும்பிவந்து கமலம் என்ற உருவில் வாழ்கிறது குவளைப் பூவைக் குறித்த இந்தச் சொல் உருமாற்றம் பெற்றதோடு நில்லாமல் பொருள் மாற்றமும் பெற்றுத் திரும்பியிருக்கிறது.

— **டாக்டர் பொற்கோ**

**இலக்கண உலகில் புதிய பார்வை, பக். 118**

**சென்னை, 1973**

# வட்டார வழக்கில் வேளாண் கலைச்சொற்கள்

கோ. சீனிவாசவர்மா
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

தமிழ்மொழி, பல வட்டாரக்கிளை மொழிகளைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு வட்டாரக்கிளை மொழியும் அதற்கெனத் தனி ஒலி, இலக்கண, சொல் அமைப்புகளைப் பெற்றுள்ளது என்பதை நாம் அறிவோம். அது போன்றே தொழில் அடிப்படையிலும் பல கலைச் சொற்களை அவைகள் பெற்றுள்ளன. மொழி வளம் பெறவும், பல புதியதுறைகளில் சொல்வளம் பெருகவும் வட்டாரக் கிளைமொழிச் சொற்களும், கலைச்சொற்களும் சொற்களஞ்சியத்தில் புதியனவாகச் சேர்க்கப்பட வேண்டும். இன்றைய மொழித்தேவைக் கேற்ப சொற்களின் எண்ணிக்கையும், அவைகளின் பொருட் செறிவும் அப்பொழுதுதான் சிறந்த முறையில் வெளிப்படும்.

தென்னார்க்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் ஓரளவு எல்லைத்தொடர்புடையனவாகும். அடுத்தடுத்து பேசப்படும் கிளை மொழிகளுக்குள் புரிந்துகொள்ளும் அளவு ஒத்ததன்மை மிகுந்தும்,

கிளைமொழிகளின் வெளி எல்லையில் வேறுபாடு மிகுந்தும் காணப் படுவது இயல்பு. சங்கிலித்தொடர் ஒன்றுக்கொன்று இணைந்தும், இரு வேறு முனைகள் தொடர்பற்றும் இருப்பதை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம். இக்கட்டுரையில் பயிர்த்தொழில் செய்யும் பெரும்பான்மை மக்களின் பேச்சு மொழியில் காணப்படும் கலைச்சொற்களையும், அவைகட்குள்ள தொடர்பு முதலியனவற்றை யும் மொழியியல் கண்ணோட்டத்துடன் அணுகி வகுத்தும் தொகுத் தும் கொடுத்துள்ளேன். இது இத்துறையின் ஆரம்பமேயன்றி முழுமையாகாது. இது போன்று பல தொழில் துறைகளையும் நுணுகி ஆராய்ந்து, கிளைமொழிப் பேரகராதி (Dialect Dictionary) உருவாக்கப்படுதல் வேண்டும். அதுவே மொழிக்கு பெரும்பயன் நல்கி, மொழியினைப் பயன்படுத்தும் மக்கட்கு உறுதுணையாக, பொற்களஞ்சியம் போல் திகழும்.

தென்னார்க்காடு மாவட்டத்தின் தென் பகுதியில் வீராணம் ஏரி மூலம் ஓரளவு நஞ்சை சாகுபடி நடந்து வருகிறது. ஏனைய இடங்களில் வானம் பார்த்த பூமியாக மழைநீரைக் கொண்டும், ஏரி, குளம், கிணறு முதலிய நீர்நிலைகளிலிருந்தும் பாசனம் செய்து பயிர்செய்கின்றார்கள். தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் மட்டும் நஞ்சைப்பயிர் அதிகமாகக் காணப்படுகிறது. ஏனைய இடங்களில் புஞ்சைப்பயிரே மிகுதி. ஆதலால் ஆங்காங்கே செய்யப் படும் பயிருக்கேற்ப வேளாண் கலைச் சொற்கள் வேறுபடுகின்றன. அவர்கள் பயன்படுத்தும் கருவிகள், தங்களிடையே வாழும் பிற மொழி பேசும் மக்களின் தொடர்பு ஆகியவைகளின் தன்மைக்கும் அளவிற்கும் ஏற்ப பல புதிய சொற்கள் பழக்கத்தில் உள்ளன.

இக்கலைச் சொற்கள் கிளை மொழியியலாளருக்கும், சொல்லக ராதி ஆய்வாளருக்கும், பரவல் செய்தித்தொடர்பு மற்றும் முறை சாராக் கல்வித்திட்டத்திற்கும், சமுதாய மற்றும் வரலாற்று மொழி யியலாருக்கும் பெரும்பயன் நல்கும் என்பதில் ஐயமில்லை.

பயிர்த்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கட்கு உழவுக் கருவிகள், மாட்டுவண்டி ஆகியன இன்றியமையாதவைகளாகும். அவைகளின் பெயர்கள், பயன்படுத்தும் முறைகள் ஆகியவற்றைக் குறிக்க பல சொற்கள் வழங்குகின்றன. அவைகளையே 'வேளாண் கலைச்

சொற்கள்' என இங்குக் குறிப்பிடுகிறோம். இச் சொற்களின் வடிவம், அவை தரும் பொருள்கள் வட்டார பேச்சு மொழியில் ஏற்பட்டுள்ள ஒலி மாற்றங்கள், பிற மொழிக் குறுக்கீட்டினால் வந்து வழங்கும் சொற்கள், அக்கருவிகளை உற்பத்தி செய்கின்ற தச்சர், கருமார் போன்றோரின் பேச்சில் காணப்படும் வழக்குகள் ஆகியனவற்றைத் தழுவியும் ஏற்படுகின்றன. மேலும் நடைமுறையில் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் ஒரு பொருளையே குறிக்கப் பயன்படுமானால் அச்சொற்கள் தமக்குள் முரண்படாமல், வெவ்வேறு சொற்றொடர்களில் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாகத் தெ. ஆ. வழக்கில் 'கார்', 'கொழு' என்று இரண்டு சொற்கள் உள்ளன. இவை கலப்பையில் உள்ள கூரிய இரும்பினைக் குறிக்கும். நிலத்தை உழும் பொழுது கலப்பையின் முனையில் மண்ணைப் பிளப்பது இந்த இரும்பேயாகும். பெரும்பான்மைச் சொற்றொடர்களில் 'கார்' என்ற சொல்லும் ஒரே ஒரு சொற்றொடரில் மட்டும் 'கொழு' என்ற சொல்லும் வழங்கப்படுகிறது.

(எ-டு) 'கலப்பைக்கு கார் கட்டணும்'
'கார் வடிக்கணும்'
'உண்டியிலேருந்து கார் கழட்டிகிச்சி'.

ஏர் ஓட்டும்பொழுது* மாட்டின் பின்னங்கால் குளம்புகட்கிடையில் கார் குத்தி விடுமானால் அதனை 'மாட்டுக்கால்லெ கொழு ஏரிட்டுது' என்று கூறுவர். 'கொழு' என்ற சொல் இந்த ஒரு சொற்றொடரில் மட்டுமே, 'காலில் கொழு ஏருதல்' என்பதில் வழங்கி வந்து, அச்சொல் வழக்கில் நிலைத்து நிற்கிறது. இது போன்று தர்மபுரி மாவட்டத்திலும் கூட 'பார்' என்ற சொல் வண்டியின் மேலே உள்ள நீண்ட மரத்தைக் குறிக்கிறது.

**இரட்டைமாட்டு வண்டி/கட்டை வண்டியின் பாகங்கள்**

| | தெ. ஆ. மாவட்டம் | தர்மபுரி மாவட்டம் | பொருள் |
|---|---|---|---|
| 1. | பாரு | பக்க பாரு | பார் |
| 2. | ஏர்க்கா | பாரு/ஏர்க்கா | ஏர்க்கால் |

* ஏர் ஓட்டுதல் - ஏர் கட்டி நிலத்தை உழுதல்.

| | | | |
|---|---|---|---|
| 3. | நெவத்தடி | நொகத்தடி | நுகத்தடி |
| 4. | பசெ/வண்டி எண்ணெ | மை | மசகு எண்ணெய் |
| 5. | வட்டெ | வட்டெ | வட்டை |
| 6. | காலு/ஆரக்காலு (உருட்டுக்காலு/பட்டைக்காலு) | ஆரக்காலு | ஆரக்கால் |
| 7. | கட்டு | பட்டெ | இரும்புக்கட்டு (பட்டைவடிவம்) |
| 8. | அஞ்சராணி கம்பி | நெஞ்சரணி | இரும்புக்கம்பி (மேம்படையையும் இருசுக்கட்டை, அச்சு ஆகியவற்றைப் பிணைக்கின்றது. |
| 9. | சாட்டிக்கழி | சாட்டெக்கோலு | வண்டி ஓட்டப் பயன்படும் கோல். |
| 10. | கொடொம் | கும்பொம் கொடொம் | குடம் |
| 11. | சக்கரொம் | சக்கரொம் | சக்கரம் |
| 12. | டப்பைக்கழி | தப்பா/தொட்டிதப்பா | பிளவுபட்ட மூங்கில் பட்டை |
| 13. | வெலாப்பழுவு | பட்டி | இரும்பாலான குறுக்குச்சட்டம் |
| 14. | கடமொளெ | லோகடு குச்சி | கடைமுளை |
| 15. | மொளக்குச்சி | கூட்டம்/கூட் கோலு | பார்மரத்தில் உள்ள குச்சிகள் |
| 16. | இர்(ச்)சி கட்டை | மைக்கட்டெ/ ஓட்டிமரம் | அச்சின் மேல் உள்ள மரம் |
| 17. | கொடத்துப் பூணு | கும்ப பளெ/ (கொடத்துக்கட்டு) | குடத்தின்மேல் உள்ள இரும்பு வளையங்கள் |
| 18. | கடேணி/கடயாணி | கடாணி | அச்சாணி |
| 19. | உள்ளாழி (உள்/ வெளி (உள்ளாழி) | உள்வாய் (உள்வளெ) | குடத்தின் வாயில் உள்ள இரும்பு. |

| | | | |
|---|---|---|---|
| 20. | மோக்கணெ/ முக்கெண | கோணெக்கட்டை | 7 வடிவ முகப்புக் கட்டை |
| 21. | அடப்பலவெ | அட்டபட்டி | ஏர்க்காலுக்கும் பாருக் கும் இடையில் உள்ள இடத்தை அடைக் கும் பலகை. |
| 22. | குருக்குப் பழு | குருக்கு விட்டம் | பாரையும் ஏர்க்காலை யும் இணைக்கும் இரும்பு. |

**கலப்பை**

| தெ. ஆ. மாவட்டம் | | தர்மபுரி மாவட்டம் | பொருள் |
|---|---|---|---|
| 101. | மோழி | மோளி/மேடி | மேழி* |
| 102. | ஏர்க்கா | ஏர்க்காலு | ஏர்க்கால் |
| 103. | கலப்பெ | கலப்பெ | கலப்பை |
| 104. | உண்டி | ஜிகுரு | கொண்டி (கலப்பை யில் ∩ வடிவ இரும்பு) |
| 105. | பூட்டு/பூட்டாங் கவுரு | பூட்டு | பூட்டு |
| 106. | காரு & கொழு | காரு | கார் & கொழு |
| 107. | மர ஆப்பு | சூத்தாணி | கலப்பையில் ஏர்க் காலைத் தாங்கும் மர ஆணி |
| 108. | வடக்கவுரு/ ஏர்க்கவுரு | வடகவுரு/ ஏர்கவுரு | வடக்கயிறு/ஏர்க்கயறு *வடக்கயிறுதோலால் செய்தது, பொதுவாக ஏர்கட்டப் பயன்படும். |

* மேழிச்செல்வம் கோழைப்படாது.

## பொதுப்பெயர்கள்

| தெ ஆ மாவட்டம் | தர்மபுரி மாவட்டம் | பொருள் |
|---|---|---|
| 301. பயிர்/வெவசாயம் | a) ஆராம்பு<br>b) ஆராம்பு செய்யரது<br>c) பண்ணயத்து வேலெ | பயிர்த்தொழில் |
| 302. கேவுரு<br>சின்னகேவுரு | ஆரியம்<br>தூளாரியம் | கேழ்வரகு<br>சிறிய கேழ்வரகு |
| 303. களெ | கச்ரா | களை |
| 304. பயிரு | தடினி | பயிறுவகை |
| 305. கொத்தவரங்காய் | சிக்டிகாயி | கொத்தவரை |
| 306. நல்லெண்ணெ | அப்பட்டெண்ணெ | நல் லண்ணெய் |
| 307. பப்பாளிப்பழாம் | பரங்கிப்பளொம் | பப்பாளிப்பழம் |
| 308. மள்ளாட்டெ (வேர்கடலெ, நெலக்கடலெ, கொடிக்கொட்டெ, குத்துகொட்டெ) | கள்ளகொட்டை | மணிலாக்கொட்டை/ கடலைக்கொட்டை |
| 309. அவரெ | அவரக்கொட்டை | அவரை |
| 310. தொவரெ | தொவரக்கொட்டெ | துவரை |
| 311. மொசக்கொட்டை | மொச்சகொட்டெ | மொச்சைக்கொட்டை |
| 312. முத்துகொட்டை (ஆமணக்கு) | ஆமணக்குமுத்து | ஆமணக்குவிதை |
| 313. மரவ்ளிக்கெழங்கு | குச்சிகெளங்கு | மரவள்ளிக்கிழங்கு |
| 314. வேப்பன் ஏலெ/ வேப்பலெ | வேப்பம்பத்திரி | வேப்பிலை |
| 315. கடப்பரெ | தோக்கர்பாரை | இரும்புப்பாரை |
| 316. களைக்கொட்டு | குத்திலி | சிறியகளைக்கொட்டு |
| 317. சல்லடெ | ஜள்டி | சலிக்கும் சல்லடை |

| | | | |
|---|---|---|---|
| 318. | குவியலு | உட்டெ | குவியல் |
| 319. | மமுட்டி | மமிட்டி | மண்வெட்டி |
| 320. | பெரும்பயிரு | பயித்தங்கொட்டை | பெரும்பயிறு |
| 321. | குத்து கொட்டெ | குத்துக்காயி | குத்து மணிலாக் கொட்டை |
| 322. | வைக்கெ | பில்லு | வைக்கோல் |
| 323. | தேங்காபழொம் | கர்ய்பளொம் | தேங்காயும் வாழைப்பழமும் |
| 324. | பெரிய கூடெ | மக்காரி | பெரிய கூடை |
| 325. | களெ எடு/வெட்டு பரி | களெ அலாசு/ களெ புடுங்கு | களை எடுத்தல் |
| 326. | மரக்கா(ல்) | வள்ளொம் | அளக்கும் கருவியின் பெயர் |
| 327. | சொத்தெ | ஜள்ளா | பதர், அழுகிய காய் முதலியன |
| 328. | காகரி | தர்க்காரி | காய்கறி |
| 329. | நெல்பயிர் | நெல்லும் பயிரும் | நெற்பயிர் |
| 330. | மரமணெ (வர்ரது) | ஊர்கோலொம் (உட்ரது) | ஊர்வலம் வருதல் |
| 331. | ஒருபொழுது | ஓசந்தி | விரதமிருந்து ஒருவேளை மட்டும் உண்ணுதல். |

**ஒலி நிலையில் மாற்றங்கள்**

தென்னாற்காடு மாவட்ட கலைச் சொற்களில் ஒலிகள் ஓரினமாதல், திரிதல், சொல்லீற்றில் வரும் ஒலியன்கள் திரிதல், மொழி முதல் ககரம் கெடல் ஆகியவற்றைக் காணலாம். தர்மபுரி மாவட்ட வழக்கில் இம்மேற்கூறிய மாற்றங்களுடன் குரலோசையுடைய தடையொலியன்கள் (Voiced stops), பிற மொழிச் சொற்கள் ஆகியனவும் பரவலாகக் காணப்படுகின்றன.

**தெ. ஆ. மாவட்டம்**

1. 'மணிலாக்கொட்டை' என்ற சொல் 'மள்ளாட்டெ' எனத் திரிந்துள்ளது.

மணிலா > மள்ளா – ணகரத்தால் அடுத்து வந்த லகரம் நாமடி ஒலியாகத் திரிந்து, பின்னர் ணகரமும் ளகரமாகத்திரிந்து, இகரம் கெட்டது.

2. கொட்டை > ட்டெ – மொழிமுதல் அசை ககரத்துடன் கெட்டதுடன், ஈற்றில் உள்ள ஐகாரம் எகரமாகத் திரிந்தது. தர்மபுரி மாவட்ட வழக்கிலும் ஓரினமாதல், என்ற வகையில் அடங்கும் திரிபாவது 'கடலை > கள்ளெ' என்பதாகும். டகரத்தை அடுத்து வந்த லகரம் ளகரமாகி, அதன் பின்னர் ளகரத்தால் டகரமும் ளகரமாகத் திரிந்து ஓரினமாகி கள்ளெ என்று திரிந்தது. இதில் ஈற்று ஐகாரமும் எகரமாகத் திரிந்துள்ளது '—ஐ >–எ #' மாதல் பொதுப்பேச்சுத் தமிழில் காணப்படும் மாற்றமாகும்.

3. ழகரம் கெடுதல் தெ. ஆ. வழக்கில் ஓரிரு சொற்களில் மட்டுமே. ஏனைய சொற்களில் ழகரம் திரியாமல் வழங்கிவருகிறது. சொல்லீற்றில் இரண்டு சொற்களில் ளகரமாகத் திரிந்தும், ஒரு சொல்லில் ளகரத்தின் திரிபாக ழகரமும் காணப்படுகிறது.

ழ் > $\phi$

கேழ்வரகு என்ற சொல்லில் உள்ள ழகரம் கெட்டு 'கேவுரு' என்றாயிற்று; உயிரிடை ககரம் வகரமாதல் இயல்பு கன்னியாகுமரி மாவட்டத்தில் தேரிவிளையில் இஃது 'கூவரகு' என வழங்குவதாக அறிய முடிகிறது. 'வாழ்க்கைப்படு' என்ற வினைச்சொல் 'வாக்கபுடு' என்பதை ஒரு பெண், ஒருவரை மணந்து கொள்ளுதலைக் குறிக்கிறது. குமிழ், சிமிழ் என்ற சொற்களில் ழகரம் ளகரமாகி 'கும்ளு சிம்ளு' என பேசப் படுகிறது. மாறாக கேள்வி > கேழ்வி எனத் திரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மூங்கில் என்ற சொல் 'முழுங்கில்' என ழகரம் பெற்றும் வழங்கி வருகிறது.

4. 'டப்பை / டப்பெக்கழி' என்ற சொல்லில் டகரம் மொழி முதலில் வருகிறது. இது போன்று டமாரம், டம்பம், டப்பா,

டிண்ணு என்ற சொற்களிலும் 'டேய்' என்ற விளிச் சொல்லிலும் மட்டுமே காணப்படுகிறது. இவை பெரும்பாலும் கடன் சொற்களாக லாம். ஆனால் 'டேய்' என்ற ஆண்பால் விளி மொழியின் அடிப் படைச் சொல்லாக இருக்க வேண்டும். ஏனைய கிளை மொழிகளில் ஏலேய், எலே, ஏட்டி, டீ, ஆத்தா என ஆண்பால், பெண்பால் விளியாக வழங்குவதைக் காணலாம்.

தப்பை என்ற தமிழ்ச்சொல் கன்னட மொழியில் dabba/ḍabbe/ ḍebbe எனவும் தெலுங்கு மொழியில் dabba எனவும் வழங்குகிறது. தெ.ஆ. கிளைமொழி மேற் கூறிய கன்னட மொழியிலிருந்தே இச் சொல்லைப் பெற்றிருக்க வேண்டும்; ஏனெனில் மொழி முதல் டகரம் அதில்தான் காணப்படுகிறது.

**தர்மபுரி மாவட்டம்**

1. கும்பொம் (gumbom), தொட்டிதப்பா (toṭṭidabba), லோகடுகுஞ்சி (lo:kaḍɨkucci), கூட்டொம் (gu:ṭṭom), காட்கோலு gu:ṭko:li), கும்பபளெ (gumba baḷe), கூளி எருது (gu:ḷi erdɨ) ஆகிய சொற்களில் காணப்படும் குரலோசையுடைய தடையொலி கள் (Voiced Stops) /b/,/d/,/ḍ/,/g/ /j/ ஒலியன்களாக உள்ளன.

2. பெரும்பான்மைச் சொற்களில் ழகரம் ளகரமாகத் திரிந்து விட்டது.

(எ-டு) பரங்கிப்பளொம், குச்சிக் கெளங்கு.

பரங்கிப்பளொம் பப்பாளிப்பழத்தைக் குறிக்கிறது. இப் பழம் மேனாட்டு தாவர இனத்தைச் சேர்ந்தது. பரங்கி என்றசொல் அயல்நாடு என்ற பொருளில் வழங்குவதைக் காணலாம். கேரள மாநிலத்தில் முந்திரிக்கொட்டை முந்திரி மரங்களை முறையே பரங்கி அண்டி, பரங்கி மாவு எனக் குறிப்பிடுகின்றனர். 'வெள்ளைப் பரங்கியரைத் துரை என்ற காலமும் போச்சே' என்ற பாரதியார் பாடலும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது. சிதம்பரத்திற்கு அடுத்

* DED 2504. Ta. *tappai* bamboo splints, Ka. *dabbe/ḍabbe/ ḍebbe* Te. *dabba*.

துள்ள பரங்கிப்பேட்டையில் உள்ள 'பரங்கி'யும் அயல்நாட்டவர் என்பதையே காட்டுகிறது.

3. ழகரம் ளகரமாகவும், பிறமொழித் தாக்கத்தால் டகரமாக வும் திரிந்துள்ளது.

மேழி > 1) மோளி (ḻ > ḷ)
2) மேடி (ḻ > ḍ)

மோளி தமிழ்ச்சொல்; மேடி தெலுங்குச் சொல்லின் தாக்கத்தால் வந்து வழங்கும் சொல்.

**சொல்லாக்கம்**

தர்மபுரி மாவட்ட கலைச் சொற்களில் 'நெல்லும்பயிர்', 'வேப்பம் பத்திரி', 'பொண் ஆளு', 'பண்ணயத்து வேலை' போன்ற சொற்கள் புதிய மரபினைத் தோற்றுவித்துள்ளன. பொதுப் பேச்சு வழக்கில் நெற்பயிர் (அ) நெல் பயிர் என்றே காணப் படுகிறது. இம்மாவட்ட வழக்கில் நெல்லு என்ற சொல் 'அம்' விகுதி பெற்று, பின்னரே 'பயிர்' என்ற சொல்லுக்கு சொல்லடை யாக நிற்கிறது. இது இலக்கண அமைப்பில் புதியதொரு முறை யினை மேற்கொள்கிறது. தெ.ஆ. மாவட்டத்தில் நடவு நடும் பெண்களை 'நடவாளு' என்றும், பொதுவாக வயல் வேலை செய்யும் பெண்களை 'பொம்பளெ ஆளு' என்றும் குறிப்பது வழக்கம். தர்மபுரி மாவட்டத்தில் 'ஆண் ஆளு' 'பொண் ஆளு' என நேரிடையாகவே சொற்களை உருவாக்கி வழங்கிவருகின்றனர். மேலும் 'பத்திரி' என்ற சொல்லை கடனாகப் பெற்று இலை என்ற பொருளில் 'வேப்பம்பத்திரி' என வழங்குகின்றனர். கிணறு என்ற சொல்லுக்கு இணையாக 'கெணொம்' (geṇom) என்று g ஒலியை சொல் முதலில் உச்சரிக்கின்றனர். கூளி எருது (gu:ḷi erdu DED. 1597) பிடித்து (கோவில் மாடு, பொலிகாளை) ஊர்வலமாக (மரமெண) வருவது ஒருவகை விளையாட்டாகும். கூளி (gu:ḷi) கன்னட மொழிச்சொல். தமிழ்ச்சொல் 'எருது' வழங்கும் பொருளில் 'கூளி' வழங்கினாலும் போஸ்ட் மரம், பேக்பை என்பன போன்று 'கூளிஎருது' சொல்லும் உருவாகியுள்ளது. கலைச்சொற்களின் பட் டியலில் தர்மபுரி மாவட்ட வழக்கில் கீழ்வரும் சொற்கள் ஏதேனும்

ஒருவகையில் (ஒலி, சொல், இலக்கண அமைப்பு) பிறமொழித் தொடர்புடையதாக அமைந்துள்ளன.

ஆராம்பு, பண்ணயம், கும்பம், பளெ, பட்ட, ஆரியம், கச்ரா, தடினி, அப்பெட்டெண்ணெ, சிக்டிகாயி, வேப்பம்பத்திரி, குத்திலி, தோக்கர் பாரெ, ஜள்டி, உட்டெ, ஜிகுரு, லோகடு குச்சி, கூட்டொம், கூட்கோலு, அட்டபட்டி, தொட்டிதப்ப, மேடி, காய் பளம், கெணொம், மக்காரி, காலா, கெட்டிக்காயி, தர்க்காரி, கொப்னெ (எருக்குவியல்), ஒசந்தி, கும்டிக்க, வெரெக்காயி, குத்துகாயி.

வேளாண் கலைச் சொற்களைச் சேகரித்து வட்டார வாரியாகத் தொகுத்தும், பாகுபடுத்தியும் தொழிற் கிளைமொழி அகராதி தயாரித்தல் தமிழ் மொழியின் சொல்வளம் பெருக வழிவகுக்கும். இத்துறைக்கு நல்லதொரு எதிர்காலம் உண்டு, கற்றோரும் மற்றோரும் விரும்பி வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

---

## கல்வெட்டு மொழியமைப்பு

கல்வெட்டுக்களுக்கு மூலமாக இருப்பது ஓலைச்சுவடிகள். எனவே அவ்வாறு ஓலையில் எழுதப்பட்ட செய்தியினை ஒருவன் படிக்க வேறொருவன் அதனைக் கல்லில் வெட்டியிருக்கலாம். அவ்வாறு வெட்டும்போது, தான் கேட்கின்ற ஒலியினையே மொழி யறிவின்றி வெட்டியிருக்கிறான். அதனால் 'னகர' 'ந்'கர வேறு பாடுகளும் 'ழ்'கர 'ள்'கர வேறுபாடுகளும், 'ர்'கர 'ற'கர வேறு பாடுகளும் மலர்ந்திருக்கின்றன. எடுத்துக் காட்டாக, பொன்–பொந், தந்தை–தன்தை எனவும், கேள்வி–கேழ்வி எனவும், அக்கிர காரம்–அக்கிரகாறம் எனவும் எழுதப்பட்டுள்ளன. 'கோஇல்', 'கோஇராசசேகர்', 'ஆஇரம்' என உடம்படுமெய் இன்றியும் பொறிக்கப்பட்டுள்ளன. கொடுத்தான்–குடுத்தான், உடைய–ஓடைய எனப் பேச்சு வழக்குச் சொற்களும் நிறைந்து காணப்படுகின்றன.

டாக்டர் இர. பன்னீர்செல்வம்
கல்வெட்டுக்கள், திருவனந்தபுரம், 1969.

# தமிழ் தந்த மண்டலம்

செந்தமிழில் நாம் அடிக்கடிக் கையாளுகிற **மண்டலம்** என்ற சொல் வடமொழியிலிருந்து கடன் கொண்டதோ என்று சிலர் ஐயுறுகின்றனர். இந்தச் சொல்லின் பிறப்பிடம் தமிழ்தான் என்று கருதும் வகையில் கீழ்க்காணும் சொல் தொடர்புகள் அமைந்துள்ளன.

மண்டு, மடு, மடி, மடிப்பு, மண்டி
வடு, வட்டு, வட்டை, வட்டம்,

மகரம் வகரமாக மாறுவது தமிழுக்குப் புதுமையல்ல. என்னவோ என்னமோ; வானம், மானம்; தருமோன், தருவோன் என்பன போலவரும் சொற்களை ஒப்புக் காண்க. டகரத்தின் முன் நிற்கும் ணகரம் கெடுவதும் உண்டு. கூண்டு, கூடு; பெண்டு, பேடு, பெடை முதலிய சொற்களை ஒப்புக் காண்க. மண்டுதலாவது சுற்றி வளைதல் அல்லது சூழ்ந்து கொள்ளுதல், மடுத்தலாவது தடைப் பட்டு மீளுதல் அல்லது வளைதல். மடித்தலாவது நேராக வளைத் தல். மடிப்பு என்பதும் அது. மண்டி என்பதும் வளைதல் என்றே பொருள்படும். மண்டியிடுதல் என்பதும் ஒருவாற்றான் வளைதலே யாதல் கருதுக: வடு, வட்டு முதலியன வட்டவடிவைக் குறிப்பன. வட்டை, வட்டம் என்பன வட்டவடிவைக் குறிப்பன என்பது தெளிவாக விளங்குகிறது. பாம்பு மண்டலமிட்டது என்பதன் பொருள் என்ன? பாம்பு வளைந்து வளைந்து தன் உடலால் வட்ட வடிவை அமைக்கிறது. இதனையே நாம் பாம்பு மண்டலமிட்டது என்கிறோம். இங்கும் மண்டலம் என்ற சொல் வளைவு, வட்டம் என்ற பொருளையே குறிக்கிறது. இவ்வாறு வட்டம், வளைவு என்ற பொருள்களில் வழங்கிய சொல்லே நாளடைவில் வட்டமாக உள்ள உலகைக் குறிக்கலாயிற்று. மண்டு–அல்–அம் > மண்டலம் இச்சொல்லை இவ்வாறு பிரிக்காமல் மண் + தலம் என்று பிரிக்க முயல்வார் சிலர். அது பொருந்தாது. அவ்வாறு பிரிப்பின் வளைவு, வட்டம் என்ற பொருட்கு இடமில்லை. பாம்பு மண்டலமிடுதல் என்பதிலுள்ள மண்டலம் என்ற சொல்லும் விளக்கம் பெறாமற் போய்விடுகிறது. தமிழில் அல், அம் ஆகிய விகுதிகள் சேர்வது பெருவழக்கு. எனவே மண்டு–அல்–அம் > மண்டலம் என்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

டாக்டர் பொற்கோ
இலக்கண உலகில் புதிய பார்வை. பக்: 116, சென்னை, 1973.

# மொழி இணைமாற்றம்

மு. ஆனந்தராசன்
மைசூர்.

1.0 மனிதன் கூடிவாழும் சமூகச்சிந்தையை உடையவன். இது மனிதனுக்கு மட்டும் சார்ந்த சிறப்பியல்பன்று. ஆனால் தன் தேவைகளை, எண்ணங்களை வெளிப்படுத்தி கருத்துக்களை பரிமாற்றம் செய்வதற்காக அவன்மட்டும்தான் மொழியினை உருவாக்கினான். மொழி உருவாகிய காலத்தில் ஒவ்வொரு மொழியும் குறிப்பிட்ட இடத்திற்கும், குறிப்பிட்ட குழுவினருக்கும் மட்டும் சொந்தமாயிருந்தது. அதற்கு உறுதுணையாக நிலத்தொகுப்பும் இருந்தது. காடும், மலையும், ஆறும், கடலும், சமவெளியும், பாலையும் எல்லைகளாக இருந்து குழுக்களைப் பிரித்தன. காலப்போக்கில் நாடோடி வாழ்க்கைத்தன்மை குறைந்தது. பாதுகாப்பு, வேளாண்மையின் நிமித்தம் ஒரே இடத்தில் தங்கும் வசதி செய்துகொண்டு வாழத் துவங்கினான். வேளாண்மை, வணிகம், மக்கட்பெருக்கம், பெருங்குழுக்களின் சிதறல் போன்றவைகளால் இருவகை மாற்றங்கள் மனிதனின் முன்னேற்ற வரலாற்றில் உண்டாயின. முதலாவதாக குழுக்களின் பெருக்கத்தினால் மொழிகளின் எண்ணிக்கையும் பெருகலாயிற்று,

அடுத்ததாக, மக்கட்தொகை பெருக்கத்தினாலும், குழுக்களின் பெருக்கத்தினாலும், அடிக்கடி ஒரு குழு மற்றொரு குழுவைச் சந்திக்க நேரிட்டது. அத்தகைய சந்திப்புகள் முதலில் இருமொழி நிலை **(Bilingualism)** தோன்றவும் பின் அதன் விளைவுகளான கடன் வாங்கல் **(Borrowing)**, இணைமாற்றம் **(Convergence)** வணிகமொழி **(Pidgin)** போன்றவைகள் தோன்றவும் வழிவகுத்தன. இருமொழி நிலைக்கும், வணிகமொழிக்கும், கடன்வாங்கலிற்கும் உள்ள வேறுபாட்டைச் சிறிது நோக்குவோம்.

**1.1** வணிகமொழி தோன்ற இருமொழி நிலை மிக அவசியம், ஆனால் இருமொழிகள் வழங்கும் இடங்களிலெல்லாம் வணிகமொழி தோன்றவேண்டும் என்பது நியதி ஒன்றுமில்லை. வணிக மொழி பெரும்பாலும் அதை பயன்படுத்துவோரின் தாய்மொழியாக இருப்பதில்லை. வணிகமொழி தோன்றுவதற்குரிய பலகாரணங்களை ஹைம்ஸ் (1971) கீழ்க்கண்டவாறு வரிசைப் படுத்துகிறார்.

1. புதிய குடியிருப்புகளைக் கண்டுபிடித்தல் **(Discovery)**
2. புதிய குடியிருப்புகளை ஆராய்தல் **(Exploration)**
3. படையெடுத்து வெற்றிக்கொள்ளல் **(Invasion and Conquest)**
4. அடிமைப் படுத்துதல் **(Slavery)**
5. இடம் பெயர்தல் **(Migration)**
6. நாட்டை விரிவாக்கல் **(Expansion)**
7. கடல்கடந்து படையெடுத்தல் **(Colonolism)**
8. தேசியமாக்குதல் **(Nationalism)**

குறைந்த சொற்களைப் பயன்படுத்துதல், எண், பால் போன்ற இலக்கணக் குறிகளை ஒதுக்குதல் போன்றவைகள் வணிகமொழியின் சிறப்பியல்புகளாகும். இருமொழி உறவுகளில் **(language contact)** சில சமயங்களில் மட்டுமே வணிகமொழி உருவாகின்றது. பொதுவாக இரு மொழி நிலையே தொடர்கின்றது. சில வேளைகளில் ஆதிக்க மொழியே **(Dominant language)** தாய்மொழியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. உதாரணமாக லத்தீன் அமெரிக்கா என்றழைக்கப்படும் தென்னமெரிக்காவில் ஸ்பானிய மொழியும், போர்த்து

கிலிய மொழியும் இந்தியர்கள் பலருக்குத்தாய்மொழியாக விளங்கு கின்றன (ரூபின் 1968).

1. 2 கடன் வாங்கல் என்பது ஒருமொழி பிறமொழியிலிருந்து தேவையை முன்னிட்டும் உயர்ந்த செல்வாக்கை முன்னிட்டும், சிறந்த செல்வாக்கை முன்னிட்டும் பலபண்புகளை ஏற்றுக்கொள்த லாகும். சாதாரணமாக ஆட்சிமொழி அல்லது நாட்டைமேற்கொண்ட வர்களின் மொழி நல்கும் மொழியாக **(Donor language)** திகழ் கின்றது. உதாரணத்திற்கு ஆங்கில மொழியின் வளர்ச்சியை நோக் கலாம்.

இங்கிலாந்தில் முதலில் கெல்ட் **(Celt)** மொழி பேசப்பட்டு வந்தது. ஜூலியஸ் ஸீஸர் கி. மு. 55-ம் ஆண்டு கால் (**Goul** - இன்றைய ஃப்ரான்ஸ்) பிரதேசத்தை வெற்றிக் கொண்டபின் இங்கி லாந்தின்மேல் படையெடுத்தார். அப்படையெடுப்பு வெற்றிகரமாக அமையாவிட்டாலும் பின்னால் பலர் அதன்மேல் படையெடுக்க வழி கோலியது. கி.பி. 43-ம் ஆண்டு க்ளாடியஸ் அதைப் படையெடுத்து வெற்றி கொண்டார். அதன் காரணமாக லத்தீன்மொழி இங்கிலாந் தின் ஆட்சிமொழியாயிற்று. கி. பி. 449-ல் ட்யூடானிக் இனத்தினர் படையெடுத்தனர். ஜீட்ஸ் வந்தார்கள். கி.பி. 477-ல் ஸாக்ஸன்ஸ் குடியேறினார்கள். அவர்களை ஏங்கல்ஸ் பின் தொடர்ந்தார்கள். இன்று இங்கிலாந்து **(England)** என்றும் இங்கிலீஷ் **(English)** என்றும் குறிக்கப்படுவது இவர்கள் பெயரால்தான். முன்பு குடியிருந்த இனத்தினரும், பின்பு குடியேறிய இனத்தினரும் கலந்ததால் ஆங்கி லம் உருப்பெற்றது. இத்தருணத்தில் கிறிஸ்துவ மதமும், லத்தீன், கிரேக்க மொழிகளின் மூலம் தன் பாதிப்பை ஆங்கிலத்தின்மேல் நிலைப்படுத்தியது. கி.பி. 790-ம் ஆண்டுவாக்கில் ஸ்கேண்டி நேவி யர்கள் எடுத்த படையெடுப்பும், கி.பி. 1066-ல் வில்லியம் மன்னன் **(William the Conqueror)** ஃப்ரான்ஸ் நாட்டிலிருந்து எடுத்த படையெடுப்பும், வெற்றியும் அம்மொழியின் வளர்ச்சிக்குத் தம் தாக் கத்தின் மூலம் துணைபுரிந்தன. இன்றைய ஆங்கிலம் பலமொழி களின் பாதிப்பால்தான் வளர்ச்சியும், புதிய பரிணாமமும் அடைந்தது என்பது தெளிவு. அம்மொழி சிறந்த ஓர் அவியல் என்று கூறினால் அது மிகைப்படா உண்மையாகும்.

1.3 கடன்வாங்கல் என்பது குறுகிய காலக்கட்டத்தில் மொழிகளின் உறவினால் ஏற்படுவது என்பதை அறிந்தோம். நாளடைவில் அப்பண்புகள் புகுந்த மொழியிலேயே தங்கிவிடும்பொழுது அவைகளின் தனித்தன்மை மங்கி வேற்றுமையின்றி இரண்டறக்கலந்து ஒன்றாகி விடுகின்றன. கடன் வாங்கலும், வணிக மொழியும் ஏற்பட உயர்நிலை **(Prestige)** போன்ற அடிப்படைக் காரணங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் அத்தகைய காரணங்கள் ஏதும் இல்லாமலேயே இருமொழிநிலை ஏற்பட வழியுள்ளது. அதனைக் குறித்து பின்பு நோக்குவோம்.

1. 4 இருமொழிகளை அடுத்தடுத்து தங்குதடையின்றி பயன்படுத்துவதை இருமொழி நிலையென்றும் (வெய்ன்ரைய்ச், 1953) குறிப்பிடலாம். இருமொழிகளைத் தடையின்றி, அவைகளின் தனித்தன்மையுடன், வேறுபாட்டுடன் பேசுதல், படித்தல், எழுதுதல் போன்ற எல்லா நிலைகளிலும் பயன் படுத்துவதே நிறை இருமொழி நிலையாகும் **(Total bilingualism)**. ஆனால் இது இருமொழிகள் வழங்கப்படும் எல்லா இடங்களிலும் காணப்படுவதன்று. சான்றாக தமிழைத் தாய்மொழியாக கொண்டவர் கர்நாடகத்தில் குடியேறி வாழ்வதால் கன்னடமும் அறிந்து கொள்ள வாய்ப்பு உண்டு. தமிழ் ஆங்கில மொழிகளின் வாயிலாக கல்வி பயில்வதால் கன்னடம் எழுதவோ, படிக்கவோ பலருக்குத் தெரியவில்லை. இதே மாதிரி அஞ்சல்வழிக் கல்விமூலம் ஒருமொழியை எழுதவும் படிக்கவும் அறிந்து கொள்பவர்கள் பலர். இந்தி புரிந்தாலும், திரைப்பட வானொலி நகைச்சுவைகளைக் கேட்டு ரசித்தாலும், பேசவோ, படிக்கவோ, எழுதவோ அறியாதவர் நம்மில் பலருண்டு. இத்தகையோரின் நிலைமைதனை குறை இருமொழி நிலை என அழைக்கலாம். இதிலும் பல நிலைகள் உள்ளன.

1. 5 இந்தியா 1956-ல் மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இன்று இரு மாநில எல்லைகளில் இருமொழிகள் வழங்கப்படுவதைக் காணலாம். சில இடங்களில் பெருவாரியாகப் பேசப்படும் மொழியின் நடுவில் சிறுபான்மையோரின் **(Minority People)** மொழி வழங்குகிறது. சில இடங்களில் மொழி அடிப்படையிலேயே பெரும்பான்மையோர், சிறுபான்மையோர் என பிரிக்கப்படுகின்றனர். முதல் வகைக்கு ஓசூர், கொள்ளேகாலம் பகுதியில் கன்னடமும்,

தமிழும் பேசப்படுகின்றன. காசர் கூடில் கன்னடம், மலையாளம், துளு, கொங்கணி ஆகிய நான்கு மொழிகள் வழக்கில் உள்ளன. தார்வார்-பெல்காம் பகுதியில் கன்னடமும்-மராத்தியும் வழங்கப்படுகின்றன. கோலார், ராய்ச்சூர் எல்லைகளில் கன்னடமும்-தெலுங்கும் பேசுகின்றனர். கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் தமிழும்-மலையாளமும் வழக்கில் உள்ளன. நீலகிரி மாவட்ட எல்லையில் தமிழ், கன்னடம், மலையாளம் பேசப்படுகின்றன. மதுரையில் சௌராட்டியர்கள், தஞ்சையில் மராட்டியர்கள், கொச்சியில் யூதர், கர்நாடக மாநிலத்தில் வாழும் தமிழர்கள் எல்லோரும் இரண்டாம் வகைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்கள். மேற்கூறிய மொழிப்பரப்பில்தான் **(Linguistic area)** இணைமாற்றம் தோன்றுகின்றது.

## 2.0. இணைமாற்றம்

2.1 மொழியியல் அறிஞர் எமினோ (1956) இணைமாற்றத்தை மொழிப்பரப்பின் சிறப்பியல்பு என்கிறார். இருமொழிகளோ, பல மொழிகளோ ஒரே இடத்தில் பேசப்படும்பொழுது அவ்விடத்தை மொழிப்பரப்பு எனக் கூறலாம். ஹைம்ஸ் (1971) இணைமாற்றத்திற்கு மொழிக்கலப்பு எனப் பெயர் சூட்டுகின்றார். வெய்ன்ரைய்ச் (1953) தமது நூலில் இணைமாற்றத்தைக் கீழ்க்கண்டவாறு தெளிவுபடுத்துகின்றார். அவர் இணைமாற்றத்தை மொழி ஊடுருவல் **(Interference)** எனக் குறிப்பிட்டு "இருமொழியாளர்கள் தங்கள் பேச்சில், இருமொழிகளை வேற்றுமையின்றி அடுத்தடுத்துப் பயன்படுத்துவதால், அவைகளின் உறவின் இணைப்பால், அம்மொழிகளின் கட்டுக் கோப்பிலிருந்து விலகி ஏற்படும் மாற்றமே அது", என்கிறார். மேலும், "ஒரு மொழியை மற்றொரு மொழி தாக்கி அதன் ஒலியனியல் **(Phonology)**, சொல்லியல் **(Morphology)**, சொற்றொடரியல் **(Syntax)**, பொருளியல் (**Semantics**) போன்ற எல்லா நிலைகளிலும் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் மொழி ஊடுருவல் நிகழ்கின்றது" என்றும் கூறுகின்றார். சுருங்கக் கூறின், இணைமாற்றமென்பது இருமொழிகளின் இணைப்பால் தோன்றும் பொதுத் தன்மையையோ, ஒரு மொழியின் தாக்கத்தினால் மற்றொரு மொழியில் ஏற்படும் பொதுத்தன்மையையோ குறிப்பதாகும். இணைமாற்றத்தை உருவாக்கும் மொழிகள் இரு வேறுமொழிக் குடும்பங்களைச் சார்ந்ததாக

இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. சௌராட்டிய மொழி மதுரையில் வழங்குவது இப்படியே. பல நேரங்களில் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இரு மொழிகளினிடையே உறவு ஏற்பட்டு இணைமாற்றம் நிகழுவதைக் கவனிக்கலாம். மண்டியாவிலும் மேல் கோட்டையிலும் வழங்கும் தமிழை இத்தகைய இணைமாற்றத்திற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். வேறு குடும்பங்களின் மொழிகளினிடையே உறவு ஏற்பட்டு பாதிப்பு வெளிப்படும்போது, அதனை விரைவில் இனம் கண்டு கொள்ளலாம். ஆனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளின் பாதிப்பை அடையாளம் காண்பது சற்றுக் கடினம். ஒரே குடும்பத்தை சார்ந்தனவாய் இருப்பதால் அவைகளினிடையே இருக்கும் பொதுத் தன்மையையும், பாதிப்பினால் மட்டும் ஏற்பட்ட பொதுத் தன்மையையும் வேறுபடுத்தி இனம் காண அம்மொழிக் குடும்பத்தின் வரலாற்றறிவும், அம் மொழிகளைப்பற்றிய தெளிந்த சிந்தனையும் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

2.1.1 இணைமாற்றம் இரண்டு அடிப்படைகளில் நிகழ்கின்றது. முதலாவதாக, இணைப்பில் ஈடுபடும் மொழிகளுக்கு மொழி என அழைக்கக்கூடிய எல்லாத்தன்மைகளும், சிறப்பியல்புகளும், தனித்து இயங்கக் கூடிய அம்சங்களும் இருக்கவேண்டும். இரண்டாவதாக உறவில் ஈடுபடும் மொழிகளின் நடுவே மட்டும்தான் இணைமாற்றம் நிகழுமேயன்றி அம்மொழிகளின் மற்ற உறவு மொழிகளிலும் (**Sister languages**) அம்மாதிரி இணைமாற்றம் நிகழும் என்று எதிர்பார்க்க முடியாது. உதாரணமாக நடராசன் (1977) கூறியுள்ளபடி ஆரிய மொழிகளின் தாக்கத்தினால் கோண்டி மொழியின் பெயரடைச் சொற்களில் ஏற்பட்டிருக்கும் மாறுதலை மற்ற உறவுமொழிகளில் காணமுடியாது. டிசில்வாவும் (1974), எள்ரிச்சும் (1974) மொழி வெளி இணைமாற்றமட்டுமின்றி (**External convergence**), மொழிக்குள்ளேயே ஏற்படும் உள்ளிணை மாற்றத்தையும் (**Internal convergence**) குறிப்பிடுகின்றனர். இந்த உள்ளிணைமாற்றம் ஒருமொழியின் இரு இணை மொழிகளினிடையே நிகழ்கின்றது.

## 2.2 இணைமாற்றத்தின் செயல்வகை (Modes of Convergence)

இணைமாற்றம், ஒருமொழியின் ஒலியனியல், சொல்லியல், சொற்றொடரியல், பொருளியல் நிலைகளில் ஏற்படுகின்றது. சவுத்வொர்த்தும், ஆப்தேயும் (1974) குறிப்பிட்டுள்ளபடி அது ஒன்று

அல்லது அதற்கும் மேற்பட்ட நிலைகளையும் பாதிக்கலாம். தென் ஆசிய மொழிகளில் சொல்லொலியனியல் (**Morphophonemics**) தவிர்த்து மற்ற நிலைகளில் இணைமாற்றம் ஏற்படுகின்றது என ஹைம்ஸ் (1971) கருதுகின்றார். அவர் இம் முடிவிற்கு வர குப்பர் ஸீம், வில்வசனும் (1971) சேர்ந்து மராட்டியத்தில் உள்ள 'குப்வார்' என்ற மொழிப்பரப்பில் நடத்திய ஆராய்ச்சி பெரிதும் துணை புரிந்தது. அவ்விடத்தில் வழங்கும் கன்னடம், மராத்தி, உருது மொழிகளில் ஒலியனியல், சொற்றொடரியல், பொருளியல் நிலைகளில் பெரிதும் இணைமாற்றம் நிகழ்ந்திருப்பதையும் ஆனால் சொல்லொலியனியலில் மட்டும் எத்ததைய மாற்றமும் நிகழவில்லை என்பதையும் அவர்கள் ஆய்வு வெளிப்படுத்தியது. இக்கருத்தை பண்டிட் (1972) மதுரை சௌராட்டிய மொழியில் செய்த ஆராய்ச்சியும், நட்கர்னி (1975) கொங்கணி மொழியில் செய்த ஆய்வும் மேலும் உறுதிபடுத்துகின்றன. இப்புதுமை ஐரோப்பிய மொழிகளில் காணப்படும் பொருளியல் மாற்றத்திலிருந்தும்(**European intertranslatability**),வடக்குப் பசிபிக் தீவுகளின் மொழிகளில் காணப்படும் ஒலியனியல் மாற்றத்திலிருந்தும் மாறுபடுகின்றது. தென் ஆசிய மொழிகளில் இந்திய ஆங்கிலேயரின் (**Ango-Indians**) ஆங்கிலம் சொற்கோவையியல் (**Lexical**), சொற்றொடரியல், பொருளியல் நிலைகளில் வேற்றுமையை வெளிப்படுத்து கின்றது (ஹைம்ஸ், 1971). இதற்குக் காரணம் ஆங்கிலம் இந்தோ - ஐரோப்பிய (**Indo-European**) மொழிக்குடும்பத்தைச் சார்ந்ததால் இருக்கலாம்.

## 2.3 இணைமாற்றத்தின் போக்குகள் (Directions of convergence)

2.3.1. இணைமாற்றம், கருத்தியல் கோட்பாடின்படி இரு போக்குகளில் உருவாகலாம்.

1. ஒருமொழி அடுத்தமொழியின் மேல் ஆதிக்கம் செலுத்தும் போதும்

   (உ-ம்) அ → ஆ

   ஆ → அ

2. இருமொழிகளும் இணைந்து ஓர் புதிய இலக்கை நோக்கி செல்லும் போதும் உருவாகலாம்.

2.3.1.1 முதல் வகைக்கு, வடமொழியிலும் **(Sanskrit)** பிற ஆரிய மொழிகளிலும் **(Indo-Aryan Languages)** காணப்படும் இணைமாற்றத்தை பர்ரோ (1945, 1946, 1947 & 1958) செய்திருக்கும் ஆராய்ச்சிகளின் மூலம் குறிப்பாகக் காட்டலாம். அவர் வடமொழியிலும், பிற ஆரிய மொழிகளிலும் காணப்படும் ஆரியமல்லாத மொழிகளின் பாதிப்பைக் குறித்துப் பேசுகின்றார். குறிப்பாக அம்மொழிகளில் காணப்படும் நாவளை ஒலிகள் பழந் திராவிட **(Proto-Dravidian)** மொழியின் பாதிப்பே என்று எண்ணுகின்றார். அதேபோல் வடமொழியானது திராவிட மொழிகளின் மேல் குறிப்பாகத் தமிழைத் தவிர்த்து மற்ற மொழிகளின் மேல் பலமான தன் பாதிப்பை ஒலியனியல், சொற்கோவை நிலைகளில் ஏற்படுத்தியுள்ளது. தமிழிலும் அதன் பாதிப்பு உள்ளது என்பதனை மறுக்க முடியாவிட்டாலும், அது ஓர் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியதே என்றும், திராவிட மொழிகளில் தமிழ் மட்டும் எந்த மொழிகளின் பாதிப்புமின்றி முயன்றால் தனித்து வழங்கக் கூடிய தன்மை வாய்ந்தது என்றும் உறுதியாக கூறலாம்.

2.3.1.2 இரண்டாம் போக்கின்படி இருமொழிகள் இணைந்து ஓர் புதிய இலக்கை நோக்கி செல்லும்போது வணிக மொழி உருவாகின்றது. அதனை குறித்து முதலிலேயே (11,12) கண்டோம்.

## 2.4 வரலாற்றுச் சமூக மொழியியல் பார்வையில் இணைமாற்றம்

இணைமாற்றமென்பது மொழிகள் ஒருங்கே கூடுவதால் உண்டாகும் விளைவு எனினும், அங்ஙனம் ஒருங்கே கூட வரலாற்றுப் பின்னணி தேவைப்படுகின்றது. மற்றும் இணைமாற்றம் ஏற்படும் முன்னும், பின்னும் மொழிகளின் நிலையையும், இணைமாற்றத்தின் நிலையையும் சமூகப் பின்னணியோடு நோக்க வேண்டும்.

### 2.4.1 வரலாற்றுக் கண்ணோட்டம்

இணைமாற்றம் ஏற்பட இருமொழி நிலை தேவைப்படுவதால் இருமொழி நிலை தோன்றும் விதத்தைக் குறித்து ஆராயப் படவேண்டும். இதனால் இணைமாற்றத்தின் வரலாறும் ஓரளவிற்குப் புலனாகும். இருமொழி நிலையும், அதன் விளைவிகளில் ஒன்றான இணைமாற்றமும் கீழ்க்கண்ட நான்கு வழிகளில் உருவாகலாம்.

1. குடிபுகுகின்றவர்கள்/படையெடுப்பவர்கள் தாங்கள் வந்த நாட்டிலேயே நிரந்தரமாகத் தங்கிவிடும் போது இருமொழி நிலை ஏற்படுகின்றது. உதாரணமாக ஆரியர்களின் குடியேற்றத்தினால் திராவிட மொழிகளில் காணப்படும் ஆரியமொழிகளின் சாயல். முகமதியர்களின் படையெடுப்பால் உண்டான உருதுமொழி.

2. படையெடுப்பவர்கள், படையெடுக்கும் நாட்டில் தங்காவிட்டாலும் தங்களுடைய பண்பாட்டையும், மொழியையும் பின்விட்டுச் செல்வார்கள். இந்தியாவில் இத்தகைய நிகழ்ச்சிகளுக்குச் சான்றாக அலக்ஸாண்டர் படையெடுத்தது முதல் பல உள்ளன. அண்மைகால வரலாற்றில், போர்த்துக்கீசியர்கள், பிரெஞ்சு, டச்சு நாட்டினரும், ஆங்கிலேயர்களும் இந்தியாவிற்கு வணிகத்தின் பொருட்டு வந்து பின்புரிந்த பலமாற்றங்களைக் காணலாம். இவர்களிடையே நடந்தபோட்டியில் ஆங்கிலேயர்கள் மட்டும் அநேகமாக இந்தியா முழுவதிலும் ஓர் நிலையான ஆட்சி ஏற்படுத்துவதில் வெற்றிப் பெற்றனர். அவர்கள் இந்தியாவை விட்டு 1947-ல் வெளியேறிய பின்னர் அவர்களுடைய நாகரிகமும், மொழியும் இன்றும் நிலவி வருகின்றன. குறிப்பிட்ட இனத்தாருக்கு ஆங்கிலம் தாய்மொழியாகவும், கல்வி கற்றோருக்கு அது உலகின் பலகணியாகவும் திகழ்கின்றது. இந்தியாவின் மொழிப் பிரச்னைக்கு முடிவுகாண முடியாமல் தவிக்க ஆங்கிலமும், அதன் பாதிப்பும் முக்கிய காரணங்களாக திகழ்கின்றன.

3. ஆதிமுதல், மத, சமூக, பொருளாதார வறுமை, பஞ்சம் போன்ற காரணங்களினால் மக்கள் கூட்டம் கூட்டமாக குடிபெயர்ந்து போவது சாதாரண நிகழ்ச்சியாக நடந்து வருகின்றது. போர்க்காலங்களில் இத்தகைய குடிப்பெயர்ச்சி முழுமையான வேகத்தோடு நடைபெறுகின்றது என்பதற்கு இரண்டாம் உலகப் போரில் யூத இன மக்கள் ஜெர்மனியை விட்டு உலகின் பல பாகங்களை நோக்கி வெளியேறியதையும், சைனா திபெத்தைக் கைப்பற்றியவுடன் தலாய் லாமாவுடன், இந்தியாவை எண்ணி ஓடிவந்த பல்லாயிரக்கணக்கான திபெத்திய மக்களையும், 1971-ல் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து (இன்றைய பங்களாதேஷ்) இந்தியாவிற்குள் ஊடுருவிய அகதி கூட்டத்தையும், இன்று

வியட்நாமிலிருந்து கடலில் தள்ளப்படும் சீனமக்களையும், கம்பூச்சியாவிலிருந்து ஆஃப்கானிஸ்தானிலிருந்து வெளியேறும் அகதிகளையும் சான்றுகளாகக் காட்டலாம். கொச்சியில் யூதர்களையும், மதுரையில் செளராஷ்டிரர்களையும், கர்நாடகத்தில் தமிழ் அய்யங்கார் பிரிவினரையும் உதாரணங்களாக எடுத்துக் கொள்ளலாம்.

4. துவக்கத்தில் கூறியுள்ளபடி இருமொழி எல்லையோரங்களிலும் இருமொழி நிலையும், பின் இணைமாற்றமும் ஏற்படும்.

## 2.4.2 சமூக மொழியியல் கண்ணோட்டம் (Sociolinguistic Aspect)

இருமொழி வழங்கும் சமுதாயத்தில், சமூக, வணிக காரணங்களினால் நாள்தோறும் ஒருவரைப்பற்றி இன்னொருவர் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகிறது. குறிப்பாக சிறுபான்மை மொழியினருக்கு இத்தகைய அவசியம் அதிகமாகின்றது. ஆதலால் அவர்கள் இருமொழிகளையும் பயன்படுத்துகின்றார்கள். தங்கள் மொழியை இல்லங்களிலும், அடுத்த மொழியை வெளியுலக உறவுக்காகவும் பயன்படுத்துகிறார்கள். நாளடைவில் அவர்கள் தங்கள் இல்லங்களிலும் வெளி உறவு மொழியைப் பழக்கத்திற்கு கொண்டு வருகிறார்கள். இவ்வாறு பல இடங்களிலும் மொழிமாறு இயல்பு **(Coe-Switching)** மூலம் இருமொழிகள் இலக்கணப்படுகின்றன. தங்களைப் பெரும்பான்மையினருடைய மொழியை அறிந்தவர்கள் என்று காட்டிக் கொள்வதிலும், அம்மொழியைப் பெருமையின் காரணமாகப் பயன்படுத்துவதிலும் மகிழ்ச்சி கொள்கின்றார்கள். இவ்வண்ணம் மொழிகள் இணையும் போது இணைமாற்றம் ஒருமொழியிலோ அல்லது இருமொழிகளிலுமோ மெல்ல உருவாகின்றது. மதுரை செளராட்டிய மொழியின் சொற்றொடரியல் நிலையில் தமிழால் இத்தகைய இணைமாற்றம் ஏற்பட்டுள்ளது.

## 2.5 இணைமாற்றமடைந்த மொழியின் பேணுகை (Maintenance of Convergent Language)

கும்பர்ஸீம், வில்சனும் (1971) நடத்திய ஆராய்ச்சியும், பண்டிட்டின் (1972) ஆய்வும் மொழிப்பேணுகையைப் பற்றி விளக்கிக் கூறுகின்றன. குறிப்பிட்ட இனத்தாருக்குள் காணப்படும் இனப்

பற்றுதலும், வீடு, உறவினர்கள்போல் உள்வட்பத்தை **(Inner circle)** சார்ந்தவர்கள் தாய்மொழிக்குத்தரும் மதிப்பும், பொதுவாக இருக்கும் இனப்பற்றுதலும் **(Language loyalty)** ஒருமொழியை எவ்விடத்திலும் எந்நிலையிலும் நீடித்திருக்க வழிசெய்கின்றன. இந்தியாவில் பல ஆண்டுகளுக்கு முன் குடிபெயர்ந்தவர்கள் ஒருகுறிப்பிட்ட சாதியை சார்ந்தவர்களாகவே இருந்தார்கள். குறிப்பாக குப்பாரில் கன்னடம் பேசும் சமணர்களும், மதுரையில் நெசவுத்தொழில் புரியும் சௌராட்டியர்களும், கோவையில் தெலுங்கு பேசும் நாயுடுமார்களும், தேவாங்க செட்டிமார்களும், கன்னடம் பேசும் மாதவா பிராமணர்களும், கர்னாடகத்தில் தமிழ் பேசும் ஐயங்கார்களும் இவ்வகையை சார்ந்தவர்களே. சாதி, இனப் பிணைப்பால் இணைக்கப்பட்ட இத்தகையவர்களின் நெருக்கமான உறவும், இன, மொழி பற்றுதலும், வீட்டில் தாய்மொழிக்கு அளிக்கப்படும் மதிப்பும் இணைமாற்றமடைந்த மொழியை பாதுகாக்கின்றன. ஆனால் விஞ்ஞான முன்னேற்றமும், தொழில், இயந்திர, வணிக வளர்ச்சியும், பெரும் மொழிகளின் **(Super language)** சக்தியும், பெரும்பான்மையோர் மொழியின் தாக்கமும் அதைத் தடுக்க இயலாமல் இருக்கும் சிறுபான்மையோரின் நிலைமையும், குடியேறிய மக்கள் மீண்டும் தாயகத்துடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளாமையும் அண்மைக்காலத்தில் இத்தகைய மொழிகளின் நீடிப்பிற்குப் பெரும் தடைக்கற்களாய் விளங்குகின்றன. இக்கூற்றை உறுதிப்படுத்த கொச்சியில் இருக்கும் யூத மக்களை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். அவர்கள் கி.பி, 70க்கு அருகில் இந்தியாவிற்கு வந்ததாகக் கூறப்படுகின்றது. தற்பொழுது தங்கள் எல்லாவித தேவைகட்கும் அவர்கள் வீட்டிலும். வெளியிலும் மலையாளத்தையே பயன்படுத்துகின்றார்கள். மத சம்பந்தமான சடங்குகளுக்கு மட்டும் யூதமொழியான ஹீப்ரு மொழி 3 வழங்கப்படுகின்றன்றது. (மோகன்லால், 1978). அமெரிக்காவில் அறிவியல் முன்னேற்றத்தாலும், தொழிற் நுட்ப வளர்ச்சியாலும், பல ஐரோப்பிய நாட்டினர்கள் பெரும் தடையேதுமின்றி குடியேறிய தாலும் சிதிமாசா (ஹாக்கெட், 1958) போன்ற மொழிகள் நசிந்து போனதால் இன்று அந்நாட்டின் மொழி வரைப்படத்திலிருந்து **(Linguistic Atlas)** அவைகளின் பெயர் எடுக்கப்பட்டுவிட்டன. தற்பொழுது ஆங்கில மொழியினால் பல ஐரோப்பிய மொழிகளே பாதிப்படைந்திருப்பதை பல ஆய்வுகள் மூலம் காணலாம்.

## 3.0 முடிவுரை

ஒருமொழி இருவகைகளால் மாறுதல் அடையலாம்.

1. உள் நிலை மாற்றத்தினால் **(Internal change)** மொழி மாறுதல் அடையக்கூடும். பொதுவாக இவ்வகை மாற்றங்கள் ஒருவகையான வளர்ச்சியை வெளிப்படுத்தும்.

2. வெளிநிலை மாற்றம் **(External change)** ஏற்பட வெளித் தூண்டுதல்கள் தேவையாயிருக்கும். குறிப்பாக அடுத்த மொழியுடன் உறவு, அதன் விளைவுகள், சமூக, அரசியல் தாக்கம் போன்றவைகளால் மொழியில் மாற்றம் ஏற்படுகின்றது. இத்தகைய வெளி நிலை மாற்றத்தினால் ஆங்கிலத்தைப் போல் மொழி வளர்ச்சியடைவதும் உண்டு, சிதிமாசாவைப் போல் அழிவதும் உண்டு.

இணைமாற்றம் அடைந்த மொழிகள் விரைவில் அழிவதில்லை. மனிதன் எல்லா நிலைக்கும் தன்னைத் தக்கவாறு மாற்றிக்கொண்டோ அல்லது சூழ் நிலைகளைத் தனக்கு தக்கவாறு மாற்றிக்கொண்டோ வாழ்வதைப் போல இணைமாற்றமடைந்த மொழியும் சூழ்நிலைகளுக்கேற்ப தன்னைத் தகுந்தவாறு மாற்றிக்கொண்டு நீடித்து வாழ முயற்சிக்கின்றது. இதனை நோக்கும்போது இணைமாற்றமென்பது சமூக நன்மைகளை அடைவதற்காக ஏற்பட்ட ஓர் மொழி ஒப்புறவு **(Linguistic adjustment)** என்றே கூறலாம் போல் உள்ளது. இது குறித்து மேலும் ஆராயப்பட வேண்டும்.

### பார்க்கப்பட்ட நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும்

**Apte, Mahadeo L. 'Pidgination of a Lingua-Franca'. In *Southworth and Apte* (*Ed*.) 21-41.**

**Burrow, T. 1968. *Collected Papers on Dravidian Linguistics*. Annamalai University, Annamalainagar.**

**DeSilva, M. W. Sugathapala, 1974. 'Convergence in Diglossia: The Sinhalese Situation'. In: *Southworth and Apte* (Ed.) 60-91.**

Emeneau, Murray B. 1956. 'India as a Linguistic Area'. *Language*. 32. 3-16.

Gumperz, John J. & Robert. 'Convergence and Creolization: A Case from the Indo-Aryan/Dravidian'. In *Hymes, D.* (Ed.). 151-168.

Hockett, Charles F. 1938. *A Course in Modern Linguistics*. Oxford & IBH Publishing Co., 1970.

Hymes, Dell (Ed.). 1971. *Pidginization and Creolization of Languages*. Cambridge: Cambridge University Press.

Mohan Lal, Sam 1978. *Language Maintenance and Language Shift: A Case Study of Language Use Among Jews in Cochin*. Unpublished Report Submitted to G.I.I.L., Mysore-570006.

Nadkani, Mangesh V. 1975. 'Bilingualism and Syntactic Change in Konkani'. *Language* 51. No. 3. 672-683.

Natarajan, G. V. 1977. 'Adjectival Concord in Gondi'. *Indian Linguistics*. 38. 156-160.

Pandit, P. B. 1972. *India as a Sociolinguistic Area*. Poona. University of Poona.

——— 1974. 'Bilinguals' Grammar: A Case Study of Tamil-Saurashtri Number Names'. In *Southworth and Apte*. (Ed.). 181-197.

Rubin, Joan 1968. *National Bilingualism in Paraguay*. Mouton: The Hague.

Southworth, Franklin C. 1974. 'Linguistic Strartigraphy of North India', In: *Southworth and Apte* (Ed.). 201-223.

Southworth, Franklin C. and Mahadeo Apte. (Ed.) 1974. 'Contact and Convergence in South Asian Languages' *International Journal af Dravidan Languages*. Vol. No. 3. No. 1. and 2 (partial).

Ullrich, Helen H. Baylis. 1974. 'Morphological Coexistence: A Key to Convergence. In *Southworth and Apte*. (Ed.). 224–230.

Weinreich, U. 1953. *Languages In Contact*. Mouton : The Hague.

**நன்றி**

இக்கட்டுரை எழுத உற்சாகம் நல்கி, பல விதங்களிலும் பெரிதும் துணைபுரிந்த எனது ஆராய்ச்சி மேற்பார்வையாளர் டாக்டர் ஃப்ரான்ஸிஸ் எக்கா அவர்களுக்கு என் நன்றியைத் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழில் எழுத நல்யோசனை கூறிய டாக்டர் ஞானசுந்தரத்திற்கும், டாக்டர் சு. ராசாராமிற்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இக்கட்டுரையைத் திருத்தி நல்ல முறையில் உருவாக்க உதவி புரிந்த திருமதி விமலா நடராச பிள்ளைக்கும், கட்டுரையை விமர்சித்து, பல எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட எனது முதல் தமையனார் டாக்டர் மு. எட்வர்ட் குருராசனிற்கும் என் உளங்கனிந்த நன்றியை வெளிப்படுத்திக் கொள்கிறேன்.

மொழியியல் 3, 2 (1979)

# சங்கத் தமிழில் ஏவல் வினை

ச. அகத்தியலிங்கம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

## சங்கத் தமிழில் ஏவல் வினை

பொதுவாக உலக மொழிகள் அனைத்திலுமே ஏவல் வினைச் சொற்களைக் காணலாம். இச்சொற்கள் ஏவலை உணர்த்துவன வாகும். ஒரு செயலை ஒருவன் அல்லது பலர் செய்வதற்காக மற்றொருவரால் கேட்டுக்கொள்ளப் பயன்படுத்தப்படும் சொற்களே ஏவல் வினைச் சொற்கள். இத்தகைய சொற்கள் முன்னிலைச் சொற்களாக இருப்பதோடு மட்டுமன்றி எதிர்காலத்தைக் குறிக்கும் சொற்களாகவும் இருக்கும். ஏவல் என்பதே எதிர்காலத்தில் நடக்கும் ஒன்றாகும். இந்நிலையில் ஏவலைக் குறிக்கும் எல்லா வினைச் சொற்களும் (அவை எதிர்காலம் காட்டும் கால ஒட்டுக்களைக் கொண்டு இருப்பினும், இல்லாவிடினும்) எதிர்காலத்தைக் காட்டும் நிலையையுடையனவாக இருக்கும். இதைப் போன்றே இவை முன்னிலையைக் காட்டுவனவாகவும் அமையும்.

ஒரு செயலைச் செய்யுமாறு பணிப்பது அல்லது கேட்டுக் கொள்ளுவதைப் போலவே செய்யாமலிருக்கவும் கேட்டுக்கொள்ள லாம். இதற்காகப் பயன்படுத்தப்படும் சொற்களே எதிர்மறை ஏவல் வினைச் சொற்கள். இவையும் உடன்பாட்டு ஏவல் வினைச் சொற்களைப் போலவே முன்னிலையிலும் எதிர்காலத்திலும் வருவனவாகும். ஆனால் எதிர்மறையைக் காட்டும் ஒட்டுக்களைக் கொண்டிருக்கும்.

எல்லா ஏவல் வினைச் சொற்களும் முன்னிலையிலும் எதிர் காலத்திலும் வருமாயினும் பொதுவாக இச்சொற்கள் பலவேறு மொழிகளில் எதிர்கால ஒட்டுக்களையோ அல்லது முன்னிலை காட்டும் ஒட்டுக்களையோ கொண்டிருப்பதில்லை. இத்தகைய சொற்களை **இயற்கை ஏவல் வினை (Imperative proper)** எனக் குறிப்பிடலாம். உலக மொழிகள் பலவற்றில் எதிர்கால முன்னிலை வினைச் சொற்கள் ஏவல் வினைச் சொற்களாகவும் பயன்படு கின்றன. இச்சொற்கள் எதிர்கால முன்னிலை வினைமுற்றுக்களைப் போன்ற அமைப்புக்களைக் கொண்டிருப்பினும் இவற்றை ஏவலாகப் பயன்படுத்துதல் உண்டு. இதனால் இவற்றை **முன்னிலை ஏவல் வினை (Second person Imperative)** என அழைக்கலாம்.

முன்னர்க் குறிப்பிட்டபடி ஏவல் வினைச் சொற்கள் ஒரு வனையோ அல்லது பலரையோ ஏவுகின்ற நிலையில் இருக்கும். இந்நிலையில் சில மொழிகளில் ஒருமைப் பன்மையைக் குறிக்கும் ஒட்டுக்கள் இருக்கலாம். இன்னும் சில மொழிகளிலோ பன்மையை மட்டும் குறிக்கின்ற ஒட்டுக்கள் இருக்கலாம். வேறுசில மொழி களிலோ இரண்டும் இல்லாமல் இருக்கலாம்.

தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் இரண்டு விதமான ஏவல் வினைகளைக் காணலாம். ஒன்று எதிர்கால முன்னிலைச் சொற் கள் ஏவல் வினையாக வருவன. இச்சொற்களில் முன்னிலை, ஒருமை, பன்மை விகுதிகள், எதிர்காலம் காட்டும் ஒட்டுக்கள், எதிர்மறை ஒட்டுக்கள் ஆகியவை இருக்கும். எதிர்கால முன்னிலை வினைச் சொற்களும் இவையும் ஒரே மாதிரியான அமைப்பை உடையன. சிலவற்றில் கால இடைநிலைகள் இன்றி முன்னிலை விகுதிகள் மட்டும் இருக்கலாம். மற்றொன்றோ இயற்கை ஏவல்

வினைச்சொற்கள். இதன்கண் கால இடைநிலைகளோ முன்னிலை விகுதிகளோ இரா. ஆனால் பன்மையைக் குறிக்கும் வினைச்சொற்களில் பன்மை காட்டும் விகுதிகள் மட்டும் காணப்படும். பழந்தமிழ் இலக்கியங்களில் இவ்விரு விதமான ஏவல் வினைகளையும் காணலாம்.

| | |
|---|---|
| கேள் | சென்மோ |
| கேளல் | சென்மே |
| ஓம்புமதி | சென்மின் |
| சென்ம் | செல்லன்மின் |

போன்ற ஏவல் வினைச்சொற்கள் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணப்படுகின்றன. முன்னர் குறிப்பிட்டபடி இச்சொற்களில் முன்னிலை விகுதிகளோ அல்லது கால இடைநிலைகளோ இல்லை. எனினும் இவை முன்னிலையிலும் வருவனவாகும்.

முன்னிலை ஏவல் வினைச் சொற்களும் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் ஏவல் வினைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| முடித்தி | = முடித்துத் தருவாயாக | பதி. 54-2 |
| வருதி | = வருவாய் | கலி. 108-54 |
| நினையாய் | = நினைத்துக் காண்பாயாக | குறு. 298-4 |
| அஞ்சாதி | = அஞ்சாதே கொள் | கலி. 84-36 |
| அஞ்சலை | = அஞ்சாதே கொள் | குறு. 300-5 |

போன்ற முன்னிலை வினைச் சொற்கள் ஏவல் வினைப்பொருளில் வருவனவாகும். இத்தகைய சொற்கள் முன்னிலை வினைகளாகவும் பயன்படுகின்றன.

| | | |
|---|---|---|
| அருளுதி | = அருள் செய்வாய் | ஐங். 27-5 |
| அஞ்சாய் | = அஞ்சமாட்டாய் | புறம். 139-12 |
| அஞ்சலை | = அஞ்சுவது இல்லாய் | பதி. 63-3 |

போன்ற இடங்களில் எல்லாம் முன்னிலை வினைகளாக உள்ளன.

பண்டைத் தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் ஏவல் என்ற சொல்லை ஒருசில சூத்திரங்களில் (210, 224) பயன்படுத்தியிருப்பினும் இது பற்றி விரிவாகக் கூறவில்லை. முன்னிலை வினைச்

சொற்களுக்கும், ஏவல்வினைச் சொற்களுக்கும் இடையே எந்தவித வேற்றுமையையும் காணாது (வெங்கடராஜுலு ரெட்டியார், 1961) இரண்டையும் ஒன்றாகவே கூறியுள்ளது. முன்னிலை விகுதிகள் பற்றிக்கூறும்

> "இர் ஈர் மின்னென வரூஉம் மூன்றும்
> பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
> சொல்லோ ரனைய என்மனார் புலவர்" (தொல்-சொல். 709)

என்னும் சூத்திரத்தில் ஏவலில் வரும் **மின்** விகுதியையும் **– இர், –ஈர்** என்ற முன்னிலை விகுதியோடு இணைத்தே கூறியுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. **சென்மோ, வம்மோ** (759) போன்ற சொற்களில் வரும் **– மோ** விகுதியையும் முன்னிலை அசைச் சொல்லாகக் குறிப்பிடுகிறதேயன்றி ஏவல் வினையோடு வரும் எனக் கூறவில்லை. இதே நிலையைத்தான் **–மியா, –மதி** போன்ற சொற்களைப் பற்றிக் கூறும்போதும் காணுகிறோம். இந்நிலையில் தொல்காப்பியர் முன்னிலையிலிருந்து ஏவலைப் பிரித்துக் கூறினாரில்லை என்பது நன்கு விளங்கும். ஆனால் வினைச் சொற்கள் முன்னின்றான் தொழிலுணர்த்துவனவும், அவனைத் தொழிற்படுத்துவனவும் என இருவகையன.[1] **இ, ஐ, ஆய்** (தெய்வச்சிலையார் சூத். 21) ஏவலெல்லாம் முன்னிலையில் வருவன என்பதும் ஆனால் முன்னிலை எல்லாம் ஏவலல்ல என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கனவாகும்.

### ஒருமை ஏவல்

ஒருமை ஏவலும் முன்னர் குறிப்பிட்டபடி இரண்டு வழிகளில் உணர்த்தப்படுகிறது. ஒருமை ஏவல் வினைச் சொற்களாலும் முன்னிலை ஒருமை வினைச்சொற்களாலும் உணர்த்தப்படுகிறது.

### ஒருமை ஏவல் வினை

பலவேறு வினைச் சொற்களே ஒருமை ஏவல்வினையாகப் பயன்படுத்தப்படுகின்றன. உடன்பாட்டு ஒருமை ஏவல் வினையாகவே இவ்வடிச் சொற்கள் பயன்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| கேள் | = | கேட்பாயாக | புறம். 18-17 |
| தா | = | தருவாய் | குறு. 849-6 |

| | | | |
|---|---|---|---|
| ஈ | = | ஈவாயாக | பதி. 52-23 |
| வா | = | வருவாயாக | அகம். 240-15 |
| வேண்டு | = | விரும்பி கேட்பாயாக | ஐங். 104-1 |
| உரை | = | செல்வாயாக | நற். 236-6 |
| செல் | = | போ | கலி. 19-7 |
| நில் | = | நிற்பாயாக | பரி. 8-49 |
| கேள் | = | கேட்பாயாக | பத்து. 4-38 |
| பெய் | = | பெய் | குறள்-55 |
| கேள் | = | கேள் | சிலம்பு. 9-73 |
| கேள் | = | கேட்பாயாக | மணி. 6-36 |

**ஒருமை எதிர்மறை ஏவல்**

வினையடிகளோடு **-அல்**, **-ஆல்**, **-ஏல்** ஆகிய எதிர்மறை ஒட்டுக்கள் இணைவதால் ஒருமை எதிர்மறை ஏவல் வினைச் சொற்கள் உருவாகின்றன. இவ்வெதிர்மறை ஒட்டுக்களுள், **-அல்** ஒட்டே பழந்தமிழ் இலக்கியங்களில் மிக அதிகமாகப் பயன்படுதல் இங்குக் குறிப்பிடத்தக்கது. எட்டுத்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் ஆகிய நூல்களில் 96* இடங்களில் **-அல்** ஒட்டு வர, ஐந்து இடங்களில் மட்டுமே **-ஆல்** காணப்படுகிறது. -ஏல் நான்கு இடங்களில் மட்டுமே உள்ளது. இந்நிலை -அல் ஒட்டின் பெருவரவினைக் காட்டும்.

**-அல்**

பதிற்றுப்பத்து, நற்றிணை, பத்துப்பாட்டு ஒழிந்த ஏனைய நூல்கள் அனைத்திலும் இவ்வொட்டினைக் கொண்ட ஏவல் வினைச் சொற்கள் காணப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| செல்லல் | = | போகாதொழி | புறம். 259-4 |
| செல்லல் | = | செல்லாமல் தங்குவாயாக | குறு. 179-3 |
| செல்லல் | = | போதலொழிக | அகம். 21-6 |
| செல்லல் | = | செல்லாதே கொள் | ஐங். 233-4 |
| உரையல் | = | கூறாதே | கலி. 90-27 |
| சேரல் | = | செல்லாதேகொள் | பரி. 11-112 |

* இக்கட்டுரையில் தரப்படும் எண்ணிக்கை தோராயமாக உள்ளதேயன்றி மிகத் துல்லியமாக உள்ளது எனக் கூறுதல் முடியாது.

| | | |
|---|---|---|
| அஞ்சல் = அஞ்சாதே | | குறள் 1154 |
| அழல் = அழாதொழி | | சிலம்பு. 9_24 |
| அஞ்சல் = அஞ்சாதேகொள் | | மணி. 7_18 |

**–ஆல்**

முன்னர்க் குறிப்பிட்டபடி பழந்தமிழ் இலக்கியங்களில் ஐந்து இடங்களிலேயே வருகிறது. **–அல்**லில் காணப்படும் அகரத்தின் நீட்சியால் இது உருவானதாகக் கருதலாம். **–அல், –ஆல். –ஏல்** என்பன எல்லா வினைகளோடும் வருகின்ற நிலையில் இவை பதில் நிலை வழக்காகவே (complementation) உள்ளன. **அழல், அழால், அழேல்** போன்ற உதாரணங்கள் இப்பண்பினைக் காட்டும்.

| | | |
|---|---|---|
| அழாஅல் = அழாதே கொள் | | குறு. 82–2 |
| தொடாஅல் = தீண்டாதே கொள் | | குறு. 191–7 |
| அழாஅல் = அழாதே | | அகம். 233_2 |
| விடாஅல் = விடாதே கொள்க | | அகம். 26_9 |
| விடாஅல் = விடாதே கொள் | | கலி. 112_7 |

**–ஏல்**

இதுவும் மிகக் குறைவாகவே உள்ளது. பழந்தமிழில் நான்கு இடங்களில் (அகம். 1) (நற். 1) (பரி. 2) உள்ளது. **–ஆல்** ஒட்டிலிருந்து இது உருவாகியிருக்கலாம் என்று கருதலாம்.

| | | |
|---|---|---|
| ஆழேல் = மூழ்காதே கொள் | | அகம். 97–15 |
| சிதையேல் = கெடுத்துக்கொள்ளா தொழிவாய் | | நற். 387–2 |
| சூளேல் = சூள்மொழியாதே கொள் | | பரி. 8–68 |
| கூறேல் = கூறாதே கொள் | | பரி. 8–69 |

**முன்னிலை ஒருமை ஏவல்**

முன்னர்க் குறிப்பிட்டபடி முன்னிலை ஒருமை உடன்பாட்டு எதிர்மறை வினைமுற்றுக்களும் ஏவல் வினைகளாகப் பயன்படுகின்றன. இவற்றில் முன்னிலை விகுதிகளும் கால இடைநிலைகளும் காணப்படுகின்றன. பொதுவாக எதிர்கால இடைநிலைகளே காணப்படினும், ஒருசில இடங்களில் கடந்தகால இடைநிலைகளை

யும் காணலாம். எனினும் இவை எதிர்காலத்தையே குறித்துவரும். இவ்வாறு முன்னிலை வினைச்சொற்கள் ஏவலிலும் பயன்பட்டு வருதல் பிற மொழிகளிலும் காணக்கிடக்கின்றது. மலையாளம், கன்னடம் போன்ற திராவிட மொழிகளிலும் இந்நிலையைக் காண முடியும். (பி எஸ். சுப்பிரமணியம், 1971: 49). இன்றைய தமிழிலும் வாக்களிப்பீர், வருவீர் போன்ற சொற்கள் காணக்கிடக்கின்றன.

பழந்தமிழில் **-ஐ, -ஆய், -இ** ஆகிய ஒட்டுக்களைக் கொண்ட முன்னிலை வினைச் சொற்கள் ஏவல் வினைகளாகப் பயன்படு கின்றன. இவை முன்னிலை விகுதிகள் என்பதும் இங்குக் கவனிக்கத் தக்கது. இவற்றைப் போன்றே எதிர்மறைச் சொற்களும் உள்ளன. **அஞ்சலை, நோவாய், அஞ்சாதி** போன்ற பலவேறு சொற்கள் ஏவல் வினைகளாக உள்ளன. எனினும் இவை உடன்பாட்டு வினைகளை நோக்க மிகக் குறைவாக, மிக அருகியே காணக்கிடக்கின்றன. 'பொதுவாக முன்னிலை வினைச்சொற்கள் ஏவலிலும் வரும் என்பதனை மரபு இலக்கண ஆசிரியர்களும் உணர்ந்துள்ளனர். தொல்காப்பியர்

> ''செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
> செய்யென் கிளவி ஆகிடன் உடைத்தே'' (தொல்.சொல் 933)

என்ற சூத்திரத்தில் குறிப்பிட்டுச் செல்கிறார் எனக் கருதலாம். இதற்கு உரை எழுத வந்த சேனாவரையர் 'செய்யாயென்னும் வாய்பாட்டதாகிய முன்னிலை முற்றுச்சொல் ஆயென்னுமீறு கெடச் செய்யென்னுஞ் சொல்லாய் நிற்றலுடைத்து' என்று கூறுவார். செய்யாய் முன்னிலை வினைச்சொல்லிலிருந்து செய் என்ற ஏவல் வினை வடிவம் உருவாவதாகச் சேனாவரையர் கூறுவது ஏற்றுக் கொள்வதற்கில்லை என்றாலும் சில சமயங்களில் முன்னிலை வினைவடிவங்கள் ஏவலாகப் பயன்பட்டு வருவதைச் சேனாவரையர் உணர்ந்திருந்தார்* என்பது இதனால் போதரும்.

---

* சேனாவரையர் செய்யாய் வடிவிலிருந்து செய்யைப் பெறுவதும் வம்மின் வடிவிலிருந்து வம்மைப் பெறுவதும், அழியலை வடிவிலிருந்து அழியல் என்பதைப் பெறுவதும் மிகையாகும். சிற்சில நேரங்களில் முன்னிலை வினை வடிவங்கள் ஏவலைக் குறிக்கப் பயன்படுத்துவது உண்மையென்றாலும் முன்னிலை வினை வடிவத்திலிருந்து ஏவலைப் பெறுவதாக எண்ணுவது பொருத்தமானதாகத் தெரியவில்லை.

ஆனால் தெய்வச்சிலையாரோ இது பற்றிக் கூறும்போது 'செய்யாய் எனும் ஆய் ஈற்று முன்னிலை வினைச்சொல், செய் என்னும் ஏவல் குறித்த வினைச்சொல்லுமாகி வரும்' எனக் கூறுவதும், இதற்கு உதாரணம் தரும்போது

'நீ எம் இல்லத்து உண்ணாய் என்றவழி, உண்ணாமையைக் குறித்தலேயன்றி உண்க என்பதும் குறித்தவாறு கண்டுகொள்க'

எனக் குறிப்பிடுவதும் இங்கு நினைவுகூரத்தக்கது. இந்நிலையில் செய்யாய் எனனும் வாய்பாட்டு (எதிர்மலை) முன்னிலைச் சொல் செய்யென்னும் (உடன்பாட்டு) ஏவல் வினைப் பொருளிலும் வரும் எனப் பொருள் உரைப்பதே பொருத்தம் எனத் தோன்றுகிறது. இதே கருத்தினைத்தான் பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியும் (1945: 278) கொண்டுள்ளார். டாக்டர் மு. வ. வும் (1974: 242) இக்கருத்தினரே.

செய்யாய் என்னும் வாய்பாட்டு வினைச் சொற்கள் மட்டுமின்றி வேறுபல முன்னிலை வினைச் சொற்களும் ஏவல் வினைப் பொருளில் வருதல் உண்டு.[2] இந்நிலையைச் சங்க இலக்கியங்கள் அனைத்தினும் காணலாம். எனவே தொல்காப்பியர் செய்யாய் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்றினைப் பற்றி மட்டும் கூறினபோதிலும் இதை எடுத்துக் காட்டாகக் கொண்டு பிற எதிர்கால முன்னிலை வினைச்சொற்களும் ஏவல்வினையில் வரும் எனக் கருதுவதில் தவறெதுவுமில்லை.

சங்க இலக்கியங்களில் பலவேறு முன்னிலை வினைச் சொற்கள் ஏவல் வினையாகப் பயன்படுவது கண்கூடு.

**-ஐ**

| | | | |
|---|---|---|---|
| அஞ்சலை | = | அஞ்சாதே கொள் | குறு. 300-5 |
| ஈத்தை | = | தருவாய் | கலி. 86-30 |
| உண்டீத்தை | = | உண்பாய் | கலி. 85-32 |
| ஒழுகலை | = | ஒழுகுதலைச் செய்யாய் | பத்து. 6 201 |

**ஆய் (உடன்பாடு)**

| | | | |
|---|---|---|---|
| தேற்றாய் | = | தெளியாய் | புறம். 59-4 |
| நினையாய் | = | கருதி காண்பாயாக | குறு. 343-1 |

| | | | |
|---|---|---|---|
| செல்லாய் | = | செல்வாயாக | பதி 40-21 |
| வாராய் | = | வருவாயாக | அகம். 285-15 |
| காட்டாய் | = | காட்டுவாயாக | நற். 196-6 |
| அருளாய் | = | அருள்வாயாக | கலி. 60-18 |
| வந்தியாய் | = | வாராய் | கலி. 114-5 |
| கதுவாய் | = | பற்றுவாயாக | பரி. 20-82 |
| சொல்லாய் | = | சொல் | குறள். 1241 |
| போதராய் | = | போதருவாயாக | குறள். 1123 |
| அறிவிப்பாய் | = | அறிவிப்பாய் | சிலம்பு. 20-29 |
| காணாய் | = | நோக்குமதி | மணி. 6-129 |
| கேளாய் | = | கேட்டருள்க | மணி. -16 |

**-ஆய்** (எதிர்மறை)

எதிர்மறையிலும் இவ்விகுதி வரக் காணலாம். கலித்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் எதிர்மறையில் வரக் காண்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| நோவாய் | = | வருந்தாய் | கலி. 75-12 |
| என்னாய் | = | என்று கருதாய் | பத்து. 6-204 |
| ஒவ்வாய் | = | ஒவ்வாய் | சிலம்பு. 7-23-1<br>,, 7-23-2<br>,, 7-23-4 |

**-இ** (உடன்பாடு

| | | | |
|---|---|---|---|
| கேட்டி | = | கேட்பாயாக | புறம். 289-8 |
| முடித்தி | = | முடித்துத் தருவாயாக | பதி. 54-2 |
| கடவுதி | = | கூறுக | ஐங். 366-3 |
| ஏகுதி | = | விரைந்து செல்வாயாக | நற். 264-6 |
| காட்டி | = | காட்டுவாய் | கலி. 147-41 |
| கேட்டி | = | கேட்டருள்க | பரி. 19-96 |
| பெறுதி | = | பெறுவாய் | பத்து. 1-66 |
| சேறி | = | செல்வாயாக | குறள். 1244 |
| ஏகுதி | = | செல்வாயாக | மணி. 25-238[3] |

**-இ** (எதிர்மறை)

| | | | |
|---|---|---|---|
| அஞ்சாதி | = | அஞ்சாதே கொள். | கலி. 84-36 |

**பன்மை ஏவல்**

சங்கத் தமிழில் பன்மை ஏவலும் இரு வழிகளில் **உணர்த்தப்** படுகிறது. **-மின், -உம்** ஆகிய இரு விகுதிகளைப் பயன்படுத்திச் சொல்லுவது ஒருமுறை. முன்னிலைப் பன்மை வினை வடிவங்களை ஏவலாகப் பயன்படுத்துவது மற்றொரு முறை. **உண்ம், உண்மின்** போன்ற சொற்கள் ஏவலாகப் பயன்படுகின்றன. இது மட்டுமின்றி **உண்ம்** போன்றவற்றுடன் **-ஓ, -ஏ, -அதி** போன்ற அசைச்சொற்கள் இணைந்த நிலையில் உருவாகும் **வம்மோ, வம்மே, காண்மதி** போன்ற சொற்களும் ஏவல் வினைகளாக வருகின்றன. இவை தவிர **வந்தீமே, செய்தீமோ, மறவாதீமே** போன்ற வடிவங்களும் காணக்கிடைக்கின்றன. இவை மட்டுமின்றி முன்னிலைப் பன்மை வினை வடிவங்களும் ஏவல் பன்மையை உணர்த்தி நிற்றல் காணலாம். இவை அருகிக் காணப்படினும், சிற்சில இடங்களில் இத்தகைய சொற்கள் ஏவலாகப் பயன்படுகின்றன. எனவே முன்னிலைப் பன்மை ஏவல்களையும் இயற்கைப் பன்மை ஏவல், முன்னிலைப் பன்மை ஏவல் என இருவகையாகப் பிரிக்கலாம்.

**இயற்கைப் பன்மை ஏவல்**

முன்னர்க் குறிப்பிட்டபடி பழந்தமிழில் **-மின், -மின்கள் -(உ)ம்** ஆகிய விகுதிகள் முன்னிலைப் பன்மை ஏவல் விகுதிகளாகப் பயன் படுதல் காணலாம். இவற்றுள் **-மின்கள்** ஒரு இரட்டைப் பன்மை (Double plural) விகுதி என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

**-மின்**

இவ்விகுதியில் காணப்படும் மகர ஒற்று பன்மையைக் குறிக்கும் என்பது தெளிவு. இதையொட்டிக் காணப்படும் **-இன்** ஒட்டுபற்றி எதுவும் கூறமுடியவில்லை. இதனை **வாருமேன், செய்யுமேன்** போன்ற சொற்களில் காணப்படும் **-ஏன்** விகுதியோடு சிலர் (மு வ. 1974:243) (இஸ்ரயேல் 1973:181) ஒப்பிடுவர். அதுவே **-இன்** என மாறி இருக்கலாம் எனக் கருதுவர்.[4] இவ்விகுதி **வாயேன், போயேன்** போன்று ஒருமையிலும் வருதல் உண்டு. ஆனால் இந்நிலையைச் சங்க கால இலக்கியங்களில் காணமுடிவ தில்லை. மேலும் சங்ககால இலக்கியங்களில்

| | | | |
|---|---|---|---|
| வம்மினோ | = | வாரீர் | புறம். 32-6 |
| பிரியன்மினோ | = | பிரியாதொழிமின் | அகம். 217-14 |
| புணர்மினோ | = | புணருங்கோள் | நற். 224-4 |
| அறிமினோ | = | அறியுங்கள் | சிலம்பு. 15-189 |
| காண்மினோ | = | காண்மினோ | மணி. 3-145 |

என -ஓ அசைச் சொல் பெற்று வருதல் காணலாம். ஆனால் இந் நிலையை **-ஏன்** விகுதியோடு பொருத்திக் கூறுதல் முடியாத காரியம்.

**-மின்** விகுதி

(1) பலவேறு வினையடிகளுக்குப் பின்னரும்

(2) அவற்றையொட்டி வரும் **-அல்-** எதிர்மறை இடைநிலைக்குப் பின்னரும்

(3) **-ஆல்-** எதிர்மறை இடைநிலைக்குப் பின்னரும் வரும்.

**1) பலவேறு வினையடிகளுக்குப் பின்னர்**

**-மின்** விகுதி பலவேறு வினையடிகளுக்குப் பின்னர் வரக் காணலாம். பன்மை ஏவல் வினைகளில் இதுவே மிக அதிகமாகக் காணப்படுகிறது. பன்மையில் மட்டுமின்றி உயர் ஒருமையிலும் இவ்விகுதி வருதல் உண்டு.

''ஓம்புமின் தெவ்வீர்'' புறம். 87-1

''............பார்ப்பன மாக்களும்
............பிணியுடையீரும்.....
............பெறாதீரும்
............நும் மரண் சேர்மின்'', புறம். 9-5

''உண்மின் கள்ளே அடுமின் சோறே
....................................
....................................
....................................
கூந்தல் விறலியர்''. பதி. 18-1

''நீர் உரைமின்'' ஐங். 397-4

போன்ற உதாரணங்கள் பன்மை எழுவாயோடு **-மின்** விகுதி வருவதைக் காட்டும்.

| | | | |
|---|---|---|---|
| ஓம்புமின் | = | நீக்குவீர்களாக | புறம். 291-3 |
| உதவுமின் | = | உதவுவீர்களாக | பதி. 18-7 |
| வம்மின் | = | வருக | பதி. 49-1 |
| கூறுமின் | = | சொல்லுங்கள் | ஐங். 385-4 |
| புணர்மின் | = | புணருங்கோள் | நற் 224 4 |
| ஓம்புமின் | = | பாதுகாப்பீராக | கலி. 136-43 |
| கேண்மின் | = | கேளுங்கள் | பரி. 9-13 |
| தொடுமின் | = | தொடுக | பத்து. 10-277 |
| நீங்குமின் | = | விட்டொழிமின் | சிலம்பு. 30-186 |
| போற்றுமின் | = | செய்யுமின் | மணி, 25-50 |

## 2) -அல்- எதிர்மறை இடைநிலைக்குப் பின்னர்

பன்மை ஏவலில் **-அல்-** எதிர்மறை காட்டி நிற்கும். புறநானூறு, அகநானூறு, கலித்தொகை, பரிபாடல், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்களில் மட்டுமே இவ்விகுதி காணக் கிடக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| கொள்ளன்மின் | = | (ஐயப்) படா தொழிமின் | புறம். 216-5 |
| பிரியன்மின் | = | பிரியன்மின் | அகம். 217-14 |
| கலங்கன்மின் | = | கலங்கன்மின் | கலி. 143-19 |
| நீடன்மின் | = | காலம் நீட்டியாதே | பரி. 14-9 |
| இரவன்மின் | = | இரவாதொழிமின் | குறள். 10-67 |
| நன்றி கொல்லன்மின் | = | உதவியை மறவன்மின் | சிலம்பு. 30-191 |
| செய்யன்மின் | = | செய்யாதே ஒழியுங்கோள் | மணி. 13-50 |

## 3) -ஆல்- எதிர்மறை இடைநிலைக்குப் பின்னர்

கலித்தொகையில் மட்டுமே இவ்விகுதி வந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| நகான்மின் | = | சிரியாதே கொள்ளும் | கலி. 145-12 |

### -மின்கள்

இவ்விகுதி முன்னர்க்குறிப்பிட்டபடி **-மின், -கள்** ஆகியவை இணைந்த ஒரு இரட்டைப் பன்மை விகுதியாகும். இத்தகைய இரட்டைப் பன்மை வடிவங்கள் இடைக்காலத் தமிழில் அதிகமாக

வருதல் உண்டு. ஆனால் சங்கத்தமிழில் ஓரிரு இடங்களிலேயே வந்துள்ளது. நச்சினார்க்கினியர் (சொல். 226) **உண்மின்களே** என்ற எடுத்துக்காட்டினைத் தந்திருத்தல் இங்கு நினைவுகூரத்தக்கது. சங்கத் தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரத்தில் மட்டுமே அதுவும் ஒரே ஒரு இடத்திலேயே இது காணப்படுகிறது.

நண்ணுமின்கள் -- செய்யுங்கள் சிலம்பு. 16-வெ பா. 1

-(உ ம்

இவ்விகுதி பன்மை ஏவலில் மிகச் சில இடங்களிலேயே ((புறம். 4), (பதி. 1), (மணி. 3)) கையாளப்படுகிறது. ஆனால் உயர்வு ஒருமை விகுதியாகப் பெருமளவில் பயன்படுத்தப் படுகிறது. -உம் விகுதியில் உகரம் கெட்ட நிலையில் மகர ஒற்று விகுதியாகக் கிளைத்திருக்க வேண்டும் எனக் கருதலாம். **-உம்**, **-ம்** ஆகியவற்றில் பின்னதே மிக அதிகமான இடங்களில் பயின்று வரக் காணுகிறோம். எனினும் **-உம்** விகுதியே மூலமாக இருத்தல் தெளிவு.

**-ம்** விகுதியும் **-ஓ**, **-ஏ**, **-அதி** போன்ற பலவேறு அசைச் சொற்களோடு இணைந்து நிற்றல் காணலாம்.

இவ்வாறு இணைந்து நிற்கும் சொற்களே பெரு அளவில் காணப்படுகின்றன. **சென்மே**, **சென்மோ**, **கடவுமதி** போன்ற சொற்கள் சங்கத்தமிழில் மிக அதிகமாகப் பயின்று வருகின்றன.

தொல்காப்பியர் (934) **-மியா**, **-மோ**, **-மதி** போன்றவற்றை முன்னிலை அசைச் சொல் என்பார். ஆனால் **சென்மே** என்பதில் காணப்படும் ஏகாரம் பற்றிக் குறிப்பிடும் போதும் (984) 'அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே' என்பார். எனவே மகர ஒற்றைப் பன்மையாக அவர் கருதவில்லையோ என எண்ணத் தோன்றும்.

இத்தகைய வடிவங்கள் அனைத்தும் ஒரே மாதிரியான ஏவல் வகையைத்தான் உணர்த்துகின்றன. முன்னர்க் குறிப்பிட்ட படி பலவேறு அசைச் சொற்கள் **வம்**, **சென்ம்**, **கடவும்** போன்ற ஏவல் சொற்களுடன் சேர்க்கப்படுகின்றன. இந்நிலையில் இவை அனைத்தும் ஒன்றே எனினும் இவை தனித்தனியாக இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன

–ம்[5]

இவ்விகுதி பலவேறு வினையடிகளுக்குப் பின்னர் வரும். இது பன்மையும் உயர்வு ஒருமையும் காட்டும். பன்மை காட்டும் இடங்களே இங்கு தரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| உண்ம் | = | உண்ணுங்கள் | புறம். 178–5 |
| கொண்ம் | = | கொண்மின் (வைத்துக் கொள்ளுங்கள்) | புறம். 152–29 |
| சென்மோ | = | செல்வீர்களாக | புறம். 333 7 |
| வம்மோ | = | வாரீர் | புறம். 221-10 |
| தம் | = | தருவீராக | பதி 85–4 |
| கொடும் | = | கொடுங்கள் | மணி. 16–17 |
| போம் | = | போவீராக | மணி. 6–26 |
| போம் | = | போங்கள் (போம்) | மணி. 14–37 |

## முன்னிலைப் பன்மை ஏவல் வினை

முன்னர்க் குறிப்பிட்டபடி முன்னிலைப் பன்மை வினைமுற்றுக் களாலும் பன்மை ஏவல் உணர்த்தப்படும். பழந்தமிழில் பன்மையில் ஒருசில இடங்களில் மட்டுமே முற்று வடிவங்கள் ஏவலாகப் பயன் பட்டுள்ளன. கொள்கையளவில் இத்தகைய சொற்களை ஏவலில் பயன்படுத்துவதில் தவறில்லை என்றாலும் இவ்வழக்கு பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அதிகமாக இல்லை. புறம். (1) அகம் (1) ஆகிய இரண்டு இலக்கியங்களில் மட்டுமே காணக்கிடக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| காண்டிர் | = | காண்பீராக | புறம். 287–14 |
| காண்டிர் | = | காண்பீராக | அகம். 275–19 |

இதைப்போன்றே ஒரே ஒரு இடத்தில் மட்டுமே உயர்வு ஒருமை யிலும் பயன்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| ஆற்றுதிர் | = | உதவுவீராக | புறம். 58–20 |

## உயர்வு ஒருமை ஏவல்

ஏவல், ஒருமை அல்லது பன்மையில் மட்டுமின்றி ஒருமை யிலும் வரக் காண்கிறோம். பழந்தமிழில் இரு வகையான உயர்வு ஒருமை ஏவலைக் காணமுடியும். ஒன்று –(உ)ம் விகுதியாலும், மற்றொன்று –மின் விகுதியாலும் காட்டப்படும். இவற்றுள் –(உ)ம்

விகுதி **நீர், நீ** ஆகிய முன்னிலைப் பதிலிடு பெயர்களுடனும், **-மின் நீர்** என்ற பெயருடன் மட்டும் வரக் காணலாம். பொதுவாகப் சங்கத்தமிழில்-(உ)ம் விகுதி **நீ** என்னும் பெயருடன்தான் அதிகமாகப் பயின்று வருகி றது. **வம், வம்மோ, வம்மே** போன்ற வாய்பாட்டுச் சொற்களைப் பற்றிக் குறிப்பிடும்போது இதுபற்றி விவரமாகக் காண்போம்.

**சாதாரண உயர்வு ஒருமை**

முன்னர்க் குறிப்பிட்டபடி **-ஓ, -ஏ, -அதி** போன்ற அசை சொற்களுடன் வரும் -உம் விகுதி இந்நிலையில் சாதாரண உயர்வு ஒருமையைக் காட்டுவதாகக் கருத இடம் உண்டு. பெரு வாரியான இடங்களில் இந்த -(உ)ம் விகுதி பலவேறு அசைச் சொற்களுடன் வரினும் அசைச் சொல் இன்றி வருகின்ற இடங்கள் ஒரு சிலவற்றையும் காணலாம். இந்நிலையிலும் இது, **என** போன்ற இடைச்சொற்களை எடுத்து வருதல் உண்டு. (எ-டு **வம்மென**). இவை தம்முள் ஒன்றிலிருந்து மற்றது மாறுபடாத நிலையில் உள்ளன என்பதும், தொடர் அமைப்பிலும், பொருள் அடிப்படையிலும் இவற்றிடையே எந்தவிதமான வேறுபாடும் இல்லை எ பதும் இங்குக் கவனிக்கத் தக்கன, எனினும் **சென்மோ** போன்ற சொற்களை **சென்ம்** + **ஓ** எனப் பிரிப்பதா அல்லது **சென்** + **மோ** எனப் பிரிப்பதா என்பன போன்ற வாதங்கள் உள்ளன. இந் நிலையில்தான் இவை எல்லாம் தனித்தனி தலைப்பின் கீழ் இங்கு ஆராயப்படுகின்றன.

**வம்**

வம் வாய்பாட்டு ஏவல் புறநானூறு (5), பதிற்றுப்பத்து (1), பரிபாடல் (1), மணிமேகலை (3), ஆகிய இலக்கியங்களில் மட்டுமே காணப்படுகிறது. இதைப் போன்றே **வந்தீம்** போன்ற வடிவங்களி லுள்ள **ஈம்**, அமைப்பில் **வம்** போன்றதாகும். **வந்து** என்ற வினை யெச்சத்தோடு **ஈம்** என்ற சொல் இணைகிற நிலையில் இதனை (**ஈம்**) ஒரு துணைவினையெனக் கருதலாம்.

**வம்** போன்ற சொற்கள் **வாரும்** போன்ற சொற்களிலிருந்து உருவானவை என்பதை முன்னரே கண்டோம். எனினும் இக் குறுகிய வடிவங்களே பழந்தமிழில் அதிகமாகக் காணக் கிடக்

கின்றன. ஆனால் மூன்று இடங்களில் (**வாரும்**, பரி. 14-9; **வாங்கும்**, சிலம்பு, 7- 8-2; **கொடும்**, மணி, 16-77), முழு வடிவத்தினைக் காணமுடிகின்றது. இவ்வடிவங்களும், குறுகிய வடிவங்களும் பன்மையையும், உயர்வு ஒருமையையும் குறிக்கும்.

| | | | |
|---|---|---|---|
| உண்ம் | = | உண்மின் | புறம். 178-5 |
| கொண்ம் | = | கொண்மின் | புறம். 152-29 |
| தம் | = | தருவீராக | பதி. 85-4 |
| கொடும் | = | கொடுங்கள் | மணி. 16-77 |

போன்ற இடங்களில் எழுவாய் வெளிப்படையாக இல்லையானாலும், பன்மையையே குறித்து நிற்கின்றன. உரை எழுத வந்த உரையாசிரியர்களும் **உண்மின்** (புறம். 178-5), **தம்மின்** (பதி 85-4) போன்ற பன்மை வடிவங்களையே பயன்படுத்தியுள்ளனர். மணிமேகலையில் ஓர் இடத்தில் **நீர்** என்பது எழுவாயாக வந்து (நீர் போம், மணி 6-26) பன்மையைக் காட்டி நிற்றல் காணலாம்.

இவ்விகுதி பன்மையைக் காட்டுவதைப் போலவே உயர்வு ஒருமையையும் காட்டுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தம் | = | தாரும் | புறம். 203-4 |
| தின்ம் | = | தின்மின் | புறம். 150-13 |
| உண்ம் | = | உண்மின் | புறம். 392-15 |
| வாரும் | = | வம்மின் | பரி. 14-7 |

போன்ற இடங்களில் உயர்வு ஒருமையிலேயே இவை வருகின்றன. உரையாசிரியர்களும் **தாரும், தின்மின், உண்மின்** போன்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். இவ்விடங்களில் எல்லாம் எழுவாய் இல்லையாயினும் **நீ** என்பதே இவற்றின் எழுவாயாக உள்ளது என நிர்ணயிக்கலாம்.

> "............... ........ ......நின்
> இரும் பேரொக்க லொடு தின்மென." புற.150-13

என்ற இடத்தில் **நின்** என்ற சொல் பயன் படுத்தப்பட்டிருப்பதால் **தின்ம்** என்பதன் எழுவாய் முன்னிலை ஒருமை மூவிடப்பெயராகிய **நீ** என்பதே எனக் கொள்ளுதல் பொருத்தமாகும்.

தொல்காப்பியர் இவ்வகை ஏவல் குறித்து எதுவும் கூறினாரில்லை. -மோ, -மதி போன்ற அசைச் சொற்கள் வரும் நிலை குறித்துப் பேசியிருப்பினும், தனியாக வரும் (வம்) ஏவலைக் குறித்து எதுவும் கூறினாரில்லை.

**செய்யும்** என்ற வினை முற்று வடிவத்திற்கும் இதற்கும் இடையே வடிவத்தில் ஒற்றுமை இருப்பினும், பிற நிலைகளில் ஒற்றுமை இல்லை; இவை இரண்டும் வெவ்வேறு சொற்களாகும். **செய்யும்** என்னும் வினைமுற்று முன்னிலையில் வராது என்பது தொல்காப்பியர் (சூ. 227) கருத்து. ஏவலில் வரும் **செய்யும்** என்னும் வாய்பாட்டு வடிவம் **கள்** என்ற விகுதியை ஏற்றுச் **செய்யுங்கள்** என வருவதைப் போலப் படர்க்கையில் வரும் **செய்யும்** என்னும் வினைமுற்று வராது. இதைப் போன்றே **-ஏன்** என்ற ஒட்டும் ஏவலில் வந்து **செய்யுமேன்** போன்ற சொற்களை உருவாக்கும். ஆனால் இந்நிலை **செய்யும்** என்ற படர்க்கை வினை முற்றிற்குக் கிடையாது. மேலும் **வாரும், தாரும்** என்பவற்றின் உயிர் நீண்டு நிற்றல் போலப் படர்க்கை வினைமுற்றாகக் காணப்படும் **வரும், தரும்** என்பவற்றில் உயிர் நீளுவதில்லை.

இவ்வகை வினைச் சொற்கள் புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், மணிமேகலை ஆகிய நான்கு இலக்கியங்களிலேயே காணக் கிடக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| உண்ம் | = | உண்மின் | புறம். 392-15 |
| தம் | = | தாரும் | புறம். 203-4 |
| தின்ம் | = | தின்மின் | புறம். 150-13 |
| ஈம் | = | கொடுமின் | பதி. 64-10 |
| வாரும் | = | வம்மின் | பரி. 14-9 |
| போம் | = | போம் | மணி. 14-37 |

**வம்மதி**

பழந்தமிழில் **வம்மதி** வாய்பாட்டுச் சொற்கள் ஏவல் வினையில் வரும் இடங்கள் பலவற்றைக் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| அறிமதி | = | அறிவாயாக | புறம். 161-25 |
| கடவுமதி | = | செலுத்துவாயாக | குறு. 250-4 |

| | | | |
|---|---|---|---|
| சென்மதி | = | செல்வாயாக | பதி. 63_14 |
| ஓம்புமதி | = | நினைப்பாயாக | அகம். 19-9 |
| கூறுமதி | = | கூறுக | ஐங். 176_4 |
| ஏகுமதி | = | செல்வாயாக | நற். 9-9 |
| அயர்மதி | = | செலுத்துவாயாக | கலி. 30-19 |
| ஓம்புமதி | = | நினைப்பாயாக | பத்து. 1-251 |
| கேண்மதி | = | கேட்டருள்வாயாக | மணி. 25-99 |

தொல்காப்பியர் - **மதி** விகுதியை முன்னிலை அசைச் சொல் என்பார். ஆனால் வரதராசன் (1954 : 249), இளையபெருமாள் (1958 : 177_81), இஸ்ரேயல் (1973 : 183) ஆகியோர் இவ் விகுதியில் உள்ள மகர ஒற்றை வினைச் சொற்களோடு இணைத்து அறிம், கடவும் போலக் கொண்டு **-அதி** என்பதை மட்டுமே இடைச் சொல்லாகக் கொள்ள வேண்டும் என்று கூறுவர். இந்நிலையில் மகர ஒற்றைப் பன்மை ஏவல் விகுதியாகவோ அல்லது உயர் ஒருமை ஏவல் விகுதியாகவோ கொள்ளலாம். ஆனால் சங்க கால இலக்கியங்கள் அனைத்தையும் துருவி ஆராயின் **-அதி**யுடன் வரும் மகர ஒற்று இணைந்த ஏவல் வினைச் சொற்கள் அனைத்துமே ஒருமையிலேயே கையாளப்பட்டிருப்பது புலனாகும். பல இடங்களில் **நீ** என்பதே வெளிப்படையாக எழுவாயாக வருதலும் இங்கு உணரத்தக்கது.

"............நீயும் கேண்மதி........" புறம். 363-7

"நோக்குமதி நீயே", புறம். 270-7

"இன்னே சென்மதி நீயே" புறம். 181-8

"...................நீயும்.....
........... ...........
........... ...........
........... ...........
..... ...... கடவுமதி", அகம். 124-13

போன்ற உதாரணங்கள் **நீ** என்னும் முன்னிலைப்பெயர் எழுவாயாக வருதலைக் காட்டி நிற்கும். புறநானூற்றில் மட்டும் எட்டு இடங்களில் **நீ** என்பது வெளிப்படையாக வந்து நிற்றல் குறிப்பிடத்தக்கது. மேலும் நான்கு இடங்களில் **நீ** வெளிப்படையாக வரா

ஆயினும் நின்னொடு போன்ற சொற்கள் வர நீ என்பதையே எழுவாயாகக் கொள்ளவேண்டும் என ஊகித்தறியலாம்.

ஆனால் இச்சொற்கள் பெரும, மாற, செம்மால் போன்ற மரியாதை காட்டும் சொற்களோடும் வருவது குறிப்பிடத்தக்கது.

அறிமதி பெரும = பெரும, நீ அறிவாயாக
புறம். 161-25

ஒழுகுமதி மாற = மாற, நடப்பாயாக புறம். 56-21

நல்குமதி பெரும = பெரும, கொடுப்பாயாக
புறம். 389-15

மறவோர் செம்மால்
நின்னொன்று உரைப்ப கேண்மதி = உரை... கேட்பாயாக
புறம். 366-7

போன்ற உதாரணங்கள் இந்த வடிவங்கள் உயர்வு ஒருமை ஏவலில் பயன்படுத்தப்படுவதைக் காட்டி நிற்கும். ஆயினும் அறிவாயாக, கொடுப்பாயாக என உரை எழுதுவது காண்க.

இதைப் போன்றே பேசுவோருக்குச் சமமாக உள்ள நெருங்கிய வர்களோடு பேசும்போதும் இவ்விகுதி பயன்படுத்தப்படுகிறது எனவும் கருதலாம். பாக, பாண போன்ற விளிப்பெயர்கள் இந்த நிலையினை உணர்த்தும்.

செல்லுமதி பாண = பாண செல்வாயாக ஐங். 479-1

காண்மதி பாண = பாண உணர்ந்துகொள்வாயாக
ஐங். 134-1

கடவுமதி பாக = பாக செலுத்துவாயாக ஐங். 482-2

தாங்குமதி வலவ = வலவ தாங்குவாயாக அகம். 66-13

போன்ற உதாரணங்கள் சம அந்தஸ்து உள்ளவர்களோடும் மிக நெருங்கியவர்களோடும் பேசும்போது இவ்விகுதி பயன்படுத்தப் படுகிறது என்பதைக் காட்டும்.

பழந்தமிழில் இவ்விகுதி தாழ்ந்தோருக்கும் அஃறிணைப் பெயர் களுக்கும் கூட பயன்படுத்தப்பட்டிருப்பதைச் சில எடுத்துக் காட்டுக்கள் காட்டும்.

'எழுமதி நெஞ்சே' = எழுந்திராய் நெஞ்சே
புறம். 237-20

'இரவல சேறியாயின்
தொழாதனை கடிதல் ஓம்புமதி' = தொழாயாய்ப் ... ப
போதலை நீ பரிகரிப்பாயாக புறம். 263-3

இவையெல்லாம் **வம்மதி** வாய்பாட்டு ஏவல் வினைச் சொற்கள் மரியாதையைக் குறிப்பிடுவதோடு மட்டுமன்றி நெருக்கத்தைக் குறிக்கும் சொற்களாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைக் காட்டும். இவற்றையெல்லாம் ஒருசேர வைத்து நோக்கும்போது இவ்விகுதி மிக உயர்ந்த மரியாதையையோ தாழ்வையோ குறிக்காமல் இவை இரண்டினுக்கும் இடைப்பட்ட நிலையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதோ என எண்ணத் தோன்றும்.

**வம்மே**

**வம்மே** போன்ற வடிவங்களும் பழந்தமிழில் பல இடங்களில் பயின்றுவரக் காணுகிறோம்.[6] இதனையும் **வம், வம்மதி** போன்று **வம் + ஏ** எனப் பிரித்துவிடலாம். கொள்கையளவில் இச்சொல் பன்மையைக் குறித்து வரலாம் எனினும், சங்ககால இலக்கியத்தில் ஒரு இடத்தில் கூடப் பன்மை எழுவாயோடு வந்ததாகத் தெரியவில்லை. இது ஒருமை எழுவாயோடு மட்டுமே வந்து (உயர்வு ஒருமையைக் குறிப்பதாகவே) உள்ளது. **வம்மதி** வடிவத்தைப் போல இதுவும் ஒருமையிலேயே வருதல் இங்குக் கவனிக்கத்தக்கது.

"நீ வேட்டது செய்ம்மே" = செய்வாயாக புறம். 546-8
"மெல்லியல் விறலி நீ காண்பறியலையே
காண்டல் வேண்டினையாயின் மாண்டநின்
............காணிய சென்மே" = நீ......செல்வாயாக
புறம். 133-3

"............ நாட நீ
............
............
.................சென்மே" = நீ.....செல்வாயாக
நற் 247-9

"யார்ரை எலுவயாரே நீயெமக்கு
யாரையும் அல்லை..........
................
...... நலன் தந்து செல்மே"

= நண்பனே நீ...... செல்வாயாக நற். 395

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இவ்வாய்பாட்டு வடிவம் முன்னிலை ஒருமை பதிலிடு பெயராகிய **நீ** என்பதோடு வருவதைக் காட்டும்.

இன்னும் சில இடங்களில் **நின்** போன்ற வடிவங்கள் **வம்மே** வாய்பாட்டு ஏவல் சொற்களுடன் வரும் நிலையில் **நீ** என்பதே எழுவாயாக வருதல் வேண்டும் என அறியலாம்.

"செல்லல் மகிழ்ந் நிற்செய் கடன் உடையென்மன்
நலன் தந்து சென்மே' அகம். 376

மேலும் பல இடங்களில் முன்னிலை ஒருமை விகுதியான **-இ -ஐ** போன்றவற்றை ஏற்று வரும் வினைமுற்றுக்களுடன் **வம்மே** வாய்பாட்டுச் சொற்கள் வரும் நிலையில் **நீ** என்பதே இதன் எழுவாயென அறியலாம். இத்தகைய எடுத்துக்காட்டுக்கள் பலவற்றைப் பழந்தமிழில் ஏராளமாகக் காணமுடியும்.

"கேட்டனையாயின் வேட்டனை செய்ம்மே"
புறம். 446-8

"காண்டல் வேண்டினையாயின் மாண்டநின்
.......... காணிய சென்மே" புறம். 133-3

"............ ......உறவுநீர்ச் சேர்ப்ப
............ சேறியாயினிவளே
வருவையாகிய சின்னாள்
வாழாளாதல் நற்கறிந்தனை சென்மே" நற். 19-8

"...... ...... அறிந்தனை சென்மே" நற். 247-9

"............ பிரியாயாயினும் நன்றே
............
பிரிந்தெனைப் பிரிமே" ஐங். 308-2-3

மேலே காட்டிய எடுத்துக்காட்டுக்களில் **கேட்டனை, வேட்டனை பிரியாய், சேறி** போன்ற சொற்கள் முன்னிலை ஒருமையைக் காட்டும். இச்சொற்களோடு **செய்மே, சென்மே** போன்ற சொற்கள் வரும் நிலையில் இவை முன்னிலை ஒருமை ஏவலைக் காட்டுவது போலவே உள்ளன இந்நிலையில் இவற்றை உயர்வு ஒருமை ஏவலாகக் கருத முடியுமா என்ற கேள்வியும் எழாமல் இல்லை. இந்நிலையினைச் சாதாரண எதிர்மறையில் வரும் **செல்லல்** போன்ற சொற்களுடன் வருவதாலும் உணரலாம்.

''செல்லல் மகிழ்ந
... .........நலம் தந்து சென்மே ''. அகம். 376-1-18

**செல்லல், சென்மே** ஆகிய இரண்டு சொற்களும் **மகிழ்ந** என்பதை எழுவாயாகக் கொண்டிருத்தல் இங்கு கவனிக்கத்தக்கது. இவற்றுள் **செல்லல்** என்பது சாதாரண எதிர்மறை ஏவல் வினைச் சொல்.

பழந்தமிழில் இவை காணப்படும் இடங்கள் அனைத்தும் சம அந்தஸ்து உடையவர்களோடும் மிக நெருக்கமானவர்களோடும் பேசும்போது பயன்படுவனவாகவே தெரிகிறது.

| | | | |
|---|---|---|---|
| களைமே | = | தீர்ப்பாயாக | புறம். 145_10 |
| சென்மே | = | செல்வீர்களாக | புறம் 333.7 |
| செய்ம்மே | = | செய்வாயாக | புறம் 46-8 |
| சென்மே | = | செல்வாயாக | அகம். 376-18 |
| பிரிமே | = | பிரிந்து செல்வாயாக | ஐங். 308_4 |
| சென்மே | = | செல்வாயாக | நற் 19-9 247-9, 395-10 |
| நின்மே | = | நிற்பாயாக | நற். 300-12 |
| அளிமே | = | அளிப்பாயாக | கலி. 127_22 |

மேலும் இது **-மின்** விகுதிக்குப் பின்னரும் வருதல் காணத்தக்கது.

| | | | |
|---|---|---|---|
| பணிமின்மே | = | வணங்குவீர் | பரி. 15-34 |

**வம்மோ**

முன்னர்க்குறிப்பிட்டபடி இவ்வாய்பாட்டு ஏவலும் **வம்** வாய்பாட்டு ஏவலிலிருந்து எவ்விதத்திலும் வேறுபட்டதில்லை. **வம்** வாய்பாட்டுச்சொற்களோடு -ஓ- என்ற இடைச்சொல்லை இணைக்கும்

போது உண்டானவையே **வம்மோ** வாய்பாட்டுச் சொற்கள். ஆனால் தொல்காப்பியர் **-மோ** என்பதையே முன்னிலை அசைச் சொல் என்பார்.

**வம், வம்மதி, வம்மே** ஆகிய சொற்களின் பண்புகள் அனைத்தும் இதற்கும் இருப்பதாகக் கொள்ளலாம்.

பரிபாடல், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஒழிந்த பிற எல்லா இலக்கியங்களிலும் இவ்வாய்பாட்டுச் சொற்கள் காணப் படுகின்றன.[7]

இச்சொற்களுக்கு உரை கண்ட ஆசிரியர்கள் பிற வாய்பாட்டுச் சொற்களுக்கு உரை கண்டது போலவே இதற்கும் கண்டு சென்றுள்ளனர். இச்சொற்களும் பன்மை மட்டுமின்றி ஒருமையையும் (உயர்வு?) காட்டும். எனினும் சங்ககால இலக்கியங்கள் அனைத்திலும் இரண்டு இடங்களிலேயே இது பன்மை குறித்து வருவதைக் காணலாம்.

''தங்கினிர் சென்மோ புலவீர்'' = அறிஞர்களே,
தங்கிச் செல்வீர்களாக புறம். 333.7

''வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்'' =
புலவீர் வாரீர் புறம்.- 221-10

ஆகிய இரு இடங்களிலேயே இது பன்மை குறித்து நிற்கிறது. இதற்கு உரை எழுதப் போந்த உரையாசிரியர்களும் **செல்வீர்களாக** (புறம். 333_7), **வாரீர்,** (புறம் 221-10) எனப் பன்மை வடிவங்களை இட்டே உரை எழுதியுள்ளனர். இது பற்றிக் குறிப்பிடும் உ.வே. சாமிநாத ஐயரும் (1963 : 508)

''செல்லுமென்னும் ஏவற் பன்மை உயிர் மெய் கெட்டு
ஓகாரம் பெற்று வந்தது'',

எனக்குறிப்பிடுவார்.

பன்மையில் இரு இடங்களில் மட்டுமே வந்தபோதிலும் ஒருமையில் (உயர்வு) பலவேறு இடங்களில் இவ்வாய்பாட்டுச் சொற்கள் வந்துள்ளன. பிற சொற்களை போலவே பல இடங்களில்

முன்னிலை ஒருமை மூவிடப் பெயரான நீ என்பதையே எழுவாயாக எடுத்து வருதல் இங்குக் கவனிக்கத்தக்கது.

"நீயும் எம்மும் உள்ளுமோ", புறம். 48-7

"நீயும் வம்மோ முதுவா யிரவல" புறம். 108-9

"..............அது நீ
நேர்ந்தனை யாயின் தந்தனை சென்மோ" குறு. 236-2

"..............நீயும்
..............கொண்மோ", அகம் 259-12

போன்ற இடங்களில் எல்லாம் நீ எழுவாயாக வருதல் காணலாம். மேலே கூறிய எல்லா இடங்களிலும் -ஆய் என்ற முன்னிலை ஒருமை விகுதியையே உரையாசிரியர்கள் பயன்படுத்துதல் கவனிக்கத் தக்கது நினைப்பாயாக (புறம். 48-7); வாராய் (புறம். 180-9); செல்வாயாக (குறு. 36-6); கேட்பாயாக (அகம். 259-12) போன்று உரை வகுத்துச் செல்கின்றனர்.

மகர ஒற்றைக் கொண்டிருந்த போதிலும் கூட ஒருமையாகவே இது பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வேறு சில இடங்களில் நீ என்பது வெளிப்படையாக எழுவாயாக இல்லாதபோதிலும் நின் போன்ற சொற்கள் காணப்படுவதிலிருந்து நீ என்பதே எழுவாய் என்பதை உய்த்துணரலாம்.[14]

"..........என் நலன் தந்து
கொண்டனை சென்மோ.. நின்...சூளே" குறு. 238-4-5

"நின்னோடு யானும்
...........
காணிய வம்மோ காதலந் தோழி" அகம் 73-9-11

".........சிறிய நின்
அடி நிலன் உறுதல் அஞ்சில் பையத்
...........
காணிய வம்மோ கற்புமேம் படுவி" அகம். 323-5-7

"எம்மொடு சென்மோ செல்லனின் மனையே" ஐங். 77-4

"எம்மொடு கொண்மோ பெருமநின்
னம்மெ லோதி யழிவில ளெனினே", ஐங். 368-4.5

' பெருங்கல் நாட
செல்கம் எழுமோ சிறக்கநின் னூழி" நற். 93-5-6

"சென்றனை களைமோ பூண்க நின் தேரே" கலி.133-19

மேலே காட்டப்பட்டுள்ள எடுத்துக் காட்டுக்களில் நீ வெளிப்படையாக இல்லாவிடினும் நின் என்ற சொல் காணப்படுவதனால் சென்மோ போன்றவற்றின் எழுவாயாக நீ என்பதைக் கொள்ளுவதில் தவறில்லை என்பதும் உணரலாம்.

ஒரே எழுவாயே ஒன்றிற்கு மேற்பட்ட பயனிலைகளை ஏற்று வரும் என்பது நாம் அறிந்த செய்தியாகும். ஒன்று முக்கிய பயனிலையாகவும் மற்றையது துணைப் பயனிலையாகவும் வரும்.

அவன் வந்தான் சென்றான்,
"அவன் வந்தனன் சென்றான்"

நீ வந்தாய் சென்றாய்,
"நீ வந்தனை சென்றாய்"

போன்ற வாக்கியங்களில் இப்பண்பினைக் காணலாம். இதே மாதிரி இத்தகைய நிலையை செய்மோ வாய்பாட்டுச் சொற்கள் வரும் பல இடங்களில் காணுகிறோம். இவற்றின் துணைப் பயினிலைகளாக வருவன முன்னிலை ஒருமை விகுதி கொண்டு அமைந்திருக்கக் காணுகிறோம். -ஐ, -மோ என்ற இரண்டு விகுதிகளும் நீ என்பதன் விகுதிகளாகவே உள்ளன.

"தங்கினை சென்மோ பாண" புறம். 320-15
"நேர்ந்தனை யாயின் தந்தனை சென்மோ" குறு. 236-2
"கொண்டனை சென்மோ மகிழ்ந" குறு. 238-5
"சென்மோ பாடினி, நன்கலம் பெறுகுவை" பதி. 87-1
"கொண்டனை சென்மோ நுண்பூண் மார்ப"
அகம். 132-8
"வரைந்தனை கொண்மோ" ஐங். 180-1
"இருந்தனை சென்மோ" நற். 146-6
"சென்றனை களைமோ" கலி. 133-19

போன்ற எடுத்துக்காட்டுக்கள் பழந்தமிழில் பெருமளவில் காணப்படுகின்றன. முன்னிலை ஒருமை விகுதியும் **-மோ** விகுதியும் ஒரே எழுவாய்க்கே விகுதிகளாக உள்ளமையை இவை தெளிவாகக் காட்டும். **-மோ** என்பதை **ம் + ஓ** எனப் பிரித்து மகர ஒற்றை உயர்வு ஒருமையாகக் கொண்டால் **-ஐ** விகுதியையும் உயர்வு ஒருமையாகக் கொள்ளல் வேண்டும்.

"காக்கம் வம்மோ காதலன் தோழி" =
காப்போமாக வருக புறம். 281-7

"மகிழ்கம் வம்மோ மறப்போரோயே" =
மகிழ்வோம் வருவாயாக புறம். 364-8

**மறப் போரோயே** என்பதில் காணப்படும் **-ஓய்** விகுதி ஒருமை விகுதியாகும். தவிரவும் பழந்தமிழில் அஃறிணை எழுவாயோடும் இது மூரு இடத்தில் வந்துள்ளது.

"சென்மோ நெஞ்சம், வாரலென்யானே" அகம். 245-21

என்பதில் **நெஞ்சம்** என்ற அஃறிணைச் சொல் **மோ** வாய்பாட்டு சொல்லைக் கொண்டு வருவதைக் காணலாம். இந்நிலையில் இதனைச் சாதாரண ஏவலாகக் கொள்ளுவதா என்ற சிக்கலும் எழுகிறது.

ஆனால் சில இடங்களில் மரியாதைக்குரிய சிலருடன் பேசும் போது இவ்வாய்ப்பாட்டுச் சொல் பயன்படுத்தப் படுவதைக் காணலாம்.

"சென்மோ பெருமவெம் விழவுடை நாட்டென"
புறம். 381-5

போன்ற இடங்களில் மரியாதைக்குரியவரிடம் பேசும் சொல்லாகவும் இது பயன்படுகிறது. இந்நிலையில் **வம், வம்மே, வம்மோ, வம்மதி** ஆகிய வாய்ப்பாட்டுச் சொற்களை உயர்வு ஒருமைச் சொற்களாகக் கொள்ள வேண்டுமா என்பது சிந்தித்தற்குரியது. நாம் எதிர்பார்த்ததற்கு மாறாக இவ்வடிவங்கள் அனைத்துமே மிகப் பெரும்பாலான இடங்களில் **நீ** என்பதை எழுவாயாகக் கொண்டு வந்துள்ளன. **வம்மோ, வம்மே** வாய்பாட்டு வடிவங்கள் பெருமளவில் **வந்தனை,** **செல்லல்** போன்ற சாதாரண முன்னிலை ஒருமைச் சொற்களோடு

இணைந்து வருகின்றன. ஓரிரு இடங்களில் அஃறிணைச் சொற்களுடன் வருகின்றன. **வம்மதி** வாய்பாட்டுச் சொல்லும் **வம்மே** வாய்பாட்டுச் சொல்லும் பன்மையில் காணப்படவில்லை.[8] இந்நிலையில் இவை பன்மையையோ உயர்வு ஒருமையையோ குறிக்காமல் ஒருமையையே குறிக்கும் என இயற்கையாக எண்ணத் தோன்றும். ஆனால் இத்தகைய முடிவுக்கு வருவதும் மிகக் கடினமாகவே உள்ளது. பழந்தமிழில் **போன்ம்** போன்றவற்றில் காணப்படும் மகர ஒற்று பன்மையைக் குறிக்கிறது எனப் பல அறிஞர்கள் கூறியுள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது. டாக்டர் உ. வே. சா. (1963:508) பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி (1934 : 178-79), வரதராசனார் (1974:248) போன்ற பலர் இக்கருத்தினையே கொண்டுள்ளனர். மேலும் முன்னர்க்குறிப்பிட்டபடி **வம்** வாய்பாட்டுச் சொல் ஐந்து இடங்களிலும், **வம்மோ** இரண்டு இடங்களிலும் பன்மையில் வருவதும் அவர்கள் கருத்துக்கு அரண் செய்து நிற்பதாகும். இந்நிலையில் பன்மையாகக் கொள்ளுவதா அல்லது ஒருமையாகக் கொள்ளுவதா என்ற சிக்கல் மீண்டும் எழக் காணுகிறோம். இதனால்தான் தொல்காப்பியர் இவ்வாய்பாட்டுச் சொற்களை முறையே **செய்ம்+ஏ, செய்ம்+ஓ, செய்ம்+அதி** எனப் பிரிக்காது **செய்+மே, செய் மோ செய்+மதி** எனப் பிரித்து **மே, மோ, மதி** ஆகியவற்றை முன்னிலை அசைச் சொற்களாகக் கொண்டாரோ என எண்ணத் தோன்றும்

தொல்காப்பியர் **-மின்** விகுதியை ஒரு பன்மை விகுதியாகத் தந்தாலும் **-உம்** விகுதி பற்றி எதுவும் கூறினாரில்லை. ஆனால் **-மே, -மோ, -மதி** போன்றவற்றை முன்னிலை அசைச் சொல்லாகக் கூறியுள்ளார். வரதராசனார் (1954 : 249), இஸ்ரயேல் (1976:41) போன்றவர்கள் இது தவறான பாகுபாட்டால் ஏற்பட்டது என்பர். ஆனால் **மோ** விகுதி நீ யோடு பெரும்பாலும் பயின்று வருவதால் இதனை **ம்+ஓ** எனப் பிரிக்காமல் **மோ** என்பதையே அசைச் சொல்லாகக் கொண்டனர் எனக் கருதலாம். ஆனால், **வம், தம்** போன்ற உதாரணங்களில் எல்லாம் மகர ஒற்றே நின்று சில இடங்களிலேனும் பன்மை காட்டும் நிலையில் **மோ** வை அசைச் சொல்லாகக் கொண்டு விடுவதும் பொருத்தமாகத் தோன்றவில்லை. இந்நிலையில் மகர ஒற்றை ஏவலில் ஒரு பகுதியாகக் கருதுவதில் தவறு எதுவுமில்லை என்றும் தோன்றுகிறது

**சென்மோ** என்பதில் காணப்படும் ஓகாரத்தை ஒரு வினா விகுதியாகக்கொள்ள வேண்டுமென்றும் இந்நிலையில் இவ்வாய்பாட்டுச் சொ கள் வேண்டுகோள் ஏவலாக (Polite Imperativc) பயின்று வருகின்றன என்றும் வரதராசனார் கருதுகிறார். இதே நிலையைத் தான் இஸ்ரயேலும் (1976 : 44) கொண்டுள்ளார். இன்றையத் தமிழில் சில வினா வடிவங்கள் பெருமளவில் ஏவல் பொருளில் வருவதை எடுத்துக்காட்டி இஸ்ரயேல் வாதாடுகிறார்.

நீ வருகிறாயா?

போன்ற எடுத்துக்காட்டுக்கள் ஏவல் பொருளில் வருவதுண்டு. ஆனால் **சென்மோ** போன்ற சொற்களில் வரும் ஓகாரத்தை வினாவாகத்தான் கொள்ளவேண்டுமா என்பது இங்கு கவனிக்கத் தக்கது. **சென்மே**வில் உள்ள ஏகாரம் ஒரு அசைச்சொல்லாகவே கருதப்படுகிறது. இந்நிலையில் ஓகாரத்தையும் அசைச்சொல்லாகக் கருதுவதில் தவறு ஏதுமில்லை.

தொல்காப்பியர் நூற்பா 741 -இல் ஓ வைப் பற்றிக் குறிப்பிடும் போது இதற்கு அசைப்பொருளை ஒரு பொருளாகத் தரவில்லை என்பது உண்மையே. ஆனாலும் பழந்தமிழில் 'ஓ' ஒரு அசைச் சொல்லாகப் பயின்று வருவதைக் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| நோகோ யானே | = | யான் நோகின்றேன் | அகம். 270-1 |
| நீயோ பெரும | = | பெரும, நீ | புறம் 2-12 |
| தருகுவன் ஒன்றோ | = | ஒன்று தருகுவன் | புறம் 32- |

போன்ற எடுத்துக் காட்டுக்கள் கணக்கற்றுக் காணப்படுகின்றன. இதனால்தான் பவணந்தி போன்ற பிற இலக்கண ஆசிரியர்கள் அசைப் பொருளையும் இதன் ஒரு பொருளாகக் (சூ 423) கருதினர் என எண்ணலாம்.

மேலும் ஏற்கனவே ஏவலாக உள்ள சொல்லுடன் வரும் ஓகாரம் ஏவலைக் காட்டுவதாகக் கொள்வது பொருத்தமுடைத்தன்று. பன்மை ஏவலாகவும் உயர்வு ஒருமை ஏவலாகவும் வரும் **-மின்** விகுதியோடு பல இடங்களில் ஓ காணப்படுகிறது. இதனை அசைச் சொல்லாகக் கருத வேண்டுமே ஒழிய, வருகிறாயா போன்ற

வற்றில் காணப்படும் வினாவைப் போன்று கருதுதல் பொருத்த மன்று பழந்தமிழில்,

| | | | |
|---|---|---|---|
| வம்மினோ | = | வாரீர் | புறம். 32-6 |
| பிரியன்மினோ | = | பிரியாதொழிமின் | அகம். 217-14 |
| புணர்மினோ | = | புணருங்கோள் | நற். 224-4 |
| அறிமினோ | = | அறியுங்கள் | சிலம்பு. 15-189 |
| காண்மினோ | = | காணுங்கள் | மணி. 3-145 |

போன்ற எடுத்துக் காட்டுக்கள் பலவற்றைக் காணலாம். இவற்றில் காணப்படும் ஓகாரம் அசைச் சொல்லாகக் கருதப்படுகிறதே அன்றி ஏவல் பொருளைக் காட்டுவதில்லை. இதனை இரட்டை ஏவல் எனக் கூறுவதா? இதே நிலைதான் **வம்மோ, கேண்மோ, சென்மோ** போன்ற சொற்களில் காணப்படும் ஓகாரத்திற்குமுண்டு. எனவே, மு. வ. வின் கருத்து ஒத்துக் கொள்ளத்தக்கதன்று.

**வம், வம்மே, வம்மோ** போன்ற சொற்கள் **நீ** என்ற சொல்லோடு வருவது கண்டோம் சாதாரண ஒருமைப் பொருள் உயர்வு விகுதி வருவது பொருத்தமன்று. இந்நிலையில் மகர ஒற்றை சாதாரண ஒருமை விகுதியாகக் கொள்ளவோ அல்லது **நீ** எம்பதை உயர்வு ஒருமை மூவிடப் பெயராகவோ கொள்ளவேண்டும். அவ்வாறு கருதி னால்தான் தொடர்பு இயைபு நிலையை விளக்க முடியும். ஆனால் இவ்விரண்டு முடிவும் இலக்கண ஆசிரியர்களின் கருத்திற்கு முற்றிலும் மாறுபட்டவை. முன்னர்க் குறிப்பிட்டபடி மகர ஒற்று ஒருமையைக் குறித்ததாக யாரும் குறிப்பிடவில்லை. எங்கும் பன்மையைக் குறிப்பதாகவே உள்ளது. இதைப்போலவே **நீ** யும் உயர்வு ஒருமை பதிலிடு பெயராக நினைக்கப் படவில்லை. இந்த நிலையைத் தவிர்க்கவே தொல்காப்பியர் **-மோ, -மதி, -மே** ஆகியவற்றை அசைச் சொல்லாகக் கொண்டுள்ளார் எனக் கருத லாம் ஆனால் **நீ வம்மென** போன்ற இடங்களில் எந்த அசைச் சொல்லையும் காணவில்லை. இந்நிலையில் மகர ஒற்று ஒருமையைக் குறிப்பதா அல்லது பன்மையைக் குறிப்பதா அல்லது உயர்வு ஒருமையைக் குறிப்பதா என்று சொல்லித் தான் ஆக வேண்டும். **-மதி, -மே, -மோ** என்ற பிரித்து விடுகிற நிலை பிரச்சனையைத் தீர்த்து விடுவதாக இல்லை இந்

நிலையில் மகர ஒற்று ஒருவித மரியாதையையும் நெருக்கத்தை யும் குறிக்கிறது எனக்கருதலாம். மேலும், கேட்போரின் தகுதி பற்றிய எண்ணம் சரியாக இல்லாத நேரத்திலும் இதனைப் பயன் படுத்தலாம். ஒருவரைச் சாதாரணமாகக் கருதுவதா அல்லது உயர்வாகக் கருதுவதா எனத் தெரியாத நிலையில் இவ்விகுதி பயன்பட்டது எனக் கருதலாம். அதாவது பல இடங்களில் இத் தகைய இக்கட்டான கட்டங்களில் -ம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என எண்ண இடம் உண்டு. இதனால்தான் ஒரு மனிதரிடம் பேசும்போதே ஐ. -ம் போன்ற விகுதிகள் வந்துள்ளன என எண்ணலாம்.

இடைக்கால இலக்கியங்களில் **நீர்** வடிவம் மரியாதையைக் குறித்து நிற்பதைக் காணலாம். தற்காலத் தமிழிலோ **நீங்கள், தாங்கள்** போன்ற வடிவங்களும் காணப்படுகின்றன. **நீர், -ஈர், -உம்** ஆகிய ஒட்டுக்களை எடுத்துவரும். **நீங்கள், தாங்கள்** போன்றவை **-ஈர்கள், -உங்கள்** ஆகியவற்றைக் கொண்டு வரும்.

நீர் { வந்தீர் / வாரும் }

{ நீங்கள் / தாங்கள் } வந்தீர்கள்/வாருங்கள்

பண்டைத்தமிழில் **நீர்** வடிவம் மரியாதையைக் குறிக்கப் பயன்படுகிறது என்பது உண்மைதான். இதுவே பன்மையை உணர்த்துகிறது. எனினும் மிகக் குறைவாகவே இப்பதிலிடு பெயர் சங்ககால இலக்கியங்களில் வருதல் குறிப்பிடத்தக்கது. பழந்தமிழ் இலக்கியங்களில் இருபத்தொன்பது இடங்களில்தான் இவ்விடப் பெயர் வந்துள்ளது. இவற்றுள் பன்னிரண்டு இடங்களில் பன்மை யைக் குறித்தும், பதினேழு இடங்களில் உயர்வு ஒருமையைக் குறித்தும் வந்துள்ளது.

"நீர் பாடினிர் செலினே" — புறம். 110-6

"...... .. .. நீரும்
மணமுள் அமைமின்" — புறம். 152-13

"சென்று நீர் அவணிராகி" — அகம். 371-9

"நீர் .........உரைமின்" ஐங். 397-4
"ஆங்கு நீர் போம்" மணி. 6-26

போன்ற உதாரணங்கள் பன்மையைக் காட்டுகின்றன. இது பன்மையில் -இர், -மின், -ம் போன்றவற்றோடு வருதல் காணலாம். இதைப் போன்றே உயர்வு ஒருமையிலும் இது வரக் காணலாம்.

"............. நீர்
......... நீப்பின்" கலி. 4- 4
"நீர் உரை செய் நீர்மையில்" பரி. 8-73
"...... நீர்
"... ஆகுதிர்" குறள். 1319
"அடிகள் நீரே அருளுக" சிலம்பு. பதிகம். 62
"வாங்கும் நீர் முத்தென்று" சிலம்பு. 7-23_2
"எய்துவிர் நீரே" சிலம்பு. 11-193
"இடுமின் நீர்" சிலம்பு. 16-124

போன்ற இடங்களில் உயர்வு ஒருமையைக் காட்டி நிற்கும். உயர்வு ஒருமையில் இது -இர், -ம், -உம், -மின், -க ஆகிய விகுதிகளோடு பயின்று வருவதைக் காணலாம் தற்காலத் தமிழில் காணப்படுவது போல நீங்கள், தாங்கள் போன்ற சொற்களைக் காண முடிவதில்லை. இந்நிலையில் நீர் என்னும் சொல்லே உயர்வுச் சொல்லாகப் பயன்படுகிறது எனக் கருதலாம். ஆனால் ஒரு சில இடங்களில் ஒருவரையே நீர் என்றும் நீ என்றும் குறிப்பிடுதல் கவனிக்கத்தக்கது. கலித்தொகையில் இத்தன்மையை காண முடிகிறது. இதே நிலையை கலித்தொகையில் இன்னொரு பாடலிலும் காணமுடிகிறது. இருத்தைந்தாம் பாடலில் ஒருவரையே நீர், நீ, நின் ஆகிய சொற்களால் குறிக்கப்பட்டுள்ளது,

"நீர் .... ஒரு நாள் நீர்
..............................
... ... ............
யான் நின்...
நீ நற்கறிந்தனை......
.....................நின்" கலி. 25-17-28

இவ்வாறு பயின்று வரும் **நீர், நீ, நின்** வடிவங்கள் மாறிமாறி வருதல் கவனிக்கத்தக்கது. **நீ** வடிவம் -ஐ -ஆய் போன்ற விகுதி களுடன் பயின்று வரினும் **-ம்** விகுதியை எடுப்பதும், **நீர்** வடிவம் **-இர், -மின்** போன்றவற்றோடு வரினும் **-ம்** விகுதியோடு வருதலும் குறிப்பிடத்தக்கன. அதாவது **-ம், நீர், நீ** ஆகியவற்றோடு பழந் தமிழில் பயின்று வருகின்றது. **நீ** சாதாரண முன்னிலை ஒருமை மூவிடப் பெயர். இந்நிலையில் இரண்டுடனும் **மகர** ஒற்று வருவ தால் இது இரண்டிற்கும் பொதுவான நிலையில் வரும் ஒற்றாக உள்ளது எனக் கருதலாம்.

பழந்தமிழ் இலக்கியங்களில் முன்னிலையில் மரியாதை காட்டும் சொற்கள் படிப்படியாகவே உருவாகி இருக்கின்றன என எண்ண இடம் உண்டு. இதனால்தான் **நீர், நீ** மயக்கமும் உள்ளது எனவும் கருதலாம். இதைப் போலவே எவ்வளவு மரியாதையைக் கொடுப்பது என்ற நிலையில் திட்டவட்டமான ஒரு போக்கு இல்லாது சந்தேக மான இடத்திலும் இம்மயக்கம் இருக்கும் என எண்ணலாம்.

**வந்தீம்**

வந்தீம்
செல்லாதீம்
இருந்தீமோ
ஞெமுக்காதீமோ
செப்பாதீமே
மறவாதீமே

போன்ற சொற்களில் எல்லாம் **-ம்** விகுதியைக் காணலாம். இச் சொற்கள் அனைத்திலும் செய்தென் வாய்பாட்டு வினையெச்சத்தை யும் அதோடு **ஈம்** என்ற சொல் இணைந்திருக்கிற நிலையையும் காணமுடியும். **-ஈம் வந்து, இருந்து, சொல்லாது, மறவாது** போன்ற உடன்பாடு எச்சத்தோடும் எதிர்மறை எச்சத்தோடும் இணைந்து நிற்கின்றது. இவ்வகை வடிவங்கள் இன்றைய தமிழி லும் காணப்படும்.

வந்திருந்தான்
வந்தருளினான்
காணாதொழி

போன்ற அமைப்புக்களோடு ஒத்து நிற்கின்றன. இரு, அருள், ஒழி போன்றவற்றை துணை வினைகள் என நாம் கருதுகிறோம். இந் நிலையிலும் பழந்தமிழில் -ஈம் என்பது துணைவினையாகவே பயன்பட்டது எனக் கருத இடமுண்டு.

மேலே காட்டிய அமைப்புக்கள் அனைத்துமே ஏவல் என்பதும் அவை எதிர்காலத்தைக் காட்டுவன என்பதும் -ஈம் என்பதுவம் போன்ற அமைப்பை உடையது என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கன. எனவே இதை ஏவலாகவே கொள்ள வேண்டும்.

சிலர் இதனை முன்னிலைப் பன்மை விகுதியாகக் கொண்டு அதுவே ஏவலில் பயன்படுத்தப்படுகிறது எனக் கருதலாம்.

வராதி
வராதீர்

போன்றவற்றைப் போல இச் சொற்களும் ஏவலில் வருகிறது எனக் கருத முடியும் என்றாலும் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் இவை எப்பொழுதும் ஏவலிலேயே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. என்பதும் இவை முன்னிலைப் பன்மையில் பயன்படுத்தப்படவே இல்லை என்பதும் கன்னடம் போன்ற மொழிகளில் -ஈம் . விகுதி முன்னிலைப் பன்மையாக இருப்பினும் இந்நிலை தமிழுக்கு பொருந்தாது என்பதும் இவை செய்தென் வாய்பாட்டு வினையெச்ச வடிவை தன்னகத்தே கொண்டிருப்பதும் (செய்து + ஈம்) இங்குக் குறிப்பிடத்தக்கன.

மேலும் கலித்தொகையில் பலவேறு இடங்களில் ஈயாய், ஈவாம் போன்றவை துணை வினையாகப் பயன்பட்டு வருவதும் ஒப்பு நோக்கத் தக்கது.

| | | | |
|---|---|---|---|
| களைந்தீவாய் | = | அளிப்பாயாக | கலி. 100-23 |
| காட்டீயாய் | = | காட்டுவாய் | கலி. 144-20 |
| வந்தீயாய் | = | வாராய் | கலி 114-5 |

இத்தகையச் சொற்களை வாராய் வாய்பாட்டுச் சொற்களாக உரையாசிரியர்கள் கருதினும் இவற்றில் காணப்படும் ஈயாய் என்ற வினை ஒரு துணை வினை என்பதை மறுக்கமுடியாது. முன்னிலை

யில் மட்டுமன்றி படர்க்கையிலும் ஈ என்னும் துணைவினை வந்துள்ளது.

| | |
|---|---|
| அறிந்தீயார் | புறம். 136-10 |
| வந்தீயார் | கலி. 71-10 |
| | 71-14 |
| | 71-18 |

ஆகிய இடங்களில் ஈ துணைவினையாக வந்துள்ளது, இதைப் போன்றே ஈம் என்பதையும் துணைவினையாகக் கொள்ளுவதில் தவறில்லை. இத் துணைவினை **வம்மோ** வாய்பாட்டிலும் **வம்மே** வாய்பாட்டிலும் வருதல் உண்டு.

**உடன்பாடு**

| | | | |
|---|---|---|---|
| இருந்தீமோ | = | இருப்பாயாக | புறம். 319-9 |
| செய்தீமோ | = | செய்வாயாக | புறம். 145-7 |
| கரைந்தீமே | = | கரைந்தருள வேண்டும் | ஐங் 391-6 |
| நின்றீமோ | = | நிற்பாய் | நற். 45-8 |
| வந்தீமோ | = | வந்து முயங்குவாயாக | நற். 156-5 |
| செப்பீம் | = | சொல்லுவாய் | கலி. 93-10 |
| காட்டீமோ | = | காட்டுவாய் | கலி. 144-19 |
| சென்றீமோ | = | செல்வாய் | கலி. 64-29 |
| பட்டீமோ | = | படுவாயாக | கலி. 147-34 |
| புக்கீமோ | = | செல்வாயாக | கலி. 71-23 |
| | = | செல்வீராக | 78-24 |

**எதிர்மறை**

| | | | |
|---|---|---|---|
| மறவாதீமே | = | மறவாதொழிவாயாக | புறம். 198-27 |
| செப்பாதீமே | = | உரையாதே | அகம். 52-15 |
| செல்லாதீம் | = | செல்லற்க | அகம். 300-18 |
| ஞெமுக்காதீமோ | = | அமுக்கற்க | அகம். 60-8 |
| விரையாதீமே | = | விரையாதே கொள் | ஐங். 364-4 |
| மறவாதீமே | = | மறந்துவிடாதெ கொள் | ஐங். 473-5 |
| மறையாதீமே | = | மறைத்திட வேண்டா | ஐங். 64-4 |
| | | மறைக்க முயலாமல் | |
| | | உண்மை கூறும் | ஐங். 370-4 |

| | | | |
|---|---|---|---|
| வல்லாதிமோ | = | பிரியாது வாழ்ந்திருப்பாயாக | ஐங் 149-3 |
| வல்லாதிமே | = | வல்லமை உடையை ஆகாதே கொள் | ஐங் 304-5 |
| செல்லாதிம் | = | செல்லாது இருமின் | நற். 229-3 |
| பயிற்றாதிமே (குழறி) | = | வருத்தாதே கொள் | நற். 83-9 |
| வருத்தாதிமே | = | வருத்தாதே கொள் | நற். 193-8 |
| மறவாதிமே | = | மறவாது வந்து கூடுவாயாக | நற். 223-11 |
| வாராதிமோ | = | வாராதொழிவாய் | நற். 336-11 |
| அழாஅதிமோ | = | அழாதிருத்தலையேனும் செய்வாயாக | நற். 13-2 |

ஈ முழு வினையாக வரும்போது **தா** என்ற பொருளையும் துணைவினையாக வரும்போது **உதவு** அல்லது **அருள்** என்ற பொருளையும் தந்து நிற்கலாம். ஆனால் உரையாசிரியர்கள் இதை உணரவில்லை என்றே கொள்ள வேண்டும். எனவே இதனை துணைவினையாகக் கொள்வதே ஏற்புடைத்து.

**வந்திசின்**

பழந்தமிழில் மிகச் சில இடங்களிலேயே **வந்திசின்** வகை ஏவலாகப் பயின்று வருகிறது. இந்த வடிவங்கள் இறந்தகால எச்சம் **+இசின்** என வருவதால் இதனைத் துணைவினை அமைப்போடு ஒப்பிட்டுப் பார்த்திட இயலும் என்பது இங்குக் குறிப்பிடத் தக்க செய்தியாகும். இறந்தகால வினையெச்ச வடிவங்களே இத்தகைய வடிவங்களில் காணப்பட்டாலும், அவை எதிர் காலத்தைக்குறிக்கும் ஏவலாகவேப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் **-இசின்** (அல்லது **-சின்**) வினையாகப் பழந்தமிழில் எங்குமே பயன்படுத்தப்படவில்லை. எனினும் இஸ்ரயேல் (1973 : 179) **-இகும்** என்பதோடு தொடர்புபடுத்திப் பார்க்கலாம் என்பார். இதனை **-இகும்** என்ற விகுதியோடு தொடர்புபடுத்துவது ஐயத்திற் குரியதென்றாலும் இதனை ஒரு துணைவினையாகக் கருதுவதில் எந்தவிதத் தடையுமில்லை என்பது உறுதியாகும். தொல்காப்பியர் **-சின்** விகுதியை முன்னிலை அசைச் சொல்லாகக் (சூத்திரம் 759) கருதுவார்.

-**இசின்** விகுதியோடு வரும் வடிவங்கள் நீ என்பதையே எழுவாயாக கொள்கின்றன.

"நீயும் ........ ............
..................... .. ...... ..
........... வடித்திசின்" புறம். 180-13

நீயும் வடிப்பாயாக

"ஆழல் ஆன்றிசின் நீயே..........." அகம். 69-4

துயரில் அழுந்தாதே கொள்

" .... ...ஆன்றிசின் நீயே..........." அகம். 267-4

நீ வருந்தல் ஒழிவாயாக

(நற்றிணை (332-5) பத்துப்பாட்டு (8-341) போன்றவற்றிலும் நீ எழுவாயாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது).

இவ் விகுதி, விளி வடிவங்களில் மரியாதைக்குரிய மக்களுக்குப் பயின்று வருகிறது.

பெரும புறம். 202-16
ஐங். 85-4
அன்னை ஐங். 113-4
115-4

"புன் சொல் நோற்றிசின் பெரும" புறம், 202-16

பெருமானே, புன் சொல்லைப் பொறுப்பாயாக.

"அன்னை வாழி...............
....................................
......... ........கண்டிசின்" ஐங். 105-4

தாயே வாழ்வாயாக; கண்டருள்க.

-**இசின்** விகுதி தன்னொத்தவரோடும் பயன்படுத்தப்படுகிறது.

"........ ..........
....................தோழி"
...........கண்டிசின்........ குறு. 249-5

தோழி, நீ உற்றுப்பார்

"கண்டிசின் பாண" — குறு. 359-1

பாண (நீயும்) காண்பாயாக

இவ்விகுதி சற்றே தாழ்ந்தோரோடும் பயன்படுத்தப்படுகிறது.

"................. அம்ம

கண்டிசின் வாழியோ குறுமகள்" — அகம். 99-11

இளமடவாய் காண்பாயாக; வாழ்வாயாக

"கண்டிசின் மகளே" — அகம். 369-1

மகளே காண்பாயாக

| | | | |
|---|---|---|---|
| அன்றிசின் | = | ஒழி | புறம். 289-7 |
| நோற்றிசின் | = | பொறுப்பாயாக | புறம். 202-16 |
| வடித்திசின் | = | வடிப்பாயாக | புறம். 180- 3 |
| கண்டிசின் | = | காண்பாயாக | குறு. 112-5 |
| | | காண்பாயாக | 240-5 |
| | | உற்றுப்பார் | 249-5 |
| | | காண்பாயாக | 359-1 |
| | | அறிவாயாக | 220-7 |
| ஆழல் ஆன்றிசின் | = | அழுந்தாதே கொள் | அகம். 69-4 |
| இனைதல் ஆன்றிசின் | = | (வருந்துதல்) ஒழிவாயாக | 237-8 |
| | | (வருந்துதல்) ஒழிவாயாக | 267-4 |
| கண்டிசின் | = | காண்பாயாக | அகம். 99-11 |
| | | | 164-11 |
| | | | 369-1 |
| அழுதல் ஆன்றிசின் | = | (அழாதே) கொள் | ஐங். 430-4 |
| கண்டிசின் | = | கண்டருள்க | ஐங். 105-4 |
| | | ஆராய்ந்து உணர்ந்துகொள்க | 106-4 |
| வந்திசின் | = | வந்தருள்வாயாக | ஐங். 175-3 |
| இனைதல் ஆன்றிசின் | = | (வருந்துகின்றதனைப்) பொறுப்பாயாக | நற். 286-6 |
| | | அழாதே கொள் | 128-6 |
| கண்டிசின் | | காண்பாயாக | நற். 202-8 |

எனவே இதுகாறும் கூறியவற்றால் பழந்தமிழில் எதிர்கால முன்னிலை வினை முற்றுக்களைப் பயன்படுத்தியும், இயற்கை ஏவல் சொற்களைப் பயன்படுத்தியும் ஏவல் பொருள் உணர்த்தப் பட்டது என்பதும் இவ் ஏவல் வினைச்சொற்களில் ஒருமை, பன்மை மட்டுமன்றி உயர்வு ஒருமையும் சுட்டப்பட்டது என்பதும் புலனாகும். உயர்வு ஒருமையைச் சுட்டும்போதும் பன்மை விகுதிகள் பயன்படுத்தப்பட்டன என்பதும் -உம் விகுதி உயர்வு ஒருமை, பன்மை மட்டுமன்றி சாதாரண நிலையில் எவ்விதமான உயர்வு ஒருமையையோ (அ) பன்மையையோ காட்டாது சாதாரண நிலையில் வந்துள்ளது என்பதும் பலவேறு இடங்களில் நீர், நீ ஆகிய பதிலிடு பெயர்களுடன வந்துள்ளது என்பதும் இந்நிலையில் இதனை பன்மை விகுதியாகக் கொள்ளுவதா அல்லது உயர்வு ஒருமை விகுதி யாகக் கொள்வதா அல்லது சாதாரண ஒருமை விகுதியாகக் கொள்வதா என்ற ஐயம் எழுவது இயற்கை என்பதும் சுட்டிக் காட்டற்பாலன. இந்நிலையில் மயக்கத்தைத் தரும் நிலையிலேயே முதன் முதலாக இவ்விகுதி பயன்பட்டது என்றும் பின்னர் படிப் படியாக உயர்வு ஒருமையையும், பன்மையையும் குறித்து நின்று இன்று சாதாரண உயர்வு ஒருமையைக் குறித்து வருகிறது எனவும் கருதலாம்.

முன்னிலை விகுதிகள் ஒருமையிலேயே ஏவலாக அதிகமாகப் பயன்படுகிறது என்பதும் பன்மையில் ஒரு சில இடங்களிலேயே ஏவலில் வருகிறது என்றும் கூறலாம்.

ஒருமையிலும், -ஆய் விகுதியே அதிகமான இடங்களில் ஏவலைச் சுட்டி வருகிறது என்பதும் இதனைத்தான் தொல் காப்பியர் "செய்யாய்......" என்னும் சூத்திரத்தில் (தொல். சொல் 938) கூறுகிறார் என்பதும் புலனாகும்.

# பிற்சேர்க்கை

## அட்டவணை – 1

| | வேர் | -அல் | -ஐ உடன்பாடு | -ஐ -அல் எதிர் மறை | -ஏல் | -ஆல் | -திர் | -இர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| புறம் | 32 | 3 | | | | | 1 | 1 |
| குறு | 13 | 15 | | 1 | | 2 | | |
| பதி | 1 | | | | | | | |
| அகம் | 29 | 21 | | | 1 | 2 | | |
| ஐங் | 23 | 7 | | | | | | |
| நற் | 83 | | | | 1 | | | |
| கலி | 119 | 25 | 7 | | | 1 | | |
| பரி | 14 | 8 | | | 2 | | | |
| பத்து | 2 | | | 1 | | | | |
| குறள் | 3 | 2 | | | | | | |
| சிலம்பு | 25 | 10 | | | | | | |
| மணி | 3 | 5 | | | | | | |

## அட்டவணை – 2

| | -ம் | | -மே | மோ | | -மதி | -சம் | -சமே | -ச மோ | இசின் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒருமை | பன்மை | ஒருமை | ஒருமை | பன்மை | ஒருமை | ஒருமை | ஒருமை | ஒருமை | ஒருமை |
| புறம் | 1 | 4 | 3 | 6 | 2 | 32 | | 1 | 2 | 3 |
| குறு | | | | 2 | | 5 | | | | 5 |
| பதி | | 1 | | 1 | | 1 | 1 | | | |
| அகம் | | | | 10 | | 19 | 1 | 1 | 1 | 6 |
| ஐங் | | | 1 | 12 | | 22 | 1 | 6 | 1 | 5 |
| நற் | | | 4 | 3 | | 10 | 1 | 3 | 4 | 4 |
| கலி | | | 1 | 1 | | 4 | | | 7 | |
| பரி | 1 | | 1 | | | | | | | |
| பத்து | | | | 1 | | 4 | | | | |
| குறள் | | | | | | | | | | |
| சிலம்பு | | | | | | | | | | |
| மணி | | 3 | | | | 2 | | | | |

## அட்டவணை - 3

| | -ஐ | | -ஆய் | | -தி | |
|---|---|---|---|---|---|---|
| | உடன்பாட்டு ஏவல் | எதிர்மறை ஏவல் | உடன்பாட்டு ஏவல் | எதிர்மறை ஏவல் | உடன்பாட்டு ஏவல் | எதிர்மறை ஏவல் |
| புறம் | 0 | 0 | 1 | 0 | 1 | ப |
| குறு | 0 | 1 | 4 | 0 | 0 | 0 |
| பதி | 0 | 0 | 1 | 0 | 1 | 0 |
| அகம் | 0 | 0 | 10 | 0 | 1 | 0 |
| ஐங் | 0 | 0 | 0 | 0 | 1 | 0 |
| நற் | 0 | 0 | 2 | 0 | 1 | 0 |
| கலி | 27 | 0 | 15 | 1 | 15 | 20 |
| பரி | 0 | 0 | 1 | 0 | 3 | 0 |
| பத்து | 0 | 1 | 0 | 1 | 1 | 0 |
| குறள் | 0 | 0 | 2 | 0 | 1 | 0 |
| சிலம்பு | 0 | 0 | 19 | 1 | 0 | 0 |
| மணி | 0 | 0 | 52 | 0 | 3 | 0 |

## அட்டவணை - 4
### -மின்

| | உயர்வு ஒருமை | | பன்மை | |
|---|---|---|---|---|
| | உடன்பாட்டு ஏவல் | எதிர்மறை ஏவல் | உடன்பாட்டு ஏவல் | எதிர்மறை ஏவல் |
| புறம் | 5 | 0 | 26 | 1 |
| குறு | 2 | 0 | 0 | 0 |
| பதி | 0 | 0 | 5 | 0 |
| அகம் | 1 | 1 | 1 | 1 |
| ஐங் | 0 | 0 | 3 | 0 |
| நற் | 4 | 0 | 4 | 0 |
| கலி | 1 | 0 | 13 | 8 |
| பரி | 0 | 0 | 17 | 1 |
| பத்து | 0 | 0 | 36 | 0 |
| குறள் | 0 | 0 | 0 | 2 |
| சிலம்பு | 1 | 0 | 36 | 3 |
| மணி | 0 | 0 | 19 | 2 |

## அடிக்குறிப்புகள்

1 இளம்பூரணர் போன்றோர் இதனால்தான் ஏவல் வினைச் சொற்களை (குறிப்பாக நட, உண் போன்ற ஒருமை ஏவல் சொற்களை) முன்னிலை ஒருமை விகுதி பற்றிக் கூறும் சூத்திரத்தின் கீழ்க் கொண்டு வந்து நிற்பதைக் காணலாம். இளம்பூரணர் "இனி, ஒரு காலத்திற்கே ஏற்கும் இகரம் முற் கூறினமையின் உண், தின், கிட, நட, வா, போ என்னும் தொடக்கத்தனவும் கொள்க" எனக் கூறுவது கவனிக்கத் தக்கது.

சேனாவரையர் முன்னிலை ஒருமை ஏவல்களை "செய்யாய் எனும் " என்ற எச்சவியல் சூத்திரத்தின் கீழ்க் கொணர்வார். "உண், தின், நட, கிட என்னும் தொடக்கத்து முன்னிலை ஒருமை பெறுமோறென்னையெனின் அவை ஆயீருதல் எச்ச வியலுட் பெறப் படுமென்க" (223) என்பார்.

நச்சினார்க்கினியர் சேனாவரையர் கூற்றை மறுப்பதோடு இவற்றை 'முன்னிலை முன்னர்..." எனும் சூத்திரத்தில் கொணர்வர்.

தெய்வச்சிலையார் சேனாவரையரைப் பின்பற்றி செய்யாய் என்னும் சூத்திரத்தில் கூறுவர்.

இத்தகைய நிலைக்குக் காரணம் தொல்காப்பியர் இது பற்றி எங்கும் கூறாமைதான். -மின் பற்றிக் கூறும் நிலையில் இது பற்றிக் கூறாமைக்குக் காரணம் தனி விகுதி இல்லா மையே. நட, வா போன்ற சொற்களே எடுத்தல் ஓசையால் ஏவல் காட்டுகின்ற நிலையில்தான் இந்நிலை ஏற்பட்டது என எண்ணலாம்.

2 உரையாசிரியர்களும் இதனை உணர்த்திருந்தனர் எனக் கருத லாம். தெய்வச்சிலையார்''இவற்றுள் ஆய் என்பது மறையினும் ஏவலினும் தொழிலினும் வரும். உண்டி என்பது தொழிலினும் ஏவலினும் வரும். பிறவு மன்ன" (216) எனக் கூறுவது கவனிக்கத்தக்கது. நச்சினார்க்கினியர் ''இவைதாம் எடுத்தல்

ஓசையாற் கூறும் வழி, உண்பாய், உரைப்பாய், தின்பாய் என ஏவற் பொருண்மையையும் உணர்த்தும்'' (225) என்பார்.

3 சேனாவரையர் இகரம் பற்றிப் பேசும்போது முன்னர்க் குறித்தது போன்று ''ஊக்கி'' என்ற உதாரணத்தைத் தந்து ''இகரம் சிறுபான்மை ககரம் பெற்று வரும்'' எனக் கூறுவார். இதன்கண் காணப்படும் ககரம் வினைச்சொல்லொடு காணப்படும் ககரம் ஆகும். ஊக்கு என்பதே இகரம் பெற்று ஊக்கி என நிகழ்கிறது. இகரம் முன்னிலையைக் காட்டு மானால் இதற்கும் இங்கு காட்டப்படும் எடுத்துக்காட்டுகளுக்கு மிடையே வேற்றுமை உண்டு. இவை காலவெழுத்துப் பெற்று முன்னிலை ஒருமைச் சொல் வடிவம் கொண்டவை. ஆனால் ஏவலில் வருபவை. ஆனால் ஊக்கி போன்றவை அவ்வாறல்ல. ஊக்கு + இ என்ற அமைப்பை உடையவை இதே நிலையைத் தான் நச்சினார்க்கினியத்திலும் காணுகிறோம். அவரும் ஊக்கி என்பதோடு ''ஈதல் மாட்டொத்தி பெரும்'' என்ற உதாரணத் தையும் தந்து ''ககரமும் தகரமும் பெற்ற இகரம் ஏவல் கண்ணியே நிற்கும்'' எனவும் கூறுவர். ஒத்தி, ஒத்து + இ எனப் பிரிக்கப்படினும் இதன்கண் காணப்படும் தகர ஒற்று இறந்த காலம் காட்டுவது. ஆனால் ஊக்கியில் காணப்படும் ககர வொற்று ஊக்கு என்ற சொல்லில் காணப்படுவது. ஊக்கி என்பது ஏவலில்தான் வரும். ஆனால் ஒத்தி என்பது ஏவலில் மட்டுமே வரும் எனக் கூறுதல் முடியாது.

4 மு.வ (1974 : 248) **-இன்** என்பது **-என** எனத் திரிந்து பேச்சு மொழியில் வழங்குகிறது. (நீ செய்யென் : நீ பேசென்) என்பார். ஆனால் இஸ்ரயேல் (1976 : 40) **-ஏன்** என்ற வினாக்குறி ''**என்** என்று மாறிப் பின்னர் **-இன்** எனத் திரிந்திருக்கலாம்'' என்பார்.

5 இவ்விகுதி பற்றித் தொல்காப்பியர் வெளிப்படையாகக் குறிப்பிட வில்லை. நச்சினார்க்கினியர் **-இர், -ஈர், -மின்** விகுதி பற்றிப் பேசும் சூத்திரத்தில் ''இனி **உண்ணும், தின்னும்** எனப் பன் மைக்கண் வரும் உம் ஈறும் .....'' எனக் கூறுவார். இவ்விகுதிச் சொற்கள் -ம் எனக குறைந்து தனியாக நிற்பதில்லை. **-ஓ, -ஏ, -அதி** போன்றவற்றுடனும் **என** என்ற சொல்லுடனும் வரும்.

6 களைமே = தீர்ப்பாயாக, புறம். 145-10; சென்மே = செல்வாயாக, புறம். 133-7; செய்ம்மே, புறம். 46-8; பிரிமே = பிரிக (செல்வாக), ஐங். 308-4; சென்மே = செல்வாயாக, நற். 300-12; அளிமே = அருளுவாய், கலி. 127-22 பணிமின்மே = வணங்குமின். பரி. 15-34.

7 உள்ளுமோ = நினைப்பாயாக, புறம், 48-7; 389-5; சென்மோ = செல்வாயாக, புறம், 310-15; வனைமோ = வனைவாயாக புறம். 256-6; வம்மோ = வாராய், புறம். 180-9; 281-7; 364-8; வம்மோ = வாரீர் (பன்மை), புறம். 221-10; சென்மே = செல்வீர்களாக (பன்மை) புறம். 333-7; சென்மோ = செல்வாயாக, குறு. 236-2; 238 5; சென்மோ =செல்வாயாக, பதி. 87-1; கொண்மோ = பற்றுவாயாக அகம். 269-12; சென்மோ = செல்வாயாக, அகம். 132-8; 200-7; 245-21; 350-9; 394-12; வம்மோ = வருவாயாக, அகம் 73-12; 312-8; 323-7; 360-15; உய்ம்மோ = ஒழுகக்கடவை, ஐங். 83-2; உரைமோ = கூறுவாயாக, ஐங். 66-1; 80-1; கொண்மோ = பற்றுவாயாக, ஐங். 66-1; 80-1; கொண்மோ = பற்றுவாயாக, ஐங். 78-4; 180-1; 196-4; 289-4; 368-4; சென்மோ = செல்வாயாக ஐங். 199-3; 317-1; 469-5; எழுமோ = எழுந்து போவாயாக, நற். 93-6; 223-6; 363-6; களைமோ = களைவாய், கலி 133-19; சென்மோ = செல்வாயாக, பத்து. 4-45.

8 பன்மையிலும் இவை அதிகமாக வரவில்லை. பழந்தமிழ் இலக்கியப் பரப்பில் வம் வாய்பாட்டுச் சொல் எட்டு இடங்களிலும் வம்மோ வாய்பாட்டுச் சொல் இரு இடங்களிலும் மட்டுமே பன்மையில் வருகின்றன. இவ்வாய்பாட்டுச் சொற்கள் ஓரிரு இடங்களில் மட்டுமே நீர் என்ற சொல்லை எழுவாயாகக் கொண்டு வந்துள்ளன. அதுவும் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் மட்டுமே காணப்படுகிறது.

## உதவிய நூல்கள்

இஸ்ரேல், மோ. 1976 **இலக்கண ஆய்வு – வினைச்சொல்**, மதுரை வெளியீட்டகம், மதுரை.

சாமிநாதையர், உ. வே. 1963 **புறநானூறு மூலமும் உரையும்**, ஸ்ரீ தியாகராச விலாஸ் வெளியீடு, மதுரை.

வரதராசன், மு. 1954 **மொழியியற் கட்டுரைகள்**, பாரி நிலையம், சென்னை.

——— 1974 **மொழி நூல்**, சென்னை (மறுபதிப்பு)

வெங்கடராஜுலு ரெட்டியார் 1961 ''ஏவல் வினையமைப்பு'' **டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை வெள்ளி விழா நினைவு மலர்''**, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

Elayaperumal, M. 1958 The 'ma:r' suffix in Eearly Tamil Literature, *Indian Linguistics* Rolfth Jurner Jubilee Vol 1, Pune.

Israel, M. 1973 *The Treatment of Morphology in Tolka:ppiyam* Madurai University, Madurai.

Subramanyam, P. S. 1971 *Dravidian Verb Morphology [A Comparative Study]* Annamalai University, Annamalai nagar.

Subrahmanya Sastri, P. S. 1945 *Tolka:ppiyam – Collatika:ram with an English Commentary*, Annamalai University, Annamalainagar.

இந்த ஆய்வுக் கட்டுரை எழுதத் துணைபுரிந்த ஏனைய இலக்கிய, இலக்கண நூல்களுக்கும் குறியீடுகளுக்கும் – அகத்திய லிங்கம், ச. 'தன்மைப் பன்மை' **மொழியியல்** தொகுதி-2 எண்-2, (1978), காண்க.

## அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடுகள்

### 1 மொழியியல் - வாழ்வும் வரலாறும் (History of Linguistics)

டாக்டர் ச. **அகத்தியலிங்கம்,**
M.A., Ph.D, (Kerala), Ph.D., (Ind. U. S. A.)

டாக்டர் **க. புஷ்பவல்லி,** M.A., Ph.D.,

மொழியியல் அறிஞர்கள் பலர் மொழியியல் வளர்ச்சிக்கு வேரும் விதையுமாக நின்றனர். அவர்களுடைய வாழ்வு, வரலாறு, அவர்கள் ஆராய்ச்சியில் கண்ட வெற்றி இன்னோரன்ன பல செய்திகளையும் பல்வேறு மொழியியல் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் விளக்குவது இந்நூல்.

பக்கம் 358) (விலை ரூ. 16/-

### 2. கிளை மொழியியல் (Dialectology)

டாக்டர் **கோ. சீனிவாசவர்மா,** M.A., Ph.D.,

ஒரே மொழி வழங்கும் நாட்டில் கூட வட்டாரம், இனம், சாதி, தொழில், சமூகம் முதலிய வேறுபாடுகள் மூலம் பேச்சு மொழி வேறுபடுகிறது. தமிழில் அவ்வாறு வேறுபடுகின்ற பேச்சு மொழி களைப்பற்றி விரிவாக விளக்கிக்கூறும் முதல்நூல் இந்நூல்.

பக்கம் 226) (விலை ரூ. 10/-

### 3. மொழித் திட்டமிடுதல் (Language Planning)

டாக்டர் **கி. கருணாகரன்,** M.A., Ph.D.,

மொழித் திட்டமிடுதலில் இன்றைய நிலையில் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ள முக்கியமான சில கொள்கைகளையும்

கோட்பாடுகளையும் அவற்றின் விளக்கங்களையும் எளிய நடையில் எடுத்தியம்புவது இந்நூல். தமிழின் புதுமையாக்கம், எழுத்து வாக்கம், நிலைபேறாக்கம் முதலியவற்றைப்பற்றி அறிவியல் கண்ணோட்டத்துடன் விளக்குகிறது இந்நூல்.

பக்கம் 165 ) (விலை ரூ. 7/-

## 4. உலக மொழிகள் — திராவிட மொழிகள் I (Dravidian Languages)

டாக்டர் **ச. அகத்தியலிங்கம்,**
**M.A., Ph.D., (Kerala), Ph.D., (Ind. U.S.A)**

திராவிட மொழிகளின் வாழ்வு, வரலாறு, இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு போன்ற இன்னோரன்ன பல செய்திகளையும் திராவிட மொழிகட்கும் மற்ற மொழிகட்குமுள்ள பல்வேறு உறவினையும் விளக்குவது இந்நூல். 'உலக மொழிகள்' என்ற வரிசையில் ஐந்தாவது நூல் இது.

பக்கம் 250) (விலை ரூ. 12/-

## 5. உலகமொழிகள் — திராவிட மொழிகள் II (Dravidian Languages)

டாக்டர் **ச. அகத்தியலிங்கம்,**

**M.A., Ph.D., (Kaarla), Ph.D., (Ind. U.S.A.)**

இருபத்திரண்டுக்கு மேற்பட்ட திராவிட மொழிகளின் வடிவங்களை ஒப்பிட்டுத் தொல்திராவிட மொழியிலுள்ள ஒலியமைப்பு, பெயர் இலக்கண அமைப்பு ஆகியவற்றைச் சான்றுகாட்டி ஒப்பிலக்கண அடிப்படையில் ஆராய்வது இந்நூல். 'உலக மொழிகள்' என்ற வரிசையில் ஆறாவது நூல் இது.

பக்கம் 265) (விலை ரூ. 13/

## 6. நரிக்குறவப் பழகுடி மக்கள்

**டாக்டர் கோ. சீனிவாசவர்மா, M.A., Ph.D.**

இந்நூல் நரிக்குறவர்களின் வாழ்க்கை முறையையும் சுற்றுப் புறச் சூழலுக்கேற்ப அவர்கள் மேற்கொள்ளும் பழக்கவழக்கங்களை யும் விளக்குகிறது. மேலும் அவர்கள் வாழ்வில் அமையும் பண் பாட்டுச் சிறப்புக்களையும் எடுத்துக் கூறுகிறது.

பக்கம் 96) (விலை ரூ. 4/-

## 7. எழுத்துச் சீர்திருத்தம் [Script Reform]

**டாக்டர் செ. வை. சண்முகம், M.A., M.Litt., Ph.D.**

எழுத்துச் சீர்திருத்தம் என்பது தமிழ் வரிவடிவத்தில் செய்யப் படும் சீர்திருத்தம் மட்டுமன்று; எழுத்தின் தொகை, சொல்லெழுத்து பிறமொழிச் சொற்களைத் தழுவும் முறை ஆகியவைகள் பற்றியும் செய்யவேண்டிய திருத்தம் என்ற நோக்குடன் இந்நூல் எழுதப் யட்டுள்ளது. இனிச் செய்யப்பட வேண்டியவைகளும் தமிழ்நாடு அரசு வெளியிட்ட எழுத்துச் சீர்திருத்தம் குறித்த ஆணை பற்றிய விமர்சனமும் இறுதி இயலில் சேர்க்கப்பட்டுள்ளன.

பக்கம் 250) (விலை ரூ. 12-50/-

## 8: எழுத்திலக்கணக் கோட்பாடு

**டாக்டர் செ. வை. சண்முகம், M.A., M.Litt., Ph.D.**

தமிழ்மொழியில் அமைந்துள்ள எல்லா மரபிலக்கணங்களிலும் அமைந்துகிடக்கும் எழுத்தியல் கோட்பாடுகளை விளக்குவது இந்நூல். மேலும், உரையாசிரியர்களின் கருத்துகளும் தற்கால ஆராய்ச்சியாளர்களின் கருத்துகளும் இந்நூலில் விவாதிக்கப் பட்டுள்ளன.

## 9. சொல்லியல் - I

**டாக்டர் ச. அகத்தியலிங்கம்,**
**M.A., Ph.D, (Kerala), Ph.D., (Ind. U. S. A.)**

தமிழ்மொழியின் சொல்லியலை (morphology) இக்கால மொழியியல் கோட்பாட்டினடிப்படையில். கற்போருக்கு மொழியறிவும் மொழியியலறிவும் கிடைக்கும் வகையில், எடுத்துக்காட்டுகள் பலவற்றைக்கொண்டு விளக்கி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மொழியியல் மாணவர்களுக்கும் தமிழ் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது இந்நூல்.